THE SWADESAMITRAN WEEK

# சுதேசமித்திரன்

ஆக, 6, 1950 64-பக்கங்கள் விலை அணா 4

828



# சுதேசமித்திரன்

## சந்தா விகிதங்கள் :

★

### தினப்பதிப்பு

| (இந்தியா, இலங்கை தபால் மூலம்) | ரூ. அ. | சென்னை ரூ. அ. |
|---|---|---|
| 1 வருடம் | 24—0 | 22—0 |
| 6 மாதம் | 12—4 | 11—0 |
| 3 மாதம் | 6—4 | 5—8 |

தனிப்பிரதி 1 அணு

வெளிநாடு: 1 வருடம் ரூ 30. 6 மாதம் 15-8.

★

### வாரப்பதிப்பு

| | |
|---|---|
| 1 வருடம் | 13—0—0 |
| 6 மாதம் | 7—0—0 |
| 3 மாதம் | 3-12—0 |

தனிப்பிரதி 4 அணு

வெளிநாடு: 1 வருடம் ரூ. 15. 6 மாதம் ரூ 8.

குறிப்பு:—தினசரி, வாரப்பதிப்புகளுக்கு 3 மாதத்திற்குக் குறைந்த சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன்.

வாழிய செந்தமிழ்

# சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்

Vol XXII விக்ருதிஸு ஆடிமீ 22உ ★ 1950-ஸு ஆகஸ்ட்மீ 6உ No. 27

## பொருளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| பச்சைக்கல் மோதிரம் | ம ரா. | 5 |
| காவல்பெண்டு | பா கணேசன் | 12 |
| கலா மண்டபம் | | 15 |
| மதிப்பில்லாத் தியாகம் | பி வி வி. | 19 |
| வாழ்க்கைச் சுழல் (தொடர் கதை) | இந்து | 23 |
| நவரஸ நந்தவனம் | கனல் | 27 |
| ஹிந்திப் பாடங்கள் | பண்டிட்ஜி | 30 |
| இராமானுச நூற்றந்தாதி-அரிக்குடி | ஸ்ரீ இராமானுஜ ஐயங்கார் | 37 |
| வளர்த்த பாசம் | பார்வதி | 38 |
| மகராஜி யார்?-ஸ்ரீமதி கோமதி சுப்ரமண்யம் | | 43 |
| சிறுவர் பகுதி | எஸ். ரங்கராஜன் | 47 |
| பழங்கள் | நாராயணய்யா | 53 |
| தேர்த்தட்டு வார்த்தை | வாரன் | 55 |
| அனுபவ ரேகாசாஸ்திரம் ரோமேஷ் கே, சாஸ்திரி | | 57 |
| இனி பாடிய கவிதை-எம்.எஸ். சுப்ரமண்ய ஐயர் | | 60 |
| விலைவாசி | | 62 |
| ஸப்தம பாவம் | பி. வி. ராவ் | 63 |


"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள். சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே, அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

# துரித நடவடிக்கை வேண்டும்

உணவுப் பஞ்சத்தைப் பற்றிய பேச்செல்லாம் வீண் புரளி; பீதி கொள்ளச் சிறிதும் காரணமில்லை என்று உணவு மந்திரி உறுதி கூறுகிறார். இது முற்றிலும் உண்மையாயிருக்க வேண்டுமென்பதுதான் மக்களின் பிரார்த்தனையெல்லாம். தமது அறிக்கைக்கு ஆதாரமாக மந்திரி பல புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளார். ஆனால், அத்தகவல்கள் குறிப்பதெல்லாம் கோதுமை ஸப்ளையைப் பற்றியவரை கவலைக்குக் காரணமில்லை என்பதைத்தான். ஆனால், அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ள சென்னை, பீகார், மேற்கு வங்காளம் போன்ற பிரதேசங்களின் நிலைமை என்ன? இவ்விடங்களில் உணவு நெருக்கடி வரவர முற்றி வருவது பிரத்தியட்சம். பீகாரில் ஏற்கெனவே சிலர் பசி தாளாமல் உயிரிழந்ததாக அம்மாகாண சர்க்காரே பகிரங்கமாக அறிவித்திருக்கின்றனர். சென்னை மாகாணத்தில் இது வரை அத்தகைய கோரம் எதுவும் ஏற்படவில்லையாயினும் இங்குள்ள நிலை பீகார் நிலையைவிட மிக்கத் தரமானதென்று யாரும் சொல்ல முடியாது. இங்கு அரிசி ரேஷன் எட்டு அவுன்ஸாக இருந்தபோதே மக்களிடையே போருமல் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமாயிருந்தது. ஆனால், சமீபத்தில் அந்த அளவும் ஏழு அவுன்ஸாகக் குறைக்கப்பட்டுவிட்டது. சில ஜில்லாக்களில் ஏழு அவுன்ஸ் அரிசிகூட ஒழுங்காகக் கிடைப்பதில்லையென்று தினசரி புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்நாட்டில் பட்டினியால் யாரும இறக்கவிடப் போவதில்லையென்று சமீபத்தில் உணவு மந்திரி அறிவித்தார். இவ்வறிவிப்பு ஒருவகையில் வரவேற்கத்தக்கதுதானாயினும், இதைக் கேட்டு ஜனங்கள் விசேஷமான குதூகலம் அடைந்துவிடப் போவதில்லை. எப்படியாவது உயிரை வைத்துக்கொண்டிருப்பதற்கு மட்டும் தற்போதைய ரேஷன் அளவு ஒருகால் போதியதாயிருக்கலாம். ஆனால், மக்கள் ஆரோக்கியத்துடன் வாழ, அவர்கள் திறனுடன் உழைப்பதன்மூலம் நாட்டின் வளம் பெருக தற்போது அவர்களுக்குக் கிடைக்கும் உணவு சிறிதும் போதியதன்று. அதற்கு மாறாக இப்போதைய அரைவயிற்று ரேஷன் நீடிக்க விடுவது மக்களின் நல்வாழ்வுக்கும், நாடு செழிப்புறச் செய்வதற்கான முயற்சிகளுக்கும் உலை வைக்கக்கூடியதாகும்.

உண்மையில் இந்நிலை தவிர்க்க முடியாததன்று. இந்நாட்டிலேயே அரிசி உபரியாக உள்ள மாகாணங்கள் இருக்கின்றன. ஆனால், அவை சென்னை, பம்பாய் போன்ற மாகாணங்களைப்போல் உபரி தான்யத்தைக் கொள்முதல் செய்வதில் அவ்வளவு ஜரூராக நடந்துகொள்ளவில்லை. உள்நாட்டில் கொள்முதல் மூலம் சுமார் ஏழு லட்சம் டன் திரட்டவேதென்று மத்திய சர்க்கார் திட்டமிட்டிருந்தனர். ஆனால், அதில் பாதியளவுகூடத் தேறுமென்று தோன்றவில்லை. இந்நிலைக்கு குறிப்பாக உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம, அஸ்ஸாம்போன்ற மாகாணங்களின் அசட்டையே காரணம் எனபதை உணவு மந்திரி எடுத்துக் காட்டியிருக்கிறார். அம்மாகாணங்கள் தங்கள் கடமையை உணர்ந்து நடந்துகொள்ளச் செய்வதில் இந்திய சர்க்கார் எந்த அளவு வெற்றி பெறுவரென்று தற்போது நாம் சொல்வதற்கில்லை. ஆனால், சென்னை போன்ற மாகாணங்களின் பற்றுக்குறையை எவ்வாறு வது பூர்த்தி செய்வது தங்களது தவிர்க்க முடியாத பொறுப்பு என்பதை மத்திய சர்க்கார் உணர்ந்திருப்பரென்று எண்ணுகிறோம். உற்பத்திப் பெருக்குக்கான ஏற்பாடுகள் எதுவும் தற்போதைய நெருக்கடியில் உடனடியான நிவாரணம் அளிக்கக்கூடியதன்று. இந்திய சர்க்கார் ஒன்று, உபரி அரிசியுள்ள மாகாணங்களை தாங்கள் ஒப்புக்கொண்டபடி அந்த உபரியைத் திரட்டியனுப்புமாறு செய்யவேணடும்; அதில் இடையூறு எதுவும இருக்குமானல் அல்லது அந்த வழியில் பற்றுக்குறைப் பிரதேசங்களின் தேவையைப் போதியளவு பூர்த்தி செய்ய முடியாதிருக்குமானல், வெளிநாடுகளிலிருந்து போதிய அளவு அரிசியைத் தருவிக்க அவர்கள் ஏற்பாடு செய்தாகவேண்டும். இப்பிரதேச மக்களிடையே அதிருப்தி வேகமாக முற்றி வருவதையுணர்ந்து இந்திய சர்க்கார் இத்துறையில் துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

☆

## ☆ மற்றொரு அநீதி ☆

இந்தியாவுக்கு எப்படியாவது மேன்மேலும் ஆத்திரமூட்டிக்கொண்டேயிருப்பதென்று இலங்கை சர்க்கார் கங்கணங்கட்டிக்கொண்டுவிட்டதாகத்தோற்றுகிறது. இப்போது அவர்கள் அங்குள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் வேலைக்கமர்ந்துள்ள இந்தியர்மீது தங்கள் திருஷ்டியை திருப்பியிருக்கின்றனர். ஏற்கெனவே அவ்வதிகாரிகள் இந்திய சமூகத்துக்கு இழைத்துள்ள கொடுமை கொஞ்சமன்று. தலைமுறை தலைமுறையாக அங்கு வாழ்ந்துவரும பெருவாரியான இந்தியருக்கு நியாயமாக உரிய பிரஜா அந்தஸ்து பறிக்கப்பட்டுவிட்டது. மற்ற ஒரு சிலருக்குக் கிடைத்துள்ள அந்தஸ்தும் இரண்டாந்தரமானதேயாகும். இத்தகைய அந்தஸ்தில்லாதபோதிலும். ஏற்கெனவே தங்களுக்குப் பிழைப்பளித்துவரும் வேலைக்காவது பங்கம் நேராதிருக்குமென்று இந்தியர் பலர் நமபியிருக்கின்றனரல்லவா? அந்த நமபிக்கைக்கும் இப்போது இலங்கை அதிகாரிகள் வேடிவைக்கக் கிளம்பிவிட்டார்கள்.

மேற்குறித்த இந்தியர் பலரின் சம்பாத்தியத்தை நம்பியே இங்கு, முக்கியமாக தமிழ்நாட்டில் அநேக குடும்பங்கள் வாழ்கின்றன. ஆனால், அவர்கள் தங்கள் இஷ்டப்படி இங்குள்ள தம் உறவினருக்குப் பணம் அனுப்ப முடியாதபடி ஏற்கெனவே முட்டுக்கட்டை போடப்பட்டுவிட்டது. அவர்கள் ஒரு சொற்பத் தொகைக்குமேல் அனுப்பக்கூடாதென்று இலங்கை அதிகாரிகள் தடையெழுப்பியதுடன் இப்போது திருப்தியடையவில்லை; அவர்களது பிழைப்பை அடியோடு பறித்து அவர்களை அங்கிருந்து விரட்டியடிக்கவும் துணிந்துவிட்டார்கள். இலங்கை மந்திரிகளில் ஒருவர் அவ்விந்தியரிடம் அனுதாபம் கொண்டவர்போல் நடித்துவிட்டு; அவர்களை வேலைக்கு வைத்துக்கொண்டிருப்பவர்கள்தான் "ஏதாவது நஷ்டஈடு கொடுத்து அவர்களைத் திருப்பியனுப்பவேண்டும். நஷ்ட ஈட்டுக்கான பொறுப்பில் ஒரு சிறு பகுதியையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளமுடியாது" என்று அறிவுறுத்துகிறார். உண்மையில் அவ்விந்தியர் வேலையைத் துறந்து அனாதைகளைப்போல் இந்தியாவுக்குத் திரும்பியோட வேண்டுமே என்பதே அதன் பொருள்.

இலங்கையில் உள்ள உத்தியோகங்கள் பலவும் கூடியவரை சுதேசிகளுக்கே கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று அந்நாட்டு சர்க்கார் விரும்புவதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நேர்மையான, யோக்கியமான முறையிலேயே அவ்விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று அவ்வதிகாரிகளுக்கு உறைக்காததுதான் ஆச்சரியமாகும். உதாரணமாக, புதிதாக ஒரு வேலையில் அமர்த்தப்படுவோர் சுதேசப் பிரஜைகளாகவே இருக்கவேண்டுமென்று அவர்கள் விதிக்கலாம். அவ்வாறின்றி ஏற்கெனவே வேலையிலமர்ந்த இந்தியர்களை நீக்குவதாயின் அவர்களுக்கு நியாயமாக உரிய நஷ்ட ஈட்டைக் கொடுக்க வகை செய்வதுதான் யோக்கியம. உண்மையில் தற்போது இலங்கையில் வேலை பார்த்துவரும் இந்தியர்கள் மேலும் அவ்வேலையில் நீடிப்பதற்கு எவ்வித இடையூறும் விளைவிக்கப்படமாட்டாதென்று சமீபத்தில் இலங்கைப் பிரதம மந்திரி இந்திய சர்க்காரிடம் திட்டமாக உறுதிகூறியுள்ளார். அதற்கு முற்றிலும் மாறானதே தற்போது இலங்கை சர்க்கார் எடுத்துக்கொள்ளவிருக்கும் நடவடிக்கை. ஆனால் மேற்குறித்த உறுதிமொழி தற்போது தங்களைக் கட்டுப்படுத்தாதென்று அந்நாட்டு மந்திரிகளில் ஒருவர் சிறிதும் கூசாமல் சாதிப்பது ஆச்சரியமாகும். இலங்கையைக் கூடியவரை அணைத்துக்கொண்டு அதனுடன் சுமுகமாக வாழவேண்டுமென்பதே இப்போதும இந்தியாவின் அவா. ஆனால் எப்படியாவது இந்நாட்டின் விரோதத்தை சம்பாதித்துக்கொண்டுதான் தீருவதென்று இலங்கை சர்க்கார் இனியும் பிடிவாதம் பிடிப்பராயின், அத்தீவின் எதிர்காலத்தைப்பற்றி நாம பரிதபிக்கத்தான் வேண்டும்.



# பச்சைக்கல் மோதிரம்

☆ [ப ரா.] ☆

எல்லாம் அந்தச் சின்னஞ்சிறு வஸ்துவினால் விளைந்தது அது மட்டும் அப்படி எதிர்பாராத வகையில் அவனுக்குக் கிடைத்திரா விட்டால், தங்கவேலுவின் சலனமற்ற வாழ்க்கையில் திடீரென ஒரு மாறுதலேற்பட்டு, பின் அது பெரும் புயலாகவும் வீசியிருக்காது.

அவன் ஓர் ஏழைத் தபாற்காரன் கடமையிற் கருத்தும் கண்ணியமும் வாய்ந்த இளைஞனுகையால். கனியூர்த் தபாலாபீசிற்கு மாற்றலான ஒரே வாரத்துக்குள் ஊர்ப் பொது ஜனங்களின் அன்பையும் மதிப்பையும் கவர்ந்துவிட்டான் போஸ்ட் மாஸ்டர் வேம்பய்யருக்கு அவனிடத்தில் ஒரு அலாதியான பிரியம். சோம்பலில்லாமல் பம்பரம்போல் சுழன்று எல்லா வேலைகளையும் செய்வான் தங்கவேலு அந்த ஆபீஸில் அவர்களிருவர்தாம் சிபபந்திகள் உத்தியோக முறையில் மட்டுமின்றி. தங்கவேலுவின் சொந்த விஷயங்களிலும் வேம்பய்யர் அக்கரை கொண்டவர. அதற்கேற்ப அவனுக்கு அவரிடம் பூரண விசுவாசம் உண்டு. 'பாவம்! தங்கமான பையன் அவன் தன் குடும்பத்திற்காகக் கஷ்டப்படுவதைப்போல், இந்தக் காலத்தில் எத்தனை பையன்களய்யா சுயசிரமத்தைப் பாராட்டாமல் உழைக்கிறார்கள்? கையாலாகாதவன்கள்கூட கலியாணம் செய்துகொள்வதில் குறியாயிருக்கிறான்களே தவிர. தாய், தகப்பன் என்று பார்க்கிறான்களா? இவனைப் பாரும் வீட்டிற்கு அனுப்பப் பணம் மிஞ்சுவதில்லையென்று தினம் ஒரு வேளை சாப்பிடாமல் மிச்சம் பிடித்துக்கொண்டிருந்தான். நான் அதைத் தெரிந்துகொண்டு ராத்திரி ராத்திரி நம் வீட்டிலேயே சாப்பிடச் சொல்லியிருக்கிறேன்' என்று வேம்பய்யர் தம் நண்பர்களிடம் தங்கவேலுவைப் புகழ்வதோடு தம் அன்னதானத்தின் பெருமையையும் விளம்பரம் செய்துகொள்வார்.

ஆனால், அவர் கூறுவது உண்மை தன் சுயதேவைகளை இயன்றவரை கட்டுப்படுத்திக்கொண்டு, தங்கவேலு கிராமத்திலிருந்த பெற்றோரைப் பராமரித்து வந்தான் எது தவறினாலும் சம்பளம் வாங்கினதும் ஊருக்குப் பணமனுப்பத் தவறமாட்டான் எவ்வளவு வற்புறுத்திக் கொடுத்தாலும் பொது ஜனங்களிடமிருந்து இனும் எதுவும் வாங்கிக்கொள்ளாத பெருந்தன்மை அவனுக்கிருந்தது எனவே 'மேல் வரும்படி' என்று குறிப்பிடப்படும் அம்சம் அவனுக்குப் பூஜ்யம் சம்பளமாக வரும் சொற்பத் தொகையில் தான் எல்லாம் நடந்தாக வேண்டியிருந்தது. தன் கஷ்டங்களைப் பொறுமையுடன் பௌனமாகச் சகித்து வந்தான் இன்சொல்லன்றி வேறெதுவும் அவன் நாவிலிருந்து எழுவதில்லை சதா புன்னகை தவழும் தங்கவேலுவின் முகத்தைப் பார்த்தாலே பசியாறும் என்று சொல்லலாம்.

ஆனால், ஏழைகளுக்கும் வாழ்வில் அபிலாஷைகளே இல்லாது போய் விடுகின்றனவா? தன் மூளி விரல்களை அழகு செய்ய ஓர் மோதிரம் வேண்டுமென்னும் ஆவல் பல வருஷங்களாகவே, அவன் மனதை அரித்து வந்தது. ஒரு மாதத்திற்காவது குடும்பத்தின் வாயில் மண்ணடித்தால்தான் அம்மனோரதம் பூர்த்தியாகுமென அறிவான். அவனது மனச்சாட்சி அதற்கிடங் கொடுக்கவில்லை பத்து வருஷங்களுக்கு முன் அவனது அண்ணன் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு ஓடிப்போகாமலிருந்தால், இப்போது குடும்பப் பொறுப்பு முழுவதுமே தங்கவேலுவின் தலைமேல் விழுந்திருக்காது சிறுகச் சிறுகச் சேர்த்தேனும் ஒரு மோதிரம் வாங்கியிருப்பான் இப்போது அதை நினைத்து வருந்திப் பயனென்ன? போனவன் என்ருவது திரும்பி வந்தானுனல், ஒரு வேளை... எதற்கும் ஆண்டவன் அனுக்ரகம் வேண்டும் இந்த முடிவுதான் எப்போதும் தங்கவேலுவின் சிந்தனைக்கு வரம்பு 'கிட்டாதாயின் வெட்டென மற' என்று ஓரேயடியாய் மோதிர ஆசையைத் துறந்துவிடவும் அவனால் முடியவில்லை

ஆண்டவனருள் நாம் எதிர்பார்க்கும் ஒரே வழியில் மட்டுமல்ல, வேறு வழிகளிலும் வந்து கை கூடலாமென்று நிரூபிப்பதுபோல், காத்தவராயன் தெரு முனைத் தபால் பெட்டியினின்று உருண்டோடியது ஒரு பச்சைக்கல் மோதிரம்!

அன்று மெயில் வண்டிக்குக் கட்டு எடுத்துச் செல்வதற்காகக் கடிதங்களைச் சேகரிக்கப் புறப்பட்டிருந்தான் தங்கவேலு. ஊரில் நாலைந்து முக்யமான சந்திகளில் பொதுஜனங்களின் உபயோகத்திற்காகத் தபால் பெட்டிகள் நிறுவப்பட்டிருந்தன அவன் அந்த ஆபீஸிற்கு வந்த பின், மேல் பூச்சு மங்கிக் கிடந்த அவற்றிற்குச் சிவப்புச் சாயம் பூசி துருப்பிடித்த பூட்டுகளுக்கு எண்ணெய் போட்டு, உள்ளே வாசஞ் செய்துகொண்டிருந்த குளவிகளின் கூடுகளைப் பிய்த்தெறிந்து, இன்னும் என்னென்னவோ புனருத்தாரண வேலைகள் செய்த பின்னரே, அவை 'தபால் பெட்டிகள்' போல் தோற்றமளித்தன. காத்தவராயன் தெரு ஊர்க் கோடியிலிருந்தது அதுதான் அவன் காலி செய்ய வேண்டிய கடைசிப் பெட்டி. அதன்முன் ஒரு நிமிஷம் நின்று தன் கைவேலையின் பலனைத் திருப்தியுடன் கண்காணித்து விட்டுப் பெட்டியைத் திறந்தான். அங்கு அதிசயம் அவனுக்காகக் காத்திருந்தது.

உள்ளே கிடந்த நாலைந்து கடிதங்களை அவன் எடுக்க முயன்றபோது, அச்சிறு வஸ்து அவற்றினிடையிலிருந்து மின்னியது தங்கவேலு முதலில் தன் கண்களையே நம்பவில்லை காண்பது கனவோ என்றெண்ணினான் மோதிரம் கிடைத்தாலும், தனக்கு மிகவும் பிடித்தமான பச்சைக் கல் பதித்ததாகவே கிடைப்பதென்றால், நம்பிக்கை அத்தனை சுலபமாக ஏற்பட்டு விடுமா? அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு அங்கேயே மண்டியிட்டு உட்கார்ந்திருந்தான் வியப்பு, மகிழ்ச்சி சந்தேகம் மூன்றும் ஒருங்கே அவனை ஆட்கொண்டு விட்டன.

தபால் பெட்டிக்குள் சிறுவர்கள் விளையாட்டாகக் கல், மண் ஆகியவற்றைப் போடுவது சகஜம் ஆனால் விலையுயர்ந்த மோதிரம் அங்கு வந்திருக்க ஒரே காரணந்தானிருக்க முடியும். யாரோ கடிதமொன்றைப் போஸ்ட் செய்துவிட்டு, அது ஒழுங்காய் உள்ளே போய்ச் சேர்ந்ததாவென்று பார்ப்பதற்காகக் கைவிட்டுத் துழாவியிருக்கிறார்கள். அப்போது அவரறியாமல் விரலிலிருந்த மோதிரம் நழுவியிருக்கவேண்டும். பாவம்! அந்த



ஆசாமி அதை எங்கெல்லாம் தேடுகிருரோ!

தங்கவேலுவின் உள்ளத்தில் ஒரு பெரும் போராட்டம் நிகழத் தொடங்கியது. ஊரில் விசாரித்து மோதிரத்தை உரியவரிடம் சேர்ப்பிக்கத் தூண்டியது மனச்சாட்சி. மறுபுறம் ஆசை பின்னுக்கிழுத்தது. கிடைத்ததை ஏன் விட வேண்டும்? அது பைத்தியக்காரத்தனம். இப்போதில்லாவிட்டால், பின் எந்த ஜன்மாந்தரத்தில் நம் விருப்பம் நிறைவேறுமோ! வேண்டாம். அதை நீயே வைத்துக்கொள். தங்கவேலு என்ன செய்வதென்றறியாமல் திணறித் திண்டாடினுன். பின் ஒரு முடிவுக்கும் வராமல் அதைப பைக்குள் போட்டுக்கொண்டு நடந்தான். 'கண்டெடுத்தவனே சொந்தக்காரன்,' என்னும் சித்தாந்தம் அவனுக்கு அத்தனை லகுவில் ஏற்பட்டு விடுவதாயில்லை

ஒரு வாரம் தூக்கங்கூட வராமல் ஓயாத வேதனையையனுபவித்தான். அம்மோதிரத்தை விரலிலணிந்து பார்க்குந்தோறும் அதைத் தன்னுடைமையாக்கிக்கொள்ளும் ஆவலே தங்கவேலுக்கு மேலோங்கியது மனச்சாட்சியின் கூக்குரல்கள் அமுந்திவிட்டன ஏன்ன நேர்ந்தாலும் அதை விடுவதில்லையென்று தீர்மானித்துவிட்டான். ஆனுல், போஸ்ட்மாஸ்டர்ஐயாவிடம் இதுபற்றி அவன் மூச்சுக்கூட விடவில்லை. சொன்னுல் 'பூ! இவ்வளவுதானு இந்த ஆசாமி!என்று அவர் நினைத்துக்கொள்வாரே. தான் எவ்வளவு வியாக்யானம் செய்தாலும் ஜனச் செயலென்பது மாறிவிடுமா?

தங்கவேலு அன்று தபால் பட்டுவாடாவுக்கு நகர்வலம் கிளம்பும்போது அவன் விரலில் பச்சைக்கல் மோதிரம் மின்னிமிளிர்ந்தது. கூடவே நடையில் ஓர் மிடுக்கு, பார்வையில் ஒரு கம்பீரம் அற்பனுக்கு ஐச்வரியம் வந்த தோரணையில் மற்றப்படி அவன் தன் இனிய ஸ்வபாவத்தை இழக்கவில்லை; அந்தப் பழைய தபால் பெட்டியைத் தாண்டிக்கொண்டு காத்தவராயன் தெருவிற்குள் நுழைந்தவன் வெயிலின் உக்கிரம் தாங்காமல் ஒரு வீட்டுத் திண்ணையிலுட்கார்ந்தான்.

வழக்கமாக அந்த வேளையில் அங்கு ஒரு கிழவி காலைநீட்டி கொண்டுவெற்றிலைபாக்குமென்றவாறிருப்பாள் இன்று அவளைக் காணேம். தங்கவேலு 'அம்மா'வென்று குரல் கொடுத்ததும் உள்ளிருந்து வந்தாள் ஒரு மங்கை உடல் இளைத்து, கண்களில் ஓர் சோகம் படர்ந்திருந்தாலும் அவளழகும் யௌவனமும் தங்கவேலுவை உலுக்கிவிட்டன தூண் மீது சாய்ந்திருந்தவன்,ஏனே நிமிர்ந்து உட்கார்ந்தான் அவள் தலை குனிந்தவளாய்க் கதவண்டை நின்றுகொண்டிருந்தாள்

தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர் தருகிறீர்களா?' என்ருன் தங்கவேலு. அவள் மௌனமாய் உள்ளே சென்று, ஒரு டம்ளரில் தண்ணீருடன் திரும்பினுள் திண்ணையில் வைக்கப்பட்ட டம்ளரைக் காலி செய்த தங்கவேலு, அவள் பார்வை தன் மோதிரத்தின் மீதே பதிந்திருப்பதைக் கவனித்துவிட்டான். காரணமில்லாத பதைபதைப்பு அவன் இதயத்தில் தோன்றியது

கையிலிருந்த கடிதக் கட்டைப் புரட்டுவதுபோல் பாவனை செய்துவிட்டு. 'இன்று உங்களுக்குக் கடிதமொன்றும் கிடையாதம்மா' என்று தங்கவேலு சொன்னுன் அதைக்கூட அவள் காதில் வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை மோதிரத்தின்மேலிருந்த நாட்டம் குன்ருமல் நின்ருள் அவள்

அவன் காலில் செருப்பை மாட்டிக்கொண்டு குடையை விரிக்கப் போகும் தருவாயில், அந்தப் பெண் வாய் திறந்து பேசினுள். 'ஐயா, நில்லுங்கள் ஒரு வார்த்தை'

தங்கவேலு திடுக்கிட்டுத் திரும்பி, 'ஏனம்மா?' என்ருன்.

'கோபித்துக் கொள்ளாதீர்கள். அந்த மோதிரம்... உங்களிடம்... எப்படி...?' அவள் உரை குழறியது கேட்கத் தைரியமில்லாமல் கேட்பதனுலேற்படும் தடுமாற்றம் அது. குற்றமுள்ள தங்கவேலுவின் நெஞ்சு குறுகுறுத்தது. சற்று நேரம் விழித்தான். பின், 'இதுவா? போன மாதம்தான் வாங்கினேன். ஏன் கேட்கிறீர்கள்?'என்ருன். 'பொய் பேசத்தான் பேசுகிறேம், அதைக் கொஞ்சம் தைரியமாகச் சொல்லிவிட்டுப் போகலாம்' என்ற துணிவு அவனுக்கேற்படவில்லை.

'ஐயா உங்கள் வார்த்தையில் எனக்கு நம்பிக்கையேற்படவில்லை அது என் மோதிரமென்று நினைக்கிறேன்'

'அப்படியானுல் நான் அதைத் திருடிவிட்டுப் பொய் சொல்கிறேனென்று அர்த்தமா?' என்று அவன் சிறிது கடுமையாகக் கேட்டான். உள்ளூர நடுக்கம் அவனை விடவில்லை.

'நீங்கள் திருடினீர்களாவென்பது எனக்குத் தெரியாது. ஆனுல் பொய் சொல்கிறீர்களென்றுதான் சந்தேகம்,

'அப்படியென்ருல்......!'

'போன மாதம் இதை வாங்கினதாக நீங்கள் சொல்வது பொய். ஏனென்ருல்,போன வாரம்வரை இம்மோதிரம் என் விரலிலிருந்தது'

'இந்த ஊரில் பச்சைக்கல்மோதிரம் போட்டுக்கொண்டிருப்பவர் உங்களைத் தவிர வேறு யாரும் இருக்கமுடியாதா அம்மணி? இது உங்களுடையதுதானென்று நிச்சயமாய் எப்படிச் சொல்வீர்கள்?'

'முன் பின் தெரியாதவர்களோடு நான் விளையாடுவதில்லை ஐயா. அந்த மோதிரத்தில் கல்லுக் கருகில் மூன்று புள்ளிகள் விழுந்திருப்பதைப் பார்த்ததுமே அது என்னுடையதென்று அறிந்துகொண்டேன் இன்னும் அத்தாட்சி வேண்டுமானுல் அதைக் கழற்றிப்பாருங்கள் உட்பக்கத்தில் மெல்லிய இரண்டு கீறல்களும் இருக்கும்.'

தங்கவேலு திகைத்துவிட்டான். அவள்கூறியபடியே கீறல்களும் புள்ளிகளும் மோதிரத்தில் காணப்பட்டன. அவளது உரிமை மறுக்கமுடியாதது. இனி உண்மையை ஒப்புக்கொண்டு வஸ்துவை அம்மங்கையிடமே ஒப்படைத்து விடவேண்டியதுதானு? அவள் முகத்தை ஏறிட்டுநோக்கினுன்.

அவள் நல்ல அழகியென்பதில் சந்தேகமில்லை. கண்டதுமே அவனது கருத்தைக் கவர்ந்துவிட்ட அப்பெண்ணின் மோதிரம் தன்னிடம் வந்து சேரும்படி விதி ஏன் விளையாடியிருக்க வேண்டும்? ஒரு வேளை தனக்கும் அவளுக்கும் தொடர்பு ஏற்பட ஒரு மூகாந்தரமாகத்தான்...? மோதிரம்போனுல் போகட்டும். ஆனுல் அவள் காதலைப் பெற முயல்வதிலென்ன தவறு? அந்தகைய எழிலும் ஒயிலும் தன் இல்லத்தை அலங்கரிப்பது மனதிற்கு எவ்வளவு ஆனந்தம் தரும்?



'ஐயா! உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. அம் மோதிரத்தின்மீது என் உயிரையே வைத்திருந்தேன். அது காணுமற்போனதிலிருந்து நான் அனுபவித்த வேதனை எனக்குத்தான் தெரியும். தயவுசெய்து திருப்பிக் கொடுத்துவிடுங்கள். இந்த உதவியை எந்நாளும் மறக்க மாட்டேன்' அவள் குரலின் உருக்கமும் கெஞ்சிய தோற்றமும் தங்கவேலுவின் இதயத்தை என்னவோ செய்துவிட்டன பேசாமல் மோதிரத்தைக் கழற்றி நீட்டினுன் அவன், 'வெறிச்' சென்ருகிவிட்ட தன் விரல்கள் கூட அவனுக்கு வருத்தமுண்டாக்கவில்லை

அம்மா நான் பொய் சொன்னதற்கு மன்னித்துவிடுங்கள் போன திங்கட்கிழமை காலை இந்தத் தெருமுனையிலிருக்கும் தபால் பெட்டிக்குள்ளிருந்து இதைக் கண்டெடுத்தேன்...' என்று மோதிரம் கிடைத்த விதத்தை விஸ்தரித்தான்

உங்களைச் சொல்லக் குற்றமில்லை ஐயா எல்லாம் என் அஜாக்கிரதையால் வந்தது அவர் திரும்பிவந்து மோதிரம் எங்கே? யென்று கேட்டால் என்ன பதில் சொல்வதென்றறியாமல் மயங்கினேன் கடவுள்தான் தங்கள் மூலம்......... என்று அவள் முடிப்பதற்குள் பரபரப்புடன் குறுக்கிட்டான் தங்கவேலு.

'அவர்' என்றீர்களே, அது யாரம்மா'

'அவர்தான் இந்த மோதிரத்தை எனக்களித்தவர்......' என்று நாணத்துடன் பதில் வந்தது.

'அப்படியென்ருல்......? உங்கள் கணவரா?

'இல்லை. என்னை விவாகம் செய்து கொள்ளவிருப்பவர். இப்போது ராணுவத்தில் சேர்ந்து காஷ்மீரத்தில் சேவை செய்துகொண்டிருக்கிருர். போகுமுன் தன் ஞாபகார்த்தமாக இதை அளித்துச் சென்ருர்......'

தங்கவேலுவின் தலை சுழன்றது. அந்தப் பெண் தனக்கென்று பிறந்து வளர்பவளல்ல வேறொருவனுக்கு உரியவள். அவன் ஆசை ஏற்படு முன்பே அதில் மண்ணும் விழுந்துவிட்டது. இனி காதலாவது. கத்தரிக்காயாவது? அப்போதுதான் புகையிலை மணம் பரிமளிக்க சந்தையிலிருந்து திரும்பிவந்த கிழவி வீட்டு வாயிற்படியேறினுள் தங்கவேலுவும் சமாளித்துக்கொண்டான் தன் ஏமாற்றம் வெளிக்குத் தெரியாமல்.

கூடையை எதிர் திண்ணையில் வைத்துவிட்டு கிழவி உட்கார்ந்தாள். அவள் தன் பொக்கைவாயைத் திறந்து 'ஐயா தபால்காரரே!' என்று ஆரம்பிக்குமுன் மகள் அவனை முந்திக்கொண்டு, 'இன்றைக்கும் அவரிடமிருந்து கடிதம் ஒன்றும் வரவில்லையே அம்மா.' என்ருள்.

ஒரு ஆழ்ந்த பெருமூச்சுடன் கிழவி, 'அந்தப் பாவிப் பையன் என்ன ஆனுனே தெரியவில்லையே, மிலிடரிக்குப் போகவேண்டாமடா. உள்ளூரிலேயே ஒரு வேலையைப் பார்த்துக்கொண்டு நிம்மதியாய் இரு. 'என்று எத்தனை தடவை அடித்துக் கொண்டேன்! கேட்டானு? ஹூம்...' என்று அங்கலாய்த்தாள். அந் பெண்ணின் கண்களில் கண்ணீர் நிரம்புவதைத் தங்கவேலு கவனித்தான். கிழவியிடம் ஒரு அனுதாப வார்த்தையாவது பேசாமல்போக அவன் மனது இடந்தரவில்லை.

'ஏனம்மா, யார் அந்தப் பையன்? உனக்கு என்ன உறவு?' என்று கேட்டான்.

'உறவொன்றுமில்லை தபாற்காரரே. இனிமேல்தான் அது ஏற்பட வேண்டும். இந்த ஊரில் சுப்பையாத் தேவர் விறகுமண்டியில் கணக்கெழுதிக்கொண்டிருந்தான் எப்படியோ என் மகளுக்கும் அவனுக்கும் ஒருவரையொருவர் ரொம்பப் பிடித்துப் போய்விட்டது. இவள் எனக்கு ஒரே பெண் அவனைத்தான் கல்யாணம் செய்துகொள்வேனென்று நின்ருள். நானும் அதற்குத் தடைசொல்லவில்லை. திடீரென்று ஒருநாள் வந்தான்; 'பணம் சம்பாதிக்க ராணுவத்தில் சேரப்போகிறேன். கையில் நாலு காசு சேர்ந்தபிறகு வந்து மரகதத்தைக் கலியாணம் பண்ணிக்கொள்கிறேன் என்ருன். காசு முக்யமில்லையடா என்று சொல்லித் தடுத்தோம் ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. போய்விட்டான் போனபிறகு இவளுக்கு இரண்டு நாளைக்கொரு கடிதம் தவருமல் எழுதிக்கொண்டிருந்தான். இப்போது பதினைந்து நாட்களாக ஏனே ஒரு தகவலுமில்லை இந்தப்பெண் அழுது அலட்டிக்கொள்வதைப் பார்க்கவே சகிக்கமுடியாமல் நானும் அவதிப்படுகிறேன் ஐயா.' தன் குறைகளைக் கேட்க ஒரு அனுதாபி கிடைத்ததும் கிழவி எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்துவிட்டாள்.



'ஒன்றும் ஆகியிருக்காதம்மா. அவன் பத்திரமாய் திரும்பிவந்துவிடுவான் பயப்படாதீர்கள் என்று ஆறுதல் சொல்லிவிட்டு தங்கவேலு கிளம்பினுன் அவன் மொழியில் உணர்ச்சியில்லை. மனதை மேகப் படலம்போல் கவிந்திருந்தது சிந்தனை இன்னும் அங்கே தாமதித்துக் தன் குழப்பத்தை வெளிக்காட்டிக் கொள்ளாதிருப்பதே அவன் நோக்கம். 'தபாற்கார ஐயா கடிதமேதாவது வந்தால் உடனே கொண்டு வந்து கொடுத்துவிடுங்கள்.' என்று கிழவி கத்தியது தெருவைக் கடந்து கொண்டிருந்த தங்கவேலுவின் காதில் அரைகுறையாய் விழுந்தது.

* * *

நேற்றிருந்த தங்கவேலு 'வேறு இவன் வேறு' என்னும்படியாகிவிட்டது அவன் மனுேநிலை. 'பெண்கள், கலியாணம்' என்ற வார்த்தைகளுக்குத் தன் அகராதியில் இடமே கிடையாதென எண்ணியிருந்தவன் மரகதத்தை எண்ணியெண்ணி உருகத் தலைப்பட்டான். அவள் வேறொருவனை நேசிக்கிருளென்ற விஷயம் மட்டும் அவனுள்ளத்தில் ஊசிபோல்தைத்துக் கொண்டிருந்தது ஒருகால் மரகதம் மனம் மாறமாட்டாளா ?

இன்னெரு நம்பிக்கை ராணுவத்தில், சேர்ந்தவர்களெல்லாருமே உயிருடன் திரும்பி வருவார்களென்பது என்ன நிச்சயம்? அதிலும் அவனிடமிருந்து பல தினங்களாகச் செய்தியொன்றும் கிடையாதென்று கிழவி சொன்னபோதே தங்கவேலுவுக்கு ஒரு மாதிரியாகத்தான் பட்டது. உண்மையிலேயே ரணகளத்தில் அவனுக்கு ஏதாவது நேர்ந்திருந்தால் தனக்கு நல்லதுதான். அவன் பொருட்டு மரகதம்கன்னிகையாகவே வாழ்வைப்போக்கிவிட மாட்டாள். முதலில் உள்ளம் உடைந்தாலும் பின் தேறிவிடுவாள்.

"சீ! என்ன விபரீதமான மனப்போக்கு! சுயநலத்தின் பொருட்டு அநியாயமாய்ப் பிறர் கேட்டை விரும்புகிறேமே" என்று தங்கவேலு தன்னைத்தானே கடிந்துகொள்ளாமலில்லை. ஆனுலும் அவன் கேவலம் மனிதனே. ஆசை வெள்ளத்தில்அடித்துக்கொண்டு போகப்பட்டவன் நீரோட்டத்தை எதிர்த்து நீந்திக் கரையேறச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை.

தினமும் தபால் கட்டை உடைத்துப் பிரிக்கும்போது மரகதத்திற்கு ஏதாவது கடிதம் உண்டாவென்று அவன் ஆவலோடு பார்ப்பான் ஒன்றும் வந்திராவிட்டால் அதிலொரு திருப்தி அவள் வசிக்கும் தெருவில் செல்லும்போது அந்த வீட்டின் திண்ணையில் சற்று நேரம் உட்கார்ந்துவிட்டுத்தான் போவது வழக்கம். இன்றைக்கும் கடிதம் வரவில்லையம்மா. என்று வாசலில் காத்து நிற்கும் மரகதத்திடம் சொல்வான் ஏற்கெனவே சோகம் தோய்ந்த அவள் முகத்தில் இன்னும் கவலையின் குறிகள் பரவும். பார்வை பச்சைக்கல் மோதிரத்தின் மீது செல்லும் "ஐயோ பகவானே! எனக்குமிஞ்சியது இது ஒன்றுதானு? என்று கேட்பதுபோலிருக்கும் அப்பார்வை தங்கவேலுவின் இதயத்தில் அதுபரிதாபமுண்டாக்கியபோதிலும், அவள்மேல் அவனுக்கிருந்த காதல் குன்றவில்லை, அந்த மோதிரம் தன் கைக்கு வந்ததில் ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென அவன் திடமாய் நம்பினுன். 'அவன் விரலினின்று மோதிரம் தொலைந்ததுடன் அதையளித்துச் சென்றவனும் அகன்றிருக்க வேண்டும். பின் தன் வசமிருந்து மீண்டும் அவளுக்குச் சென்றபோது அதுதான் தந்த அறிகுறியாகுமல்லவோ? எனவே இறுதியில் மரகதம் தனக்கே உரியவள் இது அவன் மனம் செய்த குதர்க்கம்.

கிழவியின் இதயமும் வரவரக் கல்லாகிக்கொண்டு வந்தது. ஒவ்வொரு நாளும் தபாற்காரன் 'கடிதம் இல்லை, யென்று கையை விரிக்கும்போது பெற்ற வயிறு எரியாதா? "ஐயோ பெண்ணே, அப்போதே சொன்னேனே! ஊரில் எல்லாப்பெண்களையும்போல் ஒழுங்காய்த் தாய் தகப்பன் தேடிய பிள்ளையைக் கலியாணம் பண்ணிக்கொண்டு சுகமாயிராமல் அந்த அனுதைப்பயல்மேல் உயிரை விட்டாயே அவன் செத்துத் தொலைந்தானே அல்லது வேறு எவளை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டானே தெரியவில்லையே' என்று அவள் பிரலாபிப்பது தங்கவேலுவின் காதில் விழுந்தது. 'ஆ! மரகதம்! நன்ருய் வேண்டும் உனக்கு' என்று அவன் மனதிற்குள் கறுவிக் கொண்டான். அவள் காதலன்மேல் அவனுக்கேற்பட்ட பொருமை அவ்வளவு தூரம் வேர் விட்டிருந்தது. எத்தனையோ மஹா உத்தமர்களையும் தவசிரேஷ்டர்களையும் ஆட்டி வைத்த பெண்ணுசை தங்கவேலுவை என்ன தான் செய்யாது? பலவித மன மாறுதல்களிடையே, தன் பெற்ருேரிடமே அவனுக்கு வெறுப்புதட்டத்தொடங்கியது 'சை! இன்னும் எவ்வளவு காலந் தான் எனக்கு இப்படி பாரமாக இருக்கப்போகிருர்களோ! இவர்களுக்காக நான் வாழ்க்கையின் சுகத்தையே துறந்துவிட்டு, கடைசிவரை பிரமசாரியாகவே நிற்க வேண்டுமா? என்ன அநியாயம்! என்று மனங்கசப்பான். அவன்முகத்தில் முன்பு சதா தவழ்ந்து கொண்டிருந்த புன்னகை இப்போது எங்கோ மறைந்துவிட்டது. கூரை முகட்டை அண்ணுந்து பார்த்தபடி குருட்டு யோசனைகளிலேயே வெகு நேரத்தைப் போக்குவான் வேலையில் கவனம் செல்லாமல் ஒன்றுக்கொன்று செய்துவிடுவான் போஸ்ட் மாஸ்டர் வேம்பய்யரின் மனதில். 'தங்கவேலு முன் போலில்லை வர வர ஆளே மாறிப்போய்க் கொண்டிருக்கிருன். இவனுக்கு என்னவோ நேர்ந்துவிட்டது' என்ற சந்தேகம் வலுத்தது.

ஒரு நாள் வாய் திறந்து கேட்டுவிட்டார்:—ஏனப்பா தங்கவேலு நீ சம்பளம் வாங்கி நாலு நாளாகிறது போலிருக்கிறதே...'

'ஆமாங்க' என்னும்போதே அவன் முகத்தில் வேதனையின் குறி தோன்றி மறைந்தது.

'பின் ஏன் நீ இன்னும் ஊருக்குப் பணம் அனுப்பவில்லை!

தங்கவேலு மௌனம் சாதித்தான். 'சொல்லப்பா, பயப்படாமல் சொல்லு' என்ருர் போஸ்ட்மாஸ்டர்

'இந்த மாசம்...ஒரு அவசரச் செலவு இருக்குதுங்க' என்று மென்று விழுங்கினுன்

'அதென்ன முக்யச் செலவோ?'

'ஊம் ...வந்து...ஒண்ணுமில்லிங்க.

உச்சி முதல் உள்ளங்கால் வரை அவனை ஒரு முறை கண்காணித்தார் அவர் அவன் தலையைக் குனிந்து கொண்டு நின்ருன் தன் விஷயத்தில் உண்மையான சிரத்தைகொண்ட ஒருவரிடம் உண்மை சொல்வதா, பொய்யுரைப்பதா வென்றறியாமல் தயக்கம் கவிந்துகொண்டது.

'இப்படி விழித்தால் பிரயோஜனமில்லையப்பா விஷயத்தைச் சொல்......யாராவது பெண் மேல் ஆசைப்பட்டு விட்டாயா? கலியாணக் கவலை வந்து உன்னைப் பிடித்துக் கொண்டு விட்டதா? எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது' என்று அவர் சொன்ஞர்.

'அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க.' தங்கவேலுவின் அசட்டுச் சிரிப்பே அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

'அவசரப்படாதே தம்பீ கலியாணமே பண்ணிச்கொள்ளாமலிருந்துவிடு என்று நான் சொல்லவில்லை. ஆனுல் நம்மைப் பெற்றவர்களுக்குக் கடமையென்று ஒன்றிருக்கிறதல்லவா? என்றைக்கும் நீ இதே சம்பளத்தில் இப்படியே காலந்தள்ளிக் கொண்டிருக்கமாட்டாய். நல்ல காலம் பிறக்காமலா போய்விடும்? பொறு பொறு அதற்குமேல் உபதேசத்தைத் தொடர்ந்து அவனது உற்சாகத்தைக் குறைக்க விரும்பாமல் விட்டுவிட்டார் வேம்பய்யர். நல்ல மாட்டுக்கு ஒரு அடி போதாதா!

'இவர் சொல்வதைப் பார்த்தால், தலை நரைத்துப் பல்லுப்போன கிழவனுகும்வரை நல்லகாலத்தை எதிர் பார்த்துக் காத்திருக்கவேண்டியிருக்கும் போலிருக்கிறதே!' என்று தங்கவேலு நினைத்துக்கொண்டான் மரகதம் அவன் மனக்கண்முன் வந்து நின்ருள். வீணுக நாளைக் கடத்தி வந்தால் அப் பொக்கிஷம் தன் கைக்கு



எட்டாமல் தவறினுலும் தவறிவிடக் கூடும். அப்போது போஸ்ட்மாஸ்டர் ஐயா என்ன கிழித்துவிடப் போகிருர்? அப் பொக்கிஷம் போனுல் வருமா?

தங்கவேலுவின் உள்ளத்தில் ஒரு ஆவேசம் பிறந்து விட்டது எது எப்படியானுலும், விரைவில் மரகதத்தை மணந்துகொள்ளத்தான் வேண்டும்— தேவையானுல் பலவந்தமாகக்கூட அவள் கழுத்தில் தாலி வைத்துவிட வேண்டும் பின்னுல்தான் பொழியும் அன்பில் அவள் பழைய காதலனை மறந்து விடுவாள். அவர்கள் வாழ்வு இன்பமயமாகும் கிழவியைக் கைக்குள் போட்டுக்கொள்வதொன்றும் பிரமாதமில்லை. 'ஆயிரம் பொய் சொல்லியும் ஒரு, கலியாணத்தைத் பண்ணிவை' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிருர்கள் அதிலும் தன் சொந்தக் கலியாணத்திற்கென்று ஒருவன் என்னதான் செய்யக்கூடாது சூது, வாது வஞ்சனை மலிந்த உலகத்தில் நாம்மட்டும் ஏன் பித்துக்குளியாயிருக்கவேண்டும்?

தன் மூளையையே இப்படி ஒரு கிரகணம் பிடிக்குமென்று, ஒரு மாதத்திற்கு முன் தங்கவேலு கனவில்கூட நினைத்திருக்கமாட்டான் விதி வழியே மதி செல்லும் நியதி அவன் விஷயத்தில் பொய்யாகவில்லை.



* * * *

பாபச் செயல்களில் பழகி, அவற்றிலேயே ஊறிப்போனவர்கள் இருக்கிருர்கள் பொய், குடி, கூத்து, கொலை ஆகியவையெல்லாம் அவர்களுக்குச் சர்வ சாதாரணம். அவர்கள் வாழ்வின் நித்ய சம்பவங்களென்றுகூடச் சொல்லலாம். ஆனுல் நேர்வழியினின்று பிறழாதவர்கள் அவசரத்தினுலோ, அவசியத்தாலோ தூண்டப்பட்டு உள்ளமறிந்து ஒரு தவறு செய்தாலும் தம் மனச்சாட்சியின் குற்றச்சாட்டுக்குத் தப்பமுடியாது. தங்கவேலுவின் நிலை அன்று அவ்வாறே இருந்தது ஒரு பேதைப் பெண்ணின் இதயத்தை அவன் உடைத்துவிட்டான். அவனது தபாற்காரன் உத்தியோகமே அந்தச் செய்கையை எளிதாக்கியிருந்தது. போர்க்களத்தில் குண்டடிபட்டுப் படுகாயமடைந்த கணபதி, கடந்த ஒரு மாத காலமாய்ச் சிகிச்சைபெற்றும் பலனில்லாமல் இரண்டு தினங்களுக்கு முன்பு இறந்துவிட்டான் என்ற தந்திச்செய்தியைமரகதத்திடம் நீட்டும்போது, அவனது உடல், மனம். ஆத்மா யாவும் ஒருங்கே நடுங்கின. அதைப் படித்ததும் அவள் கதறிய குரல் அவன் காதில் இன்னும் ஒலித்துக்கொண்டிருந்தது.

அது ஓர் பொய்த் தந்தி தங்கவேலுவின் கற்பனை தன் திட்டத்தை நிறைவேற்ற அவன் வைத்த முதல் படி. போர்முனைக்குப் போனவன் இனி எங்கே திரும்பப்போகிருன்? அப்படித்திரும்பினுலும் அதற்குள் தான் மரகதத்தை மணந்துவிட்டால் அவனுல் என்ன செய்யமுடியும்? மற்றதைப்பின்னுல்பார்த்துக்கொள்ளலாம்' என்ற தைரியம் அவனுக்கு போஸ்ட் மாஸ்டருக்குத் தெரியாமல் ஒரு தந்தி பாரத்தை யெடுத்து அதில் செய்தியை எழுதினுன் வேலை ஆகிவிட்டது. அதற்கப்புறம் நாலைந்து நாட்களுக்கு அவன் வீட்டுப்பக்கம் அவன் எட்டிக் கூடப் பார்க்கவில்லை. அதற்கு மட்டும் தைரியத்தைகாணும்! காத்தவராயன் தெருவை நெருங்கியதும் குடையால் முகத்தை நன்ருய்மறைத்துக்கொண்டு தான் நடப்பான் துக்கத்தால் இளைத்துக்கருத்து உருக்குலைந்திருக்கும் மரகதம் கண்ணில் பட்டால் மனச்சாட்சி இன்னும் அதிகமாய்க்குத்துமல்லவா?

அன்றிரவு போஸ்டமாஸ்டர் வீட்டில் வழக்கம்போல் சாப்பிட்டுவிட்டு அவன் தன் அறைக்கு வந்தான். சுவரொட்டி விளக்கை ஏற்று முன்பே வாசலிலிருந்து யாரோ கூப்பிடும் குரல் வந்தது.

'ஐயா தபாற்காரரே!'

தங்கவேலு கதவைத் திறந்தான். மரகதத்தின் தாயார்க்கிழவி நின்ருள். முதலில் அவனுக்குத் 'திக்'கென்றிருந்தது எங்கேதான் செய்த மோசத்தைத் தெரிந்துகொண்டு சண்டைபோடத்தான் வந்திருக்கிருளோ என்று பயந்தான் ஆனுல் அவள் முகத்தைப் பார்த்தபின் பயம் நீங்கி விட்டது.

'ஐயா. இப்படிக் கை விட்டு விட்டீர்களே......' என்று கிழவி ஆரம்பித்தாள் அழுதழுது அவள் கண்கள் சிவந்திருந்தன.

'என்ன என்ன!' என்று பதறினுன் தங்கவேலு

'மரகதம் உயிருக்கு யமனேடு மன்ருடிக்கொண்டு கிடக்கிருள் ஐயா அன்றைக்கு அந்தத் தந்தியைக் கொண்டுவந்து கொடுத்தீர்களே; அதைப் பார்த்துவிட்டு முட்டி மோதிக் கொண்டாள் அழுதாள்; அலறினுள். அன்றே ஜுரமாகப் படுத்தவள்தான் அதற்குள் உடம்பு இப்படியாகி விட்டதே எங்களிடம் உமக்காவது கொஞ்சம் அக்கரையிருக்குமென்று நினைத்திருந்தேன். நீரும் அந்தப் பக்கம் தலையைக் காட்டவில்லை. நான் என்ன செய்வேன்! அந்தப் பாவி போனதுதான் போனுன்; என் மகளையும்......' முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு அவள் விம்மி விம்மி யழுதாள் நாலுநாள் சேர்ந்தாற்போல் கிழவியின் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்ததுமே, தன்னை மிக வேண்டிய நண்பனுகப் பாவிக்கத் தொடங்கி விட்டாள் அவள் என்று தங்கவேலு

வுக்குப் புரிந்தது அந்த உரிமையை அவன் அங்கீகரித்தானென்று சொல்லத் தேவையில்லை; 'அவள் உடம்பு அவ்வளவு மோசமாகிவிட்டதென்று என்னிடம் முன்பே சொல்வதற்கென்ன?' என்று கடிந்துகொண்டான் மறுநிமிஷம் இருவரும் மரகதத்தைப் பார்க்கப் புறப்பட்டனர்.

வழி நெடுகக் கிழவி பிரலாபித்துக்கொண்டே வந்தாள். தங்கவேலுவின் காதில் ஒன்றுமே விழவில்லை. 'தந்திச் செய்தி பொய்யென்று இப்போதாகிலும் ஒப்புக்கொண்டு விடலாமா?' என்று அவன் மனதுடன் போராடிக் கொண்டிருந்தான். கிழவியின் வீடு வந்தது

ஜ்வரவேகத்தில் தலையைப் படுக்கையில் அப்படியுமிப்படியும் உருட்டியவாறிருந்தாள் மரகதம் தங்கவேலு அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். நெருப்பாய்ச் சுட்டது அவர்கள் நிற்பதுகூட மரகதத்துக்குத் தெரியவில்லை. உண்மையிலேயே கவலைக்கிடமாம் நிலைமை. 'எல்லாம் என்னால் ஏற்பட்டதல்லவா?' என்று தங்கவேலு எண்ணி உதட்டைக் கடித்துக்கொண்டான் அவள் உடலின் நெருப்பு அவனையும் தகித்தது

'ஏன் கிழவி ஏதாவது மருந்து வாங்கிக்கொடுத்தாயா?' என்று கேட்டான்.

'கஷாயம் போட்டுக்கொடுத்தேன்,'

'உன் கஷாயத்தில் இடி விழ...... டாக்டரிடம்காட்டி மருந்து வாங்கினாயா?'

"ஐயோ! என் கையில் பணமிருந்தால் அப்பொழுதே டாக்டரைக் கூப்பிட்டிருக்கமாட்டேனா?"

தங்கவேலு தன் சட்டைப்பைக்குள் கையைவிட்டான். வீட்டுக்கு அனுப்பாமல் வைத்திருந்த பணம் சமய சஞ்சீவியாய் உதவியது "அவளைப் பார்த்துக்கொள் நான் போய் டாக்டரை அழைத்துவருகிறேன் என்று கிழவியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினான்

"நீ மகாராஜனாயிருக்க வேண்டுமப்பா என்று அவள் மனமாற வாழ்த்தினாள்.

இருளில் கடுவேகமாய் நடந்து சென்ற தங்கவேலு எண்ணிக்கொண்டான் "நான் முதலிலேயே நினைத்தது சரிதான். மரகதம் எனக்காகப் பிறந்து வளருபவள் அவள் இந்த ஜ்வரத்தினின்று பிழைத்துக்கொண்டாளானால், சமயத்தில் நான் செய்த உதவி அவள் உயிரையே காத்ததையறிவாள். என்பால் அவளன்பு கனியும் கிழவியும் எனக்குக் கடமைப்பட்டிருக்கிறாள். எங்கள் மணம் நிகழத் தடையெதுவுமிராது. எல்லாம் அந்தப்பச்சைக்கல் மோதிரத்தின் மகிமை!

* * *

இன்னும் சில தினங்கள் ஓடின

தகுந்த வைத்திய உதவியினாலும் தங்கவேலுவின் அன்புமிக்க சிசுருஷைகளினாலும் நமன் வாயிலிருந்து தப்பினாள் மரகதம். ஆனால் ஏக்கம் தன் முத்திரையை அவள் வதனத்தில் பதித்திருந்தது கணபதியை நினைக்கும்போதெல்லாம் கண்ணீர் மல்கும் அம்மா! என்னை ஏன் பிழைக்கவைத்தீர்கள்? நான் இறந்திருந்தாலாவது அவரிருக்குமிடம் போய் சந்தோஷமாயிருப்பேனே என்று தாயிடம் அழுவாள். இந்தத் துக்கம் சிறிது ஆறட்டும் பார்ப்போம் என்று தங்கவேலு காத்திருந்தான் கணபதியிடமிருந்து இன்னமும் யாதொரு தகவலும்கிடையாது. ஆசாமி அவ்வளவுதான் என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டான் தங்கவேலு

மரகதம் சும்மா ஏங்கித் தவிக்கிறாளே ஐயா. ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டாமா? என்று கிழவி ஒரு நாள் அவனைக் கேட்டாள்.

'அதற்கு ஒரே ஏற்பாடுதான் உண்டு என்றான் அவன்.

'அது என்ன?

'அவளுக்கு ஒரு கலியாணத்தைப் பண்ணிவைக்க வேண்டியதுதான். அப்புறம் கொஞ்ச நாளில் தானே தேறிவிடுவாள்.

கிழவி யோசித்தாள்.

'என்ன யோசிக்கிறாய்?'

'மாப்பிள்ளைக்கு எங்கே போவதென்றுதான்.'

'அந்தக் கவலை வேண்டாம் மரகதத்தை மணக்க நான் எப்போதும் தயார். ஆனால் ஒன்று நீ தான் அவளைத் 'தாஜா' பண்ணி இணங்க வைக்க வேண்டும்.'

அவள் முகம் மலர்ந்தது. தங்கவேலுவின் கரங்களைப் பற்றிக்கொண்டு கூத்தாடினாள் 'ஐயா! அது தான் நான் விரும்பியதும் அந்தக் கழிசடைப்பயல் கணபதி இறந்ததே நல்லதாய்ப் போயிற்று. என் மகள் கொடுத்து வைத்தவள். அவளை





நான் சரிப்படுத்தி விடுகிறேன் நீங்கள் ஆபத்தில் செய்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்யக்கூடாது?' என்றாள் பெண்களின் சபல புத்தியை எண்ணி மனதிற்குள் சிரித்துக்கொண்டான் தங்கவேலு மரகதமும் பெண்தானே? கணபதியை மறக்க அவளுக்கு எத்தனை நாளாகும்? எல்லாம் தன் சாமர்த்தியத்திலிருக்கிறது

'மரகதம் அந்த மோதிரத்தை இப்படிக் கொடுத்து விடு அது கையிலிருந்தால் உனக்கு அடிக்கடி அவன் ஞாபகம் வந்துகொண்டேயிருக்கும் என்று கேட்டு வாங்கினாள் கிழவி மரகதம் கண்ணீருடன் அதைப் பிரிந்தாள். மோதிரம் தங்கவேலுவின் கைக்கே வந்து சேர்ந்தது தாயின் இடைவிடாத தொல்லை பொறுக்க மாட்டாமல் தங்கவேலுவை மணந்துகொள்ளச் சம்மதித்துவிட்டாள் மரகதம் அதிக ஆடம்பரமில்லாமல் சொற்ப செலவில் உள்ளூரிலேயே கலியாணத்தை முடித்துக்கொள்ள ஏற்பாடாகியது. தங்கவேலுவின் மகிழ்ச்சிக்கோரளவில்லை இடையிடையே குடும்பத்தைக் கைவிட்டு விட நேருமே என்ற வருத்தம் தோன்றியபோதிலும் அதை மறந்து விடுவான். 'பெற்றோர் எக்கேடாயினும் கெட்டுப் போகட்டும் அதற்காக வறட்டு வாழ்க்கை வாழ முடியாது' தன் மணச் செய்தியை அவன் போஸ்ட் மாஸ்டர் ஐயாவுக்கே தெரிவிக்கவில்லை. முன் கூட்டித் தெரிந்தால் அவர் தடை சொல்லக்கூடும்; எனவே கலியாணம் ஆன பின்பு அவரிடம் விஷயத்தை விஸ்தாரமாய்ச் சொல்லிக்கொள்ளலாமென்பது அவன் அபிப்பிராயம்.

அன்று கலியாண நாள் மரகதத்தின் வீட்டில் கூடியிருந்தவர்களெல்லாம் ஒரு வைதிகப் பேர்வழியும் நாலைந்து நண்பர்களும் தான் இன்னும் முகூர்த்தம் நெருங்கியிருக்கவில்லை அகஸ்மாத்தாக வாசற் பக்கம் வந்த தங்கவேலு தெருவின் எதிர்ச்சாரியில் நின்றுகொண்டிருந்த ஒருருவத்தைக் கண்டு திடுக்கிட்டான். மறு கணம் 'அண்ணா' வென்றலறிக்கொண்டு ஓடித்தெருவைக் கடந்தான்.

ஆம்! அது தங்கவேலுவின் அண்ணன் பத்து வருஷங்களுக்கு முன் வீட்டுவிட்டு ஓடிப்போன சுந்தரம் தம்பியை அடையாளந் தெரிந்துகொண்ட அவனது உணர்ச்சிகளும் வர்ணிக்கத் தரமல்ல இருவரும் ஒருவரையொருவர் அணைத்துக் கண்ணீருகுத்தனர்.

'தங்கவேலு அதோ வாழையிலைத் தோரணம் கட்டியிருக்கிறதே அந்த வீட்டில் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்' என்று சுந்தரம் 'சட்'டெனக் கேட்டான்.

'அங்கே எனக்கு இன்று கலியாணம் அண்ணா இன்றைக்கு எதிர்பாராத விதமாக நீ வந்து சேர்ந்தது எவ்வளவு தெய்வாதீனம் பார்! வா......' என்று தம்பி அண்ணன் கையைப்பற்றி இழுத்தான்.

'அப்படியானால் நீதான் மாப்பிள்ளையா.........? என்னே விதியின் விளையாட்டு!' அவன் முகத்தில்தோன்றிய துயரமும் வியப்பும் தங்கவேலுக்குப் புரியவில்லை.

'ஏன் அண்ணா அப்படிச் சொல்கிறாய்?'

'தம்பி. நீ மரகதத்தை மணந்துகொள்வதுபற்றி நான் பொறாமைப்படுவதாய் எண்ணாதே ஆனால் நான் அவள் முகத்தில் விழிக்க விரும்பவில்லை. அதுதான் நான் அந்த வீட்டினுள் கால்வைக்க மறுக்கும் காரணம்'

'அப்படியானால் முன்பே உனக்கு மரகதத்தைத் தெரியுமா?......' என்று தம்பி திணறினான்.

'நன்றாய்த் தெரியும். நீ உன் விரலில் போட்டுக்கொண்டிருக்கிறாயே, அந்தப் பச்சைக்கல் மோதிரம்; அது நான் அவளுக்கு அளித்துச் சென்றது. என்னிடம் அன்பு காட்டுவதுபோல் நடித்தாள் அவள் திரும்பி வந்து அவளை மணக்கலாம் என்ற உத்தேசத்துடன் காஷ்மீரில் ராணுவ சேவைக்குச் சென்றேன் திடீரென ஒரு நாள் நானும் என் சகாக்களும் எதிரிகளிடம் சிக்கிக்கொண்டுவிட்டோம், அவர்கள் எங்களை யுத்தக் கைதிகளாகக் காவலில் வைத்திருந்தனர், சில தினங்கள் முன்பு எப்படியோ தப்பி வந்து விட்டோம் எங்கள் தைரியத்தைப் பாராட்டி அதிகாரிகள் ஒரு மாதம் ரஜா அளித்து அனுப்பினார்கள் நான் ஆவலுடன் மரகதத்தைச் சந்திக்க ஓடிவந்தேன் வீட்டுக்குள் நுழையுமுன்னரே அந்த வாழையிலைத் தோரணம் எனக்கு அதிர்ச்சிதந்தது சற்றுப் பொறுத்து விஷயமறியலாமென எண்ணி இங்கு காத்திருக்கும்போதுதான் நீ வெளியில் வந்தாய்......'

'கணபதி என்று பெயரை மாற்றி வைத்துக்கொண்டிருந்தது நீதானா?'

'ஆம் வீட்டை விட்டு ஓடி வந்து இந்த ஊர் விறகு மண்டியில் வேலை செய்யும்போதே என் பெயர் கணபதியென்றுதான் சொல்லிக் கொண்டேன்.'

'அண்ணா! மரகதம் குற்றமற்றவள். உங்களிருவருக்குமே துரோகம்செய்து வைத்தது நான்தான்......' என்று கதறியபடி அவன் காலில் விழுந்தான் தங்கவேலு விதி அந்தப் பச்சைக்கல் மோதிரத்தை வைத்துக்கொண்டு அவ்வளவுதூரம் விளையாடிவிட்டது ஆதியோடந்தமாக விஷயங்களையெடுத்துச்சொல்லி அண்ணனை மன்னிப்பு வேண்டினான்

'மாப்பிள்ளை வாருங்கள். முகூர்த்தம் நெருங்கிவிட்டது' என்று சொல்லிக்கொண்டே சாஸ்திரிகள் தங்கவேலுவிடம் வந்தார்.

'நானல்ல மாப்பிள்ளை... இதோ இவர்தான்.' என்று சுந்தரத்தைச் சுட்டிக்காட்டினான் அவன். அவர் விழித்தார். ஆனால் அரைமணி நேரத்துக்கெல்லாம் மரகதத்தின் கழுத்தில்தாலி கட்டியது சுந்தரம். அவள் ஆனந்தக் கண்ணீர் பெருக்கியப்டி மாண்டவன் மீண்டதுபோல் வந்த தன் காதலனை நோக்கினாள். கிழவி வாயடைத்துப் போய் நின்றாள்.

* * *

தங்கவேலு இன்னும் பிரமசாரியாகத்தானிருக்கிறான் அண்ணன் சுந்தரம் மறுபடி போர்முனைக்குச் செல்லுமுன் மனைவியையும் தம்பியையும் அழைத்துக்கொண்டு ஒரு முறை கிராமத்துக்குப்போய்ப் பெற்றோரைக் கண்டு வந்தான். அவனும் பெற்றோருக்கு மாதாமாதம் சிறிது பணமனுப்பி தம்பியின் சுமையைக் குறைத்து வருகிறான் தங்கவேலுவுக்குப் பணம் கொஞ்சம் மிச்சமாகிறது கூடிய சீக்கிரம் அவன் தனக்கென்று ஒரு மோதிரம் வாங்கிக்கொள்ள எண்ணுகிறான். ஆனால் இம்முறை அது அவன் ஞாபகங்களைச் கிளறும்படியான பச்சைக்கல் பதித்ததாயிருக்காதென்பதுமட்டும் நிச்சயம்.

———



# காவல் பெண்டு

பாமகள்

“கதை வசனம் காவல் பெண்டு’ என்ற விளம்பரத்தைக் கண்டு விட்டால் படத்தில் நடிப்பவர்களைப் பற்றியோ டைரக்டரைப்பற்றியோ சினிமா ரஸிகர்கள் கவலைப் படுவதில்லை. திரள்திரளாக அப்படத் திற்குப் பல தடவை விஜயம் செய்து மகோன்னத வசூல் வெற்றி யை அப்படத்திற்கு அளித்து விடுவார் கள் அது மட்டுமல்ல படம் பூராவும் உள்ள வசனங்களை அப்படியே மனப் பாடமும் செய்துவிடுவார்கள். அத் தனை சிறப்பாகக் கதையும் வசனமும் இணைந்து மக்களைப் பைத்தியமாக அடித்து வந்ததற்குக் காரணம் ‘காவல் பெண்டு’வின் விசால அறிவுதான்.

அவளுடைய வசனத்தில் ஆழ்ந்த கருத்துகள் இருக்கும். பல அர்த்தங் கள் செய்யும்படியிருக்கும் புரட்சிக் கனலையும் கக்கும். அனுபவ நீதியை யும் அது போதிக்கும் அடுக்குச் சொற் கள் இனிமையாய் இயற்கையுடன் இழைந்து நிற்கும் கதையிலும் கச் சிதமான கற்பனை விருவிருப்பா பான நிகழ்ச்சிகளோடு ‘மேலே என்ன! என்ன’ என்ற பரபரப்புக் கொடுப்பதாய் இருக்கும் இத்தனை சிறந்த கதை வசனம் எழுது பவள் பட முதலாளிகளைக் குபேரர் களாக்கி வந்தபோது அவளுடைய அந்தரங்க வாழ்க்கையைப்பற்றி ரஸி கர்கள் அறியத்துடித்துக் கொண்டிருந் ததில் ஆச்சர்யம் ஏதுமில்லை.

ஒவ்வொரு சினிமாப் பத்திரிகை யிலும் நேயர்கள் கேள்வி ‘காவல் பெண்டு’வின் வாழ்க்கை வர்ணனை எப்போது வெளிவரும் என்பதாகவே இருந்தது பதில் அளிக்கும் நிருபர் அண்ணக்களுக்கு அவர்களைச் சமாளிப் பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது இதோ எழுதுகிறோம் அதோ எழுதுகிறோம்’ ‘வரும் ஜூன் இதழில் பாருங்கள்! தீபாவளி மல ரில் வெளியாகும், ‘காவல் பெண்டுவை நமது நிருபர் பேட்டிகாணப்போயிருக் கிறார்: வந்ததும் போடுகிறோம்’ நமது ஸி ஐ டியை காவல் பெண்டு எய்க் கிறார் என்றெல்லாம் நிருபர் அண் ணக்கள் நேயர்கள் பொறுமைக்கு பூண்கட்ட முயன்றனரே ஒழிய ‘காவல் பெண்’டின் வாழ்க்கை வர்ணனையைப் பிரசுரிக்கவில்லை. காரணம் ‘காவல் பெண்டு’ அப்படிச் செய்வதை விரும் பாது தன் சுய சரிதையைச் சொல்ல மறுத்ததுதான்.

கடைசியில் சினிமாப் பத் திரிகை நேயர்கள் சங்கத்தில் வரும் மாத இதழ்களுள் ஒன்றி லாவது காவல் பெண்டி’ன், வாழ்க் கை விவரிக்கப்படா விட்டால் சினிமாப்பத்திரிகைகள் எல்லாவற் றையுமே பகிஷ்கரித்துவிடுவது என்ற தீர்மானம் போட்ட பிறகுதான் காவல் பெண்டுவின் வாழ்க்கை அந்தரங்கம் வெளியாகத் தலைப்பட்டது.

பத்திரிகையாளர்களெல்லாம் ஒன்று சேர்ந்து “எங்கள் பிழைப்பில் பண்போட்டுவிடாதீர்கள். கொஞ்சம் தயவுசெய்யுங்கள்” என்று கெஞ்சிய பிறகுதான் ‘காவல் பெண்டு தன் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளைக் கூறி னார் பகிஷ்கார விபரீதம் நேரும் முன் னேயே எல்லாச் சினிமாப் பத்திரி கைகளும் காவல் பெண்டுவின் வாழ்க் கையை வர்ணித்துவிட்டன :—

* * *

இங்களைப் பைத்தியமாக அடித்து கிளிப்பிள்ளைகளாக மாற்றிய ‘காவல் பெண்டு’வின் உண்மைப் பெயர் மங்களம்.

மங்களம் ஒரு மங்களவாரத்தில் மங்களூரில் பிறந்தார் அவர் பிறந்த வருஷம் யர்ருக்கும் ஞாபகமில்லாவிட் டாலும் ஒரு தை மாதப்பிறப்பன்று தான் பிறந்ததுமட்டும் நன்றாக ஞாபக மிருக்கிறதாம். ஏனெனில் அன்று தான் தந்தையை உருட்டிவிட்டு அவர் பிறந்ததாக அவருடைய தாய் அடிக் கடி சொல்லுவாளாம் அவருக்கு என் உத்தேசம் இருபத்தைந்து வய திருக்கலாம்.

அவருடைய தாய்மொழி தமிழ் இருந்தாலும் அவர் பத்துவயதுவரை மங்களூரிலேயே இருந்ததன் காரண மாக அவருக்குக் கன்னடம் கொங்கிணி, ஆங்கிலம் முதலிய மொழிப் பயிற்சி யும் உண்டு. தமிழைத் தாயிடத்தி லும், ஆங்கிலத்தைத் தன் தாய் வேலை யாக இருந்த ஆங்கிலக்குடும்பத்தில் பழகியதிலிருந்தும் கற்றுக்கொண்டார் அவருக்கு கொங்கிணியும் கன்னட மும் பேசத் தெரியுமேதவிர எழுதப் படிக்கத் தெரியாதாம்.

அவருக்குப் பதின்மூன்றுவயதுநடக் கும்போது அவருடைய தாய் வேலை செய்துவந்த ஆங்கிலக்குடும்பம் சென் னைக்கு வரவே அவரும் தன் தாயுடன் சென்னைக்குவந்தார்.

சென்னைக்குவந்தபிறகு அவருடைய தாயை துரதிஷடம்பிடித்துக் கொண் டது அவள் நோய்வாய்பட்டு விழுந் தாள் ஆகவே அவளால் வேலை செய்ய முடியவில்லை அவள் பிழைத்து எழும் முன் அந்த ஆங்கிலக் குடும்பமும் தாய் நாட்டிற்கு கப்பலேறிவிட்டது

தாய் பெண்ணை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டாள் ஆங்கிலக் குடும் பம் போகும்போது கொடுத்துப் போன ஐநூறு ரூபாயை வைத்துக் கொண்டு எத்தனை நாள் காலம் தள்ள முடியும்? வேலை செய்யக்கூட சக்தியற்றுப் போய்விட்ட தாய்க்கு வயிற்றுக் கவலையோடு பருவமடைந்த மங்களத்தை ஒரு இடத்தில் மணம் செய்து வைக்க வேண்டிய பொறுப் பும் பெரும் பாரமாய் வருத்தியது

பெண்ணை ஆசிரியர் வேலைக்குப் படிக்க வைத்தால் நல்லது என்று யாரோ யோசனை சொன்னார்கள் பயிற்சி முடிந்து ஒரு வேலை என்று ஆகிவிட்டால் கல்யாணக் கவலை அவ் வளவாக வாட்டாது என்ற எண்ணத் துடன் அவள் பெண் மங்களத்தை சர்க்கார் பெண்கள் போதனா முறைப் பள்ளியில் சேர்த்து வைத்தாள்.

எதிர் காலத்திற்கு நல்ல திட்ட மிட்டுவிட்ட அவளுக்கு அன் றாடப் பாட்டுக்கும் ஒரு திட்டம் போட வேண்டியிருந்தது அதன் காரணமாக அவள் ‘சஞ்சாரி’என்ற பிரபல தினப் பத்திரிகையின்



ஆசிரியர் சோமநாதனின் வீட்டில் வேலைக்காரியாக அமர்ந்தாள்

அவள் தன் பெண்ணின் முன்னேற் றத்திலும் க்ஷேமத்திலும் அக்கரை காட்டினாளே ஒழியத் தன் உடல் பல வீனத்தைப்பற்றி சிறிதும் சிந்திக்காம லேயே இருந்துவிட்டாள். கடும் உழைப்பு அவளை சீக்கிரமே குலைத்து விட்டது ஒரு நாள் அவள் வேலை செய்துகொண்டிருக்கும்போதே, மயங்கி விழுந்துவிட்டாள் விழுந்தவள் பிறகு எழவேயில்லை பரலோகச் சுடருடன் அவள் ஐக்கியமாகிவிட் டாள்.

மங்களம் செய்தி கேட்டுப் பள்ளியி லிருந்து ஓடிவந்தாள். தாயின் சடலத் தின் மீது விழுந்து ‘அம்மா இனி யார் எனக்குத் துணை?’ என்று கதறினாள்

இக்காட்சியைக் கண்ட சோமநாத னின் உள்ளம் உருகியது மங்களத் தின்பால் இரக்கம் கொண்டார். அவ ளைத்தேற்றி அவளைப்பற்றிய முழு விவரங்களையும் விசாரித்தறிந்தார். அவளைத் தானே காப்பாற்றி முன்னுக் குக் கொண்டுவருவதாகக் கூறினார் அவர்தன் வாக்கைக் காப்பற்றினார். அவளுடைய தாயின் ஈமச்சடங்கு களைத் தாமே செலவிட்டு நடத்தினார் தம் பங்களாவின் ஓரமாக இருந்த ‘அவுட் ஹவுஸில்’ அவள் இருந்து கொண்டு படிக்க வசதி செய்துகொடுத் தார்

இம்மட்டோடு அவர் இருந்திருந் தால் இன்று மங்களம் நீங்கள் போற் றும் காவல் பெண்டாக மாறி இருக்க முடியாது, ஏதோ ஒரு பள்ளிக்கூடத் தில் சிறுமிகளுக்கு படிப்புச் சொல்லி கொடுக்கும் உபாத்தினியாக இருந் திருப்பார். சோமநாதன் அவளை முன் னுக்குக்கொண்டுவருவதாகச்சொன்ன வாக்கை நிறைவேற்றும் கட்டத் திற்கு வந்தார்.

முன்னுக்குக் கொண்டுவருவதாகச் சொன்னபோது அவர் அவளை ஒரு நாட்டிய மங்கையாகவோ அல்லது பாடகி அல்லது சினிமா நடிகையாக ஆக்கவோதான் திட்டமிட்டிருந்தார். ஆனால் கலைத் துறையின் எப்பகுதியில் இறங்க உத்தேசம் என்று அவளை அவர் கேட்டபோது, அவள் ஆசிரியை யாகவே இருக்க விருப்பம்’ என்று சொல்லவே அவர் திகைத்துப் போனார் அவள் படித்த படிப்பை வைத்துக்கொண்டு அவள் முன் னேறிப் புகழ் பெறுவது முடியாத காரியம் மேலும் பெரும் பெரும் படிப்பெல்லாம் படிக்கவைத்துப் பேராசிரியையாக்கவோ அவர் செல்வ நிலை இடங்கொடுக்காது. தன் செல் வாக்கை உபயோகித்து சிறு உதவி கள் ஏதேனும் செய்யலாம் என்று தான் அவர் நினைத்திருந்தார் இப் போது என்செய்வது? அவள் விரும் பிய துறையில் பொன்னும் பொரு ளும் அவளுக்கு கிடைக்கச்செய்ய வேண்டுமே அதுதானே அவர் குறிக் கோள்?

அவர் யோசித்தார்: ஒரு நல்ல யோசனை உதித்தது. அவருக்கு ஆங் கிலத்திலும், பிரஞ்சிலும் நல்லபுலமை இருந்தது. அம்மொழிகளில் அவர் நன்றாக எழுதுவார் அவர் எழுத்தைப் பாராட்டாத மேனாட்டாரே கிடை யாத அப்படிப்பட்டவருக்குத் தமிழி லும் நல்ல இலக்கியங்களைச் சமைக்க வேண்டும் என்று ஆசை இருந்தது அதற்காக அவர் எல்லாப் பழந்தமிழ் இலக்யங்களையும் ஊன்றிப் படிக்க லானார். வடமொழியையும் கற்று வந்தார் சீக்கிரமே வெளியிடுவதற் கென்று இரண்டொரு கட்டுரைகளும், நாவல்களும் எழுதிவைத்திருந்தார். அவைகள் வெற்றியை அளித்தால் ஒரு தமிழ் பத்திரிகைகூட ஆரம்பிக்கும் படி தன் முதலாளிகளைத் தூண்ட லாம் என்றிருந்தார். இப்படித் தமிழ் ரஸிகர்களிடையே தமக்குக் கிடைக் கப்போகும் வரவேற்பைத் தியாகம் செய்து அப்புகழ் மங்களத்திற்குக் கிடைக்கும்படி செய்தாலென்ன என்று அவருக்குத் தோன்றியது

தோன்றியவாறே அவர் மங்களத் திற்கு தன் இலக்கியங்களைத் தானம் செய்துவிட்டார். அத்துடன் தன் செல்வாக்கினால் ‘மங்களத்தின் கதை கட்டுரைகளுக்கு புகழ்வாய்ந்த பத்திரி கைகளில் ஆதரவும் நல்ல விளம்பர மும் தரும்படிக்கும் செய்து விட்டார்.





மங்களத்தின் இயற்பெயரில் இல்லாமல் பழங்கால பெண் கவியான 'காவல் பெண்டு' என்றவரின் பெயரில் அக்கதை கட்டுரைகள் வெளியாகிப் புகழ்பெற்றன.

பிறர் கையால் எழுதிய 'காவல் பெண்டு' நாளடைவில் எல்லோருக்கும் கற்பனைக் கற்கண்டை அளிப்பவராக மாறினார் முதலில் தான்பெற்ற இலக்கியதானம் நல்ல அஸ்திவாரமாக அமைந்து பார்புகழும் இலக்கியக் கோட்டையைத்தானே கட்டும் திறமை 'காவல்பெண்டு'வுக்கு வந்துவிட்டது அதற்குக்காரணம் சலியா தன் முயற்சியும் ரஸிகர்களும், ஆசிரியர்களும், அறிஞர்களும், பொன்னும், புகழ்ச் சொற்களும் 'காவல் பெண்டின்' மீது அள்ளி வீசி அவரை உற்சாக மூட்டியதுதான் உணர்ச்சியும் நற்பலனை நல்கக்கூடிய அவருடைய எழுத்துக்களை வரவேற்காதாரே இடையாது.

இத்தனை புகழ்பெற்ற 'காவல் பெண்டை' ஏராளமான ரஸிகர்களை உடைய சினிமாத்துறை சும்மா விட்டுவிடுமா? பணம் காய்க்கும் மரம்தான முதலாளிகளுக்கு வேண்டும்? எனவே பட முதலாளிகள் தங்கள் தங்கள் படத்திற்குக் கதையும் வசனமும் எழுதித்தர அவரை அணுகினர்.

உலகத்திற்குக் கல்வியும் நீதியும், போதிக்கச் சிறந்த சாதனம் சினிமா என்பதை உணர்ந்த 'காவல் பெண்டு' அதற்கு ஒப்புக்கொண்டு தற்போது உங்களை மகிழ்விக்கிறார்.

இத்துடன் 'காவல் பெண்டின்' வாழ்க்கை வர்ணனையை நிறுத்திக் கொள்ளலாம் ஆனால் உங்களில் பலர் அவருடைய 'அந்தரங்க' வாழ்க்கை—அதாவது காதல் கல்யாண விவகாரம் என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்று அதிருப்திகொண்டு கூச்சல் போடுவது என் காதில் விழுகிறது அதைப் பற்றிச் சொல்லாவிட்டால் என்னைச் சும்மாவா விட்டு விடுவீர்கள்? இல்லை சமூகத்திற்கே ஒரு நீதி கற்பிக்கவேண்டும் என்ற ஆசையோடு வாழும் காவல் பெண்டுக்குத்தான் திருப்தி ஏற்படப் போகிறதா?

'அவருடைய வாழ்க்கை வர்ணனையை இத்தனை தூரம் படித்து வந்த நீங்களே அவர் காதல் கல்யாண விஷயத்தை ஊகித்துக்கொள்ள முடியாதா?' என்று பேசாமல் விட்டுவிடலாம். ஆனால் சோமநாதனுடன் இணைத்துக் கற்பனை செய்து பார்க்கும் உங்கள் ஊகம் தவறாகி விடுமே என்றே பயப்படுகிறேன்

காவல் பெண்டு தம் கதை வசனம் மூலம் பிறருக்கு நீதி புகட்டுவதுபோல் அவர் வாழ்க்கையும் பிறர் கடைபிடிக்கத் தக்கவாறு இருப்பதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்

'காவல் பெண்டு' வண்டு நிறம் படைத்தவராயினும் அவர் அழகு முகம் பூரணச் சந்திரனுக்கு ஒப்பானது பருவ அழகும் சேர்ந்து அவரைக் காண்பவர்களை மயங்கும்படி செய்யும்.

ஆனால் நித்தம் அதிகாலையில் மஞ்சள் பூசிக் குளித்து கூந்தலை தளர்த்தி முடிந்து கதம்பம் செருகி நெற்றியில் குங்குமமிட்டுக்கொண்டு தேவதா படங்களின் முன் விளக்கேற்றிவைக்கும் அழகைப்பார்த்தால் அக்காலப் பத்தினி தெய்வங்களைப் பார்ப்பது போல் நமக்கு அவர்பால் பக்தி தோன்றுமேயல்லாது விகார எண்ணம் துளியும் எழாது.

அவருக்குக் காதலில் நம்பிக்கையில்லை. சோமநாதன் தேடிவந்த வரனையே மணந்திருக்கிறார். அவர் கணவர் பெயர் ராமசாமி பாங்கி குமாஸ்தாவாக இருக்கிறார் தம்பதிகளுக்கு நாலு வயதில் ஒரு பெண் குழந்தையும் கையில் ஒரு ஆண் குழந்தையும் இருக்கின்றன.

வருவாய் அமோகமாக உள்ள 'காவல் பெண்டு மிகவும் எளிய வாழ்க்கை நடத்துகிறார் தனக்கு வரும் ஆயிரக்கணக்கான ரூபாயையும் சோமநாதனிடமே கொடுத்துவிட்டு தன் கணவன் சம்பாத்தியத்தைக் கொண்டே குடும்பச் செலவுகளைச் செய்கிறார். சோமநாதனே அவர் தரும் ரூபாயைப் பெற்றுக்கொள்ள மறுத்து 'காவல் பெண்டின்' பெயரிலேயே பாங்கியில் போட்டு வைத்திருக்கிறார். இதை அறிந்த 'காவல் பெண்டு' 'அதைத் தாங்களே எடுத்துக் கொள்ளுங்கள் இல்லாவிட்டால் அதை ஒரு தர்மஸ்தாபனத்திற்குக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லிவிட்டார். யாராவது எந்த தர்மஸ்தாபன 'டிரஸ்டி'யாகவாவது இருந்தால் ஒரு மனுப்போட்டுப் பாருங்களேன்



# கலா மண்டபம்

நமது பம்பாய் கடிதம்

## 'பட முதலாளிகள் நிலைமை கேவலமாகிறது'

சென்ற வாரத்தில். பம்பாய் சினிமா உலகத்தில் முக்கியமான சம்பவமென்னவென்றால், இந்தியப் பட முதலாளிகளின் சங்கத்தார் பத்திராதிபர்களின் சார்பாக அளித்த தேனீர் விருந்தின் பொழுது. இச்சங்கத்தின் தலைவரான ஸ்ரீ சுன்னிலால் செய்த கபடமற்ற பிரசங்கமே. இந்த டீ பார்ட்டிக்கு இவ்வூர் எல்லா பத்திராதிபர்களும். அநேக பெயர் பெற்ற பட முதலாளிகளும், டைரக்டர்களும் வந்திருந்தனர்.

ஸ்ரீ சுன்னிலால் சொன்னார், "இந்திய சினிமாத் தொழில் தற்சமயம் மிகவும் மோசமான நெருக்கடியில் இருக்கிறது. இப்பேர்ப்பட்ட நிலைமைக்குக் காரணம் என்னவென்றால், இந்திய சர்க்கார், கொஞ்சமும் தயை, தாட்சண்யமின்றி சினிமாத் தொழிலை, ஒரு 'சுகபோகத் தொழில்' என்று கருதி சினிமாவுக்கு அத்தியாவசியமாகவேண்டியிருக்கும் தேவைகளை துளியாவது காதுகொடுத்து கேழ்ப்பதில்லாததுதான்.

நான் முதலில். ஸ்ரீ சுன்னிலால் மிகவும் கபடமில்லாமல் பேசினார் என்று ஏன் சொன்னேனென்றால், அவர், மற்ற தடவைகளைப்போல் இல்லாமல், இந்த டீ பார்ட்டியின் பொழுது, சினிமாத் தொழிலிலிருக்கும் ஊழல்களைப் பற்றி விரித்துச் சொல்லி இந்த ஊழல்களை அகற்றி. மிகவும் பரிசுத்தமாகவும், ஊக்கமுடனும் படமுதலாளிகள் வேலை செய்தால்தான். சினிமாத் தொழிலே முன்னுக்கு வருமென்று சொன்னார் படமுதலாளிகளின் சங்கத்திற்கு தான் தலைவராகயிருப்பதால், இந்திய சினிமாத் தொழிலை ஒரு உன்னத நிலைமைக்குக் கொண்டுவர முயற்சி செய்யப்போவதாக ஸ்ரீ சுன்னிலால் உறுதி கூறினார்

பட முதலாளிகளின் நிலைமை வர வர கெட்டு வருகிறது சர்க்காரின் கொடுமையாலும், சினிமாத் தொழிலின்மேல் சுமத்தியிருக்கும் தாங்க முடியாத வரியினாலும், பட முதலாளிகள் தற்சமயம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் இப்பேர்பட்ட தடங்கல்களால், படம் தயாரிப்பதில் அவர்களுடைய உற்சாகமே போய்விட்டது. சர்க்கார், உடனே பட முதலாளிகளின் உதவிக்கு முன் வந்து, இப்பொழுது போட்டிருக்கும் அனேக வரிகளை குறைத்தாலொழிய, பட முதலாளிகள் தலை தூக்கி நிற்க முடியாது அவர்கள் கதி அதோ கதிதான் இப்படி சர்க்கார் சினிமாவின் முக்கிய தேவைகளை கவனிக்காமலிருந்தால், சினிமாவே மறைந்து போகும். என்று ஸ்ரீ சுன்னிலால் எச்சரிக்கை செய்தார்

இந்திய மக்களின் வாழ்க்கையில், சினிமா ஒரு முக்கியஸ்தானம் பெற்றிருக்கிறதென்றும், சினிமாவைக் கொண்டு கோடிக்கணக்கான ஜனங்களுக்கு கல்விப் பயிற்சியும், இன்பம் தரும் உணர்ச்சியும் கொடுக்கலாமென்றும். சினிமாவின் கருவியைக்கொண்டு சர்க்கார் பெரிய, பெரிய காரியங்களைச் சாதிக்கலாமென்றும், ஆகையால், இத் தொழிலை அலக்ஷியம் செய்யாமல், இதன்மேல் போட்டுள்ள வரிகளை உடனே எடுக்கவேண்டுமென்றும், சினிமா விசாரணைக் கமிட்டியாரின் சிபார்சுக்கு காத்திருக்காமல் இந்திய சர்க்கார், சினிமாத் தொழிலுக்கு உதவி புரியவேண்டுமென்றும், ஸ்ரீ சுன்னிலால் பிரார்த்தனை செய்தார். கடைசியாக, ஸ்ரீ சுன்னிலால், இவ்வூர் எல்லா சினிமாவிலும். வருகிற ஆகஸ்ட் 15-ம் தேதி, 6-30 காட்சியில் வசூலாகும் எல்லா பணத்தையும் கிழக்கு வங்காள அகதிகளுக்கு கொடுக்கப்படுமென்று அறிவித்தார்.

கிழக்கு வங்காள அகதிகளின் நிதிக்காக, இவ்வூரில், சென்ற வாரம், ஒரு பெரிய நாதஸ்வரக் கச்சேரி ஒன்று நடந்தது. இந்த ப்ரோகிராமில் பாட்டு, நடனம், நாடகம் முதலியவைகள் நடத்தப்பட்டன. அநேக சினிமா நக்ஷத்திரங்கள் இதில் பங்கெடுத்துக்கொண்டனர்.

ஆகாஷ் சித்திராவின் 'ஹன்ஸ்தே அன்ஸூ' என்னும் படம் இவ்வூர் சென்ஸாரால் 'ஏ' சர்ட்டிபிகேட் பெற்றது ஏ சர்ட்டிபிகேட்டென்றால், இப்படத்தை 16 வயதுக்கு மேல்பட்ட பருவமானவர்கள்தான் பார்க்கலாமென்பது இப்படத்தை 16 வயதுக்குள்பட்ட சிறுவர்கள் பார்க்க முடியாது அநேக ஆங்கிலப் படங்கள், இது மாதிரி பருவமானவர்கள் தான் பார்க்கலாயக்கானவை ஆனால், இந்தியப் படங்களில், 'ஹன்ஸ்தே அன்ஸூ' என்னும் படமே முதன் முதலாக. வயதானவர்கள் மாத்திரம் பார்க்கலாமென்றும், குழந்தைகள் பார்க்கக்கூடாதென்று உத்தரவு பெற்றிருக்கிறது இப்படத்தில் என்ன நூதனம் இருக்கிறதென்று, அடுத்த மாதம் இது வெளிவந்தவுடன் தெரிந்துவிடும் இதில் மதுபாலா, மோடிலால், மனோரமா. கோப் முதலியவர்கள் நடிக்கிறார்கள்.

—தி. மா. ராமச்சந்திரன்











1 பிலிம்லந்து தயாரிப்பு 'உஷா இர'னில் தோன்றும் புது நக்ஷத்திரம் ஜுபேடா.

★

2. மோஹன் ஸ்டுடியோப் படமான 'ராஜ முக்'தில் மந்திரி குமாரியாக நடிக்கும் வீணா.

★

3. 'அப்ஸார்' என்ற ஹிந்திப்படத்தில் தேவ் ஆனந்த், ரூமாவிடம் காதல் பிச்சை கேட்கிறார்.

★

4. 'ராஜ முக்'இல் மந்திரி குமாரி காதலுக்குப் போட்டியான கிராம சுந்தரி வேஷம் தாங்கும் 'நிம்மி'

★

5. இது வியாதிப் படுக்கையல்ல. 'உஷா இர'னில் ஜோபலியின் காதல்படுக்கை.

# தமிழ்ப்பட முதலாளிகள் கவனிப்பார்களா?

☆

[சௌந்தர்]

☆

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 275 சினிமா படங்கள் எடுக்கப்படுகின்றன அவற்றுள் 150 படங்கள் ஹிந்தியிலும், மற்றவை பிற இந்திய பாஷைகளிலும் எடுக்கப்படுகின்றன

ஹிந்திப் படங்கள் ஹிந்தி பாஷை பேசப்படும் வட இந்தியாவில் மட்டுமின்றி. தென்னிந்தியாவிலும், பாகிஸ்தான் போன்ற வெளி நாடுகளிலும் காட்டப்படுகின்றன அப்படி இருந்தும் ஒவ்வொரு வருஷமும், ஹிந்தியில் எடுக்கப்படும் படங்களில் நாற்பது சத விகிதம் போதுமான தியேட்டர்கள் இல்லாமையால் திரையிடப்படுவதில்லை.

ஹிந்திப் படங்களின் நிலையே இவ்வாறிருந்தால் தமிழ் நாட்டை மட்டும் நம்பியிருக்கும் தமிழ்ப் படங்களின் கதி என்னவாகும்? தமிழ் நாட்டிலுள்ள தியேட்டர்கள் அனைத்தும் தமிழ்ப் படங்களையே திரையிடுமாகில் ஒருவாறு நிலைமையைச் சமாளிக்கலாம். ஆனால், தமிழ் நாட்டில் ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்குப் படங்களும் பெருவாரியாக காட்டப்பட்டு வருகின்றன அதுமட்டுமல்லாமல் பிற பாஷையில் எடுக்கப்பட்ட படங்களை தமிழில் 'டப்' செய்து, திரையிடுவது இப்பொழுது சாதாரணமாகிக்கொண்டு வருகிறது ஹிந்தி 'ராம ராஜ்யா' 'அப்னும்தேஷ்' தெலுங்கு 'லைலாமஜ்னு' 'மாயக் குதிரை' ஆங்கில 'நீலக்கடல்' முதலிய படங்கள் தமிழில் 'டப்' செய்து காட்டப்பட்டு வருபவைகளாகும்,

இவ்விதம் பிற பாஷைகளில் எடுக்கப்பட்ட படங்கள் தமிழ் நாட்டில் பெருவாரியாக திரையிடப்பட்டுவரும் போது, தமிழ்ப்பட முதலாளிகள் கண்ணை மூடிவிட்டால். உலகமே அஸ்தமித்துவிட்டதாக நினைக்கும் பூனைபோலிருப்பதை நினைத்தால், ஆச்சரியமாயிருக்கிறது சில வருஷங்களுக்கு முன் தமிழ்ப் படங்கள் மாதக்கணக்கில் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால், இன்றோ ஒருசிலவாரங்கள் ஓடுவதே துர்லபமாயிருக்கிறது நாளடைவில் இதன் பலன் என்னவாகும் என்று உணராவிட்டால் இன்னும் சில வருஷங்களில் வெளி நாட்டாரும். வெளி மாகாணத்தவரும் நமக்காக தமிழ்ப் படங்கள் தயாரித்தனுப்பும் நிலை ஏற்பட்டுவிடும்,

உலக நாடக மேடை

# பிரான்ஸில் நாடகம்

[சக்திதாஸன் சுப்ரமணியம்]

☆

ஆதிகாலத்திலே நாடகமானது கோவில் திருவிழாக்களில்தான் பிறந்தது என்று சொன்னேன், இங்கிலாந்திலே எப்படி திருவிழாக் காலங்களிலே நாடகங்கள் நடிக்கப்பட்டனவோ அதேமாதிரி பிரான்ஸ் தேசத்திலும் நடந்தன ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் இங்கிலாந்திலே நடிகர்கள் ரதங்களிலே ஏறிக்கொண்டுபோய் தெருத் தெருவாக நடித்தார்கள். பிரான்ஸிலே ஒரே இடத்தில் இருந்துகொண்டு நடித்தார்கள் திருவிழாக் காலங்களிலே வரிசையாக இருபது முதல் இருபத்தி எட்டுக்குக் குறையாமல் மேடைகள் கட்டப்பட்டிருக்கும் இந்த மேடைகள் மூன்று புறம் அடைக்கப்பட்டிருக்கும். மேலே மூடப்பட்டிருக்கும்

இந்த மேடைகளிலே நடிகர்கள் பைபிள் கதைகளைச் சித்தரித்துக் காட்டுவார்கள். ஒவ்வொரு மேடையிலும் ஒரே காட்சிதான் ஜனங்கள் ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே போகவேண்டியது

இந்த நாடகங்கள் ஜனங்களிடத்திலே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன இப்படியாக நாடகத்துக்கு மதிப்பு ஏற்படவே, பைபிள் கதைகளை மாத்திரமன்றி இதர கதைகளையும் நடிக்கத் தொடங்கினார்கள் கன்னி மேரியின் 'அபூர்வ சித்து'களைப்பற்றிய நாடகங்கள் பல தோன்றின இவற்றிலே பெண்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள் இப்படி நாடகங்கள் மகோன்னதமாகவளரவே அவற்றைத் தயாரிப்பதும் கண்காணித்து நடத்துவதும் சிரமமாயிற்று.

1303-ல் 'சகோதர சமாஜம்' என்று ஒன்று தோன்றியது நாடகங்களை நடத்தும் உரிமையை இந்த சமாஜம் சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பெற்றிருந்தது.

1548-ம் ஆண்டிலே பிரெஞ்சுப் பார்லிமெண்டு இந்த நாடகங்களுக்குத் தடை விதித்தது ஏன் என்றால் இந்த 'மாயா சித்தி' நாடகங்கள் எல்லாம் வர வர கீழ்த்தர ஆபாசக் களஞ்சியங்களாய் விட்டன.

இங்கிலாந்திலே எப்படி நாடகமானது மாதா கோவிலை விட்டுச் சத்திரம் சாவடிக்குள் நுழைந்ததோ. அதே மாதிரியாக இங்கேயும் 'ஹோட்டல்'களுக்குள் அடைக்கலம் புகுந்தது இப்படி முதன் முதல் நாடகம் நடந்த இடத்துக்கு 'ஹோடல் டி பர்க்' என்று பெயர்.

1548-ம் வருஷம் நவம்பர் 19-ந்தேதியன்று ஹோடல் டி பர்க் நாடகம் நடத்தும் உரிமை பெற்றது 'மத சம்பந்தமில்லாத நாடகங்களை நடத்தலாம்' என்று இந்த ஹோட்டலுக்கு உத்தரவிடப்பட்டது அதற்கு ஒப்புக்கொண்டு இந்த ஹோட்டலில் ஒரு தியேட்டர் அமைத்தார்கள்.

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்குப் பிறகு இந்த ஹோட்டலை ஒரு நாடகக் கம்பெனி குத்தகைக்கு எடுத்தது அலெக்ஸாண்டர் ஹார்டி என்கிற நாடகாசிரியர் அந்தக் கம்பெனிக்கு நாடகம் எழுதினார் இவருடைய நாடகங்கள் ஜனங்களைக் கவர்ந்தன. 1622-ல் தியேட்டர் மராய் என்று இன்னொரு நாடகக்கம்பெனி தோன்றியது.

பிரெஞ்சு நாடக சரித்திரத்திலேயே முக்கியமாகக் குறிப்பிடத்தகுந்த ஆசிரியர் மூவர் கார்னிலி. ரஸீன் மோலியர் இவர்களில் மோலியரை ஹாஸ்ய நாடகச் சக்கரவர்த்தி எனலாம் நாடக மேடையை நிஜ வாழ்வுடன் இணைத்தவர் மோலியர். அந்தக் காலத்துப் பாரிஸ் நகர வாழ்வைக் கிண்டல் செய்து எழுதினார் மோலியர் 1673-ல் தமது கடைசி நாடகத்தை நடித்துக்கொண்டிருக்கையில் தாங்க முடியாமல் இருமினார். அதுவே அவருக்கு யமனாக முடிந்தது இவ்வளவு செல்வாக்குப் பெற்ற நடிகருக்கு ஈமக்கடன் செய்ய மத குருக்கள் மறுத்துவிட்டார்கள் காரணம் என்ன? மோலியர் ஒரு நடிகர் என்பதுதான்.

பதினெட்டாம் நூற்றாண்டிலே உலகத்திலேயே பிரான்சின் செல்வாக்கு மிக உயர்ந்திருந்தது அந்தக் காலத்திலே சோக நாடகம் எழுதுவதில் வால்ட்டேர் புகழ் பெற்றார். அலெக்ஸாண்டர் டூமாஸ், விக்டர் ஹியூகோ, போன்ற பிரபல நாடகாசிரியர்கள் தோன்றினார்கள்

உலக நாடக இலக்கியத்துக்கே பிரான்ஸ் தேசம் அளித்த பரிசு என்ன என்றால் தமாஷா நாடகங்களும் சுப நாடகங்களுமே இந்த இரண்டுவித நாடகங்களிலும் பிரான்ஸ் தேசம் செழிப்பாக வளம் பெற்றிருக்கிறது.



# மதிப்பில்லாத் தியாகம்

பிலிபி

"ஒரு நாளைக்கு எட்டு மணிக்கு மேல் வேலை செய்யக்கூடாதென்று ஒரு சட்டம் இருக்காமே' என்று கேட்டுக்கொண்டே, என் மனைவி என் அறையிலுள்ள படுக்கை மேல் உட்கார்ந்துகொண்டாள்

'ஆமாம், அதற்கு 'கடை சிப்பந்திகள் சட்டம்' என்றுபெயர் அதன் பிரகாரம் கடைச் சிப்பந்திகள், ஆலைத் தொழிலாளர்கள், மிட்டாய்க் கடைகளில் மசால்தோசை போண்டா செய்கின்ற சிப்பந்திகளிடமிருந்து எட்டுமணிக்குமேல் வேலை வாங்கக்கூடாது' என்றேன்,

'அப்படியானால். நான்மாத்திரம் மசால்தோசை, போண்டா செய்வதில்லையா என்ன! நாளைமுதல் நானும் எட்டு மணிக்குமேல் வேலை செய்வதில்லை நீங்களும் ராத்திரி எட்டு மணிக்குமேல் எழுதக் கூடாது சீக்கிரம் விளக்கை அணைத்துவிட்டு வாங்கோ' என்றாள்.

'ஆகா, அப்படியே செய் உன் குழந்தைக்குக்கூட ஒரு நாளைக்கு எட்டுமணிக்குமேல் அழக் கூடாதென்று உத்தரவு போடு நான் ஆபீஸில் எட்டு மணியும் வீட்டில் எட்டு மணியும் வேலைசெய்துகூட ஏழு அவுன்ஸ் அரிசி வாங்க மாதக் கடைசியில் உன்னிடத்தில் ஏதாவது சில்லரையிருக்கிறதாவென்று கேட்க வேண்டியிருக்கிறது வழக்கமாய் போடுவதைவிட ஒரு கப் காப்பி அதிகமா போடு என்று இன்று காலை சொன்னதும். நீ காப்பிப்பொடி டப்பாவை தட்டும் 'சப்தம் என் காதில்' கேட்டதே! எனக்கு தலைக்குமேல் வேலையிருக்கு. இந்த ரூமில் உனக்குத் தூக்கம் வராவிட்டால் கீழேபோய் அம்மா பக்கத்தில் படுத்துக்கொள்" என்றேன்

'கீழே படுத்துக்கொண்டால் தினமும் சிவராத்திரி தான். ஆமா. போலீஸ்காரர்கள் மாத்திரம் தினம் எட்டு மணிக்குமேல் வேலை செய்யலாமா என்ன? பக்கத்து வீட்டில் குடியிருக்கும் போலீஸ் ஆபீஸர் காலையில் நாலு மணிக்கு எழுந்து சத்தம் போட ஆரம்பித்தால், ராத்திரி ஒரு மணிக்குக்கூட கூச்சல் நிற்பதில்லை. எப்பொழுது பார்த்தாலும் போலீஸ் வான்களும், கார்களும் வந்தும் போய்க்கொண்டுமேயிருக்கின்றன பாவம், அவர் மனைவி எப்பொழுதுதான் தூங்குகிறாளோ? எனக்கு ராத்திரி ஒன்பது மணிக்குள் படுக்காவிட்டால், காலையில் எழுந்திருக்கவேமுடியாது' என்று படுத்துக்கொண்டுவிட்டாள்

அவளுடன் நானும் படுத்துக்கொண்டுவிட்டால் சம்சார சாகரத்தில் எப்படி மிதக்க முடியும்? உடனே பேனாவில் மசியை நிரப்பி 'தர்மாஸை' திறந்து ஒரு கப் டீ குடித்துவிட்டு, இடது கை விரல்களால் தலையைச் சொரிந்துகொண்டேன். மூளையைத் தாஜா செய்ய நான் கையாளும் பல முறைகளில் அதுவும் ஒன்று.

நான் பேனாவைக் கையில் எடுத்தவுடன் 'டுர் டுர்' சப்தத்துடன் பக்கத்து வீட்டுல் ஒரு போலீஸ் வான் வந்து நின்றது. தட தட வென்று ஏழெட்டு போலீஸ்காரர்கள் அதிலிருந்து குதித்தார்கள் அடுத்த நிமிஷம் அதிக சப்தம் போடாமல் ஒரு ஸ்பெஷல் கார் வந்து நின்றது எனக்கு மிகவும் தெரிந்த ஒரு சப் இன்ஸ்பெக்டர் 'இந்தாப்பா, 101, 318 75, உள்ளே போய் ஒரு பெஞ்சுகொண்டுவாங்கோ! அதன்மேல் இவரைப் படுக்கவைத்து, அப்படியே தூக்கிக்கொண்டுபோய் திண்ணைமேல் வைத்துவிட்டு சீக்கிரம் வாங்கோ. ஏய், 38 என்ன அங்கே பனைமரம் மாதிரி நிக்கிறயே! ஒரே ஓட்டமாக ஓடி இன்ஸ்பெக்டர் ராஜுவை டி எஸ் பி துரை கூப்பிட்டாரென்று கையோட இழுத்துட்டு வா' என்றார் சரி, எவன் கழுத்தையோ, வயிற்றையோ கத்தி ருசி பார்த்துவிட்டதென்று மொட்டை மாடிமேல் நின்றுகொண்டு, அடுத்த வீட்டுப் பக்கம் எட்டிப் பார்த்தேன் போலீஸ் ஆபீஸர் கோவிந்த ராவ் கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார் அவர் மகன் 'அய்யோ தாத்தா'வென்று அழுது கொண்டிருந்தான்.

போலீஸ் ஆபீஸர் கோவிந்தராவுக்கு ஒரு வயதான தந்தையிருந்தார் அவர் திடீரென்று மார்பு அடைப்பால் காலகதியடைந்துவிட்டாரோவென்று எண்ணி, அடுத்த வீட்டுக்குப் போனேன் திண்ணைமேல் ஒரு பெஞ்சில் ஒரு பிணம் தலைமுதல் கால்வரை நன்றாக மூடப்பட்டுக் கிடந்தது அதன் முகத்தையும் பார்க்காமல், இறந்தவர் யாரென்றும் தெரிந்துகொள்ளாமல், எப்படி துக்கம் விசாரிப்பதென்று ஒன்றும் தோன்றாமல், கோவிந்த ராவின் முகத்தை கண் கலங்கப் பார்த்தேன்.

'அப்பா மணி அந்தப் போலீஸ் வானில் உட்கார்ந்திருக்கும் எமதூதன் பாசக் கயிற்றை என்னைப் பார்த்து வீசினான் அவர் கண் முன் என் உயிரைக்கொண்டு போக என் அப்பா விடவில்லை அவர் பிராணனை எனக்காகத் தியாகம் செய்தார். தேசத்திற்காக உயிர் நீத்த தியாகத்தை சர்க்கார் ஐந்து ஏகரா நஞ்சை அல்லது பத்து ஏகரா புஞ்சை' யென்று அளந்து மதிப்பிட்டார்கள். இவர் தியாகத்தை எப்படி மதிப்பிட முடியும்? தியாகத்தின் சிகரம் எல்லையில்லா அன்புக் கடல்" என்று மெதுவாகச் சொல்லி, மூக்கைச் சிந்தினார் எனக்கு ஒன்றும் புரியாமல் வீடு திரும்பினேன்

எதிர் வீட்டு நாய் ஏ ஆர். பி. ஸைரனைப்போல ஊளையிட்டுக் கொண்டிருந்தது. என் குழந்தை, மெய்மறந்து தூங்கும் அதன் அம்மாவை எழுப்புவதற்குத் தன் சிறிய கைகளால் கண்களை பிசைந்துகொண்டு இப்பவே அழ ஆரம்பிக்கலாமா, இல்லை: சற்று கழித்து அழுதால் போதுமாவென்று யோசித்துக்கொண்டிருந்தது 'டக்'கென்று நான் மின்சார விளக்கை அணைக்கும் சப்தத்தைக் கேட்டு என் மனைவி கண் விழித்தாள். 'ஐயோ இது என்ன அநியாயம் நீங்கள்! இன்னுமா கதை எழுதி முடிக்கவில்லை? இப்படி தூக்கம் கெட்டால், உடம்பு என்னவாகும்?' என்று அன்புடன் கடிந்து கொண்டு, மறுபக்கம் திரும்பிப்படுத்துக்கொண்டாள் 'கதை முடிந்து, கத்தரி பூத்துவிட்டது' என்று பதிலளித்துவிட்டு, கீழே போய் ஒரு பெஞ்சு மேல் படுத்துக்கொண்டு கண்களையும் நன்றாக மூடிக்கொண்டேன் ஆனால் தூக்கம் தான் வரவில்லை.

தினசரி பத்திரிகையைத் திறந்து, கத்திக்குத்து, அரிவாள் வெட்டு, காலமானார், தற்கொலைகளைப்பற்றி பத்திபத்தியாய் படித்துவிட்டு. அடுத்த பக்கம் திருப்பினதும், முதல் பக்கத்தில் படித்தவைகளை மறந்துவிடுகிறோம் இந்த உலகத்தில் பிறந்ததே இறப்பதற்காகத்தான்; ஆத்மாவிற்கு அழிவில்லை; அதைக் கத்தியால் வெட்ட முடியாது நீரினால் நனைக்க முடியாது தீயினால் எரிக்க முடியாது என்று பகவத்கீதை படிக்கும்பொழுதும் தேசத்திற்காக உயிர்விட்ட தியாகிகள் காதலிக்காகத் தற்கொலை செய்துகொள்ளும் காதலர்களைப்பற்றி நினைக்கும்பொழுதும், இந்த உயிரை துச்சமாக நினைக்கிறோம். ஆனால், பெற்ற தாய் தந்தை, உடன்பிறந்த

வர்கள் மனைவி மக்களில் யாராவது நம் கண்முன் கண்ணை மூடினால், ஐயோ நினைக்கும்பொழுதே நெஞ்சு ரப்பர் பலூனைப்போல் விரிந்து வெடித்துவிடும்போலிருக்கிறது சாவு என்பது ஒரு பயங்கரப் பேய்தான் எப்பொழுது பார்த்தாலும் இடுப்பில் 'ரிவால்வர்' தொங்கவைத்துக்கொண்டு, வேட்டை நாயைப்போல் உறுமிக்கொண்டிருக்கும் போலீஸ் ஆபீஸர் கோவிந்த ராவைக் கண்டால்கூட உனக்கு பயமில்லையா' எமதர்மராஜனே! நீ மாத்திரம் எருமைமேல் உட்கார்ந்துகொண்டு/ என் வீட்டுப் பக்கம் வந்தால் உன்னை என்ன செய்கிறேன் பார்? என் பேனாவினால் ஒரே குத்து அப்புறம் நீ—,

'அம்மா நேக்கு காப்பி' என்ற சப்தத்தைக்கேட்டு விழித்துக் கொண்டேன். பக்கத்து வீட்டு காம்பவுண்டில் ஒரே கூட்டம்! கோவிந்தராவ் அழகான மீசையையெல்லாம் க்ஷவரம் செய்துகொண்டு வயிற்றில் பட்டை பட்டையாய் கோபிசந்தனம் நாமமும் முத்திரையும் போட்டுக்கொண்டு புரோகிதர் கிருஷ்ணச்சார் உச்சரித்துக்கொண்டிருந்த மந்திரங்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

அடுத்த சில மணி நேரத்தில் எல்லாம் முடிந்துவிட்டது அடுத்த நாள் சாம்பல் கரைக்கத் தயார் செய்யவேண்டியதுதான். சர்க்காருக்கும் தினம் ஏழு அவுன்ஸ் அரிசி மிச்சமாயிற்று!

நாட்கள் ஓடின, பதினைலாவது தினம் சமாராதனைக்குச் சாப்பிடப் போயிருந்தேன் சாப்பாடு முடிந்ததும் மற்ற விருந்தினர்கள்கூட நானும் புறப்பட்டேன் கோவிந்தராவ் என்னைப்பார்த்து 'என்னப்பா மணி உனக்குக்கூட வீட்டுக்குப்போக அவசரமா என்ன? நேற்று காலை என் தகப்பனார் வந்தார் மாடி அறையில் இருக்கிறார் என்னுடன் வா. உனக்கு அறிமுகம் செய்துவைக்கிறேன்' என்றார் பயமும் ஆச்சரியமும் கலந்த பார்வையில். 'என்ன சார், அன்றைக்கு இறந்துபோனவர் உங்கள் அப்பா இல்லையா' வென்று கேட்டேன் கோவிந்த ராவின் முகம் சட்டென்று சுருங்கிற்று 'எனக்காக உயிர்விட்ட அந்தத் தியாகியின் பெயர் அப்புராவ் நாங்கள் அவரை அப்பாவென்று அழைப்பது வழக்கம் அவன் எங்கள் வீட்டில் சமையல் செய்து வந்தான். வா, மேலே போவோம், உனக்கு



எல்லாவற்றையும் கதைபோல் சொல்கிறேன்' என்றார். காதைத் தீட்டிக்கொண்டு உட்கார்ந்தேன்

அப்பா மணி, இந்த ஊரில் எல்லோரும் இறந்தவரை என் சொந்த தகப்பனார் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் எனக்கு என் சொந்தத் தந்தையைவிட, அப்பாவைத்தான் நன்றாகத் தெரியும். அவன் என்னைத் தன் குழந்தைபோல் வளர்த்தான். நானும் அவனுக்கு என் கடமையைச் செய்தேன்.

என் தகப்பனார் ஒரு மிராசுதார். ஆனைமலையில் அவருக்கு ஏராளமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் உண்டு. புத்திர பாக்யத்திற்கும் குறைவில்லை இந்த மாயப் பிரபஞ்சத்தில் வாழ மனமில்லாமல் பிறந்த உடனே திரும்பிச் சென்றவர்களைத் தவிர. என்னுடன் பிறந்தவர்கள் இன்று எட்டுபேர் இருக்கிறார்கள்

என் தாயாருக்கு எப்பொழுதும் கையில் ஒன்று. இடுப்பில் ஒன்று, வயிற்றில் ஒரு குழந்தையிருக்கும். குழந்தைகளை கவனித்துக் கொள்ளவே அவளுக்கு நேரம்போதாது சமையல் வேலை எப்படி நடக்கும்? அதற்காக என் தகப்பனார் பொள்ளாச்சியில் ஒரு ஹோட்டலில் வேலை செய்து வந்த அப்புராவ் என்ற பதினாறு வயதுள்ளப் பையனை எங்கள் வீட்டிற்கு வந்து சமையல் செய்ய முடியுமாவென்று கேட்டார். காலை நாலு மணிக்கு எழுந்து அடுப்பு மூட்டி ராத்திரி பன்னிரண்டு மணிக்கு அடுத்த நாள் சமையலுக்கு காய் கறி நறுக்கிவிட்டு படுத்துக்கொள்ளும் அப்பா, என் தந்தை அழைத்தவுடன் மரண தண்டனை அடைந்த கைதி, எதிர்பாராத விதமாய் விடுதலையடைந்தால் எவ்வளவு சந்தோஷத்துடன் சிறையிலிருந்து வெளியேறுவானோ, அதுபோல் எங்கள் கிராமத்திற்கு வந்து சேர்ந்தான்.

என் சகோதர சகோதரிகளுக்கெல்லாம் என் தகப்பனாருடன் அதிகமாகப் பழகச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை அவர் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து வயலுக்குப் போய் விடுவார் அப்பொழுது நாங்கள் தூங்கிக் கொண்டிருப்போம் அவர் மத்தியானம் வீடு திரும்பும்பொழுது நாங்கள் பள்ளிக்கூடத்தில் இருப்போம். ராத்திரி ஒன்பது மணிக்கு மேல்தான் வீடு திரும்புவார் அதற்குள் நாங்கள் படுத்துக்கொண்டு விடுவோம் எங்கள் வீட்டிலும் அப்பாவிற்கு வேலை சற்று அதிகம்தான் சமையல் வேலை அதிகமில்லாவிட்டாலும் குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் பொறுப்பு அவனிடம் விடப்பட்டிருந்தது ஒருவன் 'அப்பா எனக்கு பசி சாதம் போடு' என்பான் இன்னொருவன், 'அப்பா நேக்கு இந்த நிஜார் வேண்டாம். அக்காவின் பட்டுப் பாவாடைதான் வேண்டும்' என்று





அழுவான் என் தாயார் அடிக்கடி 'கைக்குழந்தையைத் தொட்டிலில் போட்டு கொஞ்சம் ஆட்டு' என்று கொடுத்துவிடுவாள் தேனுள்ள மலரை வண்டுகள் மொய்ப்பதுபோல், அப்பாவைச் சுற்றி எப்பொழுதும் நான்கைந்து குழந்தைகள் இருக்கும் சதா சிரித்த முகத்துடன் குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டே தன் வேலைகளை கவனித்து வந்தான் படிப்பு வாசனையில்லாமல் சரீர பலத்தினால் வேலை செய்யும் ஒருவனுக்கு, பசித்தபொழுது ருசியுள்ள உணவும் உடுக்க உடையும் கிடைத்தால், ஏன் சந்தோஷமாகவிருக்கமாட்டானென்று நீ கேட்கலாம் ஆனால், அப்பாவின் விஷயமே வேறு, அவன் ஒரு அதிசயப் பிறவி

அவன் எங்கள் வீட்டிற்கு வந்த ஒரு வருஷத்திற்குள் எல்லோர் உள்ளத்தையும் கவர்ந்தான். என் தகப்பனார் அப்பாவிடத்தில் வீட்டின் நிர்வாகத்தை ஒப்படைத்துவிட்டு கவலையின்றி நிலபுலங்களைக் கவனித்து வந்தார். வீட்டில் சமையல், குழந்தைகளைக் கவனித்துக்கொள்வது கடைக்குப்போய் சில்லரை சாமான்கள் வாங்கிவருவது எங்களுக்கெல்லாம் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டுவதெல்லாம் அப்பாதான்

காலச் சக்கரம் சுழன்றது என் பெரிய அண்ணா எஸ். எஸ். எல். ஸி. தேறினான் அவனுக்கு கீழ் மூன்றுபேர்கள் ஹைஸ்கூலில்படித்துகொண்டிருந்தார்கள். என் தகப்பனாரின் தந்தையுள்ளம், அவர் குழந்தைகளெல்லாம் நன்றாகப் படித்து ஒருவன் வக்கீல், மற்றொருவன் டாக்டர், இன்ஜினீர் ஆகவேண்டுமென்று விரும்பியது பட்டணத்துக்குப் போய் திருவல்லிக்கேணியில் ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு வீடு வாங்கி, தன் குழந்தைகளுக்கு மாத்திரம் ஒரு 'ஹாஸ்டல்' ஆரம்பித்து அப்பாவை 'வார்டனாக' நியமித்தார். அப்பொழுதுதான் அவனைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரிந்துகொள்ள முடிந்தது எங்களிடத்தில் அவனுக்கு எல்லையற்ற வாஞ்சை அளவு கடந்த அன்பு.

சனிக்கிழமை தவறாமல் எங்களுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவான். யாருக்காவது உடம்பு சரியில்லாவிட்டால், உடனே பாட்டி வைத்தியம் ஆரம்பித்துவிடுவான் நாங்கள் எல்லோரும் சேர்ந்து 'என்ன அப்பா, இன்று ஞாயிற்றுக்கிழமை. மத்தியானம் வெங்காய சாம்பார்-உருளைக்கிழங்கு கறி, சாயந்திரம் மசால தோசை.ராத்திரி மைசூர்ரசம் சேமியா பாயசம் செய்யவேண்டும்' என்றால், 'ஆகா, அப்படியே ஆகட்டும், உங்களுக்கென்ன, மிராசுதார் குழந்தைகள் சேமியா பாயசம் மட்டும் போதுமா அல்லது பாதாம் ஹல்வாவும் செய்யட்டுமா' என்று தமாஷாகக் கேட்டுவிட்டு, அவைகளை செய்தும் போடுவான். ஆனால், அடுத்த நாள் மிளகு ரசம், சுட்ட அப்பளம்தான் கிடைக்கும் 'என்ன அப்பா இன்றைக்கு சமையல் இப்படி செய்துவிட்டாய்? என்று கேட்டால் 'நேற்றைக்கு சாப்பிட்டது ஜீரணம் ஆக இன்னும் மூன்று நாள் பிடிக்கும் அதல்லாமல் தினமும் அப்படி சமைத்து சாப்பிட்டால், குபேரனும் குசேலன் ஆகிவிடுவான் என்பன் அவன் வார்த்தைகளில் சற்று உண்மையும் இருந்தது என் தகப்பனார் எங்கள் கல்விக்காக ஏராளமாகப் பணம் அனுப்பிவந்தார் இரண்டு பெண்களுக்குக் கலியாணம் செய்து, சில நிலங்களை அடமானம் வைத்து கடன் வாங்கியிருந்தார், முன்போல் பணமும் சரியாக அனுப்புவதில்லை ஆகையால், அவன் பல வழிகளில் சிக்கனம் செய்ய ஆரம்பித்திருந்தான்:

நான் 'இண்டர்' படித்துக்கொண்டிருக்கும்பொழுது ஒருநாள் காலையில் அப்பா என்னை பக்கத்துக்கடைக்குப் போய் உப்புவாங்கி வரும்படி அனுப்பினான் கடை வீதியில் ஸ்ரீ சத்திய மூர்த்தி தலைமையில் ஒரு காங்கிரஸ் ஊர்வலம் போய்க்கொண்டிருந்தது அதைத் தொடர்ந்து ஒரு போலீஸ் பட்டாளமும் வந்தது. அவர்கள்மீது ஜனங்கள் கல் எறிய ஆரம்பித்தார்கள் நானும் இரண்டு கல் எறிந்தேன் அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு சார்ஜெண்ட் என்னைப் பிடித்து ஒரு போலீஸ் லாரியில் ஏற்றிக்கொண்டு போய்விட்டான் விஷயத்தை அறிந்த அப்பா, துடியாய் துடித்துப் போனான் கண்களில் தாரைதாரையாய் கண்ணீர் வடிய போலீஸ் கமிஷனர் ஆபீஸிற்கு ஓடினான் அங்கே போலீஸார் அவனை உள்ளேவிடாமல், தடியினால் இரண்டு கொடுத்து அனுப்பினார்கள். என் மூத்த அண்ணா சட்டக் கல்லூரியில் படிக்கும்பொழுது ஒரு பிரபல வக்கீலின்கீழ் தொழில் கற்றுக்கொண்டிருந்தான் அப்பாவிற்கு அவரை நன்றாகத் தெரியும். உடனே அவர் வீட்டிற்குச் சென்று அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டான். அவர் உதவியால் என்னை விடுதலை செய்து என்னுடன் வீட்டிற்கு வந்துதான் ராத்திரி சாப்பிட்டான்

நான் எம் ஏ பரீக்ஷையில் தேறினதும் என் தந்தையின் விருப்பம்பூர்த்தியாயிற்று மூத்தவன் வக்கீல், இரண்டாம் மகன் டாக்டர்; மற்றொருவன் இன்ஜினீர் ஆனார்கள் என் தகப்பனார் கடன்களை அடைப்பதற்காக சென்னை வீட்டை விற்றுவிட்டு, அப்பாவை அழைத்துக்கொண்டு கிராமத்திற்குச் சென்றார்.

என் தந்தையின் சிநேகிதர் ராமராவின் மனைவி ஒருநாள் திடீரென்று காலமாய்விட்டாள் அவர் வீட்டில் சில தினங்கள் சமைப்பதற்காக என் தகப்பனார் அப்பாவை அனுப்பியிருந்தார் அப்பா அங்கேபோகும்பொழுது தன் செலவிற்காக ஒரு பத்துரூபாய் நோட்டைக்கொண்டு போயிருந்தான் ராமராவின் மகன் அதைப் பார்த்துவிட்டான் அவன் ஒரு குடியன் காலணா கிடைப்பதாயிருந்தால் கொலைக்கும் அஞ்சமாட்டான். உடனே அவன் தனக்குத் தெரிந்த ஒரு போலீஸ்காரனிடம் அவன் வீட்டு வேலைக்காரர்களில் எவனோ ஒருவன் தன் பத்து ரூபாய்நோட்டைத் திருடிவிட்டதாகச் சொல்லி எல்லோரையும் சோதனைப்போடச் சொன்னான் அப்பாவின் சிறிய மூட்டையில் ஒரு பத்து ருபாய் நோட்டு அகப்பட்டது உடனே அவன் அப்பாவைப் போலீஸார் வசம் ஒப்படைத்து இரண்டு சாட்சிகளையும் சேகரித்துக் கொடுத்தான். அப்பாவி அப்பாவிற்கு மூன்று மாதம் சிறை தண்டனை கிடைத்தது

ஜெயிலிலிருந்து வெளியே வந்த அப்பா, என் வீட்டிற்குப் போக இஷ்டப்படவில்லை மதராஸுக்குச் சென்று ஒரு ஓட்டலில் சேர்ந்து கொண்டான் சனி தசை அவனை அங்கும் விடவில்லை ஒருநாள் அவன் முதலாளி பணப்பையை மறந்து மேஜைமேல் வைத்துவிட்டு, வீட்டுக்குப் போய்விட்டார் தற்செயலாக அதைப் பார்த்த அப்பா, பணப்பையை எடுத்துக்கொண்டு, முதலாளி வீட்டுக்குசென்று கொடுத்துவிட்டு வரலாமாவென்று யோசித்தான் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த 'கிளினர் கிருஷ்ணன். ''அப்பா இப்பொ மணி பன்னிரெண்டு. முதலாளி குடியிருக்கும் தெருவில் விளக்கே கிடையாது அதுவும் அல்லாமல் அவர் வீடு இங்கிருந்து நாலு மைல் தூரம்'' என்றான் அடுத்த நாள் காலையில் முதலாளி வந்தவுடன் கொடுத்துவிடலாமென்று எண்ணி, அப்பா பணப்பையைத்தன் தலையணையின் அடியில் வைத்துக்கொண்டு படுத்துத் தூங்கிவிட்டான் வீட்டுக்குப் போனதும் பணப்பையைக் காணாத முதலாளி, உடனே ஹோட்டலுக்குத் திரும்பினார் அங்கே இன்னும் வேலை செய்துகொண்டிருந்த இரண்டு மூன்று வேலைக்காரர்களிடம் விசாரித்தார் முதலாளியின் பேச்சுக் குரல்கேட்டு அப்பா எழுந்து தலையணையை எடுத்தான் அங்கே பை இல்லை அப்பாவின் உடல் பயத்தால் வேர்த்தது கை, கால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன முதலாளியிடம் நடந்த விஷயங்களைக் கூறினான் அவர் உடனே போலீஸுக்கு போன் செய்தார் அவர்கள் அப்பாவையும் கிருஷ்ணனையும் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள்.

நான் அப்பொழுது கடலூரில் போலீஸ் இன்ஸ்பெக்டராகவிருந்தேன் ஒரு கொலைக்கேசு விஷயமாய் போலீஸ் கமிஷனரைப் பார்க்கப் போயிருந்தேன் அடுத்த அறையில் போலீஸார், இந்தாப்பா மரியாதையா நெசத்தை சொல்லிப்போடுங்கொ, இல்லாட்டி எங்க வேலையை நாங்கொ ஆரம்பித்துவிடுவோம்' என்ற எச்சரிக்கை என் காதில்விழுந்தது அடுத்த அறையை எட்டிப்பார்த்ததும் திடுக்கிட்டேன் என் அப்பா, அங்கே வாடிய முகத்துடன் கிருஷ்ணனைப் பார்த்துக்கொண்டிருந்தான் நான் அப்பாவை விசாரித்தேன் உடனே போலீஸ் கமிஷனரிடம், அப்பாவை ஒன்றும் செய்யாமல் இருக்கும்படிக் கேட்டுக்கொண்டு இது விஷயமாய் நானே புலன் விசாரிக்கவும் அனுமதி வாங்கிக்கொண்டேன் அடுத்த நாள் அப்பா வேலை செய்து வந்த ஹோட்டலில் பீடா, பீடி, சிகரெட் விற்கும் அச்சுதனிடமிருந்து கிருஷ்ணன் கொடுத்திருந்த பணப்பையைப் போலீஸ் கமிஷனரிடம் கொடுத்துவிட்டு, அப்பாவை என்னுடன் அழைத்துச் சென்றேன் அன்று முதல் இறக்கும்வரை அவன் என்னுடன் இருந்தான்

சில தினங்களுக்கு முன் நான் ஒரு கள்ளமார்க்கெட் கேசு விஷயமாய் புலன் விசாரிக்கப் பக்கத்து கிராமத்திற்குப் போனேன் அந்த ஊரில் ஒரு புராதனக்கோவிலில் உற்சவம் நடந்துகொண்டிருந்தது அதை பார்க்க ஆசைப்பட்ட அப்பாவையும் என்னுடன் அழைத்துச் சென்றேன். நான் செய்த விசாரணையின் பயனாக ஒரு தனவந்தரின் மகனை பலத்த எதிர்ப்புடன் கைது செய்ய நேர்ந்தது கைதானவர்களை போலீஸ் வானில் அனுப்பிவிட்டு, நான் மணியக்காரர் வீட்டுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு திண்ணையில் படுத்துக்கொண்டேன் அப்பாவும் என் கட்டிலின் கீழே படுத்துக்கொண்டான் ராத்திரி சுமார் இரண்டு மணிக்கு ஒருவன் என்னை யமலோகத்திற்கு அனுப்ப ஒரு கூர்மையான அரிவாளுடன் வந்தான் நல்ல இருட்டு என் கட்டிலின் பக்கத்தில் அப்பா படுத்துக்கொண்டிருப்பது அவன் கண்ணுக்குத் தெரியவில்லை என்னை அணுகும்போது, அப்பாவின் காலை மிதித்துவிட்டான் போலீஸ் ஆபீஸர்களுக்கு 'நித்யகண்டம் பூர்ண ஆயுசு என்று அப்பாவுக்குத் தெரியும் உடனே அவன் 'ஸார், ஸார்' என்று கத்திக்கொண்டே மிதித்தவன் காலை கெட்டியாகப் பிடித்துக்கொண்டான் நான் 'டார்ச் லைட்' போட்டு என் ரிவால்வரை எடுப்பதிற்குள், 'சதக், சதக்' கென்று சப்தம் கேட்டது அப்பாவின் உடலிலிருந்து ரத்தம் பீறிட்டுக்கொண்டு, என் உடலை நனைத்தது குத்தினவனைப் பிடித்து மணியக்காரரிடம் ஒப்படைத்து, அப்பாவுடன் இந்த ஊர் ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன் நடு வழியில் அப்பா என் தொடைமேல் தலை வைத்துக்கொண்டு கண்களை மூடிவிட்டான் ஓம் சாந்தி!

என் தகப்பனார் இருக்கும்பொழுது நான் நெருப்புச் சட்டியை தூக்கக்கூடாதென்று நம் புரோகிதர் கிருஷ்ணச்சார் சொன்னார் 'அப்பா என்னை பெற்ற பிள்ளையைப்போல் வளர்த்தான் நான் என் கடமையை அவனுக்குச் செய்ய வேண்டாமா!' என்று தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்

'ஸார், நீங்கள் சொன்னதுபோல் அப்பாவின் தியாகத்தை நஞ்சை புஞ்சை நிலங்களால் மதிப்பிட முடியாது அது மதிப்பில்லாத் தியாகம்' என்று சொல்லிவிட்டு, வீட்டுக்கு வந்ததும் பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டேன்.

---


## "சக்தி ஆருடம்"!

ஸ்ரீ K R அப்ளாச்சாரியார், M.A.L.T. வைஸ் பிரின்சிபால் டீச்சர்ஸ் காலேஜ். சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்

''தாங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்

1 to 3 ஆருடகேள்விகளுக்கு ரூ. 1.
3-க்குமேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ 7-8-0.
வி பி பி தனி

ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை

N. B:-வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P O (S. I.)









# வாழ்க்கைச் சுழல்..

### 'இந்து'

## 34

அடுத்த செகண்டு என்ன செய்யப்போகிறாரோ என்பதை நினைக்கும்போது நெருப்பில் விழுந்த புழு மாதிரி துடியாய்த் துடித்தது மனம் உடல் ஓர் நிலையிலேயே இல்லை. கைகால்களெல்லாம் வெடவெடவென்று நடுங்கியது

'ஐயோ, வேண்டாம் விஷபரீக்ஷை வேண்டாம்' என்று என் கணவர் எதிரில்போய் அவர் காலில் விழுந்து கொஞ்சலாமாவென்று பார்த்தேன்.

நம் வார்த்தையை லக்ஷ்யம் செய்கிறாரோ இல்லையோவென்று, 'அம்மா! என்ன இப்படி பேசாமல் நின்றுகொண்டிருக்கிறீர்களே? அவருக்குக் கொஞ்சம் நல்ல புத்தி சொல்லக்கூடாதா? என்று மாமியாரைப்பார்த்துச் சொன்னேன்.

நான் சொன்ன பிறகுதான் மாமியாரின் மனதில் பட்டதுபோலிருக்கிறது

உடனே அவர் என் கணவரின் கைகளைப்பிடித்துக் கொண்டு, அப்பா, ரகு, நீ என்ன சிறு பிள்ளையா? உனக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை நமக்கேன் இந்த வீண் வம்பெல்லாம்! பேசாமல் கனகாவை அழைத்துக்கொண்டு நாம் வீடுபோய்ச் சேருவோம் என்றார்.

என்னது? என்ன சொன்னாய்? கனகாவை வீட்டுக்கு அழைத்துக்கொள்வதா? இன்னொருதரம் அந்தமாதிரி வார்த்தையை என் காதிலேயே போடாதே, பத்திரம்! என்றார் என்கணவர்.

என்ன மிஸ்டர் ரகுநாதன்! எல்லாந்தெரிந்த நீங்களே இப்படி நடந்துகொண்டால் மீதிப் பேரைப்பற்றிச் சொல்வானேன்! என்னமோ அவளுடைய கஷ்டம் பாவம், தன் அகத்துக்காரர் தலைமறைவாக இருக்கிறாரே. தனக்கு வந்திருக்கும் பெரிய கஷ்டத்திலிருந்து மீண்டுவர ஜோஸ்யரின் புத்திமதிப்படி நடந்துகொண்டால் ஏதாவது நல்லகாலம் வருமோவென்று அவள் இங்கே வந்திருக்கிறாள். ஜோஸ்யரின் வாக்குபலிக்கிறதோ இல்லையோ, மனுஷ்ய ஜன்மந்தானே! அக்ஞானம் விடுகிறதோ? ஆகையால் அவளை அனாவசியமாகத் தூற்றுவதில் பயனில்லை ஏற்கனவே நொந்துபோயிருக்கும் மனதை மீண்டும் கோல் கொண்டு கிளறுகிறீர்கள்' என்றார் வீட்டுக்கார மாமா.

'ஸார், உங்களுக்கு ஒன்றுமே தெரியாது இவள் இந்த மாதிரி காரியம் செய்வதினால் எங்கள் குடும்பத்துக்கு ஏற்பட்டுவரும் கெட்ட பெயர் எவ்வளவென்பது உங்களுக்குத் தெரியுமா? இன்னும் கொஞ்ச நாளானால் வெளியில் தலை காட்ட முடியுமா தெரியுமா? இப்பொழுதே அங்கங்கே வம்பளப்பு காதுகொண்டு கேட்க முடியவில்லை இந்த லக்ஷணத்துக்கு எல்லோருமாகச் சேர்ந்து அவளுக்குப் பரிந்துகொண்டு வருகிறீர்கள்' என்றார்

'அடே ரகு! வேண்டாம் இன்னொருதரம் அந்த மாதிரி பேசாதே! தோஷம் உண்டு உலகம் எதையோ தாறுமாறாகச் சொன்னால் நீயுமா அந்த மாதிரி சொல்லுவது? பெண்பாவம் பொல்லாதுடா என்றார் மாமியார்

'அம்மா, உன்னிடத்தில் எனக்குப் பரம பக்தியுண்டு. ஆனால் இது விஷயத்தில் மாத்திரம் நீ தலையிடாதே என்றார்.

என்ன ரகுநாதன் இது! அவள் தான் ஏதோ தெரியாமல் செய்துவிட்டாலும் நீங்கள் இதை இவ்வளவு பெரிதுபடுத்தக்கூடாது இந்த மாதிரி நீங்கள் செய்வதால் என்ன ஆகும் என்றால் ஜனங்கள் மனதில் கொஞ்ச நஞ்சமிருக்கும் சந்தேகம் இதனால் ஊர்ஜிதமாகிவிடும் அப்படியே அவள் தவறு செய்துவிட்டதாகவே வைத்துக் கொள்வோம் குடும்பத்துக்குப் பொறுப்புள்ள நீங்கள் அதை மேற்கொண்டு பரவச் செய்யாமல் இந்த மட்டோடு காதோடு காதுவைத்த மாதிரி விஷயத்தை மறைத்துவிடப் பார்க்கவேண்டாமோ? நீங்கள் இந்தமாதிரியான காரியம் செய்வதினால் அதன் வாழ்க்கையே பாழாகிவிடப் போகிறது என்றார் வீட்டுக்கார மாமா.

'ஆமாம் நானும் இவ்வளவு நாழியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் நான் ஏதோ தகாத காரியமெல்லாம் செய்துவிட்டது போலவும் அதற்கு என்னைத் தண்டிக்க ரகு கச்சைக் கட்டிக்கொண்டு வந்திருப்பதும் அம்மாவும் வீட்டுக்கார மாமாவும் எனக்காகப் பரிந்து பேசுவதும். எதற்கு இந்த வீண் ரகளை யெல்லாம்? என்று சொல்லிவிட்டு. என்னடா ரகு? இப்பொழுது நீ என்னவென்கிறாய்? என்றார் நாத்தனார் என்கணவரைப்பார்த்து

வாஸ்தவமாகச் சொல்லுகிறேன் அந்த மாதிரியான நிலைமையில் நானாக இருந்தால் அவ்வளவு நேரம் என் உடலில் உயிர் இருந்திருக்குமா என்பது சந்தேகந்தான் அப்படியே மென்னியை இரு கைகளாலும் நெறித்துக்கொண்டு அடுத்த நிமிஷமே பிராணனைவிட்டிருப்பேன். அல்லது கண்காணாத இடத்துக்கு ஓடியிருப்பேன் நான் என்பதென்ன? யாரும் இதைத்தான் செய்திருப்பார்கள்

அப்படியிருக்க நாத்தனார் இந்தமாதிரி என் கணவரை நோக்கிக் கேட்டது என்னை பிரமிக்கச் செய்துவிட்டது அதுவும் கேட்ட தோரணை எப்படி? ஒரு சுத்த வீரனைப் போல் கேட்டார் அந்தக் குரலில் துளி[illegible] ஒன்றும் காணப்படவில்லை முகத்தில் ஒருவித விகாரத்தையும் காணோம்.



உண்மையிலேயே அப்பொழுது என் நாத்தனாரின் முக பாவத்தைப் பார்த்தவர்கள், 'சே! இவள் ஒருகாலும் அப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கமாட்டாள் உலகம் வீணிற்காவது இவள்மீது பழியைச் சுமத்துகிறது' என்றுதான் சொல்லுவார்கள்.

என் கணவருக்கு அப்பொழுது இருந்த ஒரு கோபாவேசத்தில் இந்த முகபாவத்தையெல்லாம் கவனிக்க எப்படித் தோன்றும்?

நாத்தனார் அந்த வார்த்தையைச் சொன்னவுடனே, 'உன் மௌனியைத் திருகவேண்டுமென்கிறேன்' என்றார் என் கணவர்.

'ஏன், எதற்காகவோ' என்றார் நாத்தனார்.

'எதற்காகவென்று கேட்கிறாய். துரோகி! உன் மனதை நீயே தொட்டுப் பார்த்துக்கொள் எதற்காக என்பது தெரியும்' என்றார் என் கணவர்.

'இதோபார் ரகு! அனுவசிமாக சொல்வார் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு வீண் ஆட்டமெல்லாம் ஆடாதே உன்னைப்பற்றி உலகம் என்ன வம்பளக்கிறதென்பது உனக்குத் தெரிந்தால் இப்படியெல்லாம் 'உளர' மாட்டாய். முதலில் உன்னைச் சரிப்படுத்திக் கொண்டுவா. அப்புறம் பிறரைப்பற்றிப் பேசவரலாம்' என்றார் நாத்தனார்

முதல் நாள் இரவுதானே அந்த சினிமாக்காரி நளினிக்கும் என் கணவருக்கும் சம்பந்தம் இல்லை என்பது தெரிய வந்தது? இந்த தகவல் நாத்தனாருக்குத் தெரியாது ஆகவே சினிமாக்காரியை மனதில் வைத்துக்கொண்டு கேட்டார் நாத்தனார்

'வீண் சந்தேகங்களை வைத்துக்கொண்டு நீ இந்தமாதிரி கேட்பாயென்று எனக்குத் தெரியும் அது எவ்வளவு தூரம் உண்மை என்று வீட்டுக்காரமாமியையே கேட்டுத் தெரிந்துகொள்' என்றார் என் கணவர்

அது மாதிரி என்னைப் பற்றியதும் வீண் வம்பளப்பாக இருக்கலாமல்லவா?' என்றார் நாத்தனார்.

'ஓகோ இப்படி யெல்லாம் சொல்லி தப்பித்துக்கொண்டு விடலாம் என்று பார்க்கிறாயா? என்றார் என் கணவர்.

தப்பித்துக்கொள்வதென்னடா இதில்? அவர் (நாத்தனாரின் கணவர்) ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறார். நான் நிராதரவாக இருக்கிறேன் என்னமோசகோதரன் என்ற முறையில் உன் வீட்டில் வந்து இருக்கிறேன். வேண்டுமானால் இனி வீட்டு வழி வரக்கூடாதென்று சொல்லிவிடு வரவில்லை என் தலையெழுத்து, நான் எப்படியாவது மீதி காலத்தைக்கழித்துக்கொள்கிறேன். அவ்வளவுதானே! என்றார் நாத்தனார்.

'நல்ல புளியங்கிளையாக ஜோஸ்யர் ஒருவர் அகப்பட்டு விட்டார் என்ற தைரியம்தானே உன்னை இப்படியெல்லாம் பேசச் செய்கிறது? என்றார் என்கணவர்

இதோ பார் ரகு! இன்னொருதரம் அந்த மாதிரியெல்லாம் சொல்லாதே அவருடைய மகிமை தெரியாமல் பேசுகிறாய் என்றார் நாத்தனார்.

மகிமையாம் மகிமை உலகை ஏமாற்றித் திரியும் மோசக்காரப் பேர்வழிகளில் இவன் ஒருவன் இவனுக்குப் பரிவு வேறா?' என்றார் என் கணவர்

இவ்வளவு நேரம் பேசாமலிருந்த ஜோஸ்யர் இந்த வார்த்தையைக் கேட்டவுடனே நமது பக்தன் அறிவிக்கிறான் காலிகளுக்கெல்லாம் இங்கு இடமில்லை பக்தர்களுக்குத்தான் இங்கு இடம் என்று ஆகவே மேற்கொண்டு ஒரு நிமிஷமகூட இங்கு தாமதிக்காமல் வெளியே சென்றுவிடும்படி நமது பக்தன் எச்சரிக்கிறான்' என்றார் ஜோஸ்யர்.

இந்த எச்சரிக்கையைக் கண்டு என் கணவர் கொஞ்சம் பயந்துவிடுவார் என்றுதான் நினைத்தேன் ஆனால் இதை அவர் கொஞ்சமும் பொருள்படுத்தவே இல்லை

'நமது விவேகி அறிவிக்கிறான் உலகை ஏமாற்றித் திரியும் மோசக்காரர்களுக்கு இங்கு இடமில்லை மறு பேச்சு பேசாமல் உடனே இவ்விடத்தைவிட்டு வெளியேற வேண்டுமென்று என்றார் என் கணவர்.



வெட்டிப்பேச்சு பேச இது இடமில்லை யென்று நமது பக்தன் அறிவிக்கிறான் என்றார் ஜோஸ்யர்.

'பக்தன் பெயரைச் சொல்லிக்கொண்டு மூட ஜனங்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் ஆத்மா இல்லை இது எவ்வளவோ வேலையை விட்டுவிட்டு இந்த ஆத்மா இங்கே வந்திருக்கிறதென்பதை அறிவிக்கிறான் நமது விவேகி, என்றார் என் கணவர்.

'எதற்காகவோ?' என்றார் ஜோஸ்யர்.

'நமது பக்தனின் சாயத்தை வெளிப்படுத்த' என்றார் என் கணவர்.

'ஸபாஷ்!' என்றார் ஜோஸ்யர்,

ஸபாஷ்' என்ற அந்த வார்த்தையின் தொனி ஜோஸ்யரின் நாபியிலிருந்து கிளம்பியதையும் அதையடுத்து அவர் முகத்தில் ஓர் புன்சிரிப்பு வந்ததையும் கவனித்தேன்.

அதே சமயத்தில் மாமி என்னைப்பார்த்தாள் அந்தப் பார்வையில் பயம்நிரம்பியிருந்ததோடல்லாமல், 'ஐயோ! சிரிப்பை நம்பாதே! இந்தமாதிரியான சிரிப்பினால்தான் உலகில் பல அனர்த்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன பரமசிவன் சிரித்தார் உலகமே பஸ்மீகரமாகப்போய் விட்டது துரியோதனனைப்பார்த்து துரௌபதி சிரித்தாள் பாரதயுத்தம் ஏற்பட்டது இந்தமாதிரி ஜோஸ்யரின் இந்த சிரிப்பினால் உன் குடும்பத்துக்கு என்ன அனர்த்தம் நேரப்போகிறதோ' என்று சொல்கிறமாதிரி இருந்தது. அவள் என்னைப் பார்த்த பார்வை

'இதற்கெல்லாம் இங்கு யாரும் பயந்துவிடமாட்டார்கள் என்றார் என் கணவர்.

'மேற்கொண்டு வீண் கலாட்டா செய்யாமல் மரியாதையாய் வெளியில் போகப்போகிறீர்களா இல்லையா என்று கேட்கிறான் நமது பக்தன்' என்றார் ஜோஸ்யர்.

'நமது பக்தனைத் தூக்கி கிணற்றில் போட்டுவிட்டு இந்த மோசக்காரப் பேர்வழியை வெளியில் துரத்தி விட்டுத்தான் போகப் போகிறான் இவன். என்று தெரிவிக்கிறான் இந்த சக்தன்' என்றார் என் கணவர்

'ஹா! என்ன சொன்னாய்!' என்று உருமிக்கொண்டு எழுந்தார் ஜோஸ்யர்.

பயந்துவிட்டோம் நாங்கள்.

'தெரியும் அண்ணா! அதிகமாக உடம்பை அலட்டிக் கொள்ளாதீர்கள்' என்றார் என் கணவர்

என்ன சொல்கிறாய்? அவ்வளவு துடுக்கா உனக்கு; பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான் நமது பக்தன். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்று சொல்லிக்கொண்டே ஜோஸ்யர் ஆஞ்சநேயர்படத்துக்கெதிரில் கரித்துண்டினால் ஓர் சக்கரம் வரைந்தார். அதில் குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகளைப் போட்டார்.

இதைப்பார்த்த என் நாத்தனார் ஓடிவந்து ஜோஸ்யரின் காலில் விழுந்து 'சுவாமி! தங்கள் மகிமை தெரியாமல் எதோ சொல்லிவிட்டான் இந்ததரம் மன்னித்துவிடுங்கள் வேண்டாம் சக்கரம்போட்டு அவனைத் தண்டிக்காதீர்கள். உங்களுக்குப் புண்ணியமுண்டு ஏழைமீது கொஞ்சம் தயவு வையுங்கள்' என்று கூறிவிட்டுப்



பிறகு என் கணவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு 'அடே ரகு! இளங்கன்று பயமறியாது என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி அவருடைய மந்திர சக்தி தெரியாமல் அவரிடம் வாயைக் கொடுத்துவிட்டு விழிக்காதே! அவர் மனது வைத்தால் அடுத்த செகண்டில் உன்னை அதோகதிக்குள்ளாக்கி விடுவார் வீணாக அழிந்து போகாதே இப்பொழுதும் பரவாயில்லை அவர் காலில் விழுந்து 'சுவாமி! தெரியாமல் செய்துவிட்டேன் மன்னித்து விடுங்கள்' என்று கேட்டுப்பார். மன்னித்தாலும் மன்னிபபார். வேண்டாம்! வீணாக அவர் கோபத்துக்கு ஆளாகி அழிந்து போகாதே' என்று மன்றாடினார்.

'என்ன சொன்னாய்! இந்தச் சண்டாளனிடமா மன்னிப்பு கேட்கச் சொல்கிறாய்! திருடனுக்குத்துணை போகும் பாதகி! அவன் செய்வதைச் செய்யட்டும். போ அப்பால்!' என்று நாத்தனாரின் பிடிகளின்றும் விடுவித்துக்கொண்டு கோபத்தில் நாத்தனாரை ஒரு தள்ளு தள்ளினார். என் கணவர் நாத்தனார். இரண்டு கெஜத்துக்கு அப்பால் போய் விழுந்தார்.

அதற்குமேல் என்னால் பொறுமையைக் கடை பிடிக்க முடியவில்லை

'இதென்ன இது! நான்தான் தெரியாமல் சொல்லி விட்டேன் அதற்கு இப்படியா செய்ய வேண்டும்? வேண்டாம். இந்த மட்டோடு நல்லபடியாக வந்து சேருங்கள் வீடு போய்ச் சேரலாம் வந்த வேளை சரியாக இல்லை' என்று சொல்லி நான் என் கணவரின் கையைப் பிடித்து இழுத்தேன்.

'எனக்குத் தெரியும் நீங்கள் யாரும் எனக்கு புத்தி சொல்ல வர வேண்டியதில்லை மேற்கொண்டு ஏதாவது சொன்னால் கெட்ட கோபம் வரும் 'போ அப்பால்' என்று ஒரு உதறு உதறினார் நான் மூன்று கெஜ தூரத்தில் போய் விழுந்தேன்.

அதோடு மாத்திரம் நிற்கவில்லை. 'உம் ஆகட்டும். அதற்கெல்லாம் பயப்படுகிற 'குட்டி' இல்லை இது' என்றார் ஜோஸ்யரைப் பார்த்து என் கணவர்.

எரிகிற தீயைக் கிளறிவிட்ட மாதிரி இந்த வார்த்தைகள் குமுறிக்கொண்டிருந்த ஜோஸ்யரின் கோபத்தைக் கொதித்தெழச் செய்துவிட்டது

'என்ன சொன்னாய்! அதற்கெல்லாம் பயப்படுகிற குட்டி இல்லை இது! ஹா-ம்! இதோ இருக்கிற இடம் தெரியாமல் உன்னை ஹதம் செய்துவிடப் போகிறான் நமது பக்தன்' என்று சொல்லிவிட்டு ஜோஸ்யர் விபூதிப் பெட்டியிலிருந்து விபூதியை எடுத்து 'ஹ்ரீம்! ஹ்ரூம்! ஹ்ரேம்! ஓம்! பிசூர்ஹபிஸ்தூர் ஹோ! ஓம்! குத்தேஹி பிஸ்தூர் ஹோ! ஓம்! கிள்ளேஹி பிஸ்தூர்ஹோ!' என்று கீழே கரித்துண்டினால் வரைந்த சக்கரத்தில் விபூதியைப் போட்டுக் கொண்டிருந்தார்.

'ஐயோ! அம்மா! வந்துவிட்டதடி ஆபத்து!' என்று கதறினாள் நாத்தனார்.

'ஐயோ! நான் சொல்வதைக் கேட்கமாட்டேனென்கிறீரே! ஐயோ! நான் என்ன செய்வேன்?' என்று மாமியார் கதறினார்.

'அம்மா! பெருந்தேவி! இந்த ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றிவிடடி அம்மா! உனக்கு ஒரு வெள்ளிக்கிழமை உத்ஸவம் செய்து வைக்கிறேன்' என்று நான் பெருந்தேவித் தாயாரை வேண்டிக் கொண்டேன்

'இதென்ன இப்படி ஒரே முரடாக இருக்கிறீரே! சொன்னால் கேட்கமாட்டாரோ?' என்றாள் வீட்டுக்கார மாமி.

'விநாச காலே விபரீதபுத்தி தெரியாமலா சொன்னார்கள் பெரியவர்கள்! இத்தனை பேர் இவ்வளவு சொல்லியும் கேட்கவில்லையென்றால் அது அவருடைய போதாத காலத்தைத்தான் காட்டுகிறது' என்றார் வீட்டுக்கார மாமா.

கோபுவும் நளினியும் மாத்திரம் ஒன்றும் பேசவே இல்லை அவர்கள் விஷயமே இன்னதென்று தெரியாமல் பிரமித்து நின்றுவிட்டார்கள் என்றுதான் எனக்குத் தோன்றியது

இவ்வளவிற்கும் என் கணவர் சிறிதும் அசைந்து கொடுத்ததாகத் தெரியவில்லை,

அங்கிருந்த கரித்துண்டை எடுத்தார் இருவரும் ஓர் சக்கரத்தை அந்தக் கரித் துண்டினால் வரைந்தார், அதில் அந்த ஜோஸ்யர் போட்டிருந்த மாதிரியே குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகளை வரைந்தார்

ஜோபியிலிருந்து ஓர் காகிதத்தை எடுத்தார் சுக்கலாகக் கிழித்தார். க்ரீம்! க்ரூம்! க்ரேம்! ஓம்! கபோதி சுக்க கஸ்தூர்ஹோ! ஓம்! ஓம் குட்டேஹி கஸ்தூர்ஹோ மொட்டேஹி கஸ்தூர்ஹோ! ப்ளஸ் தம்பரா!' என்று சொல்லிக் கொண்டே காகிதத் துண்டுகளை அந்தச் சக்கரத்துக்குள் போட்டார்.

இதுவே வேறு சமயமாக இருந்தால் இந்த வேடிக்கையை நான் ரொம்ப அழகாக ரஸித்திருப்பேன். ஜோஸ்யர் ஒரு மந்திரம் சொல்லுவதும் அதற்கு எதிர் 'மந்திரம்' இவர் சொல்வதும் வேடிக்கையாகத்தானிருந்தது ஆனால் ஜோஸ்யர் மந்திரத்துக்கு சக்தி உண்டு இவர் சொல்லுவது 'போலி' மந்திரம் என்பது எனக்குத் தெரியும்.

'உம்! அப்புறம்! என்றார் என் கணவர்,

'அடே! உனக்கு அவ்வளவு பரிகாசமாகவா போய்விட்டது! என்ன செய்கிறேன் பார் இதோ!" என்று சக்கரத்தில் போட்ட விபூதியை எடுத்து 'ஹ்ரீம்! ஹ்ரூம்! ஹ்ரேம்! பூ மந்திரக்காளி! சூ! மந்திரக்காளி!' என்று சொல்லிப் பாய்ந்து வந்து என் கணவர் முகத்துக்கு நேராக விபூதியை ஊதினார் ஜோஸ்யர்.

இதைப் பார்த்துவிட்டு 'ஹோ' என்று கதறினார் நாத்தனார்.

இன்னதென்று தெரியாமல் நானும் 'ஆ'வென்று கதறினேன் இதுதான் கடைசி கட்டம் என்பதை மாத்திரம் தெரிந்துகொண்டேன்

என் கணவர் சும்மா விட்டாரா?

'அப்படியா ஸமாசாரம்? நானா உனக்குச் சளைத்தவன்? க்ரூம்! க்ரேம்! க்ரோம்! பூ மந்திரக்காளி! சூ மந்திரக்காளி! மாகாளி! பத்திரகாளி!' என்று சொல்லிக் கொண்டே இவருடைய சக்கரத்தில் போட்ட காகிதத் துண்டுகளை எடுத்துக்கொண்டு ஜோஸ்யர்மீது பாய்ந்து சென்று அவர் முகத்துக்கு நேராக காகிதத் துண்டுகளை ஊதிவிட்டு. 'நானா உனக்குப் பயப்படுவேன்' என்று சொல்லிவிட்டு அந்தமட்டோடு நில்லாமல் ஜோஸ்யரின் தாடியைப் பிடித்து ஒரு இழுப்பு இழுத்தார்

ஆ! என்ன அதிசயம்! நாங்கள் அப்பொழுது அங்கே கண்ட காட்சி! என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை!

(தொடரும்)






## 21
## 'உண்மை மனிதன்'

☆

மகாவீரனும் சேரர் குல திலகமும் ஆன அம்மன்னன் புலவர்களால் மிகவும் பாராட்டப்பட்டவன் ஆவான். 'தகடூர்' என்ற பெயரையுடைய நகரத்தை வெற்றிகொண்டு தனதாக்கிக் கொண்ட காரணத்தால் 'தகடூர் எறிந்த பெருஞ் சேரல்' என்று அவன் வழங்கப்பட்டான். அவனுடைய நாட்டிலே பொன்னும் பொருளும் கொழித்தன அன்பும் அருளும் தழைத்தன தமிழ்மொழியும் நன்றாகப் பயிராயிற்று

ஒருநாள் அந்த மன்னனுடைய வாழ்க்கையிலேயே அபூர்வமான காரியம் ஒன்று நடந்தது அவன் அந்த நாளைப் பொன்னினும் சிறந்ததாகப் போற்றினான். அவனுடைய ஆயுட்காலத்தின் எல்லா நாட்களிலும் அவனுடைய நினைவிலிருந்து அச்சம்பவம் அகலவில்லை அன்று அவனுடைய நாட்டுக்கு ஓர் அதிதி வந்தார் சாதாரண மனிதர் இல்லை அவர் தம் நாவிலிருந்து இனிய பல தமிழ்ச் செய்யுட்களை எல்லையின்றி வழங்கும் ஆற்றல் படைத்த புலவரே அவர் மோசுகீரனார் என்ற திருநாமம் உடைய அப்புலவர் சேர மன்னனின் பெருமைகளைப் பழகியறிந்தவர் ஆகவே அவனது அரண்மனைக்குள் விஜயம்செய்தார் அடைக்காத நீண்ட கதவையுடைய அந்த அரண்மனைக்குள் புகுந்தவர் தாம் வழி நடந்து வந்த களைப்பாலும், தாகத்தாலும், தளர்ந்து போயிருந்தார் அப்போது. இருந்தாலும், மன்னனை அப்பொழுதே பார்த்து விடுவதென்ற திட சங்கல்பத்துடன் மன உறுதியால் உடலுறுதியும் கொண்டு அரண்மனையின் உள்ளிடத்துக்குள் புகுந்தார் சிங்காதனத்தில் சேரன் வீற்றிருந்து உடனே தமக்குக் காட்சி வழங்கப் போகிறான் என்ற அவர் நினைவு கனவாகிவிடும் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை, ஆனால் அங்கே மன்னனைக் காணவில்லை மிக்க ஆதுரத்துடன் 'மன்னர் எங்கே போயிருக்கிறார்!" என்று பக்கத்திலிருந்தவரைக் கேட்டார்.

"அரசர் தம்முடைய போர் முரசுக்கு வழிபாடு செய்யப்போயிருக்கிறார்" என்றார்கள் அவர்கள்.

முற்காலத்தில் தமிழ் மன்னர்கள் தங்களுடைய வாள், முரசு முதலியவற்றைத் தாங்கள் வழிபடக்கூடிய தெய்வமாகவே கருதிவந்தார்கள். அவைகளைத் தனியே ஓர் அழகிய இடத்தில் வைத்து அலங்காரம் செய்து பூஜையும் புரிவார்கள் அவைகள் பொருத்தப்படும் இடத்தில் மக்கள் கூட உட்காரக்கூடாது என்பது மன்னரின் சட்டம் ஆகும். தெய்வவடிவாக அவைகளைக் கருதுவதால் கேவலம் அற்ப மனிதர்கள் அவைகளின் இடத்தில் அமரக்கூடாது என்பதே மன்னர்களின் நோக்கமாகும்.

இவ்வாறு முரசு வழிபாட்டுக்கு மன்னன் சென்றிருக்கிறான் என்பதைக் கேட்டதும் புலவர் வேறு வழியின்றி உள்ளேயிருந்து கிளம்பி வேறிடத்துச் செல்லலானார் வருகின்றவழியில் ஓர் அழகான கட்டில் இருந்ததை அவர் பார்த்தார். அது மிகவும் சுத்தமாக இருந்தது வெண்மையும் பிரகாசமும் உடைய நறுமலர்கள் அக்கட்டிலின்மேல் பரப்பப்பட்டிருந்தன

அதைக்கண்டதும் புலவருக்குத் தம்முடைய களைப்பைத் தீர்த்துக்கொள்ளத் தக்க இடம் அதுவே என்று தெரிந்தது வழி நடந்த சலிப்பு அதிகமாகவே அதிலே ஏறிப்படுத்துவிடலாமென்று நினைத்தார் ஆனால் அதில் எவர் படுத்துறங்குவது வழக்கமோ? நாம் அதில் தூங்கலாமோ கூடாதோ என்ற சந்தேகம் உண்டாயிற்று உடலின் தாங்கமுடியாத சிரமம் அவருடைய சந்தேக உணர்ச்சியைத் தீர்த்து அக்கட்டிலிலே அவரைப் படுக்கவும் செய்துவிட்டது படுத்தவர் ஒரு கணத்தில் நல்ல நித்திரையிலும் ஆழ்ந்து ஈடுபட்டுவிட்டார்.

உண்மையில் அந்தக் கட்டிலில் படுத்தது மகத்தானதொரு தவறுதான் ஏனென்றால் அக்கட்டிலில்தான் முரசை எப்பொழுதும் வைத்திருப்பது வழக்கம் அக்கட்டிலுக்குப் பெயரே 'முரசு கட்டில்' என்பதுதான். அது முரசுகட்டில் என்பது அரண்மனையில் அதிகப் பரிச்சயம் இல்லாத அந்தப் புலவருக்குத் தெரியாது. அது முரசுகட்டில் என்று தெரிந்திருந்தால் நிச்சயமாய் அவர் அதில் படுத்து உறங்கியிருக்க மாட்டார். முரசு கட்டிலில் மனிதர் படுப்பது நியாயமற்ற செயல் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். மேலும் முரசு கட்டிலில் படுத்தவருக்கு மன்னன் அளிக்கும் நியாயம் மரண தண்டனைதான் என்பதும் அவருக்குத் தெரியும்' என்ன தெரிந்துதான் என்ன? அப்பொழுது அவர் அவரையறியாமலேயே அத்தவறான செயலை ஒவ்வொரு விநாடியும் செய்துகொண்டிருந்தார்.

அந்த முரசு கட்டில் அப்பொழுது காலியாயிருந்ததற்கும் காரணமில்லாமல் இல்லை முரசம் நீராட்டப்படுவதற்காக வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. மன்னனும் பின்னே சென்றிருந்தான். அவன் அதை நீராட்டித் திரும்பவும் அக்கட்டிலிருக்குமிடத்திற்குக் கொண்டுவந்து வழிபட இன்னும் சிறிதுநேரமாகும். அந்த இடை நேரத்தில்தான் புலவர் உண்மையறியாது பிழைக்கு ஆளாகிவிட்டார்

முரசு கட்டில் காலியாக இருந்த போது அதைக் காவல் புரிய ஆட்கள் இல்லாமலும் இல்லை அவர்கள் அலட்சியமாக அப்பால் சென்றிருந்ததனால்தான் புலவர் அக்காரியத்தைச் செய்துவிட நேர்ந்து

விட்டது திரும்பவும் அக் காவலர்கள் அங்கு வந்தார்கள் கட்டிலில் கனம் வாய்ந்த மனிதர் ஒருவர் படுத்திருப்பதைக் கண்டதும் உடல் நடுங்கினுர்கள்

புலவரோ நல்ல நித்திரையில் மூழ்கியிருந்தபடியால் அவரை எழுப்பவும் அவர்களால் இயலவில்லை. மேலும் அவரை எழுப்புவது அநியாயம் என்றும் பயந்து ஒடுங்கி நின்ருர்கள் 'அவர்கள்' இன்னும் சிறிது நேரத்திற்குள் மன்னர் அங்கு வந்து விடுவாரே! அவர் இந்தக் கோரமான காட்சியைக் கண்டதும் அடங்காத சினம்கொள்வாரே! புலவரைப்போல் தோற்றமளிக்கும் இம்மனிதர் மன்னனுடைய சினத்தின் விளைவாகக் கடுந் தண்டனையை ஏற்க நேரப்போகிறதே!'' என்று தமக்குள் எண்ணி அஞ்சினுர்கள் அவர்களுக்கு இன்னொரு கவலையும் மூண்டது மன்னர் தங்களையும் கோபித்துக்கொண்டு விடப்போகிருரே!' என்ற கிலிதான் அது. இவ்வாறு அவர்கள் நடுங்கிக் கொண்டிருந்தபோது அங்கு மன்னர் வரும் செய்தியும் அறிவிக்கப்பட்டது

காவலருள் ஒருவன் ''புலவரை நாம் எழுப்பிவிடலாமா?'' என்று மற்றவனைக் கேட்டான்

அவன், வேண்டாம்! தூங்கியவரை எழுப்பிய குற்றமும், நமக்கு வந்துசேரும் இப்பொழுது நல்ல வேளையாக நம்மீது ஒரு குற்றம்தான் விதிக்கப்படும்!'' என்ருன்

''என் மனம் கலங்குகிறது'' என்று பின்னும் கலங்கி நின்ருன் முதலாமவன்

இதற்குள் மன்னர் பெருஞ்சேரல் அந்த இடத்தை அணுகி வந்துவிட்டான் முரசமும் நீராட்டப்பட்டு உழிஞை மலர் மாலையும் மயில் பீலியும் அணியப்பெற்று, வெற்றி வீரர்கள் சுமக்க வந்துகொண்டிருந்தது அமைதியான நிலையில் அரசனும், மற்றவரும் வந்துகொண்டிருந்தபடியால், கட்டிலில் இருந்த புலவர் எழுந்திருக்கவில்லை. நன்ருகத் தூங்கியபடியேயிருந்தார்.

மன்னன் கட்டில் அருகில் வந்தான் அதன் காவலர்கள் ஒவ்வொரு விநாடியையும் மிகவும் பயந்தோடு போக்கிக் கொண்டிருந்தார்கள் மன்னன் முரசு கட்டிலில் ஒருவர் படுத்திருப்பதைக் கண்டதும் உள்ளம் பதறினுன் அடங்காத கோபம் வெளிப்பட்டது ஜயலட்சுமியும். வீரலட்சுமியும் யுத்த தெய்வமுமாக அவன் வழிபட்ட முரசும் அமரும் இடத்திலே மனிதன் படுத்திருப்பதைக் கண்டதும் அவன் கை உறையிலிருந்து வாளை ஒரு கணத்தில் உருவியது 'தெய்வத் துரோகத்திற்கு உடனேயே தண்டனை விதித்து, அதை அப்பொழுதே நிறைவேற்றிவிடுவது தான் நேர்மை' என்று அவன் மனம் கருதியது ஆகவே கையில் வாளுடன் தூங்குபவரின் அருகிலே சென்ற மன்னன், 'தூங்குகிறவர் யார்?''



என்பதைப் பார்த்தான் அவன் முகத்தில் அப்பொழுது ஒரு மின்னல் மின்னியதுபோல இருந்தது ''புலவர் மோசுகீரனுர் அல்லவா படுத்திருக்கிருர்!'' என்று தனக்குள் கூறிக்கொண்டவன் உருவிய வாளை உறைக்குள் செருகிக் கொண்டான் 'கணம் தப்பியிருந்தால் அவருடைய உயிரே போயிருக்குமே!'' என்று தனக்குள் புலம்பியவனுய் அவரை அன்புடன் கூர்ந்து நோக்கினுர் வெப்பத்தாலும், களைத்த நித்திரையாலும் புலவர் உடலில் வியர்வை அரும்பியிருந்தது. கையில் வாளை ஏந்திய தவறுக்குப் பிராயச்சித்தம் செய்ய விரும்பியவன் போல, கையிலே வெண் சாமரம் ஒன்றை ஏந்தித் தானே புலவருக்கு விசிறத் தொடங்கினுன் அவனுடன் அங்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் அந்த அதிசயத்தைக் கண்ணுரக் கண்டபடித் திகைத்து நின்றுகொண்டிருந்தார்கள்

மன்னனின் மகத்தான செயலை அங்குக் கூடியிருந்த அறிஞர் கூட்டம் மிகவும் பாராட்டிக் கொண்டிருந்த அவ்வேளையில் புலவர் தம்மீது 'சில்' என்ற காற்றுப் பட்டதால் விழித்துக் கொண்டார் விழித்தவர் முதலில் மன்னனைப் பார்த்தார் பின்பு அவன் கையிலிருந்த கவரியைக் கண்டார் பல வீரர்கள் வெற்றி முரசை ஏந்திக் கொண்டிருப்பது அடுத்தாற்போல் அவர் பார்வையில் பட்டது. உடனே கட்டிலிலிருந்து எழுந்து கொண்டவர். ''அரசே! என்னை மன்னிக்க வேண்டும். இது முரசு கட்டில் என்பது இப்பொழுதுதான் தெரிய வருகிறது! நான் பெருங் குற்றத்தைச் செய்து விட்டேன்.'' என்ருர்

'யாரை யார் மன்னிப்பது புலவரே! தங்களைச் சரிவரக் கவனித்து உபசரியாத என் குற்றத்தையல்லவா தாங்கள் மன்னிக்க வேண்டும்?' என்ருன் மன்னன்.

புலவர் மன்னனின் பரந்த குணத்தையும், சிறந்த தமிழ்ப் பற்றையும் புகழ்ந்தார். 'அரசே! தவறு செய்த என்னை மன்னித்ததுடன், கவரியும் கொண்டு வீசிக் களைப்பாற்ற முற்பட்ட தாங்கள் நீண்ட காலம் வாழ்வீராக!' என்ருர். பின்பு முரசு வழிபாடும் முடிந்தது! புலவரைப் பெரிதும் உபசரித்துப் பல காலம் அவருடன் சேர்ந்திருந்தான் அம்மன்னன். அச் சம்பவமே அவன் நினைவிலிருந்து ஒரு நாளும் நீங்காததாக விளங்கியது.

* * [illegible]

மன்னன் புலவரை மன்னித்த கதை மேற் கூறியது இனி, இன்னொன்று இதனினும் சுவாரஸ்யமானது மன்னனைப் புலவர் மன்னித்த கதையே இது!

சோழர் குடியில் பிறந்தவன் மாவளத்தான் என்பவன் அவன் அண்ணன் நலங்கிள்ளி என்பவன். நலங்





கிள்ளி தன் தம்பிக்குச் சில இடங்களை ஆட்சி புரியும்படி அளித்திருந்தான் மாவளத்தானும் நல்ல முறையிலே நாட்டை ஆண்டு கொண்டிருந்தான். தமிழின் மீது அவனுக்கு அபார மோகம் இருந்தது ஆகவே தக்க ஒரு புலவரை அணுகித் தமிழ்ப் பாடம் கற்க அவனுக்கு அவா உண்டாயிற்று.

அக் காலத்தில் காஞ்சி மாநகருக்கு அருகில் உள்ள 'தாமப்பல்' என்ற ஊரில் கண்ணனுர் என்றொரு புலவர் இருந்தார். அந்தணர் குடியில் அவதரித்த அவர் சிறந்த புலமையுடையவராக விளங்கினுர் அவரிடமே பாடம் கற்க விரும்பி அவரை வரவழைத்துத் தன் அரண்மனையிலே தங்கவும் வசதியளித்தான் மன்னன். முறையாகப் பாடம் நடைபெறத் தொடங்கிச் சிலநாட்களும் சென்றன புலவரிடத்தில் மன்னனுக்கு மிக்க மரியாதையும், அன்பும் குறைவில்லாமல் ஏற்பட்டன அவர் தமிழ் நூல்களைக் கற்பித்த முறை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தபடியால் சுவாரஸ்யமாகப் பாடத்தை அவன் அனுபவித்தான் 'செவிக்குணவில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' என்ற பொய்யா மொழியின்படி அவன் தன் செவிக்குணவையே எதிர்பார்த்து மகிழ்ச்சி கண்டான்.

புலவர் நூல் கற்பித்த சமயம் நீங்க மற்றச் சமயங்களிலும். மன்னன் அவரைப் பிரிய விரும்பவில்லை அதனுல் 'வட்டு ஆடுதலை அவருடன் செய்து வந்தான் 'வட்டு ஆடுதல்' ஒரு வகைப் பொழுதுபோக்கான விளையாட்டு அதை ஆடியதால் அவர்கள் இருவருக்கும் நிம்மதி கிடைத்தது இவ்வாறு அநேகமாக எல்லா நேரங்களிலும் புலவரைவிட்டுப் பிரியாமல் இருந்தவன், புலவரிடத்தில் செலுத்தி வந்த மரியாதையிலும் குறையவில்லை

ஆனுல் அன்று நடந்துவிட்டது ஓர் அடாத செயல்! அந்தச் சம்பவத்தை அவனுல் அவன் ஆயுள் முழுவதும் மறக்கவே இயலவில்லை.

அன்று ஒருநாள் வழக்கம்போல் ஓய்வு வேளையில் புலவரும் மன்னனும் வட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள் ஆட்டம் மிகவும் சுவாரஸ்யமாகவே நடந்துகொண்டிருந்த கட்டம் அது அப்பொழுது புலவர் விளையாட்டாக ஒரு வட்டினை எடுத்துச் சோழனுக்குத் தெரியாமல் மாற்றி வைத்தார். ஆனுல் சோழனே அதைக் கண்டுகொண்டான் உடனே அவனுக்குக் கோபம் மூண்டது. அந்தக் கோபத்தின் வேகத்தால் அவன் தன் கையிலிருந்த மற்றொரு வட்டைப் புலவர்மேல் வீசிவிட்டான் அது புலவரின் நெற்றியில்பட்டு, இரத்தம் பெருகச்செய்தும் விட்டது!

'சாதாரணமான வட்டு மரத்தால் செய்யப்படுவது ஆனுல் புலவரின் மீது பட்ட அது மணிகள் அழுத்திப் பொன்னுல் செய்யப்பட்டது ஆகவே அது புலவருக்கு வலியை உண்டு பண்ணியதுடன், நெற்றியிலிருந்து இரத்தம் பெருகும்படியும் செய்துவிட்டது

புலவர் உள்ளத்தில் இரத்தத்தைக் கண்ட மன்னன் தனக்குள் பதறினுன் அவனுடைய கோபத்தின் அடிச்சுவடு கூட அப்பொழுது தென்படவில்லை அவனிடம். அதற்கு மாருகப் பரிதாபம் குடிகொண்டது அத்துடன் தன் குற்றத்தை நினைத்துப் பார்த்ததனுல் பயமும் உண்டாயிற்று.

புலவர் அடிபட்ட முதல் கணத்தில் தாமும் கோபம்கொண்டார் ஆனுல் அது அதிக நேரம் அவரிடம் நிலைத்திருக்கவில்லை. ''அரசே! உன்னுடைய சோழர் குடி சாமானியமானதில்லை புருவுக்காகத் தன்னையே அரிக்கத் துணிந்த சிபியின் குடிதான் இது உனக்கு முன் இருந்த எவரும் இம் மாதிரியான செயலைச் செய்ததில்லை ஆகையால் நீ இக்குடியில் பிறந்தவன் தானே?'' என்ற சந்தேகம் எனக்கு உண்டாகிறது'. என்ருர் அஞ்சாநெஞ்சத்துடன்.

பின்பு தான் அவ்வாறு கூறியது கூட நியாயமாகாது என்று நினைக்கும்படித் தம்மிடம் பணிவுடன் நடந்து கொண்ட மன்னனைப்பார்த்தார். மன்னன், ''முன் கோபத்தால் குற்றம் இழைத்துவிட்டேன், மன்னிக்கவேண்டும்'' என்ருன் புலவர் அவனை நினைத்து உருகினுர். 'மன்ன! யாரை யார் மன்னிக்க விருக்கிறது! குற்றம் என்னுடையதுதான்! நான் செய்த தவறின் பயனை நான் அநுபவிக்க வேண்டுமல்லவா? முதலில் தவறு செய்தவன் நான்! அதன் பின்பே நீ செய்தாய்! அப்படியிருக்கவும் நீ, நான் உன்னைப்பற்றிக் கூறிய பழிமொழியைக் கேட்டுத் தவறு செய்தவனுகவே எண்ணி நாணத்தால் தலை குனிந்தாய்! உன் குணம் என்னுல் போற்றப்படுகிறது! காவிரியாற்றுமணலின் பெருக்கத்தை விட இன்னும் அதிகமான பல நாட்கள் நீ வாழ்வாயாக?'' என்ருர் மன்னன் அச்சம்பவத்தை மறக்கமுடியாமல் தன் வாழ்நாள் முழுவதும் நினைத்துவந்தான்

* * *

மனிதனின் 'வீரம்' அவன் போர்த்திறத்தில் மாத்திரம் இருப்பதில்லை; தனக்குப் பிறர் இழைத்த குற்றத்தைப் பொறுத்திருப்பதிலும் அது பிரதிபலிக்கிறது உண்மையில் மன்னிப்புக்குணமே மகத்தான வீரத்தின் ஆணிவேர் குற்றம் செய்தவனைத் தண்டிப்பது எளிது மன்னிப்பது கடினமானது மன்னிப்பளிக்கத் திடமான மனப்பயிற்சிவேண்டும்; பெருந்தன்மைவேண்டும்; உறுதிவேண்டும்.

வெளிப்பகைவர்களை வென்றுவிடும் வீரம் சாமானியமானதுதான். ஆனுல் உள்ளத்திலே எழுகிற கோபம்' என்ற பகைவனை முறியடிக்கும் வீரம் எளிதில் கிட்டாது அதுவே உண்மை வீரமாகும்.

இவ் வரலாறுகள் இரண்டிலும் கோபம்' என்ற பகையை வென்ற பெரியோர்களின் வீரம் காணக்கிடைக்கிறது. அந்த 'வீர' ரஸ வெள்ளம் உண்மையிலேயே ஆழங் கொண்டது அமுதத்தன்மை பொருந்தியது; எக்காலத்திலும் அழியாப்புகழையும் பெறக்கூடியது. இதையே 'ஆண்மை' என்று உலக அறிஞர்கள் போற்றுகிருர்கள் அதை உடையவனே உண்மை மனிதன் ஆவான்.




## பயிற்சி 22-अभ्यास 22

### விடைகள்-उत्तर

(அ)

1. मेरे गाँव में अब भिंडी, चिचिंडा और बैंगन ही मिलते हैं। दूसरी तरकारियाँ अब नहीं मिलतीं।

2. गाँव के बाग़ में आम, कटहल, अमरूद, अनार, केले वग़ैरह बहुत फल मिल सकते हैं।

3. कुछ उपयोगी पेड़-पौधे लगाने से हमको फल, तरकारियाँ वग़ैरह बहुत चीज़ें खाने को मिल सकती हैं। तब अन्न की तंगी भी कुछ कम हो सकती है।

(ஆ)

1. रात में सावधानी से चलो।

2. वह सचमुच ही होशियार है।

3. रोज़ नहाना तंदुरुस्ती के लिए ज़रूरी है।

4. मैं उससे अक्सर मिलता हूँ।

5. हमेशा मीठी बात बोलो।

6. शहर में कहीं ऐसी गाड़ी है, क्या?

7. बहुत सुनो; बहुत पढ़ो; मगर कम बोलो।

8. कभी कोई इसे पढ़ सकता है।

9. ख़ुशी से जाओ; मैं तुम्हें नहीं रोकता।

10. सब जगह इसीकी ज़रूरत होती है।

## பாடம் 23-पाठ 23

### (அ) இலக்கணம்-व्याकरण

#### இடைச்சொற்கள் (Prepositions)

'ராமன் பின்னுல் இருக்கிறுன்' 'கோபாலன் முன்னுல் இருக்கிறுன்' என்று இரண்டு வாக்யங்களில் சொல்லக்கூடிய கருத்தை 'ராமனுக்கு முன்னுல் கோபாலன் இருக்கிறுன்' என்ற ஒரே வாக்யத்திலும் சொல்லலாம்; அந்தக் கருத்து இந்த ஒரே வாக்யத்திலும் பூர்ணமான பொருளும், பொலிவும்பெற்று விளங்கும் முன்னுல் என்ற ஒரு சொல் 'ராமன்' 'கோபாலன் 'இருக்கிறுன்' என்ற சொற்களிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தி விடுகிறது. எனவே 'ராமனுக்கு முன்னுல் கோபாலன் இருக்கிறுன்' என்ற வாக்யத்தின் இடையே வரும் 'முன்னுல்' என்ற சொல் முக்யமானது இதே மாதிரி கீழ்க்கண்ட வாக்யங்களையும் கவனித்துப் பாருங்கள்.

வீட்டுக்குப் பின்னுல் தோட்டம் இருக்கிறது.

தலைக்கு மேலே ஆகாசம் இருக்கிறது.

மேஜைக்குக் கீழே பெட்டி இருக்கிறது.

அலமாரிக்கு உள்ளே புஸ்தகம் இருக்கிறது.

அறைக்கு வெளியே கட்டில் இருக்கிறது

இந்த வாக்யங்களிலுள்ள 'பின்னுல் மேலே' கீழே' 'உள்ளே' 'வெளியே' முதலிய சொற்களும் மிகவும் முக்யமானவையே. சார்ந்து வரும் பெயர்ச் சொற்களுக்கும் வாக்யங்களின் மற்ற சொற்களுக்கும் இடையேயுள்ள தொடர்பையே அவை விளக்குகின்றன. இத்தகைய சொற்களை 'இடைச்சொற்கள் (Prepositions) என்கிறும்

ஹிந்தியிலும் இம்மாதிரி இடைச்சொற்கள் உண்டு सामने (முன்னுல்) पीछे (பின்னுல்) ऊपर (மேலே), नीचे (கீழே), अंदर (உள்ளே), बाहर (வெளியே) முதலியவை சில ஹிந்தி இடைச்சொற்களே

தமிழ் வாக்யத்தில் வரும் இடைச்சொல் ஏதேனுமொரு பெயர்ச் சொல்லைச் சார்ந்தும் அதைத் தொடர்ந்தும் வருகிறது அந்தப் பெயர்ச் சொல்லுக்கும் இடைச் சொல்லுக்கும் ஒரு நான்காம் வேற்றுமை உருபின் மூலமோ அல்லது ஆறும் வேற்றுமை உருபின் மூலமோ தொடர்பு இருக்கிறது ஹிந்தியிலும் இதே மாதிரி இடைச் சொற்கள் பெயர்ச் சொற்களைச் சார்ந்தும், தொடர்ந்தும் தான் ஸாதாரணமாக வரும். ஆனுல் ஒரு



சிறிய வித்தியாசம்: நான்காம் வேற்றுமை அல்லது ஆறும் வேற்றுமை உருபுகளின் மூலம் தொடர்பு ஏற்படுவதற்குப் பதிலாக ஐந்தாம் வேற்றுமை உருபு से அல்லது ஆறும் வேற்றுமை உருபுகள் के, की ஆகியவற்றின் மூலம் தொடர்பு ஏற்படுகிறது.

(உ—ம்)

राम के पहले<br>राम से पहले — ராமனுக்கு முன்னுல்

घर के अंदर—வீட்டுக்குள்ளே. வீட்டினுள்ளே.

बाज़ार की तरफ़—கடைத்தெருவின் பக்கமாக.

ஹிந்தியில் பெரும்பாலான இடைச் சொற்களுக்கு முன்பு के என்ற வேற்றுமை உருபுதான் வரும், சிலவற்றிற்கு முன்புதான் की வரும் के-யை முன் கொள்ளும்இடைசொற்களில் சில से—யையும் கொள்ளும் எந்த இடைச் சொற்களுக்கு முன்பு के உருபு வரும்; எந்தச் சொற்களுக்கு முன்பு की வரும் என்ற விவரங்களை யெல்லாம் இந்தப் பாடத்தின் "சொற்களஞ்சியம்" என்ற பிரிவில் பார்த்துக்கொள்ளவும்

"இடைச் சொற்கள் ஸாதாரணமாகப் பெயர்ச்சொற்களைச் சார்ந்தும், தொடர்ந்தும் வரும்" என்பதை அப்படியே கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிடக்கூடாது தனிப்பெயர்ச் சொற்களைச் சார்ந்துவருவதைப் போலவே பெயர்ச்சொற்களைப் போல் வழங்கும் தொழிற் பெயர்களையும், பெயர்ச்சொற்களுக்குப் பதிலாக வழங்கும் ப்ரதிப் பெயர்ச் சொற்களையும் கூட இடைச்சொற்கள் சார்ந்தும் தொடர்ந்தும் வரும்.

(உ-ம்)

राम के पहले—ராமனுக்கு முன்னுல்.

उसके पहले—அவனுக்கு முன்னுல்

जाने के पहले-போவதற்கு முன்னுல்,

நடுவில் உருபுகள் இல்லாமலேயே வரும் இடைச்சொற்களும் உண்டு.

(உ—ம்)

देखने लायक़—பார்க்கத்தகுந்த.

पढ़ने योग्य—படிக்கத்தகுந்த.

कहे अनुसार—சொன்ன ப்ரகாரம்.

लिखे बिना—எழுதாமல்.

பெயர்ச்சொற்கள் ப்ரதிப் பெயர்ச் சொற்கள், தொழிற் பெயர்கள் முதலியவற்றைத் தொடர்ந்து வருவதற்கு பதிலாகச் சில இடைச்சொற்கள் அவற்றிற்கு முன்பும் வருவதுண்டு.

(உ—ம்)

बिना राम के (राम के बिना)

—ராமனில்லாமல்.

अलावा इसके (इसके अलावा)

—இதைத்தவிர

(बिना खाए) खाए बिना

—சாப்பிடாமல்.

இடைச் சொற்களைச் சில ஸமயங்களில் வினையுரிச் சொற்களாகவும் உபயோகிப்பதுண்டு ஆனுல் அப்போது அந்த இடைச் சொற்களுக்கு முன்பு வேற்றுமை உருபு எதுவும் வராது

(உ—ம்)

लड़की अंदर जाती है

—பெண் உள்ளே போகிறுள்

लड़का बाहर खेलता है

—பையன் வெளியே விளையாடுகிறுன்

### (ஆ) ஸம்பாஷணை-बातचीत

#### श्री गणेशजी का मंदिर

बहन—भाई, मैं मंदिर जा रही हूँ। तुम भी चलो, मेरे साथ।

भाई—अच्छा, चलता हूँ। मगर, बहन, यहाँ मंदिर कहाँ है?

ब.—नहीं जानते हो? यहाँ से पूरब की तरफ़ गाँव में श्री गणेशजी का मंदिर है।

भा.—वहाँ मंदिर कहाँ है? एक तालाब ही है।

ब.—नहीं, तालाब के किनारे एक बड़ा बाग़ है। उसमें एक मंदिर है।

भा.—तब मंदिर के चारों ओर बाग़ ही है, क्या?

ब.—हाँ, वह बहुत बड़ा बाग़ है। उस बाग़ के अंदर बहुत-से पेड़ हैं।

म.—उसके बाहर कोई पेड़ नहीं है, क्या?

ब.—क्यों नहीं? बाहर भी पेड़ हैं। मगर ज्यादा पेड़ बाग़ के भीतर ही हैं।

भा.—पेड़ों के अलावा, बाग़ के अंदर और क्या हैं?

ब.—बाग़ के बीच में मंदिर है। मंदिर के सामने एक छोटा-सा मंडप है। उस मंडप में एक चूहे की मूर्ति है।

भा.—चूहे की मूर्ति क्यों?

ब.—चूहा ही गणेशजी का वाहन है। गणेशजी उसीपर सवारी करते हैं।

भा.—ओहो! और?

ब.—और उस मंडप के आगे थोड़ी दूर पर एक कुआँ भी है।

भा.-मंदिर के पीछे क्या है?

ब.—मंदिर के पीछे पुजारीजी का घर है और उसकी बगल में एक फुलवारी है।

भा.—बहन, सुनो; कहीं घंटी बजती है! वह कहाँ की घंटी है?

ब.-वह मंदिर की घंटी है। अब वहाँ पूजा हो रही है।

भा.—तब, तो जल्दी चलो।

ब.--अच्छा! मंदिर में जाने के पहले हाथ, पैर और मुँह धोकर साफ़ करो। उसके बाद ही हम मंदिर के अंदर जा सकते हैं।

भा.—मगर अब हाथ-पैर कहाँ धो सकते हैं? यहाँ तो कोई अच्छा पनघट भी नहीं है!

ब.—क्यों नहीं? उधर, सामने देखो। वहाँ पनघट की सीढ़ियाँ हैं। उन सीढ़ियों के ज़रिए नीचे उतरकर तालाब में हाथ-पैर धोओ।

भा.--उन सीढ़ियों के ज़रिए नीचे उतरना और ऊपर चढ़ना ख़तरनाक मालूम होता है, बहन!

ब.—डरो मत। देखो. मैं कैसे उतरती हूँ! तुम भी मेरे साथ उतरो।

भा.—अच्छा! अब चलो, मंदिर के अंदर।

ब.--देखो, यही वाहन-मंडप है। और यही चूहा गणेशजी की सवारी है।

भा,—मगर, यह तो पत्थर मालूम होता है!

ब.--हाँ हाँ! यह पत्थर की ही मूर्ति है। अंदर श्री गणेशजी की मूर्ति भी पत्थर की ही है। देवालयों में पत्थर, धात या लकड़ी की ही मूर्तियाँ होती हैं। अब देखो, यही श्री गणेशजी की मूर्ति है। मूर्ति कैसी है?

भा.--गणेशजी का चेहरा हाथी के चेहरे की तरह होता है!

ब.—हाँ, इसीलिए गणेशजी को "गजमुख" भी कहते हैं। प्रणाम करो।

भा,--अच्छा, अब तुम जाकर पूजा करो।

ब,--हम खुद पूजा नहीं कर सकते। पूजा करने के लिए पुजारीजी होते हैं। हमारे बदले और हमारी ओर से वे ही मूर्ति की पूजा करते हैं। हम सिर्फ़ जय बोलते हैं और प्रार्थना करते हैं। बोलो--श्री गणेशजी की जय!

தமிழில் இதே ஸம்பாஷணை

## ஸ்ரீ கணேசர் கோயில்

அக்கா:—தம்பீ, நான் கோயிலுக்குப் போய்க்கொண்டிருக்கிறேன் (போகிறேன்.) நீயும் வா (நட) என்னுடன்.

தம்பி:-நல்லது, வருகிறேன் ஆனல் அக்கா, இங்கே கோயில் எங்கே இருக்கிறது?

அ:—அறியாயா! (தெரியாதா?) இங்கிருந்து கிழக்குப்பக்கமாக க்ராமத்தில் ஸ்ரீ கணேசரின் கோயில் இருக்கிறது.

த:—அங்கே கோயில் எங்கே இருக்கிறது? ஒரு குளம்தான் இருக்கிறது.

அ.—இல்லே, குளக்கரையில் ஒரு பெரிய தோட்டம் இருக்கிறது அதில் ஒரு கோயில் இருக்கிறது.

த:—அப்படியானுல்(அப்பொழுது) கோயிலின் நான்கு பக்கங்களிலும் (குளத்தைச் சுற்றிலும்) தோட்டம் தான் இருக்கிறதா?

அ.—ஆம், அது மிகப் பெரிய தோட்டம். அந்தத் தோட்டத்தினுள்ளே மிகவும் அதிகமான (ஏராளமான) மரங்கள் இருக்கின்றன.

த:—அதற்கு வெளியே யாதொரு மரமும் கிடையாதா?

அ:—ஏன் இல்லே? வெளியேயும் மரங்கள் இருக்கின்றன ஆனல் அதிகமான மரங்கள் தோட்டத்தினுள்ளே தான் இருக்கின்றன.

த:—மரங்களைத்தவிர தோட்டத்தினுள்ளே வேறென்ன இருக்கின்றன?

அ:—தோட்டத்துக்கு நடுவில் கோயில் இருக்கிறது. கோயிலுக்கெதிரில் ஒரு மிகச் சிறிய மண்டபம் இருக்கிறது. அந்த மண்டபத்தில் ஒரு எலியின் சிலே இருக்கிறது.

த:—எலியின் சிலே எதற்கு?

அ:—எலிதான் கணேசரின் வாஹனம். கணேசர் அதன்மேல்தான் ஸவாரி செய்கிருர்.

த:-ஓஹோ! அப்புறம்? (இன்னும்?)

அ:—இன்னும், அந்த மண்டபத்துக்கெதிரில் சற்று தூரத்தில் ஒரு கிணறும் இருக்கிறது.

த:—கோயிலுக்குப் பின்னுல் என்ன இருக்கிறது?

அ:—கோயிலுக்குப் பின்னுல் பூசாரியாரின் (அர்ச்சகரின்) வீடு இருக்கிறது (மேலும்) அதற்குப் பக்கத்தில் ஒரு பூந்தோட்டம் இருக்கிறது.

த:—அக்கா. கேள்; எங்கோ மணி ஒலிக்கிறது! அது எவ்விடத்து மணி?

அ:—அது கோயில் (கோயிலின்) மணி இப்போது அங்கே பூஜையாகிக் கொண்டிருக்கிறது.

த:—அப்படியானுல் சீக்கிரம் வா.



அ:—நல்லது! கோயிலில் (கோயிலுக்குள்) போவதற்கு முன்பு கையையும், காலேயும், வாயையும் கழுவி சுத்தம் செய். அதற்குப் பிறகுதான் நாம் கோயிலுக்குள் போக முடியும்.

த:—ஆனுல் இப்பொழுது கை-கால்களே எங்கே அலம்ப முடியும்? இங்கே ஒரு நல்ல நீர்த்துறைகூட இல்லேயே!

அ:—ஏன் இல்லே? அங்கே(அதோ) எதிரில் பார். அங்கே நீர்த்துறையின் படிக்கட்டுகள் இருக்கின்றன. அந்தப் படிக்கட்டுகளின் வழியே கீழே இறங்கிக் குளத்தில் கை-கால்களே அலம்பு

த:—அந்தப் படிகளின் வழியே கீழே இறங்குவதும். மேலே ஏறுவதும் ஆபத்தானதாகத் தோன்றுகிறது, அக்கா!

அ:—பயப்படாதே. பார், நான் எப்படி இறங்குகிறேன்! நீயும் என்னுடன் இறங்கு

த:—நல்லது! இப்பொழுது வா, கோயிலுக்குள்ளே.

அ:—பார், இதுதான் வாஹனமண்டபம் (மேலும்) இந்த எலிதான் கணேசரின் வாஹனம்.

த:—ஆனுல், இதுவோ கல்லாகத் தோன்றுகிறதே!

அ:—ஆமாம்! இது கல்லின் (கல்லினுலான) சிலேதான் உள்ளே ஸ்ரீ கணேசரின் சிலேகூட கல்லினுலானது தான் கோயில்களில் கல், உலோகம் அல்லது மரத்தினுலான சிலேகள்தாம் இருக்கின்றன. இப்பொழுது பார். இதுதான் ஸ்ரீ கணேசரின் சிலே. சிலே எப்படியிருக்கிறது?

த:—கணேசரின் முகம் யானேயின் முகத்தைப்போல் இருக்கிறதே!

அ:—ஆம், அதனுல்தான் கணேசரை 'கஜமுகன்' (என்றும்) சொல்லுகிறோம். நமஸ்காரம் செய்.

த:—நல்லது. இப்பொழுது நீ போய்ப் பூஜை செய்.

அ:—நாம் தாமாகப் பூஜை செய்ய முடியாது பூஜைசெய்வதற்கு பூசாரியார் (அர்ச்சகர்) இருக்கிருர். நமக்குப் பதிலாகவும், நம் சார்பாகவும் அவர்தான் மூர்த்திக்குப் பூஜை செய்கிருர். நாம் வெறுமனே ஜய கோஷம் இட்டு ப்ரார்த்தனை செய்கிறோம்.




சொல்—ஸ்ரீ கணேசரின் ஜயம்! (உண்டாகட்டும்!)

## (இ) பாட்டு-पद्य

## बिल्ली

म्यौं-म्यौं करती, हमसे डरती।
चुप-चुप जाकर चोरी करती।
दूध, मलाई, सब कुछ हरती।
चूहे खाकर पेट व' भरती।

नाम उसीका "लिल्ली"!
वही हमारी बिल्ली!

### இதன் தமிழ் அர்த்தம்

"ம் யௌ(ம்)—ம் யௌ(ம்)" என்கிறது; நம்மிடத்தில் பயப்படுகிறது; சந்தடியின்றி போய்த் திருடுகிறது; பால், பாலேடு (ஆடை) எல்லாவற்றையும் அபஹரிக்கிறது; எலிகளேச் சாப்பிட்டு வயிற்றை அது நிரப்புகிறது (நிரப்பிக்கொள்கிறது.) அதன் பெயர் தான் "லில்லி"; அதுதான் நமது பூனே!

## (ஈ) குறிப்புக்கள்--नोट

1. பெயர்ச் சொற்களேயோ, ப்ரதிப் பெயர்ச் சொற்களேயோ அல்லது தொழிற் பெயர்களேயோ சார்ந்தும், தொடர்ந்தும் வந்து, அந்தச் சொற்களுக்கும், வாக்யங்களின் மற்றசொற்களுக்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்கும் சொற்களுக்கு இடைச் சொற்கள் என்று பெயர்.

2. ஹிந்தியில் ஸாதாரணமாக இடைச் சொற்களுக்கு முன்பு के, से அல்லது की என்ற வேற்றுமை உருபு வரும், எனினும் நடுவில் உருபு எதுவும் இல்லாமலேயே வரும் இடைச் சொற்களும் உண்டு.

3. பெயர்ச் சொற்கள், ப்ரதிப் பெயர்ச் சொற்கள், தொழிற் பெயர்கள் முதலியவற்றைத் தொடர்ந்து வருவதற்குப் பதிலாகச் சில இடைச் சொற்கள் அவற்றிற்கு முன்பும் வருவதுண்டு.

4. இடைச் சொற்களேச் சில ஸமயங்களில் வினேயுரிச் சொற்களாகவும் உபயோகிப்பதுண்டு. ஆனல் அப்போது அந்த இடைச் சொற்களுக்கு முன்பு வேற்றுமை உருபு எதுவும் வராது.

5. और, तरफ़ ஆகிய இடைச் சொற்களுக்கு முன்பு ஸாதாரணமாக की என்ற உருபுதான் வரும் எனினும் அவற்றிற்கு முன்பு எண்ணிக்கையைக் குறிப்பிடும் பெயர் உரிச் சொல் ஏதேனும் வந்தால் அப்போது की வராமல் के என்ற உருபு வரும்.

(உ—ம்)

उसके चारों ओर बाग़ है--

அதன் நான்கு பக்கங்களிலும் தோட்டம்,

भारत के तीन तरफ़ समुद्र है--

பாரதத்தின் மூன்று பக்கங்களில் ஸமுத்ரம்.

6. 'மிகவும்' 'போன்ற' 'குறித்த' என்ற அர்த்தங்களில் 'सा' என்ற விகுதி உபயோகப்படும். தொடர்ந்து வரும் பெயர்ச்சொல்லின் எண், பால் ஆகியவற்றை யொட்டி அது से அல்லது सी என்றும் மாறும்.

(உ—ம்)

छोटा-सा मंडप-மிகச் சிறிய மண்டபம்

बहुत-से पेड़—மிகவும் அதிகமான மரங்கள்.

अच्छी-सी लड़की—நல்லவள் போன்ற பெண்.

कौन-सा आदमी—எந்தக் குறித்த மனிதன் (Which Particular man)

7. जल्द என்பது வினையுரிச் சொல், जल्दी என்பது பெயர்ச்சொல் जल्दी யுடன் से சேர்த்து जल्दी से என்பதையும் வினையுரிச் சொல்லாக உபயோகிக்கலாம். ஆனால் வழக்கத்தில் இந்த से மறைந்து வெறும் जल्दी—யே வினையுரிச் சொல்லாகவும் உபயோகப்படுகிறது.

8. ப்ரதிப் பெயர்ச் சொற்களுடன் இடைச் சொற்கள் சேரும்போது, ஷை ப்ரதிப் பெயர்ச் சொற்களுக்கு ஏற்படும் உருவமாற்றங்களைக் கவனிக்கவும்.

मैं+के सामने = मेरे सामने

वह+के पहले = उसके पहले

9. पत्थर की मूर्ति என்றால் 'கல்லின் சிலை' என்பதுதான் ஸாதாரணமான அர்த்தம். எனினும் 'கல்லினால் செய்யப்பட்ட சிலை' என்று ஒரு விசேஷ அர்த்தமும் அதற்கு உண்டு இதே விதி இதைப் போன்ற மற்ற ப்ரயோகங்களுக்கும் பொருந்தும்.

10. 'கணேசருக்கு வாழ்த்து, என்ற அர்த்தத்தில் 'गणेशजी की जय' என்று சொல்வதுண்டு இதே மாதிரிதான் 'महात्मा गाँधी की जय, 'पंडित नेहरू की जय' என்ற ஜய கோஷங்களும்.

11, 'म्यों-म्यों'करना, 'टर-टर'करना என்ற சொற்றொடர்களுக்கு முறையேம் யௌ(ம்)—ம் யௌ(ம்) என்று சத்தமிடுதல்'. 'டர் டர்' என்று சத்தமிடுதல்' என்று அர்த்தம் இம்மாதிரி ப்ரயோகங்கள் ஹிந்தியில் ஏராளமாக இருக்கின்றன.

12. वृ' என்றால் वह என்றுதான் அர்த்தம் பாட்டுக்களில் மாத்ரைக் கணக்கைச் சரிக்கட்டுவதற்காகச் சில ஸமயங்களில் இம்மாதிரி குறுக்கி எழுதுவதுண்டு.

## (உ) சொற்களஞ்சியம்

## शब्द-भंडार

के सामने—முன்னால் எதிரில் (இடம்)

के आगे—முன்னால், மேற்கொண்டு (இடம், காலம்)

के पहले—முன்னால், (இடம், காலம்)

के पीछे—பின்னால், பிறகு (இடம் காலம்)

के बाद—பின்னால், பிறகு (இடம், காலம்)

के ऊपर—மேலே.

के नीचे—கீழே.

के बाहर—வெளியே.

के भीतर—உள்ளே.

के अंदर—உள்ளே.

के बदले—பதிலாக.

के अनुसार—ஒட்டி, படி (According to).

के मुताबिक़-ஒட்டி, படி (According to).

के जैसे—போல (As, like )

के साथ—கூட (With, together).

के लिए, के वास्ते—ஆக, பொருட்டு (For).

के पास, के नज़दीक-அருகே (Near)

के पास—இடத்தில், சொந்தமாக.

के बिना, के बग़ैर—இல்லாமல் (Without)

के सिवा, के सिवाय—தவிர (Fxcept)

के अलावा—தவிர, மேற்கொண்டு (Besides)

के यहाँ—இருப்பிடத்தில்.

के किनारे—கரைமீது

के वक़्त, के समय—ஸமயத்தில் (At the time of)

के बारे में, के संबंध में, के विषय में-பற்றி சம்பந்தமாக. விஷயமாக (About, Regarding )

के बीच में—நடுவில், இடையில்.

के लायक़, के योग्य—தகுதியான.

के बहाने—சாக்கில் (under the pretext of)

के तले—அடியில்.

के ज़रिए, के द्वारा—மூலமாக, வழியாக.

के कारण, के मारे—காரணமாக (Because of)

के सहारे—உதவியினால் (With the help of)

की अपेक्षा—விட, காட்டிலும் (Than)

की जगह—இடத்தில், பதிலாக (In the place of, Instead of)



की तरह, की नाईं—போல, மாதிரி.

की ख़ातिर—ஆக, பொருட்டு.

की तरफ़, की ओर—பக்கமாக) நோக்கி (Towards)

की मारफ़त—மூலமாக, வழியாக

की बदौलत-காரணமாக (Because of

की बाबत—பற்றி, ஸம்பந்தமாக

की ओर से-சார்பாக (On behalf of)

तालाब—(ஆ பா,) குளம்.

किनारा—(ஆ பா ) கரை

मंडप—(ஆ பா ) மண்டபம்.

चूहा—(ஆ பா,) எலி.

मूर्ति—(பெ, பா.) மூர்த்தி, சிலை உருவம்.

वाहन—(ஆ பா.) வாஹனம்.

सवारी—(பெ பா.) வாஹனம்.

बग़ल—(பெ பா.) பக்கம்.

फुलवारी —(பெ பா ) பூந்தோட்டம்.

घंटी—(பெ. பா.) மணி ( Bell)

बजना—ஒலித்தல்.

बजाना—ஒலிக்க வைத்தல்.

पैर—(ஆ பா.) கால்.

पनघट—(ஆ. பா.) நீர்த்துறை.

सीढ़ी—(பெ பா.) படி, படிக்கட்டு.

ख़तरा—(ஆ பா ) ஆபத்து; ख़तरनाक ஆபத்தான

मालूम—தெரியும். मालूम होना, मालूम पड़ना—தோன்றுதல், தெரிதல்; मालूम करना—தெரிந்து கொள்தல்

डरना—பயப்படுதல்; डराना—பயமுறுத்துதல்

डरावना—பயங்கரமான; निडर—பயமற்ற.

पत्थर—(ஆ. பா ) பாறை, பாறுங்கல். (Stone)

ईंट—(பெ. பா ) செங்கல் (Brick.)

देवालय—(ஆ. பா.) தேவாலயம், கோயில்,

धात, धातु (பெ. பா.) உலோகம் (Metal)

चेहरा—(ஆ பா) முகம்.

चोर—(ஆ. பா.) திருடன்; चोरी-(பெ. பா.) திருட்டுத்தனம், திருட்டு.

मलाई—(பெ. பா.) பாலேடு, ஆடை.

हरना—அபஹரித்தல், கொள்ளையடித்தல்.

पेट—(ஆ பா.) வயிறு.

## பயிற்சி 23-अभ्यास 23

### (அ)

கீழே பத்து வாக்யங்களும், அவற்றிற்கான பத்து இடைச் சொற்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன / எந்தெந்த வாக்யத்தில் எந்தெந்த இடைச் சொல் பொருந்தும் என்பதைப் பார்த்து, அதன்படி காலி இடங்களை நிரப்பவும்:—

ज़रिए, किनारे, पहले, भीतर, अलावा, बदले, सामने, बाद, तरह, तरफ़

1. इस बाग़ में पेड़ों के--बहुत पौधे भी हैं।

2. कावेरी के—बड़े-बड़े शहर हैं।

3. सीता भी राधा की--गाती है।

4. आजकल हम भात के—रोटी खाते हैं।

5. कुरसी के—मेज़ है।

6. लोग घर के—सोते हैं।

7. हमेशा नहाने के—खाओ।

8. घंटी बजने के—स्कूल जाओ।

9. वह समुद्र की—जाता है।

10. बारिश का पानी नदियों के—बहता है।

### (ஆ)

படித்த பாடத்தை ஆதாரமாகக் கொண்டு 'श्री गणेशजी का मंदिर' என்ற தலைப்பின் கீழ் பதினைந்து ஹிந்தி வாக்யங்கள் சொந்தமாக எழுதவும்.

(விடைகள் அடுத்த இதழில்)

जय हिंद! जय हिंदी!

## அட்டைப்படம்

☆

ஒருவருக்கொருவர் வித்தியாசமின்றி ஒரே மாதிரியாக உன்னத நிலை அடைந்து நாட்டிற்குச் சிறந்த பணியாற்றும் சகோதரர்களைக் காண்பது அரிது. அத்தகைய தனிப் பெருமை படைத்தவர்களுள் ஒருவரின் படம் இவ்வார அட்டைப் படத்தை அலங்கரிக்கிறது. தற்போது ரிஸர்வ் பாங்கின் கவர்னராகத் திகழும் ஸர் பெனிகல் ராமராவ், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மிக்கு முன்பு அமெரிக்காவில் நம் தூதராக சிறந்து விளங்கியவர் யுத்த பயம் நடமாடிவரும் இந்த நெருக்கடியான கட்டத்தில் நம் நாட்டின் பிரதான பொருளாதார சாதனங்களுள் ஒன்றுக்கு இவர் அதிபராக இருக்கும் இதே சமயத்தில் இவரது சகோதரரான ஸர் பெனிகல் நரஸிங்கராவ் ஐக்ய நாடுகள் ஸ்தாபனத்தில் நமது பிரதம பிரதிநிதியாக மிக்க சிரமமான பொறுப்பை வகித்து வருகிறார்.



சமீபத்தில் ஜனுப் லியாகத்துக்கு இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் ஹை கமிஷனர் ஒரு விருந்து உபசாரம் நடத்தினர். (வலமிருந்து) மிஸ்டர் லாய் ஹெண்டர்ஸன் (அமெரிக்கத் தூதர்) மிஸ்டர் சிப்மன் (கனடிய ஹை கமிஷனர்) ஜனுப் லியாகத் அலிகான் மிஸ் சிப்மன், பண்டித நேரு ஸெக்கஸ்லவேகிய தூதர் ஸ்ரீமதி இந்திரா காந்தி.



சில நாட்களுக்கு முன்பு பீக்கிங்கில் நடந்த ஒரு வைபவத்தில் சீனக் குடியரசுத் தலைவர் மவ் ஸீடங்குக்கு சர்தார் கே. எம். பணிக்கர் (சீனவில் உள்ள இந்தியத் தூதர்) தமது சன்னதுகளைச் சமர்ப்பித்தார் அப்போது எடுக்கப்பட்ட படம். இது. இடதுபக்கத்திலிருந்து ஐந்தாவதாக நிற்பவர்தான் ஸ்ரீ பணிக்கர். மவ் ஸீடங் அவருக்கு இடது பக்கத்தில் காணப்படுகிறார்.



# ராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார் ஸ்வரப்படுத்தியது

கூட்டும் விதியென்று கூறுங் கொலோதென் குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசும் தமிழ் தன்னைத்தன் பத்தியென்னும்
வீட்டின் கண் வைத்தவிராமானுசன் புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள் தன்னை என் நாட்டங்கள் கண்டு இன்பமெய்திடவே

இன்பம் தருபெரு வீடு வந்தெய்திலென் எண்ணிறந்த
துன்பம் தரு நிரயபல சூழிலென் தொல்லுலகில்
மண்பல்லுயிர் கட்கிறைவன் மாயனென மொழிந்த
அன்பன் அனகன் ராமானுசன் என்னை யாண்டனனே.

ராகம் : கேதார கௌளம் — தாளம்: ஜம்ப [5-அக்ஷரம்]

15-வது பாட்டு

| | | | |
|---|---|---|---|
| ரி ரி ரி ரி | ரி ரி ரி ரி | , ரி ப ப மகரி | ரிப மக கரி மக ஸா ‖ |
| கூட் டும் வி தி | யென்று கூறுங் | , கொலோ . . . தென் | கு ரு கை ப் பி ரான் ‖ |
| , ஸநி ஸா ரி ஸ | ஸா. நி ரிஸ நித ப | , பநி ஸ ரி ரி | ரிப மக கரி மக ஸா ‖ |
| பா. ட்டென்னும் | வே . த . ப்ப சும் | தமிழ் தன்னைத்தன் | ப . . த்தி யென் னும் ‖ |
| , ரிம பா பநி | ஸ்ா ரி ரி ரி | , ரிப் மக் க்ரி ரி | மக் ஸ்ா ரிஸ் நித ப ‖ |
| வீ. ட்டின் கண். | வை த்த வி ரா | , மா னு சன். பு | கழ் மெய் யு ணர்ந் தோர் ‖ |
| , ப நி ஸ் ரி ஸ் | ஸ்நி ரிஸ் நித ப | ப மப தநி ப ப | தப மக ரி ரி ம க ‖ |
| ஈ ட்டங்கள் தன் | னை என் நா. . ட்டங் | கள் கண் டு இன்ப | மெய் .. தி ட வே ‖ |
| , ஸ — ரி ம ப ப | ப ப பா ப | , மப தா ப ப | தப மக ரி ரி ரி ‖ |
| . . — இன் பம் த ரு | பெரு வீ டு | , வந்தெய் திலென் | எண் . . ணி றந் த ‖ |
| , ரிப மக ரி ரி | ம க ஸ ஸ நி த ப | , பநி ஸா ரி | ரிப மக கரி மக ஸா ‖ |
| துன். பம் த ரு | நி . ர ய ப . ல | , சூ ழி லென் | தொல் . லு ல கில் ‖ |
| , ரிம பா பநி ஸ்ா | ரி ரி ரி ரி | , ரிப் மக் க் ரி ரி | மக் ஸ்ா ரிஸ் நித நிப ‖ |
| மண் பல் லு. யிர் | க ட் கி றை வன் | . மா. . . ய . னெ | ன. மொ ழிந் . . த ‖ |
| , நிஸ் ரிக் ஸ் ஸ் | ஸ்ா, நி ரிஸ் நித ப | , மப தா ப ப. | தப மக ரி ரி மக ‖ |
| அன் பன். அ ன | கன் , ரா. . . மா | , னு சன் என் னை | யாண். . ட ன னே. ‖ |

, ஸ —
. . — (கூட்டும் விதியென்று)

# வளர்த்த பாசம்

-பார்வதி-

குழந்தையை குளிப்பாட்டிக்கொண்டிருந்த பாக்கியத்தம்மாளுக்கு திடீர் என்று சந்தேகம் எழும்பிவிட்டது. குழந்தையின் கையையும் காலையும் இப்படியும் அப்படியும் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். அதன் சிறு மார்பை தன் இடது கையால் தாங்கித் தூக்கித் திருப்பினாள் சின்னஞ் சிறு முதுகையும் ஒரு தடவை தடவிப் பார்த்தாள் அவள் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது சர சர வென்று அதை எப்படியோ குளிப்பாட்டி விட்டு தொட்டிலில் படுக்க வைத்து விட்டாள் அவளுக்கு இருந்த பர பரப்பில் வேறு ஒன்றிலும் கவனம் செல்லவேயில்லை தன் ஏமாற்றத்தை தன் கணவரிடம் உடனே தெரிவித்தாக வேண்டும். அவர் வர இன்னும் மூன்று மணி நேரமாவது ஆகும், அதுவரை அவள் அடிக்கொருமுறை குழந்தையின் அங்கங்களை தொட்டுப் பார்ப்பதும், பின் சிரமப்பட்டு வேறு எதிலாவது தன் சிரத்தையை செலுத்த பாடுபடுவதுமாக நேரத்தைக் கடத்தினாள்

பாக்கியத்தம்மாளுக்கு அதுதான் முதல் குழந்தை. ஆஸ்பத்திரியில் பிரஸவம் நடந்தது. பத்தாவது நாள் வீட்டுக்கு அவளை அழைத்து வந்தார் அவள் கணவர் சேஷாசலம் இன்று பதினோராவது நாள் பாக்கியத்தம்மாளுக்கு உற்ற உறவினர் யாரும் இல்லை அதனால் அவளுக்கு ஒத்தாசையாக ஒரு வேலைக்காரிக்கு கிழவி தான் வீட்டில் எல்லாம் செய்து வந்தாள். பாக்கியத்தம்மாள் சில காலம் நர்ஸ்வேலை செய்து அனுபவம் உள்ளவள் ஏதோ ஒரு ஆஸ்பத்திரியில் கொஞ்ச காலம் நர்ஸாக இருந்ததால், புதிதாகப் பிறந்த குழந்தைகளைக் குளிப்பாட்டி அவளுக்கு நல்ல பழக்கம் உண்டு. பதினோராவது நான் அவள் தன் குழந்தையை குளிப்பாட்டினாள். அபபடி குளிப்பாட்டும் போதுதான் அவள் அதன் முதுகை கவனிக்க நேர்ந்தது ஆஸ்பத்திரியில் இருக்கும்போதுதான் பாலூட்டி உறங்க வைத்த சிசுவின் முதுகில கால்ணா அளவு ஒரு மச்சம் இருந்தது அவள் நினைவுக்கு வந்தது ஆனால் இப்பொழுது அவள் கையில் இருக்கும் சிசுவின் முதுகிலோவென்றால், ஒரு சிறு புள்ளியாவது கருப்பாகத் தென்பட வேணுமே? மொழு மொழுவென்று ஒரே ஊதா நிறமாக இருந்தது இந்தக்குழந்தை! பாக்கியத்தம்மாளுக்கு திடுக்கிட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து வரும்போது எப்படியோ தன் குழந்தை மாறிப் போய் வேறு யாரிடமோ போய்விட்டது இப்பொழுது தன்னிடம் இருக்கும் குழந்தை வேறு யாருடையதோ? அவளுக்கு அருவருப்பு கோபம், வருத்தம் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டது அன்னியருடைய குழந்தையை அவள் எப்படி தன்னுடையதாகப் பாவித்து வளர்ப்பாள்? தன் குழந்தை வேறு ஒருவரிடம் சிக்கி இருக்கிறது உடனே ஆஸ்பத்திரிக்குத் தெரிவித்தால்தான் எப்படியாவது தன் குழந்தையை மீண்டும் பெற்று இந்தக் குழந்தையை இதன் தாயிடம் சேர்த்துவிட முடியும் அவள் கணவர் வரும்வரை அவள் தவித்த தவிப்பு கொஞ்சநஞ்சமல்ல.

சில பெரிய பிரஸவ ஆஸ்பத்திரிகளில் ஒரே சமயத்தில் இருநூறு குழந்தைகள் வரை இருக்கும்போது இப்படி சில சமயம் குழந்தைகள் மாறித்தான் போகிறது அதனால் சாதாரணமாக நர்ஸுகள் அந்தந்த சிசுவின் தாயின் பெயரை ஒரு காகிதத்தில் எழுதி கயிற்றில் கோத்து அதனதன் கையில் கட்டிவைப்பது வழக்கம், சில இடங்களில் 'காப்பி இங்கி' பென்ஸிலால் குழந்தையின் முதுகில் எழுதிவைப்பதும் உண்டு அநேகமாக குழந்தைகளை நன்றாக கவனித்து அதனதன் தாயிடம் சேர்ப்பதில் நர்ஸுகள் நல்ல கவனமாகத்தான் இருப்பார்கள் புதிதாகப்பிறந்த குழந்தைகளு முக்கால்வாசியும் அதிக வேற்றுமை இல்லாமல் ஒரே போல் இருப்பதால் தனித்தனியே அடையாளம் கண்டுகொள்வது கொஞ்சம் கடினம்தான் பாக்கியாத்தம்மாளுக்கு இவை எல்லாம் நன்றாகத் தெரியும். அதனால்தானே என்னவோ அவள் தன் குழந்தைக்கு முதுகில் ஒரு மச்சம் இருந்ததை கவனித்து வைத்துக்கொண்டிருக்கிறாள். அப்படி மிக சிரத்தையாக இருந்தும் இப்பொழுது அது மாறிப்போயிருக்கும் விந்தையை என்னும்போது அவளுக்கு அழுகைதான் வந்தது!

அவள் ஆஸ்ப்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வரும்நாள் ஒரு நர்ஸ் அவள் குழந்தையை குளிப்பாட்டக்கொண்டு போனாள், குளிப்பாட்டும்போது சாதாரணம்போல் கையில் பெயர் எழுதிக் கட்டியிருக்கும் சீட்டை அவிழ்த்து வைத்திருக்கிறாள் அதே சமயம் வேறு ஒரு நர்ஸும் வேறு ஏதோ ஒரு குழந்தையை குளிப்பாட்டக் கொண்டு வந்திருக்கவேண்டும். குளிப்பாட்டி முடிந்ததும் அவர்கள் பெயர் எழுதிய சீட்டுகளை தவறுதலாக மாற்றி அக்குழந்தைகளின் கையில் கட்டி இருக்கவேண்டும் உடனே பாக்யத்தம்மாளின் குழந்தை வேறு யாரிடமோ போய்விட்டது. அவளும் வீட்டுக்குப் புறப்படும் அவசரத்தில் தன்னிடம் கொடுக்கப்பட்ட குழந்தையை சரியாக கவனிக்கவில்லை; தன் குழந்தைதான் என்று நினைத்து வீட்டுக்குக் கொண்டுவந்துவிட்டாள். ஆனால் மறுநாள் அதைப் பார்த்தபோதுதான் அவள் தான் தவறுதலாக யாருடைய குழந்தையையோ கொண்டுவந்துவிட்டதை உணர்ந்து பதை பதைத்தாள்.

குழந்தை மாறிப்போவதற்கு என்ன காரணம் இருக்கலாம் என்று அவள் யோசித்துப் பார்த்தாள் அவள் ஆஸ்பத்திரியில் வேலையாக இருந்த சமயம் அவளும் மற்ற நர்ஸுகளும் சில வேடிக்கைக்காகச் செய்யும் சில தமாஷ்கள் அவள் நினைவுக்கு வந்தன.

சில நர்ஸுகள் ஆளுக்கு இரண்டு மூன்று குழந்தைகளை ஒன்றாக அள்ளி தூக்கிக்கொண்டு வருவார்கள். எல்லாக் குழந்தைகளையும் ஒரேகட்டிலில் வரிசையாகப் படுக்கவைத்துவிட்டு, ஏதாவது ஒரு குழந்தையை சீண்டி அழவைப்பார்கள். அது ஒன்று அழ ஆரம்பித்தால் சரி, அதன் சப்தம் கேட்டு மற்ற எல்லாக் குழந்தைகளும் ஒன்றாகச் சேர்த்து வில் வீல் என்று பல குரல்களில் கத்த ஆரம்பித்துவிடும் பதினைந்து இருபது சின்னஞ்சிறு குழந்தைகளாக இப்படி ரகளை செய்வதை பார்த்தால் அந்த நர்ஸுகளுக்குத்தான் என்ன ஆனந்தம்! என்ன தமாஷ்!—இன்னும் இதுபோல் எவ்வளவோ விளையாட்டுகள். நல்லவேளையாக எல்லாக் குழந்தைகளின் கையிலும் பத்திரமாக அந்த பெயர் எழுதிய சீட்டுகள் கட்டி இருப்பதால் இதுவரை ஒரு குழந்தையும் தவறுதலாக வேறு ஒரு தாயிடம் விடப்படவில்லை பாக்கியத்தம்மாளுக்கு இது நினைவு வரவே, தன் குழந்தை மாறிப்போவதற்கு இப்படி நர்ஸுகள் ஏதாவது விளையாடியதால்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது தான் நர்ஸாக இருந்தபோது செய்து ரஸித்த அதே செயல், இன்று வேறு நர்ஸுகளால் செய்யப்பட்டு அதன் விளைவால் தன் குழந்தை வேறு யாரிடமோ போய்விட்டது என்றபோது மட்டும் அவளுக்கு அவர்கள் மேல் பிரமாதக் கோபம் வந்தது. அவர்கள் மேல் புகார் விடுவிக்கவேண்டும், அவர்களுடைய அசிரத்தைக்கும் விளையாட்டுப் புத்திக்கும் அவர்களை நன்றாக தண்டிக்க வேண்டும் என்று எண்ணினாள். எப்படியும் ஆஸ்பத்திரியில் போய் 'கம்பிளேண்டு' செய்து எல்லாவற்றையும் சரி பண்ணிக் கொள்ளலாம் என்று ஒருவாறு சமாதானம் அடைந்து நிம்மதியுடன் சிறிது கண்ணயர்ந்தாள்.

சேஷாசலம் ஐந்து மணிக்கு வீட்டுக்கு வந்தார். பாக்கியத்தம்மாள் அவர் வந்த உடனேயே பரக்கப் பரக்க இந்த சமாசாரத்தை அவரிடம் கூறி முடித்தாள்.

'நம் குழந்தைக்கு முதுகில் மச்சம் இருந்ததை அது பிறந்த உடனேயே நான் பார்த்து வைத்துக்கொண்டு விட்டேன் இந்த குழந்தை நம்முடையதே இல்லை உடனே ஆஸ்பத்திரிக்கு தகவல் கொடுத்தால் நாம் இதை அவர்களிடமே கொடுத்து நம் குழந்தையை திரும்பப் பெற்றுவிடலாம் என்று படபடவென்று மொழிந்தாள்.

'இது தன்னுடையது இல்லை என்று வேறு ஒரு தாய் சாதித்தாள் என்றால் என்ன செய்வாய்? மச்சம் இருக்கும் குழந்தையை தன்னுடையதாக எண்ணி அதை உனக்குத் தர அவள் மறுத்தாள் என்றால் என்ன செய்வாய்?' என்று வினவினார் சேஷாசலம். நாலையும் யோசிக்காமல் ஒன்றையும் செய்ய அவர் துணியவில்லை அனாவசியமாக உடம்பை அலட்டிக் கொண்டு பாக்கியத்தம்மாளை தன் வீட்டிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் இருக்கும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல அவர் விரும்பவில்லை அங்கு சென்று நிராசையுடன் திரும்புவதாக இருந்தால், அவர்கள் செல்வது அனர்த்தம்தானே?

'இதோ பார் பாக்கியம் ஆஸ்பத்திரிக்கு உடனே ஒரு கடிதம் எழுதி இந்த சங்கதியை அறியப்படுத்தி, முதுகில் இடது பக்கம் மச்சம் உள்ள ஒரு பெண் குழந்தை அங்கு இருக்கிறதா என்று கேட்டு விடுகிறேன் அப்படி இருந்தால் உடனே போய் நாம் மாற்றிக்கொண்டு வந்துவிடலாம்' என்றார் அவர்.

பாக்கியம் இதற்கு சம்மதிப்பதாக இல்லை. அவர்களே நேரில் போனால்தான் உடனே எல்லாவற்றையும் கவனிக்கமுடியும். குழந்தைகளையும் தன் கண்ணாலேயே பார்க்கலாம் என்று ஒரே பிடிவாதமாக உடனேயே கிளம்பவேண்டும் என்று துடித்தாள். 'வேறு ஒருவருடைய குழந்தையை நான் எப்படி வைத்துக்கொள்வேன்? அப்படி என் குழந்தை எனக்கு திரும்ப கிடைக்காவிட்டாலும், இதை ஆஸ்பத்திரியிலேயே விட்டுவிடுவேன் என் குழந்தையை அசிரத்தையால் யாரிடமோ கொடுத்துவிட்ட ஆஸ்பத்திரி ஆட்களின் பேரில் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கவும் நான் சித்தமாகத்தான் இருக்கிறேன்' என்று பொருமினாள் பாக்கியம். சேஷாசலத்திற்கும் அது சரிதான் என்றே பட்டது தன் மனைவிக்கு அலைச்சல் வேண்டாம் என்பதற்காகவே முதலில் அவர் அவள் சொல்வதற்கு இணங்கவில்லை ஆனால் இப்பொழுது அவருக்கே அந்த ஆஸ்பத்திரி மேல் கோபம்தான் வந்தது எப்படியும் தன் மனைவி சொல்வது போல் செய்துவிடுவது என்று எண்ணிக்கொண்டார்.

உடனேயே இருவருமாக ஒரு டாக்ஸியை ஏற்பாடு பண்ணிக் கொண்டு அந்த சிறு குழந்தையையும் தூக்கிக்கொண்டு 'சாரதா மெடர்னிடி ஹோமை' நோக்கி விரைந்தார்கள். இவர்கள் வந்திருக்கும் காரணத்தை அறிந்த டாக்டருக்கு முதலில் கோபம்தான் வந்தது. தான் இவ்வளவு நாள் அரும்பாடுபட்டு அந்த ஆஸ்பத்திரிக்கு ஏற்படுத்தியிருக்கும் கண்ணியமான பெயரை ஒரே நாளில் தகர்த்தெறிய வந்திருக்கும் எமதூதர்கள் போல் சேஷாசலமும் அவர் மனைவியும் டாக்டருக்குக் காட்சி அளித்தனர்.

'ஸார் இதுவரை எங்கள் ஆஸ்பத்திரியில் இந்தமாதிரி தவறு நடந்ததே கிடையாது இன்னமும் நடக்காது. என்றுகூட கூறுவேன் நீங்கள் ஒரு வேளை சரியாக கவனிக்காமல் சொல்கிறீர்களோ என்னமோ?' என்றார் டாக்டர்.

'பிறந்த உடனேயே நான் கவனித்திருக்கிறேன் பத்து நாள் நான் பால் கொடுத்த அந்த சிசுவுக்கு இருந்த மச்சத்தை அடையாளம் கூறியும் நீங்கள் நம்பவில்லையானால் என்ன செய்வது? நான்தான் நிச்சயமாகக் கூறுகிறேனே?' என்று பரிதாபமாக மொழிந்தாள் பாக்கியம்

'இதோ பாருங்கள் டாக்டர், உங்கள் ஆஸ்பத்திரிக்கு நல்ல பெயர் நிலைத்திருக்க வேண்டுமானால் உடனே எங்களை எல்லாக் குழந்தைகளையும் பரிசோதிக்க அனுமதிக்கவேண்டும். இல்லாவிட்டால் ஆஸ்பத்திரி பெயரில் கட்டாயம் நாங்கள் கோர்ட்டில் வழக்



குத் தொடுப்போம். எங்கள் குழந்தைக்கு ஈடு நீங்கள் எவ்வளவு பணம் கொடுத்தாலும் போதாது' 'என்று கண்டிப்பாகக் கூறினார் சேஷாசலம்.

டாக்டருக்கு 'சுருக்' என்றது. அவர்கள் இருவரும் இவ்வளவு நிச்சயமாகக் கூறுவது கேட்டு அவர் எப்படியும் எல்லாக் குழந்தைகளையும் அவர்களுக்குக் காட்டி விடுவது என்று தீர்மானித்தார். அன்று முழுவதும் டாக்டருடைய மற்ற வேலைகள் அப்படியே தடைபட்டு நின்றன. ஆஸ்பத்திரியுள் உள்ள எழுபத்தி எட்டு குழந்தைகளும் ஒவ்வொன்ருக டாக்டர் அறைக்குள் எடுத்துவரப்பட்டது மூவருமாக ஒவ்வொரு குழந்தையாகப் பார்த்துக்கொண்டே வந்தார்கள். எல்லாக் குழந்தைகளையும் பார்த்தாகிவிட்டது. ஆனல் ஒன்றினுடைய முதுகிலாவது பாக்கியத்தம்மாள் குறிப்பிட்ட அந்த மச்சத்தைக் காணவேண்டுமே? சேஷாசலத்தின் முகத்தில் அசடு வழிந்தது. பாக்கியம் கண்ணீர் விட்டாள். டாக்டரோ பரிகாசமாக அவர்களைப் பார்த்துச் சிரித்தார். 'இன்று என்னுடைய வேலை தடைபட்டது ஒன்றுதான் மிச்சம் நீங்கள் அனாவசியமாக என்னை பயமுறுத்தி விட்டீர்கள். ஒரு வேளை அப்படி ஒரு குழந்தை இந்த உலகத்திலேயே பிறக்கவில்லையோ என்னவோ?' என்று ஏளனம் செய்தார்.

சேஷாசலத்திற்கு திடீர் என்று நினைவு வந்தது. 'இங்கு இருக்கும் குழந்தைகளை விடுங்கள் டாக்டர், என் மனைவி நேற்று என் வீட்டுக்கு வந்தபின் நேற்றும் இன்றுமாக எவ்வளவு ஸ்திரீகள் இதை விட்டு அவரவர் வீடு சென்ருர்கள். என்று சொல்ல முடியுமா? அவர்களில் எவ்வளவு பெயர்கள் பெண்குழந்தைகளைப் பெற்றவர்கள் என்று சொல்லுங்கள். அவர்கள் விலாசத்தை அறியப் படுத்தினுல் மேலே நடக்கவேண்டியதை நாங்களே பார்த்துக்கொள்கிருேம்.' என்று தன் எண்ணத்தை வெளியிட்டார்.

டாக்டர் தன் 'ரெஜிஸ்டரை' புரட்டினார், அதில் அன்றும் அதற்கு முதல் நாளுமாக எட்டு ஸ்திரீகள் 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது மூன்று பேருக்கு பெண் குழந்தைகள் சேஷாசலம் அந்த மூன்று ஸ்திரீகளின் விலாசத்தையும் குறித்து வைத்துக் கொண்டார். அவர்களுக்கு எழுதியோ அல்லது நேரில் போய் பார்த்தோ காரியத்தை செய்து கொள்ளலாம் என்று தீர்மானித்தார். டாக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு சேஷாசலம் மனைவியுடன் வீடு திரும்பினார் டாக்டர் அவர்கள் விஷயத்தில் இனி ஒன்றும் செய்யப் போவதில்லை என்று கூறிவிட்டதால் சேஷாசலம்தானே மும்முரமாக தன் குழந்தையை கண்டுபிடிக்கும் முயற்சிகளை துவங்கினார்.

டாக்டரிடமிருந்து கொண்டுவந்திருந்த விலாசங்கள் மூன்றிற்கும் சமாச்சாரத்தை எழுதினார் முதுகில் இடதுபுறம் காலணா அளவு மச்சம் உள்ள ஒரு பெண்குழந்தை யாரிடமாவது இருக்கிறதா என்று கேட்டிருந்தார் இரண்டு நாட்களில் மூவரிடமிருந்தும் கடிதங்கள் வந்தன. இரண்டு கடிதங்கள் எதிர்பார்த்தபடியே, தங்களிடம் அப்படி ஒரு குழந்தை இல்லை என்பதை தெரிவித்திருந்தன. ஆனல் மூன்ருவது கடிதத்தில் அவர்கள் கண்ட விஷயம் தான் சற்று அதிசயிக்கும்படி இருந்தது.

அந்தக் கடிதம் முத்துஸ்வாமி என்று ஒருவரிடமிருந்து வந்திருந்தது தன் மனைவி கனகத்திற்கு இரட்டையாகப் பெண் குழந்தைகள் பிறந்திருப்பதாகவும், அவற்றில் ஒரு குழந்தைக்கு சேஷாசலம் குறிப்பிட்டிருப்பது போல் முதுகில் மச்சம் இருக்கிறதென்றும் எழுதியிருந்தார் ஆனல் கனகம் அக்குழந்தையை தன்னுடையதுதான் என்று நிச்சயமாக அறிவாளாகையால் சேஷாசலம் அதை அடைய முடியாது என்றும் எழுதியிருந்தார் அவர்,

சேஷாசலத்திற்கும் பாக்கியத்தம்மாளுக்கும் தங்கள் குழந்தை ஏதோ ஒரு இடத்தில் உயிருடன் இருக்கிறது என்று தெரிந்ததும், சிறிது மூச்சுவந்தது. இனி அதை எப்படி தங்களுடையதுதான் என்று நிரூபித்து வீட்டிற்குக் கொண்டு வருவது என்பதைப்பற்றி யோசித்தார்கள் எப்படியாவது சண்டை போட்டு அதைக் கொண்டு வந்துவிட எண்ணி இருவருமாக தங்களிடம் விடப்பட்டிருந்த அந்த சிசுவையும் எடுத்துக்கொண்டு முத்துஸ்வாமியின் வீட்டைத்தேடிக் கொண்டு சென்ருர்கள்.

முத்துஸ்வாமியும் கனகமும் திடுக்கிட்டார்கள் தங்களிடம் இருக்கும் குழந்தைகள் இரண்டும் தன்னுடையதுதான் என்றும். அவைகளை சேஷாசலமும் பாக்கியமும் கண்ணால் பார்க்கக் கூட முடியாது என்றும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள் கனகம். பாக்கியத்தம்மாள் தன்னால் ஆன மட்டும் அந்த மச்சம் உள்ள குழந்தை தன்னுடையதுதான் என்பதை நிரூபிக்கமுயன்ருள் அழுதாள், கெஞ்சினாள் கடைசியில அவர்கள் மேலேயே வழக்குத் தொடுப்பதாகவும் கூறி முடித்தாள். ஆனல் முத்துஸ்வாமி தம்பதிகள் அதற்கெல்லாம் மசிவதாகவே இல்லை. கடைசியில் சேஷாசலம் தம்பதிகள் நிராசையுடன் வீடு திரும்பினார்கள் அவர்களிடம் இருந்த குழந்தை கவனிப்பார் இல்லாமல் கிடந்தது அதற்கு வேளைக்கு ஆகாரம ஏதாவது கொடுக்க அவர்கள் வீட்டு வேலைக்காரிக் கிழவிதான் சிரத்தைகொண்டாள் சேஷாசலம் தன் மனைவிபடும் மன வேதனையை பார்க்கச் சகிக்காமல் முத்துஸ்வாமி தம்பதிகள் பெயரில் வழக்குத்தொடுத்தார்,

முதலில் கோர்ட்டார் பல கேள்வி கேட்டு அந்தக் குழந்தை நிஜமாகவே பாக்கியத்தம்மாளுடையதுதானு என்று பரீக்ஷை செய்தார்கள் ஆனல் பாக்கியம் ஒவ்வொரு தடவை ...தில் சொல்லும் போதும் கனகமும் தன்னுடையது என்பதை நிரூபிக்க பல







முள்ள காரணம் ஏதாவது கூறிவிடுவாள். அவள் அவ்வளவு சீக்கிரம் குழந்தையை பாக்கியத்துக்குக் கொடுக்க இசையவில்லை. கடைசியில் கோர்ட்டார் தீர்மானப்படி அந்த மூன்று குழந்தைகளின் ரத்தத்தையும், இரு பெற்ருேரின் ரத்தத்தையும் நுட்பமாகப் பரிசோதித்து எந்தெந்தக் குழந்தை எந்த பெற்ருேரைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது

இங்கும் ஏமாற்றம்தான் தலை தூக்கிற்று பெற்ருேரின் ரத்தம் மட்டும் வெவ்வேறு 'குருப்பாக' இருந்தும், ரத்தக் கலப்பின் அபூர்வ அமைப்பினுல், அம் மூன்று குழந்தைகளின் ரத்தமும் ஒரே ரகமாக இருந்தது கோர்ட்டார் தீர்ப்புச் சொல்ல இயலாமல் திகைத்தனர். கடைசியில் முடிவாக அவர்கள் பாக்கியம் அவளுக்கு ஆஸ்பத்திரியிலிருந்து கொடுக்கப்பட்ட சிசுவையே தன்னுடையதாகப் பாவித்து வளர்க்க வேண்டியது என்று கூறிவிட்டார்கள்.

முத்துஸ்வாமி தம்பதிகள் வழக்கில் எப்படியோ தங்கள் பக்கம் ஜெயித்துவிட்டதில் திருப்தியுடன் வீடு சென்ருர்கள்

பாக்கியத்தம்மாளுக்கு அழமாட்டாக் குறையாக இருந்தது இவ்வளவு பணம் செலவு செய்து நன்ருக உடம்பையும் அலட்டிக் கொண்டும், தன்னுடையதுதான் என்று நிச்சயமாகத் தெரிந்திருக்கும் குழந்தையை அடைய முடியவில்லையே என்று ஒரே ஏக்கம். ஆனல் நாளடைவில் தன்னிடம் இருக்கும் குழந்தையின் களங்கமற்ற முகத்தில் தன் துக்கத்தை மறந்தாள் அதற்கு லில்லி என்று பெயர் வைத்து அருமையாக வளர்க்கவும் ஆரம்பித்துவிட்டாள்! லில்லிபால் அவளுக்கு தாயன்பு சுரந்தது.

* * *

பத்து வருஷங்கள் பறந்தன சேஷாசலம் தான் முன்பு இருந்த ஊரிலிருந்து மாற்றப்பட்டு உத்தியோக விஷயமாய் மதருஸுக்கு வந்திருந்தார் அந்த சமயம்தான் ஒரு நடன அரங்கேற்றத்திற்கு சேஷாசலம் பாக்கியத்தம்மாளுடனும் லில்லியுடனும் போக நேர்ந்தது.

ரம்பா, ரோஹிணி என்று இரு இரட்டை சகோதரிகள் 'டான்ஸ் ஆடப்போகிருர்கள் என்று நோட்டீஸில் போட்டிருந்தது பத்து வயதுதான் ஆகிறதென்ருலும் அவர்கள் இருவரும் வெகு அற்புதமாய் ஆடுகிருர்கள் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

பெண்கள் இருவரும் மேடைக்கு வந்து மகா ஜனங்களை நமஸ்கரித்துவிட்டு 'அலாரிப்பு' ஆரம்பம் செய்தார்கள். முதல் வகுப்பில் உட்கார்ந்திருந்த பாக்கியத்தம்மாள் கூர்மையாக அந்தப் பெண்களையே நோக்கிக் கொண்டிருந்தாள். லில்லி ஏதோ சொல்லவே அவள் திரும்பினாள். லில்லி சொல்வது ஒன்றுமே அவள் காதில் விழவில்லை ஏனோ பாக்கியம் அவளையே சிறிது நேரம் உற்று நோக்கினாள். அவள் முகம் விகாரம் அடைந்தது மேடைமேல் தன் திருஷ்டியை திருப்பி, அங்கு ஆடிக் கொண்டிருந்த இளம் பெண்களையும் மறுமுறை நோக்கினாள் டான்ஸில் இருந்த கவனம் எங்கோ போய்விட்டது

'இரட்டைப் பெண்களா? இருவருக்கும் சிறிதாவது முகஜாடை ஒன்ருக இருக்கவேண்டுமே? இவர்களை இரட்டை என்று யாராவது சொல்வார்களோ?' என்று யாரோ இரண்டு ஸ்திரீகள் பேசிக்கொள்வது அவள் காதில் விழுந்தது. தன்னை அறியா




இனிமே சொன்ன பேச்சைக் கேட்காமெ விஷமம் பண்ணினுல் ஸ்கூலுக்கு துரத்திடுவேன்...

இனிமே சொன்ன பேச்சைக் கேட்காமெ விஷமம் பண்ணினுல் வீட்டுக்கு துரத்திடுவேன்...!



உபாத்தியாயர்:—"ஸார், உங்க பையன் பள்ளிக்கூடத்தில் வாத்தியார் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு, 'நான்தான் வாத்தியார்'ன்னு அட்டகாசம் செய்கிறானும் அவனை கண்டியுங்கள்!"

தகப்பனார்:—"ஏண்டா அந்த மாதிரியான முட்டாள்வேலையெல்லாம் செய்யறே?"

---

மலே அவள் கண்கள் லில்லியை நோக்கின—ஆம் லில்லி சரியாக அங்கே ஆடிக்கொண்டிருந்த ரோஹிணியின் சாயலாகவேதான் இருந்தாள்!—ஒருவேளை லில்லியும் ரோஹிணியும்தான் 'சாரதா' ஆஸ்பத்திரியில் பிறந்த அந்த இரட்டைப் பெண் குழந்தைகளோ ரம்பாதான் தனக்குப் பிறந்த அந்த மச்சம் உள்ள சிறு பெண்ணோ?—பாக்கியத்திற்கு நடனத்தில் இருந்த சிரத்தை குன்றியது அவர்கள் எப்படி இங்கு வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? கடவுள் ஒருவாறு மனம் கனிந்து தன் குழந்தையை இப்பொழுதாவது தடையின்றி தன்னிடம் அனுப்ப நினைத்துவிட்டாரோ?—அவள் சிந்தனை தடைபட்டது பக்கத்தில் உட்கார்ந்திருந்த இரு ஸ்திரிகளும் மேலே பேசிக்கொள்வதை கவனிக்கலானாள். ஒருத்தியின் பேச்சு பாக்கியத்தை ஆகர்ஷித்தது

"இவர்கள் இரட்டை என்றால் யாரும் நம்புகிறதேயில்லை இவர்கள் என் பெண்கள் இரட்டையாகப்பிறந்தும் தோற்றத்தில் இவ்வளவு வேற்றுமையுடன் இருக்கிறார்களே என்று நானே ஆச்சரியப்பட்டதுண்டு ஒருவேளை நான் முன்பு ஒரு பிழை செய்து விட்டேன், அதன் பலன் தானோ என்னவோ இது?" என்றாள் அந்த அம்மாள்.

அவள் மேலே என்ன சொல்லப் போகிறாள் என்று ஆவலுடன் எதிர்பார்த்தாள் பாக்கியம்.

"எனக்கு இந்தப் பெண்கள் பிறந்து பத்து நாளில் ஒரு அம்மாள் வந்து தன் குழந்தை ஆஸ்பத்திரியிலிருந்து. மாறிப் போய் என்னிடம் வந்து விட்டதாகச் சொன்னாள் ஆனால் நான் அவளுக்கு அவள் குறிப்பிட்ட குழந்தையை திருப்பிக் கொடுக்க மறுத்து விட்டேன் இப்போ பார்த்தால் ஏன் அப்படி செய்தோம் என்று இருக்கிறது அப்படி அந்தக் குழந்தையை நான் அவளிடம் கொடுத்திருந்தாலும். அவளிடம் அப்பொழுது இருந்த குழந்தை என்னுடையதுதான் என்பது என்ன நிச்சயம்? என் குழந்தை எங்கே போய்விட்டதோ? என்ன செய்வது என்றே எனக்கு தெரியவில்லை இப்பொழுது அதை நான் எங்கே போய் தேடுவேன்?" என்று மிக வருத்தத்துடன் கூறி முடித்தாள் அந்த ஸ்திரி

பாக்கியத்தம்மாளுக்கு சட் என்று அவளிடம் பேசவேண்டும். போல் இருந்தது "நீங்கள் இதற்கு முன் பாம்பேயில் இருந்தீர்களோ?" என்று மெள்ள கேட்டாள் "ஆமாம்" என்றாள் அந்த ஸ்திரி ஆச்சரியத்துடன்.

"உங்களுக்கு சாரதா மெடர்" நிடிஹோமில் பிரஸவம் நடந்ததோ? உங்கள் பெயர் கனகம்தானே? உங்கள் கணவர் பெயர் முத்துஸ்வாமி தானே?" என்று கேள்வி பாணங்களை அவள் மேல் வீசினாள் பாக்கியம்.

அவள் கேள்விகளைக் கேட்டுத் திகைத்த அந்த ஸ்திரீ, "உங்களுக்கு எப்படி என்னைப்பற்றி இவ்வளவு தகவல்கள் கிடைத்திருக்கிறது? உங்கள் கேள்விகளுக்கெல்லாம் சேர்த்து ஒரே பதிலாக ஆமாம் என்று சொல்லி விடுகிறேன்" என்றாள்

பத்து வருஷத்துக்கு முன் குழந்தையை தேடி வந்தவள் நான்தான்! இதோ பாருங்கள் உங்களை விட்டுப் பிரிந்த உங்கள் பெண் லில்லி!' என்று கூறி பாக்கியம் லில்லியை சுட்டிக் காண்பித்தாள்

உருவத்தில் ரோஹிணியை ஒத்திருந்த லில்லியைப் பார்த்த கனகம் பிரமித்தாள். இரு தாய்களும் கடந்து போன விஷயங்களுக்காக ஒருவரை ஒருவர் மன்னித்துக்கொண்டனர். காணாமல்போன குழந்தைகள் திரும்ப கிடைத்துவிட்ட, சந்தோஷம் தாங்காமல் இருவரும் கண்ணீர் வடித்தனர்.

ஒருவாறு சந்தோஷ ஆரவாரம் அடங்கியது. பாக்கியம் தன் வளர்ப்புப் பெண்ணான லில்லியை நோக்கினாள். களங்கமற்ற பார்வையுடன் மருண்டு கேட்டாள் லில்லி அம்மா அந்த மாமியாரு அம்மா? என்னை கட்டிக் கொண்டு நீதான்டி என் மற்ற பெண் என்றாளே அவள் யாரு? என்றாள்

பாக்கியத்தம்மாளின் மனம்நெகிழ்ந்தது உடலைப் புல்லரித்தது இந்தக் குழந்தையை கண்ணைக்கட்டி காட்டில் விட்டமாதிரி முன்பின் தெரியாதவரிடம் விடுவதா?

அந்த அம்மாள் உன்னைப் பெற்றவள் ஆனால் நான்தான் உன் நிஜ அம்மாடி என் கண்ணே? உன்னை நான் அவளுக்கு கொடுக்கவே மாட்டேன் ரம்பாவும் ரோஹிணியும் ஜோடியாக நடனம் ஆடிக்கொண்டு சந்தோஷமாக அவளுடனேயே இருக்கட்டும்!' என்று ஆவத்துடன் கூறி லில்லியை இருகத் தழுவினாள் அவள் உதடுகள் துடித்தன.

'நான் வளர்த்த குழந்தை! என் குழந்தை!! என்று அவள் வாய் முணுமுணுத்தது

---

## விவாகம்



விருத்தாசலம் தாலுகா ஆபீஸ் ஹெட்கிளார்க்கு ஸ்ரீ ஜி. சௌரிராஜ ஐயங்கார் குமாரத்தி சௌ. சுந்தரவல்லிக்கும் திருச்சி வருமானவரி சூபர்வைஸர் ஸ்ரீ ஏ ஜகந்நாதாசாரியாரின் குமாரன் சி ஆராவமுதாசாரிக்கும் சென்ற 12—7—50 விவாகம் நடந்தபோது எடுத்தபடம்.



# மகராஜி யார்?

**.....ஸ்ரீமதி கோமதி சுப்ரமண்யம்.....**

பரக்க பரக்க வேலைகளை முடித்து விட்டு வீட்டை நோக்கி ஓட்டமெடுக்கும் சொக்கம்மா அன்று மிகவும் நிதானத்துடன் தனது வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள் ஆறு மணிக்குள் முடிக்கவேண்டிய வேலையை எட்டு மணியோடு இழுபறி என்று ஒருவகையாக செய்து முடித்தவள் அப்பொழுது வீட்டு நினைவு தோன்றாமல் வெற்றிலைப் பையை எடுத்துவைத்துக்கொண்டு உட்கார்ந்தது வீட்டுக்கார மீனாக்ஷிக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

சொக்கம்மா இன்றைக்கென்ன வீட்டை மறந்துட்டு இப்படி சாவகாசமாக உட்கார்ந்துவிட்டே வீட்டிலென்ன மருமகளா வந்துவிட்டா? உன் வேலைகளைக் கவனித்துக்கொள்ள என்று கேலியாகக் கேட்டுக் கொண்டே அவளிருக்குமிடத்தை நெருங்கிவந்தாள்.

மருமக வந்து மண்ணாப்போச்சு... 'ஏண்டி இப்பவே இப்படி அலுத்துக் கிடறேயே இன்னும் மருமக வருகிற காலத்திலே எப்படியிருப்பயோ..."

பின்னே என்னம்மா என்புள்ளை இருக்கிற பெருமைக்கு மருமக வராத ஒண்ணுதான் குறை.

உன் புள்ளேமேலே அப்படி என்ன கோலம் சொக்கம்மா என்று மீனாக்ஷி கேட்கவே சொக்கமாவுக்கு மகன் மீதிருந்த வெறுப்பு பொங்கி யெழுந்தது

அவனோட வயித்தெரிச்சலை ஏன் கேக்கறிங்க அம்மா இக்கனை வயது புள்ளே வழியா பொளச்சா நானு இப்படி திண்டாடணுமா கூலி வேலை செஞ்சாவது நாலு காசு சம்பாதிச்சு குடும்பத்தை பார்த்துகிடப்படாது.

எல்லாம் அவன் வயசு வந்தா தன்னைப்போல சம்பாதிப்பான் என்று சாமாதானம் சொன்னாள் மீனாக்ஷி ...

சம்பாதிக்கிற பிள்ளையை பார்த்தாலே தெரிகிறதே அடுக்களங்க சம்பாரிச்சா எடுத்துக்கிட்டு ஓடத் தெரியும்.

அப்படின்னு நீ வச்சிருக்கிற பணத்தை திருடிக்கிடுவானு...

ஆமாம்மா இதோட எத்தனையோ தடவையாச்சு வாயைக் கட்டி வயித்தைக் கட்டி ஒண்ணு அறை சேர்த்து வச்சிருந்தா எடுத்துக்கிட்டு ஓடிடுவான்

அவள் முழுவதும் சொல்லி முடிக்கவில்லை வாசல் புறமிருந்து அம்மா என்று அழைத்துக்கொண்டு அவளுடைய ஏழு வயதுப் பெண் ஜானகி ஓடி வந்தாள்

நீயும் வந்துட்டியா நீ பள்ளிக்கூடம் போகவிட்டு வரணுமின்னுல்ல இங்கேயே உக்கார்ந்திருந்தேன் இங்கேயே வந்துட்டியா என்று கூறியபடியே வெறுப்புடன் தன் வெற்றிலைப்பையில் கையைவிட்டுத் துளாவினாள்.

எப்பொழுதோ போட்டுவிட்டு இழித்து வைத்திருந்த பாதி வெற்றிலைச் சருகும் துண்டுப் பாக்கும் கரங்களில் தட்டுப்பட்டன உலர்ந்து போய்கிடந்த சுண்ணும்புத்தாளை அதனுடன் சேர்த்து மடித்து வாய்க்குள் திணித்தபடியே அவ்விடத்தை விட்டு எழுந்து போக முயன்றாள்.

நீ எங்கே போனாலும் இன்றைக்கு உன்னைவிடவே மாட்டேனம்மா எப்படியும் கட்டாயமாக இன்றைக்கு புதுச் சொக்காய் எடுத்துக்கொடுத்தால்தான் விடுவேன் என்று விடாப்பிடியாய் பிடித்தபடியே தாயின் கரங்களைப்பற்றிக்கொண்டு தொங்கினாள் அந்தச் சிறுமி

இன்னும் இரண்டு மூன்று நாட்களில் கட்டாயமாக எடுத்துத் தருகிறேன் இன்றைக்கு மட்டும் பிடிவாதம் பிடிக்காமல் போய்விடு என்று கெஞ்சினாள் சொக்கம்மா.

ஆனால் குழந்தை பிடிவாதத்தை விட்டுக்கொடுத்தால் தானே முடியாதம்மா இப்படித்தான் ஒவ்வொரு தினமும் என்னை ஏமாற்றுகிறாய். இன்றைக்கு புதுச்சொக்காய் எடுத்துக் கொடுத்தால்தான் பள்ளிக்கூடம் போவேன். இல்லாவிட்டால்...

இல்லாவிட்டால் நின்றுவிடேன். எனக்கு மிகவும் நல்லதுதான் பள்ளிக்கூடம் படித்து உத்யோகம் பார்க்கப் போகிறாயோ. இப்பொழுதிருக்கும் தரித்திரத்துக்கு என்னோடு இரண்டு வீட்டில் பத்து தேய்த்தாயானால் பஞ்சமாவது கொஞ்சம் தீரும் என்று கூறியதைக் கேட்டுக் கோபமடைந்த மீனாக்ஷி அவள் பேச்சில் குறுக்கிட்டாள்.

நன்றாயிருக்கிறது சொக்கம்மா. குழந்தையிடம் போய் உன் தரித்திர புத்தியைக் காட்டுவது பணமில்லையானால் என்னிடம் இரண்டொன்று வாங்கிக் கொள்வதுதானே என்று தன்னிடம் கடன் வாங்கிக்கொள்ளும்படி தாராளமாய் அனுமதி கொடுத்தாள்.

இன்றைக்கு வாங்கினால் நாளைக்கு கழிக்க வேண்டியதுதானே அம்மா. வாடகைக்கென மூன்று ரூபாய் அந்தப் பயலுக்குத் தெரியாமல் பத்திரம் பண்ணி வச்சிருக்கேன் அதில் வாங்கிக் கொள்கிறேனம்மா என்று கூறிவிட்டு எழுந்து நடந்தாள் சொக்கம்மா.

## 2

சொக்கம்மா வேலை பார்க்கும் வீட்டிற்கு அடுத்த வீட்டில்வேலை பார்க்கும் சுப்பம்மா அன்று மூன்று மணிக்கே வந்துவிட்டாள் வேலைக்கு சாயந்திரம் சினிமா [illegible]க்கவேண்டுமென்ற வேகத்தில் வேலைகளை வெகு துரிதமாய் முடித்துவிட்டு வீட்டிற்குப் போகத் திரும்பினாள் போகும் போதே அவளுக்கு ஒரு யோசனை தென்பட்டது

சொக்கம்மாவும் சினிமாவுக்கு வருகிறாளா என்று ஒரு வார்த்தை கேட்டுவிட்டுப் போகலாமென்ற எண்ணம் தோன்றியது இந்த நினைப்புடன் சொக்கம்மா வேலை பார்க்குமிடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

அப்பொழுதுதான் வந்திருந்த சொக்கம்மா முகத்தைத் தொங்கப் போட்டவாறே தனது வேலையைக்



கவனித்துக் கொண்டிருந்தாள் அவள் முகத்தில் சோகத்தின் அலே படிந்துபோய்க் கிடந்தது ஒரே தொழிலில் வாழ்க்கை நடத்தும் சொக்கம்மாவுக்கும் சுப்பம்மாவுக்குமிடையே எத்தனேயோ மாறுபாடுகள்.

சுப்பம்மா எப்பொழுதும் சிரித்த முகத்துடனிருப்பாள். துக்கம் என்பதையே அறியாதவள்போல் சிரித்துப் பேசிக்கொண்டு கல கலப்பாயிருப்பாள். சொக்கம்மா அதற்கு நேர் எதிரிடை எப்பொழுதும் வேதனே நிறைந்த உள்ளத்துடன் விசனமாகவே வாட்டமாயிருப்பாள்.

சுப்பம்மாவுக்கு குடும்பம், குழந்தைகுட்டி ஒன்றுமே இல்லே விசாரமில்லாத தனிக்கட்டை. தான் தோன்றியாக தனி வாழ்க்கை நடத்திவரும் அவளுக்கு என்ன விசாரமேற்படப்போகிறது? ஆனல் சொக்கம்மாவுக்கு அப்படியில்லே

நிர்கதியாய் விட்டுச்சென்ற அவள் கணவன் அவளோடு இரண்டு குழந்தையையும் சேர்த்து விட்டுச் சென்று விட்டான் அவர்களேப் பெரியவர்களாக்குவதில்தான் சொக்கம்மாவின் முழுக் கவனமும். எப்படியோ சிரமப்பட்டு இரண்டு குழந்தைகளேயும் வளர்த்து விட்டால் பெரியவர்களான பின் பெண்ணேக் கட்டிக் கொடுத்து விடலாம். பிள்ளே கைதூக்கி விடமாட்டானு என்கிற நம்பிக்கையிலேயே தன் காலத்தைக் கடத்தி வந்தாள் கடத்தி என்ருல் வீணுகக் கடத்திவரவில்லே ஒவ்வொரு நிமிஷத்தையும் தனது உழைப்பினுல் போக்கி அந்த உழைப்பிலிருந்து கிடைக்கும் ஒரு காசு அரைக்காசை வைத்து குழந்தைகளே பெரியவர்களாக்குவதில் போக்கி வந்தாள்

நாட்கள் சென்றுகொண்டிருந்தன குழந்தைகள் வளர வளர அவள் கொண்டிருந்த நம்பிக்கை பலப்பட வேண்டியதிருக்க தளரத் தொடங்கியது காரணம் அவள் மகனின் போக்கு மனதிற்கு வேதனே தருவதாயிருந்தது

ஏக்கா என்னமோ கப்பல் கவிந்து விட்டாப்பிலே விசாரமா இருக்கயே நான் வந்தது கூடத் தெரியாமே என்னமோ யோசிச்சுக்கிட்டு இருக்கயே அப்படி என்ன பிரமாத யோசனே என்று கேட்டுக்கொண்டே தான்வந்து நிற்பதை தெரியப்படுத்திஞள் சுப்பம்மா...

யாரு சுப்பம்மாவா வேலேயெல்லாம் முடிச்சுட்டியா? என்று அஸ்வாரஸ்யமாகக் கேட்ட சொக்கம்மா மீண்டும் தலேயைக் கவிழ்த்துக்கொண்டாள்

ஆமா சாயந்திரம் சினிமாவுக்குப் போகலாமின்னு வேலேயை சீக்கிரம் முடிச்சுட்டேன். நீயும் வரயா: உன்னேயும் கூட்டிக்கிட்டு போகலாமின்னுதான் இப்படி வந்தேன்

ஆமா நான் கெட்ட கேட்டுக்கு சினிமா ஒண்ணு தான் குறை அவள் கூறி முடிக்கவில்லே. அதற்குள் மீனுக்ஷி அம்மாள் அந்தப் பக்கம் வந்து சேர்ந்தாள்

ஏண்டி சொக்கம்மா எல்லாரிடமும் அலுத்துக் கொள்ளுகிருய் எப்பொழுது பார்த்தாலும் ஏன் இப்படி முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு பறி கொடுத்தவள் மாதிரி உட்கார்ந்திருக்கே இன்னிக்கு ஒருநாளேக்குத்தான் அவளோட விச்ராந்தியாக போயிட்டு வாயேன்...என்று சிபார்சு செய்தாள்.



நான் பொழைக்கிற பொழைப்புக்கு சினிமா வேறே வேணுமாம்மா. அந்தக்காசு இருந்தாஞ ஒரு நாளே பொழுதை ஓட்டிப்புடமாட்டேனு...

ஆமா உனக்கு எப்பவும் இதே புலம்பல்தான். உன்னேயொத்தவள்தான் சுப்பம்மாவும் அவள் எப்படி சந்தோஷமாயிருக்கிருள் பாரு

அவளும் சரி நானும் சரியாம்மா? அவள் ஒண்டிக்கட்டை எங்கே வேண்டுமானுலும் போகலாம். இருந்தால் சாப்பிடலாம் இல்லாவிட்டால் கண்ணே மூடிக்கொண்டு நிம்மதியாகப் படுத்துவிடலாம் ஆனு கொடுத்து வைத்த மகராஜி நான் அப்படியாம்மா...இருக்கோ இல்லேயோ இரண்டு கோட்டான்களுக்கு பதில் சொலியாகவேண்டுமே. அதிலும் அந்த பாழாய் போவான்...

ஏண்டி குழந்தையை அப்படித்திட்டுகிறே...

இட்டாமஎன்னம்மா செய்யறது வாயை வயித்தை இறுக்கி மூனு ரூபா வாடகைக்குன்னு பதுக்கி வச்சிருந்தேனம்மா என் பொண்ணு இருக்குதே நான் செஞ்ச பாவமெல்லாம்தான் இப்படி பொண்ணும் புள்ளேயுமா அவதரிச்சிருக்குதம்மா.

அந்தப் பொண்ணு சொக்காய் வேணும்ன்னு ரொம்ப நாளா தொந்தரவு படுத்திக்கிட்டேயிருந்தது நானிருக்கிற நிலேயிலே இதுக்கு புதுசு புதிசா துணி யெடுத்துக்கொடுக்க நானுஎங்கேம்மா போவேன் சொன்னுலும் கேட்கமாட்டேனென்கிறது இந்தப் பிள்ளேகள் இல்லேன்னு நான் எவ்வளவோ நிம்மதியாகிருப்பேனம்மா.

அது பிடிவாதமாய் பிடிக்கவே அந்தப் பணத்திலேயாவது எடுத்துக் கொடுத்துத் தொலேப்போமின்னு பார்த்தா பணத்தைக் காணேம் அம்மா.



காணேமா. எங்கே போய்விட்டது. யார் எடுத்திருப்பார்கள்.

யார் எடுப்பா எல்லாம் என் கொள்ளி ஒண்ணு இருக்குதல்ல அது தான் எடுத்திருக்கும்.

அவனைக் கேட்டியோ என்ன சொல்லுகிறான்.

என்னத்தைக் கேட்க கேட்டாத் தான் இனிமே கொடுக்கப் போகிறனு...

உழைத்து உழைத்து ஓடாய்ப்போயிருந்த அந்த உருவம் ஏமாற்றத்தினுலேற்பட்ட சினத்தில் பொங்கிக் கொண்டிருந்தது இத்தனையும் கேட்ட பிறகு சுப்பம்மா ஏன் அங்கு நின்று கொண்டிருக்கிருள்?

சொக்கம்மா கூறியதைப் போல் தான் கொடுத்து வைத்த மகராஜி என்கிற பெருமிதத்தில் சினிமாக் கொட்டகையை நோக்கி நடைபோட்டாள் சுப்பம்மா...

3

காலம் மாறிற்று. வாழ்வின் இறுதி வரை சுப்பம்மா கொடுத்து வைத்த மகராஜியாக வாழ்ந்துவிடவில்லை. சொக்கம்மா என்றுமே கொடுத்து வைக்காதவளாயும் இருந்துவிடவில்லை.

உழைக்கிற காலத்தில் நாளைக்கு வேண்டுமே என்கிற நினைப்பேயில்லாமல் வரவையொட்டி செலவை முடித்துவிட்டு, இப்பொழுது தள்ளாத பருவத்திலும் உழைத்துத்தான் ஆக வேண்டுமென்கிற நிர்பந்தத்தில் உழைத்துக்கொண்டிருந்தாள் சுப்பம்மா

தன்னுல் முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டும் பாடுபடாமல் முடியாது என்கிற நிலைமையில் திண்டாடிக்கொண்டிருந்தாள் ஆனுல் சொக்கம்மா அப்படியில்லை. அரும்பாடுபட்டு வளர்த்த அவளிரு செல்வங்கள் இன்று அவளைக் கை தூக்கிவிட்டன

தன் சுக துக்கங்களை யெல்லாம் ஒடுக்கி குழந்தைகளை வளர்த்தாள். நாலு பேரைப்போல் நன்ருக உண்ண வேண்டும் நாலு இடங்களுக்கும் சென்று களிக்க வேண்டும் என்கிற ஆசையையெல்லாம் பலவந்தமாய் அடக்கி ஒடுக்கி பலவகையிலும் தன்னுடைய சௌகரியத்தைக் குறைத்துக்கொண்டாள் ஒவ்வொன்றையும் ஒரு தடவைக்கு நாலு தடவையாக ஆராய்ந்து தன் தேவையை எத்தனை குறைத்துக்கொள்ள முடியுமோ அப்படியெல்லாம் குறைத்துக்கொண்டாள். வெகு சிரமப்பட்டு குழந்தைகளை வளர்த்ததோடு அரைக்காசு ஒரு காசு மீதமும் வைத்திருப்பாள்.

தன்னேடொத்த சுப்பம்மா சந்தோஷமாய் தேர் திருவிழாவுக்குச் செல்லும்போது பலவந்தமாக மனதையடக்கிக் கொள்வாள் அப்படியெல்லாம் காசை வீணுகச் செலவிட்டு விட்டால் குழந்தைகள் வளர்வதெப்படி? நம்முடைய சுகம்தானு பெரிது? அந்தப் பணத்தைக்கொண்டு குழந்தைகளுக்கு தேவையான பொருளை வாங்கிக் கொடுக்கலாமே என்று நினைப்பாள் இப்படி குழந்தைகள் வளருவதற்காக தன்னுடைய தேவையைப் பெரிதும் குறைத்துக்கொண்டாள்.

ஒரொரு சமயம் அவளுக்கு சுப்பம்மா மீது பொருமைகூட ஏற்படும். அவளுக்கென்ன கொடுத்து வைத்த மகராஜி நானும் அவளைப்போல் குழந்தை குட்டி ஒன்றுமேயில்லாதிருந்தால் நினைத்த இடத்திற்குப் போகலாம் நாமும் அவளைப்போலில்லையே என்று ஏங்குவாள் இப்பொழுது சுப்பம்மா இவளைப் பார்த்து ஏங்குகிருள்.

4

தன் பெண் விடுவிடென்று விசன முற்ற சொக்கம்மா முன்னிலும் பன்மடங்கு வேகத்துடன் உழைக்கத் தொடங்கினுள் அவள் உழைப்பின் பகுதியை வெகு சிக்கனத்துடன், பதுக்கி வந்தாள் அவள் பெண் பருவமடையவும் சொக்கம்மா கையில் அவளுக்கு சீர் செய்ய வேண்டிய அளவுக்கு பணம் சேரவும் சரியாக இருந்தது.

கையில் காசு இருக்கும் தைரியத்தில் துணிந்து மாப்பிள்ளை தேட முயன்ற சமயத்தில்தான் அவள் பிள்ளை பெரிய காரியமாக சாதித்து விட்டான். அவள் வைத்திருந்த இரு நூறு ரூபாயையும் தூக்கிக் கொண்டு இரவோடு இரவாக ஊரை விட்டு ஓடிவிட்டான்

சொக்கம்மாவுக்கு எப்படியிருக்கும்? பயித்தியம் பிடித்தவளைப்போல் வீட்டுக்கார அம்மாள் காலில் வந்து விழுந்தாள் அவளால் என்ன செய்ய முடியும்?

மலைத்துப்போய் நின்ற மீனுக்ஷி அம்மாவின் மூளையில் ஒரு யோசனை பளிச்சிட்டது தன் வீட்டு வண்டிக்கார சாமிக்கண்ணு சொக்கம்மாளின் மகளை மணந்துகொண்டால்...

அம்மாளின் யோசனை அமுலுக்கு வந்தது. தன்னுலியன்ற உதவிசெய்து அந்தக் கலியாணத்தை முடித்து வைத்தாள்.

அதிலிருந்தே சொக்கம்மாவுக்கு அதிர்ஷ்ட சக்கரம்தான் வயசுகாலத்தில் அம்மா வேலை செய்ய வேண்டாமென்று அவள் வேலையைதான் ஏற்றுக் கொண்டாள் சொக்கம்மாளின் மகள் ஜானகி.

அதோடு மட்டுமல்ல. பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிப்போன அவள் மகன் எங்கோ நல்ல வேலையில் அமர்ந்திருப்பதாகக் கடிதம் எழுதியதோடு மாதா மாதம் தாயாருக்கென பணமும் அனுப்பி வருகிருன்.

குழந்தைகள் இல்லாவிட்டால் நிம்மதியாக வாழலாம் என்று கொண்டிருந்த தன் அபிப்பிராயத்தை இப்பொழுது மாற்றிக்கொண்டாள் சொக்கம்மா. எந்தக் குழந்தைகள் தன் வாழ்வுக்கு இடையூருக இருக்கிறதென்று நினைத்தாளோ இன்று அதே குழந்தைகளால் வாழ்வு கிடைத்து அனுபவிக்கிருள் சொக்கம்மா

பணம் அனுப்ப மகனும் அவள் செய்த வேலையைப்பகிர்ந்து செய்ய மகளும் போதும் போதாததற்கு மாமியாருக்கு வேண்டிய புகையிலை, வெற்றிலை, வாங்கிக்கொடுக்க மருமகன் சாமிக்கண்ணுவும் இருக்கும் போது அவளுக்கென்ன குறை?

இப்பொழுது யார் கொடுத்து வைத்த மகராஜி சொக்கம்மாவா? அல்லது சுப்பம்மாவா?

---


பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

Phone: 84254.

குழந்தைகளின் ஈரல், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7 சாரங்கபாணி கோவில் கீழ வீதி

திருச்சி கிளை:—
15. புகழிய பிள்ளை தெரு. தெப்பக்குளம் போஸ்ட்.







தும்பிகாபுரி அரசன் தூமகேதுவுக்கு வெகு நாட்கள் வரையில் குழந்தையே இல்லாதிருந்ததால் அவன் வருத்தத்துடன் இருந்தான். ஊரிலுள்ள கோயில்களுக்கெல்லாம் திருவிழாக்கள் விடாமல் செய்து வந்தபடியால் கடவுள் மனமிரங்கி தூமகேதுவுக்கு ஒரு குழந்தையைக் கொடுக்கத் தீர்மானித்தார். குழந்தை பிறப்பதற்கு ஒரு வாரம்தான் இருந்தது. அப்பொழுது ஒருநாள் அரசன் தன் மனைவியைப் பார்த்து "உனக்குப் பிறக்கும் குழந்தை பெண்ணுக இருந்தால், உன்னையும் அந்தக் குழந்தையையும் சேர்த்துக் கொன்று விடுவேன்" என்று சொன்னுன். அன்று முதல் ராணி பயத்தினுல் நடுங்கினுள். குழந்தை பிறக்கும் நேரமும் வந்து விட்டது. அவ்வூரே ராணியின் கதியை எண்ணி வருந்திக்கொண்டிருந்தது. அவள் எதிர்பார்த்தது போல் ராணிக்குப் பெண் குழந்தைதான் பிறந்தது. ராணிக்கு உயிரே போய்விட்டது போல இருந்தது. ஆனுல் அவளுடைய தாதி அவளுக்கு உதவி செய்யாவிட்டால் அவள் உயிரே போயிருக்கும், தாதி மிகவும் கெட்டிக்காரி. குழந்தை பிறந்தவுடன் அதற்கு ஆண்குழந்தைக்குப் போட வேண்டிய சட்டைகளைப்போட்டு அரசனிடம் ஓடிவந்து 'அரசே! தங்களுக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது என்று கூறி குழந்தையைக் காட்டினுள். ஆண் உடையிலே இருந்த அந்தக் குழந்தையை ஆணுகவே நினைத்து சந்தோஷப்பட்டான் அரசன். ஊராரும் சந்தோஷப்பட்டனர்.

## இரண்டாவது நாள்

☆

சுந்தரரூபம் உள்ள அச் சுந்தரி 'சுந்தரன்' என்ற பெயருடனேயே வளர்ந்து வந்தாள். அவளை வெளி உலகத்துக்கே காட்டாமல் வளர்த்து வந்தாள் ராணி. அரசன்கூட ஏதாவது ஒருசமயம்தான் குழந்தையைப் பார்க்கமுடியும். அவ்வளவு கட்டுப்பாடுடன் வளர்ந்துவந்தாள் சுந்தரி. இருபது வருஷங்கள் கடந்தன. பையனுக்கு கலியாணம் செய்து, பட்டாபிஷேகமும் செய்துவிட வேண்டும் என்பது தூமகேதுவின் ஆசை அதற்காக பக்கத்து நாட்டு அரசனின் பெண்ணை தன் பிள்ளைக்கு மணந்துகொள்வதாக ஏற்பாடு செய்து திருமணத்திற்கு நாளும் நிச்சயம் செய்தாகிவிட்டது.

கலியாண நாள் நெருங்க நெருங்க ராணிக்கு உண்மை தெரிந்துவிடப் போகிறதே என்ற பயம் ஏற்பட்டு அவளை வாட்டியது. அவள் உடல் வாடியது திடீரென ஏற்பட்ட விசனத்தின் காரணத்தை விசாரித்தாள் சுந்தரி. ராணி எவ்வளவு நாட்கள் உண்மையை மறைத்துவைக்க முடியும். நடந்த விஷயங்களை எல்லாம் சுந்தரியிடம் சொன்னுள் ராணி. தனக்காகத் தாயார் இவ்வளவு கஷ்டப்படுவதைக் கண்ட சுந்தரிக்குத் தகப்பனர் மேல் கோபமுண்டாகிவிட்டது. வருத்தப்படும் தன் தாயாரை சமாதானப்படுத்தி, 'அம்மா, நீ கவலைப்படாதே. கலியாணதினத்தன்று நான் ஆண் உடையிலேயே இருந்து எப்படியாவது தப்பித்துக்கொள்ளுகிறேன்' என்று சொன்னபிறகுதான் ராணிக்குச் சிறிது தைரியம் ஏற்பட்டது.

கலியாணம் வெகு தடபுடலாக நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கலியாணத்திற்கு முதல்நாள் மாலை சுந்தரி ஆண் உடையுடன் தகப்பனை அணுகி, 'அப்பா! சிறிதுதூரம் குதிரையில் சென்று உலாவிவிட்டு வருகிறேன்' என்றுள். கலியாண ஏற்பாடுகளில் முனைந்திருந்த தூமகேது அவள்சொல்லுவதை முழுவதும் கேட்காமல், 'சரி', என்று சொல்லிவிட்டான். மறுகணம் சுந்தரி தன் அழகிய குதிரையுடன் ஊரைவிடுக் கிளம்பினுள். குதிரையும் ஊரைவிட்டு வெகு தூரத்தில் கொண்டு வந்து விட்டு, 'சுந்தரி, நீ இறங்கிக் கொள் அதோ தெரியும் கட்டடத்தில் போய் இருந்து வா. உனக்கு என் உதவி தேவையாயிருந்தால் என் வால் மயிரில் ஒன்றை எடுத்து என்னை நினைத்தால் நான் வருகிறேன்' என்று சொல்லி வால் மயிரில் ஒன்றைக் கொடுத்து மறைந்தது.

அருகில் இருந்த கட்டிடத்தை சுந்தரி அடைந்தாள். அங்கு ஒரு வயதானவன் இருந்தான். அவனைப் பார்த்து! 'ஐயா! நான் வழி தவறி வந்துவிட்டேன். நான் ஒரு அரசகுமாரன். இங்கு தங்கி இரவைக் கழிதது நாளை போகலாம் என்றிருக்கிறேன்' என்றாள். அவள் அழகிலே மயங்கிய அத்தாத்தா அன்றிரவு நல்ல சாப்பாடு போட்டு தூங்க இடமும் கொடுத்தான். மறுநாள் சுந்தரி எழுந்திருப்பதற்கு முன் தாத்தா அவ்வூர் அரசனிடம் சென்று அழகிய அரசகுமாரன் ஒருவன் வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

அவ்வூர் அரசகுமாரனுக்கு ஒரு அழகிய பெண் இருந்தாள். சுந்தரிக்குப் போட்டியாக அழகுள்ளவள் இருந்தால் அவள் அவ்வூர் அரசனின் பெண்தான் அவளுக்கு மிகவும் அழகிய ராஜ குமாரனைக் கலியாணம் செய்து வைக்க எண்ணினான். தாத்தா வந்து சொன்னவுடன் அரசனுக்குச் சந்தோஷம் ஏற்பட்டு சுந்தரியை அழைத்து வர சேவகர்களை அனுப்பினான். சுந்தரி தூங்கி எழுந்தவுடன் சேவகர்களைப் பார்த்ததும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அரசன் கூட்டி வரச் சொன்னான் என்றவுடன் அவளுக்குப் பயம் அதிகமாயிற்று.

சுந்தரி அவ்வூர் அரசன் முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்பட்டவுடன் அரசன் அப்படியே அவள் அழகில் மயங்கிவிட்டான், தன் பெண்ணுக்குத்தகுந்த கணவன் அவன்தான் என்பதையும் தீர்மானித்து,

'ராஜகுமாரா! தாங்கள் என் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும்' என்று வேண்டினான். சுந்தரிக்கு அதைக் கேட்டதும் நடுக்கம் உண்டாயிற்று. ஒரு கலியாணத்திலிருந்து தப்பித்துக்கொண்டு, மற்றொரு கலியாணத்தில் மாட்டிக் கொண்டு விட்டேனே என்று சிறிது திகைத்தாள். கொஞ்சம் தைரியப்படுத்திக் கொண்டு,

'அரசே! க்ஷத்திரியர்கள் கலியாணமென்றால் ஏதாவது பந்தயம் இருக்குமே? அதைச் சொல்லுங்கள்' என்றாள். பந்தயத்தைச் சொன்னால் அது கடினம் என்று சொல்லி கலியாணத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணித்தான் அப்படிச் சொன்னாள். அழகிலே மயங்கியிருந்த அரசனுக்கு பந்தயத்தைப்பற்றி நினைவேயில்லை.

'பந்தயம் எதற்கு. தேன் கிடைத்தபிறகு அதைச் சாப்பிடுவதில் என்ன தடை இருக்கிறது. நாளைக்கே கலியாணம் நடக்க வேண்டியதுதான். கும்பிடப் போனதெய்வம்.........' என்று சொல்லி முடிப்பதற்குள், அவன் மந்திரி குறுக்கிட்டு.



'ராஜகுமாரா! பந்தயம் ஒன்று இருக்கிறது. நீர் எங்கிருந்தாவது சிரிக்கும் மாதுளைப்பழம் கொணர்ந்தால் இவ்வூர் அரசகுமாரியை மணம் செய்து கொள்ளலாம் என்றான். அப்பொழுதுதான் சுந்தரிக்கு உயிர் வந்தது. அரசன் ஒன்றும் தெரியாமல் விழித்தான்.

'அரசே! நான் சிரிக்கும் மாதுளையைக் கொண்டுவந்த பிறகு கலியாணத்தைக் கண்டிப்பாக நடத்திவிடலாம்' என்று சொல்லி அரசனைத்தேற்றி வெளியே வந்தாள் சுந்தரி. சிறிது தூரம் யோசித்துக்கொண்டே நடந்து சென்றுகொண்டிருந்தாள். அப்பொழுது அவள் கைகளில் குதிரையின் வால்மயிர் இருந்ததினால் திடீரென குதிரை அவள் முன் தோன்றியது குதிரை அவளைப்பார்த்து 'எல்லாம் நலத்திற்கே, கவலைப்படாதே. என்மேல் ஏறிக்கொள்' என்று சொன்னவுடன் சுந்தரியும் ஏறிக்கொண்டாள். மறுகணம் காற்றிலே பறந்து மறைந்தது குதிரை. சிறிது நேரத்தில் அவளை மலைகள், காடுகள் சூழ்ந்த ஓரிடத்தில் இறக்கியது. சுந்தரிக்கு அவ்விடத்தைப் பார்த்தவுடனேயே பயம் ஏற்பட்டது. குதிரை அவள் அப்படி நடுங்குவதைப் பார்த்துச்சிரித்து, 'சுந்தரி! அதோ தெரியும் பெரிய குகைப்பக்கத்தில் இருக்கும் மாதுளை மரத்தில்தான் சிரிக்கும் மாதுளை காய்க்கிறது. அதை ஜாக்கிரதையாகப் பறிக்கவேண்டும். பறிக்கும்போது துளி சப்தம் ஏற்பட்டாலும் அக்குகையில் படுத்துக்கொண்டிருக்கும் ராக்ஷஸன் எழுந்திருப்பான். அவ்வளவுதான். உன்னைத் தொலைத்து விடுவான். அதற்காக நீ பயப்படாதே. இதோ இந்தக்





குல்லாயைப் போட்டுக் கொள். உன்னுடைய உருவமே தெரியாது. 'சரி! போ!' என்று சொல்லி அனுப்பியது.

குல்லாயைப் போட்டுக் கொண்டு மெதுவாக மரத்தடியில் சென்று ஒரு மாதுளைப்பழத்தைப் பறித்தாள். மறுவினாடி அவள் கை பட்டவுடன் 'ஹி. ஹி. ஹி...' என்று சிரித்தது அப்பழம் உடனே எழுந்துவிட்டான் அந்த ராக்ஷஸன் சுற்று முற்றும் பார்த்தான். சுந்தரிகுல்லாயைப் போட்டுக்கொண்டிருந்ததனால் ராக்ஷஸன் கண்களுக்குத்தென்படவில்லை. தனக்குத் தெரியாமல் பழத்தை யாரோ திருடுகிறார்கள் என்பதை ராக்ஷஸன் அறிந்தவுடன் கோபத்தினால், 'பழத்தை திருடியவர் யாராயிருந்தாலும் சரி, ஆணாயிருந்தால் பெண்ணாகக் கடவது, பெண்ணாயிருந்தால் ஆணாகக் கடவது என்று சபித்துவிட்டான். மறுவினாடி சுந்தரி உண்மையிலேயே ஆண் பிள்ளையாகிவிட்டாள்.' அவளுக்கு அதைக் கண்டதும்



சந்தோஷமும் ஆச்சரியமும் ஏற்பட்டது. மாதுளையை எடுத்துக் கொண்டு ஊர் திரும்பினான் சுந்தரன் (இனி சுந்தரன் என்றே அழைக்கலாம்) அரசன் அப்பழத்தைக் கையில் எடுத்தவுடன் பழம் சிரிக்க ஆரம்பித்தது. அரசனும், அங்குள்ள எல்லோரும் சிரித்தனர். மறுநாள் சுந்தரனுக்குக் கலியாணம் வெகு விமரிசையாக நடந்தது. அதன் பிறகு தன் மனைவியுடன் சுந்தரன் தும்பிகாபுரிக்கு வந்து சேர்ந்தான். தன் தாய்தந்தையரிடம் நடந்தவைகளைக் கூறியவுடன், அவர்களும் சந்தோஷப்பட்டார்கள். அந்த மாதுளையை ஊரின் நடுவில் ஒரு சிறிய கட்டிடம் கட்டி அதில் வைத்தான் தூமகேது. யாருக்காவது விசனம் ஏற்பட்டால், அதனிடம் போக வேண்டியதுதான். அது சிரிக்கும்போதே இருக்கிற கவலையெல்லாம் பறந்தோடிடும். அழுகிற குழந்தைகூட அந்த மாதுளையைக் கண்டால் முத்துப் போன்ற பல்லைக் காட்டிச் சிரிக்குமாம். அதனால்-அதற்கு மாதுளாபுரி என்று பெயர் கொடுத்தார்கள்.

குப்பன் சொன்ன இந்தக் கதையைக் கேட்டதும் சிரிக்கும் மாதுளையை நினைத்து விடாமல் சிரித்துக் கொண்டே இருந்தாள் மந்திரி மனைவி. மூன்றாவது நாள், மற்றொரு அதிசயமான கதையைக் கேட்கத் தயாரானாள்.

---

## அம்பியின் கடிதங்கள்

☆

அன்புள்ள அண்ணாவுக்கு,

எனக்கு சில வார்த்தைகளை நினைக்கும்போதே தாங்க முடியாமல் சிரிப்பு வருகிறது. அது தமிழ் பாஷையின் மகிமைதான். எப்பொழுதுமே சந்தோஷமாக வைக்கவேண்டும் என்ற எண்ணம் நமது தாய் பாஷைக்கு உண்டு. நான் வேடிக்கைக்குச் சொல்லவில்லை. 'ஞாபக மறதி' என்ற வார்த்தையை எடுத்துக் கொள்ளுவோம். ஞாபகம், மறதி என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று சேராத பதங்கள். சொல்லவேண்டுமானால் 'ஞாபகம் இல்லை' என்று சொல்லவேண்டும், இல்லாவிடில் மறதி என்று சொல்ல வேண்டும். அதைவிட்டு ஞாபக மறதி என்று சொல்லுவானேன். 'சந்தோஷ துக்கம்' என்று சொல்லுவது போலத்தானிருக்கிறது 'ஞாபக மறதி' என்ற வார்த்தையும். இன்னொரு பதமும் அம்மாதிரி இருக்கிறது. அது 'தூக்கம் முழிப்பு' என்பதுதான். அப்பா என்னை 'ராத்திரி முழுக்கப் படிச்சயா, தூங்கினயா' என்று கேட்டால் 'அப்பா, ராத்திரி முழுக்க தூக்கம் முழிச்சுப் படிச்சேன்' என்று சொல்லும் சினேகிதர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். ஒன்று தூங்க வேண்டும் இல்லாவிடில் விழித்துக் கொண்டிருக்க வேண்டும். எப்படி தூக்கத்தையும், விழிப்பையும் ஒரே சமயத்தில் செய்ய முடியும். அப்படியிருப்பவன் கடவுளாகத்தான் இருக்க வேண்டும். இந்தப் பதங்களை நினைக்கும்போதெல்லாம் சிரிப்பு வருகிறது. இதையெல்லாம் 'கேட்டு வாசல்' கோஷ்டியுடன் சேர்த்துவிடலாம். தமிழர்களுக்கு சந்தோஷமான மனப்பான்மை உண்டு என்பதை தமிழ் பதங்களிலும் காட்டி விடுகிறார்கள் போலும்!

இப்படிக்கு
அன்புள்ள
அம்பி




# வீரப் பெண்கள்

மத்திய இந்தியாவில் உள்ள கர் மண்டல் என்ற பிரதேசம் மிகவும் அழகானது. அதை ஆண்டு வந்தவன் ராஜபுத்ர சிங்கமாகிய ஸங்கராம்ஷா. அவனுக்கு தளபதி ஷா என்ற ஒரு பிள்ளை இருந்தான். அவனும் வீர புருஷன் மிகவும் அழகுள்ளவன். அவனுக்கு மஹோபா நாட்டு அரசகுமாரி துர்காவதியை கலியாணம் செய்து வைக்க எண்ணினன் ஸங்கராம்ஷா. ஆனால் துர்க்காவதியின் தகப்பனர் அதற்குச் சம்மதிக்காது அவளை வேறு ஒரு ராஜ புத்ரனுக்குக் கலியாணம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டார். தளபதி ஷாவையே காதலித்த துர்க்காவதிக்கு அவள் தகப்பனர் அம்மாதிரி செய்வதில் கவலை ஏற்பட்டது. ஆனால் சிறு பிராயம் முதலே அவளுடன் வளர்ந்துவந்த அவள் தைரியம் அவளுக்கு உதவி செய்தது. தாங்கள் என்னை மணக்க வேண்டுமானல் சேனையுடன் வரவேண்டும் என்று கடிதம் எழுதி தளபதி ஷாவுக்கு அனுப்பினள். தளபதி ஷாவும் ஒரு பெரிய சேனையுடன் மஹோபாவை அடைந்தான். அவனுக்கும், துர்க்காவதியை மணக்க வந்த ராஜபுத்ரனுக்கும் கடும்போர் நடந்து கடைசியில் ராஜபுத்ரன் கொல்லப்பட்டான். துர்க்காவதி தன்னிஷ்டப்படி தளபதி ஷாவை மணந்தாள்.

சில காலம் கழித்து துர்க்காவதிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அது பிறந்த மூன்று வருஷங்களில் தளபதி ஷா திடீரென இறந்தான். அன்று முதல்

## ராணி துர்க்காவதி

☆

ராணி துர்க்காவதியே கர்மண்டலை ஆண்டு வந்தாள். இவள் ஆட்சியின் திறமை இந்தியா முழுவதும் பரவி அக்பரையும் எட்டியது. 'நாம் அரசாளும் போது ஒரு பெண் தலை தூக்கி நிற்பதா. ஒழித்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேனென்று' நினைத்து, அஸப்கான் என்ற தளபதிக்கு துர்க்காவதியைப் பிடித்துவரக் கட்டளை யிட்டான்.



அஸப்கான் சைனியம் கர்மண்டலை அடைந்ததும் துர்க்காவதிக்கு சேதி தெரிந்தது பெரிய படை திரட்டி தானே சேனதிபதியாகிக் கிளம்பினள் துர்க்காவதி.

அப்பொழுது நடந்த பெரிய போரில் துர்க்காவதி தோற்ருள். ஆனாலும் அவள் தேசப் பற்றும், தைரியமும் தோற்றேடிய சேனைகளுக்கு ஊக்கம் கொடுக்கவே மறுபடி தோற்றேடிய சேனை திரும்பியது. அஸப்கானுக்கு துர்க்காவதியின் தைரியம் ஆச்சரியத்தைக் கொடுத்தது! ஆனாலும் இத்தடவையும் துர்க்காவதி தோற்ருள். இனி அவள் என் செய்வாள். தன் ஊரையாவது முகலாய முற்றுகையிலிருந்து காப்பாற்ற ஊரைநோக்கி ஓடினள். ஆனால் குறுக்கே ஓடிக்கொண்டிருந்த ஆற்றின் பெருக்கு அதிகமாகவே அவளால் ஆற்றைத்தாண்ட முடியவில்லை. முகலாயர்களுக்குத் தன்னைக் காட்டிக் கொடுப்பதா அல்லது ஆற்றில் விழுந்து உயிரை விடுவதா என்ற இரு கேள்விகள் தான் அவள் முன் நின்றன. அவள் யோசிப்பதற்குள் முகலாயசேனை அவளைத் துரத்திக்கொண்டு வந்துகொண்டிருந்தது. முகலாயர் கைகளில் சிக்கி அடிமையாவதைவிட சுதந்திரமாக தேசாபிமானத்திற்காக உயிர் விடுவதே மேல் என்று எண்ணினள். மறுவினடி அவள் கையிலிருந்த கத்தி அவள் இருதயத்தை இரண்டாக்கியது. மறுகணம் உடல் ஆற்றினருகில் சாய்ந்தது. உயிர் வீரசுவர்க்கம் அடைந்தது அவ் வீரப் பெண்ணின் தைரியச்செயல் சரித்திரத்திலேயே பெரும்புகழ் அடைந்தது. இந்திய சரித்திரத்துக்கே மதிப்பைக் கொடுத்தது. ஜப்பல்பூருக்கு பத்துமைல் தூரத்தில் உள்ள ஆற்றங்கரையருகில் அவள் நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டிருக்கிறது அச்சின்னம் பார்ப்போர்களுக்கு தைரிய உணர்ச்சியை அளிக்கிறது.








# தாத்தா என்ன சொன்னார்?

☆

## நல்லவரும்—மரங்களும்

நல்லவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கியமான குணங்களில் ஒன்று சாந்தம். அதாவது பொறுமை. தன்னை எவ்வளவு துன்பப்படுத்தினல், தனக்கு அதைச் செய்தவனை சிறிதளவும் வாயால்கூட திட்டாமல், அவனுக்கு மனதினலும் தீமையை நினைக்காமல், அவன் நல்லவனக வேண்டுமே என்ற எண்ணம் உள்ளவர்கள் நல்லோர்கள். நம்மை ஒருவன் அடித்தால் நமக்கு உடனே கோபம் ஏற்பட்டு அடித்தவன் முதுகை நன்ருக விசாரித்துவிடுவோம். நல்லவர்கள் அம்மாதிரி செய்யமாட்டார்கள். அடித்தவனை நல்ல வார்த்தைகள் சொல்லி நல்வழிப்படுத்த விரும்புவார்கள். தீயோர்கள் எதைச் செய்தாலும் தாங்கள் இறக்கும்வரையில் அவர்களுக்கு தீங்கு நினைக்காமல் அவர்களுக்கு வேண்டிய உதவிகளையே செய்துவருவார்கள். நல்லோர்கள் மரங்கள் மாதிரிதான். மரங்கள் மனிதனுக்கு காய், பழம், நிழல் இவைகளையும் கொடுத்து, சிறிதும் ஈவிரக்கமில்லாமல்தன்னைக்கண்டதுண்டமாக வெட்டி தீயிலிடும்வரையிலும் சிறிதளவும் சுணங்காமல் அவனுக்கு உதவி செய்தே சாகிறது. இதையேதான் மூதுரை என்ற பாட்டில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"சாந்தனையும் தீயனவே
செய்திடினும் தாம் அவரை

ஆந்தனையும் காப்பர்
அறிவுடையோர் மாந்தர்

குறைக்குந்தனையும்
குளிர்நிழலைத் தந்து

மறைக்குமாம் கண்டீர் மரம்"

## சின்ன சின்ன கதை

☆

### மந்திரக் கல்

சமரபுரி அரசன் அவ்வூரில் இருந்த ஒரு பக்காத் திருடனை வெகு சிரமப்பட்டு பிடித்து சிறையில் அடைத்துவிட்டான். சாப்பாடு கூடப்போடக் கூடாது என்று சொல்லிவிட்டான். பட்டினியாகக் கிடந்து பரிதவித்தான் பக்காத்திருடன். ஆனால், அவனுக்கு உதவிசெய்ய அவன் வளர்த்த கிளி அங்கு வந்தது தினமும் வெளியில் சென்று நல்ல பழங்களைக்கொண்டு வந்து அவன் இருக்கும் சிறையின் ஜன்னல்கள் வழியாகக் கொடுக்கும் ஒரு நாள், அவன் தலைவிதியை நொந்து அழ ஆரம்பித்தான். "கடவுளே! இதிலிருந்து தப்பிக்க வழி இல்லையா?' என்று சொல்லிக்கொண்டே அழுதான். கிளி அதைக்கேட்டுக்கொண்டே இருந்தது மறுநாள் அது வெளியில் பறந்து சென்றது. அப்படிச் சென்ற கிளி மூன்று நாட்களுக்குத் திரும்பி வரவே இல்லை. கூண்டிலே. சதா சர்வகாலமும் அடைபட்டிருக்கும். கிளிக்குக் கூட இந்த சிறைச்சாலை பிடிக்கவில்லைபோல் இருக்கிறது. என்று சொல்லி வருந்தினன். நான்காம் நாள் அதிகாலை நான்கு மணிக்கு கிளி திடீரென உள்ளே வந்து தன் மூக்கிலிருந்த ஒருபொருளைக் கீழே போட்டது. அது பளபள என்று ஜ்வலித்துக்கொண்



டிருக்கும் ஒரு கல். அதைத்தன் மூக்கால் மறுபடி எடுத்து அவன கையில் பூட்டியிருக்கும் சங்கிலியில் வைத்தது. சங்கிலி 'படார்' என்று உடைந்தது. பக்காத் திருடனுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. கிளியை எடுத்து முத்தம் கொடுத்துவிட்டு மந்திரக் கல்லை எடுத்து கதவைத் தொட்டான். கதவு திறந்தது. பக்காத் திருடன் தப்பித்துக் கொண்டு ஓடி விட்டான். மந்திரக் கல்லும், கிளியும் இருந்த வரையில் அவனை ஒருவராலும் பிடிக்க முடியவில்லை.

# குள்ளநரி அண்ணாவைக் கேளுங்கள்

★

பூ. உத்திரா: பரமன்குறிச்சி

கே:—யு. பி., பி. டி. ஐ, ரார்; குளோப், இப்படி எல்லாம் பத்திரிகை செய்திகளின் கீழே போட்டிருக்கிறதே. ஏன்?

ப:—யு. பி. என்பது யுனைடட் பிரஸ் என்றும், பி. டி. ஐ என்பது பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா என்றும்; ரா—ர் என்பது ராய்டர் என்றும், அழைக்கப்படுகின்றன. மேற்கூறிய ஸ்தாபனங்கள் உலகில் ஆங்காங்கு நடக்கும் விஷயங்களை சேகரித்து தின சரிகளுக்கு அனுப்புகின்றன. ஆகவேதான் மேற்கூறிய ஸ்தாபனங்கள் அனுப்பும் செய்திகளின் அடியில் அதன் பெயரைச் சுருக்கமாகக் குறிக்கிறார்கள்.

* * *

ஜி. வேங்கடராஜன், பனங்காடி.

கே:—கடல் நீர் உப்புக்கரிப்பதேன்?

ப:—இந்தத் தண்ணீர் பஞ்ச காலத்திலே அதையும் நாம் சாப்பிட்டுவிட்டால் கப்பல் போக்குவரத்து கஷ்டமாகி விடுமே என்று பயந்துதான் அதன் நீரை உப்பாக்கிவிட்டார் கடவுள்.

கே:—உலகத்திலுள்ள உயிர்களில் அதிக நாள் ஜீவித்திருப்பது எது?

ப:—மனித உயிர் தான்.

* * *

A. முருகசாமி, சக்ரபாளையம்.

கே:—இந்தியாவில் தலை சிறந்த அரசியல் ராஜதந்திரியும் மிகப் பிரசித்தி பெற்ற கவிஞரும் யார்?

ப:—இங்கு கூறப்பட்டவைகளில் எல்லாமிருந்தாலும் தலை சிறந்தவர் ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோருக்கும் தலை வழுக்கையாகவோ, நரைத்தோ தான் இருக்கிறது.

* * *

S. சுயம்பிரகாசம்: திருவேங்கடநாதபுரம்.

கே:—தொல்காப்பியத்திற்கு யார் சொன்ன உரை மேலானது.

ப:—உரைகளை எல்லாம் விட தொல்காப்பியமே ஒரு தரத்திற்கு இரண்டுதரம் படித்தால நன்றாய்ப் புரியும். புரியாவிட்டால் விட்டுவிடுங்கள்.

* * * *

தீனதயாளு. தஞ்சை.

கே:—மைல் கற்கள் ஏன் நடுகிறார்கள்.

ப:—பாம்பு வராதிருக்கத்தான்.

# என்ன விநோதம் பார்

★

## ஊர் வம்பு

★

### "பேன்னிங் தீவு"

இது பசுபிக் மகா சமுத்திரத்தில் உள்ள பவழத் தீவுகளில் ஒன்று. இத்தீவு 1798-ம் வருஷம் எட்மண்ட் பேன்னிங் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் விஸ்தீர்ணம் 15-சதுர மைல் சுமார் 400 ஜனங்கள் வசிக்கிறார்கள். பவழம் சேகரிப்பது தான் அவர்கள் தொழில். இது 1888 முதல் ஆங்கிலேயர்களிடம் இருந்து வருகிறது. ஆஸ்திரேலியாவிலிருந்து, கானடாவிலுள்ள வாங்கூவர் துறைமுகத்துக்குச் செல்லும் தந்திகள் இங்கு தான் ஒன்று சேருகின்றன. இத்தீவிலிருந்து வாங்கூவர் 3458 மைல்களில இருக்கிறது.

## கெட்டிக்கார முட்டாள்கள்

சீனக்காரர்களுக்குப் புதிதாக ஒன்றும் தங்களால் கண்டு பிடிக்க முடியாவிட்டாலும் பிறரை ஏமாற்றுவதில் கெட்டிக்காரர்கள். போலி நாணயங்கள் செய்வார்கள். பிறர் செய்ததை வைத்துக்கொண்டு தாங்கள் செய்ததாகச் சொல்லிக்கொண்டு விடுவார்கள் சுமாராக உங்கள் மாதிரிதான் என்று வைத்துக் கொள்ளுங்களேன் நீங்கள் பக்கத்தில் இருக்கும் நண்பனின் புத்தகத்தை அவனுக்குச் சொல்லாமல் எடுத்துக்கொண்டு உங்கள் பேரை எழுதிக்கொண்டு உங்கள் புத்தகம் என்று சொல்லிக்கொள்ளுகிறீர்கள் அல்லவா. அம்மாதிரிதான் சீனக்காரர்களும். பிரான்சு தேசத்திலிருந்து வரும் சாராய பாட்டிலில் மட்ட சாராயத்தை ஊற்றி பிரான்சு சாராயம் என்று சொல்லி விற்பார்கள். வெளி தேசங்களிலே போடும் புத்தகங்களை அப்படியே போட்டோ எடுத்து, மறுபடி அச்சடித்து அதைத் தாங்கள் போட்ட புத்தகம் என்று விற்பார்கள்.

இப்படிப்பட்ட சீனக்காரர்களை ஏமாற்ற பிரம்மாவாலும் முடியாது என்று ஒருவர் சொல்லுகிறார். அவர்கள் ஏமாற்று வித்தையை மாற்ற புதிய வழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இது விநோத உலகம் தானே.







# பழங்கள்

நாராயணய்யா

## டொமாடோ-சீமைத்தக்காளி

★

குடும்பப்பெயர்—ஸாலனேஸி

இனப் பெயர்—2 கோ பெர் ஸிகம் எஸ்கு லெண்டம்.

தக்காளிச் செடி தென் அமெரிக்கக் கண்டத்து ஒரு பருவச்செடி. அநேக நாடுகளில் தாராளமாக வளர்கிறது உஷ்ணப்பிரதேசங்களில் இது விசேஷ பலன் தரத்தக்கது அதிக வளமான வடிகால் வசதியுள்ள பூமிகள் இப்பயிருக்கு நல்லது ஒரே பூமியில் ஒரு பயிர் தான் எடுக்கவேண்டும். இடம் மாற்றிப் பயிர் செய்வது அவசியம்.

மதராஸ், பங்களூர் மற்றுமுள்ள தென் இந்திய பட்டணங்களில் தோட்டங்களிலும் அருகிலுள்ள கிராமங்களிலும் ஏராளமாகப் பயிர் செய்கிறார்கள்.

### நாற்றுப்பாவுதல்

நன்கு தயாரிக்கப்பட்ட நாற்றங்காலில் மண்ணை நொருங்க அடித்துப் புழுதிசெய்து வேர்கள் கற்களைப் பொறுக்கி மக்கின தழை எரு, பழைய தொழு எருப்பொடி முதலியவை போட்டு பூமியை கட்டிப்படுத்த வேண்டும்.

ஒரு அவுன்சு பொறுக்குவிதை, கால் ஏகர் பூமி நடப் போதுமான நாற்றுகள் கொடுக்கும்.

விதைத்த 10 தினங்களில் முளைகள் கிளம்பி வளரும்.

### நடவு

நன்றாக உழுது நெகிழ்த்தப்பட்ட பூமியில் போதுமான அளவு தொழு எரு சாம்பல் போட்டுவளப்படுத்தப் பட்டிருப்பது அவசியம்.

கவனமாக நாற்றுகளைப் பிடுங்கி சாலுக்குச் சால் 3 அடி தூரம் இருக்கும்படியும் சாலில் செடிக்குச் செடி 2½ அடி தூரத்திலும் நடவேண்டும். நட்டபின் தேவையான அளவு நீர் மெதுவாகப் பாயும்படி கட்ட வேண்டும்.

செடிகள் வளர்ந்து வரும்போது அவைகளுக்குப் பக்கத்தில் குச்சிகள் நட்டு செடியைக் காயப்படுத்தாமல் சிறு நார்கொண்டு சேர்த்துக் கட்ட வேண்டும்.

நாலா பக்கங்களிலும் கிளைகள் விட்டு வளரும் இவற்றை அப்பொழுதப்பொழுது பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும்.

செடி அதிகமாக மதாளித்து இலை பெருகிப்போனால் பழைய இலைகளைப் பிடுங்கிப்போட்டு சூரிய ஒளியும் வெப்பமும் படும்படிச் செய்யவேண்டும்

### களையெடுத்தல்

களைச்செடிகள் முளைத்துக் காணும் போதெல்லாம் கைக்கொத்தால் வெட்டியெறியவேண்டும் 4, 5 கொத்துக் காய்கள் உண்டானபோது பிரதானத் தூரை நறுக்கிப்போடவேண்டும். கீழ்க்கிளைகளில் காய்க்கிறவை பெரிதாகும். களைக்கொத்தால் கிளறும் போது சாணிகரைத்தநீரைச் செடிகளுக்கடியில் ஊற்றுவது நல்லது ஸூபர் பாஸ்பேட் உரம் சிறுக வைத்து நீர் வார்த்தால் காய்ப்பு அதிகமாகும்.

கோடையில் செடிகளின் கீழ் மண்ணைக் கொத்திக் கிளறுவது நல்லது. வாரத்திற்கு இரண்டு தண்ணீர் கட்ட வேண்டும்.

### செலவு விவரம்

¼ ஏகர் தோட்டம்

| | ரூ | அ |
|---|---|---|
| இடம் தயாரிப்பு (உழவு முதலியன) | 7 | 0 |
| செடி நடவு | 4 | 0 |
| நீர் இறைவை (4 தரம்) | 6 | 0 |
| கால்வாய்கள் பிடிக்க | 3 | 8 |
| கொத்து, களை பெடுப்பு | 3 | 0 |
| எருவும் எருவிடுதலும். | 10 | 0 |
| குச்சி நட்டு கட்டுதல் | 10 | 0 |
| சுத்தம் செய்து இலைகளை நீக்குதல். | 2 | 8 |
| மொத்தம் | 46 | 0 |
| மறுமுறை எரு விடுதல், பழம் பறித்தல், விற்பனை | 14 | 0 |
| | 60 | 0 |

### வரவு

| | ரூ. | அ. |
|---|---|---|
| முதல் பறி விற்பனை | 32 | 0 |
| 4 பறிகள் விற்பனை மொத்தம் | 130 | 0 |

நல்ல கிராக்கியுள்ள இடங்களில் தக்க லாபம் தரத்தக்க பயிர் தக்காளி. ¼ ஏகர், ரூ. 70 கொடுத்தால் ஏகர் ஒன்று சொற்ப காலத்தில் ரூ 300. நிகர லாபம் கொடுக்கலாம்.

### நோய் நொடிகள்

ஒருவித பசுமையான ஈக்கள்மேல் தோலைத் துளைத்து ரசத்தை உறிஞ்சி வளர்ச்சியைக் கெடுக்கின்றன. பெண் ஈக்களுக்கு இறகுகள் இல்லை இளந்துளிர்களைச் சுற்றி அநேகம் கூட்டம் போட்டு இலைகளைச் சுருட்டிக் கெடுக்கும்.

### செஞ்சிலந்தி

கூட்டங் கூட்டமாக இவை இலைகளின் மேலும் கீழும் காணப்படலாம் இலைகள் வெளிறிப் போவதால் இவை மண்டிக்கின்றன என்று தெரியலாம்.

கந்தகப் பொடியைத் தூவினால் இவை சாவும்.

இலைத்துரு, பூ அழுகல், இலைக் காய்தல் என்ற மூன்று வித பாதைகள் இச் செடியைத் தாக்குபவை. செடி நடுகையில், நோய்ப்பட்டும் நோஞ்சலாகவும் உள்ளவற்றைத் தள்ளிப் போட்டு நன்முக வளர்ந்த திடமான நாற்றுகளையே நடவேண்டும்.

## காய்ப்பில்லாத செடிகள்

அதிக வெப்பத்தாலும் அதிக ஈரத்தாலும் வேர்கள் பாதிக்கப்பட்டால் பூக்கள் உதிர்ந்துபோகும். காற்று தாராளமாக உட்புகுந்து சஞ்சரிக்க முடியாது போகிறதே இதற்குக்காரணம் இலைகளைக் குறைத்தும் அடியிலும் பக்கத்திலுமுள்ள இலைகளை எ... தறிவதும் முழுச்செடியையும் பிடுங்கித் தொலைப்பதும்தான் தக்க முறை.

## ரசாயன சேர்க்கை

| | |
|---|---|
| | 100 |
| (பழுத்த பழம்) ஈரம் | 94 5 |
| புரதம் | 1 0 |
| கொழுப்பு | 0 1 |
| உலோகப் பொருள் | 0 5 |
| நார் | —— |
| கார்போ ஹைட்ரேட் | 3 9 |
| சுண்ணும்பு சத்து | 0·01 |
| எலும்பு சத்து | 0 02 |
| இரும்பு சத்து | 0·1 |
| கனலி | 21· |

வைடமின் 'ஏ'. 160 கிராமில் 320 யூனிட்

„ பி. 40 „

„ ஸி. 32

இது சிரேஷ்டமான உணவு பதார்த்தம்.

## டொமாடேவிலுள்ள வைடமின்கள்

செடியிலேயே பழுக்கிற பழங்கள், காயாகப் பறித்து ஈதை லீன்காஸில் பழுக்கவைத்து நல்ல நிறம் வரச் செய்யப்பட்ட பழங்களைவிட வைடமின் அதிகமானவையாகவும் ஆகார யோக்யதை பெரிதும் உள்ளனவாகவும் இருக்கின்றன என்று அமெரிக்க ரசாயன நிபுணர்கள் கூறுகிறார்கள்:—

## முக்கியமான செய்தி

☆

அமெரிக்க யுனைடெட் ஸ்டேட்ஸில் அலபமா நீக்ரோ விஞ்ஞானி டாக்டர் கார்வர் கூறுகிறார்:—

'தக்காளிச் செடிகள் வளர்ந்து வருகையில் அடிப்பாகத்தில் துண்டுகளைக் கத்தரித்து பூமியில் நட்டால் 9 நாட்களில் வேர்விட்டு உடனே இலைகளுடன் மேலே வளர்ந்து சீக்கிரம் நேர்த்தியான காய்கள் உண்டாகும் துண்டு நட்ட நாள் முதல் பழங்கள் அறுவடை வரை $2\frac{1}{4}$ மாதங்களே தான். விதை போட்டு உண்டாக்கினால் $3\frac{1}{2}$ முதல் 4 மாதங்கள் ஆகும். பழங்கள் வெகு நேர்த்தியாக இருக்கும்.'

* * * *

## தக்காளிப் பழ ரசம்

### மேன்மையான ஊட்டந்தரும் பானம்

சமீபத்தில் நிகழ்த்தப்பட்ட பரிசோதனைகள் இந்த ரசத்தில் ஏ. பி. ஸி வைடமின்கள் இருக்கின்றன வென்று தெரிவிக்கின்றன.

பச்சை காரட்டுக் கிழங்கு

சமைக்காத காபேஜ்

" காலி பிளவர்

„ லெட்டூஸ்

இவைகளிலும் மேற் சொன்ன 3 வைடமின்களும் உண்டு.

டொமாடோவைப் போன்ற பிறிதொரு பொருள் வைடமின் புஷ்டியுள்ளதாக இல்லை.

ஆரஞ்சில் வைடமின் "ஸி" ஏராளமாக இருப்பினும், "ஏ" வைடமின் இல்லை, "பி வைடமின் சிறிதளவிலேதான் இருக்கிறது.

வைடமின் "ஏ" உடல் வளர்ச்சியைப் பெரிதாக்குவதேயன்றி சிலேட்டுமப் படலங்களைச் சரிவர இயங்கச் செய்வதால் தொற்று வியாதி அணுக விடுவதில்லை. இந்த விபரம் மிகவும் முக்கியமானது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது டொமாடோ ரஸம் எளிதில் தயாரிக்கப்படலாம். சிறுபுளிப்புடன் இனிப்பான ரசம் குடிக்க மனோஹரமானது. ஆகவே, சிறுவர்கள், வாலிபர்கள் முதலியவர்களுக்கு மிகப் பயன்தரத்தக்க உயர்தரவஸ்து.

சிசுக்களுக்குப் பாலில் சில துளி டொமாடோ ரசத்தை விட்டுக்கொடுத்தால் மிகவும் குணஞ் செய்யும்

டொமாடோவில் உலோக சத்துகள் அதிகம் உண்டு கால்ஷியம் பாஸ்பேட் ஸிட்ரிக், மாலிக் அமிலங்கள், பாலில்உள்ள பலரக உப்புகள் இந்தப் பழ ரசத்தில் இருக்கின்றன— இவையெல்லாம் சேர்ந்து இரத்தத்தைச் சுத்தமுள்ளதாகவும் புஷ்டியுள்ளதாகவும் செய்கின்றன.

மற்ற முக்கியவிபரம், பிற பழங்கள் காய்களிலுள்ள ரசத்தில் இருக்கும் ஆக்ஸாலிக் ஆஸிட் இந்த டொமாடோ ரசத்தில் இல்லை இந்த ஆக்ஸாலிட் ஆஸிட்டும் அதன் உப்பாகிய ஆக்ஸலேட் ஆப்லைம் இரண்டும் கீல்வாத ரோகிகளுக்கும் சிறு நீரகம் கோளாறடைந்தவர்களுக்கும் அதிகக்கேடுவிளைவிக்கும். ஆகையால் அவர்கள் டொமாடோ ரசத்தை உட்கொள்வதால் மேன்மை உண்டாகும்.











89

## பலன்களும் வேற்றுமையும்

☆

தியானத்திற்கு விஷயமாக எத்தனையோ பொருள்களை எடுத்துக் கொள்ளலாம் செல்வம் பதவி அழகு இவைகள் முயற்சியில்லாமலே பலருக்குத் தியானத்திற்குரிய விஷயமாகின்றன அவற்றைப் பெறுவதில் உள்ள ஆசையால் பலதேவதைகளைத் தியானம் செய்து உபாஸிக்கிறார்கள். அவ்வித உபாஸனைப் பழக்கத்தால் அந்திமகாலத்தில் பகவானின் நினைவிற்குப் பதிலாகப் பழகிய தேவதையின் நினைவே வரும் அவ்வித நினைவிற்குத் தக்க பலனையும் எவரும் பெறுமல் தப்புவதில்லை

ஆகையால் பலன்களில் மேலானது எது? அதற்காக ஒருவன் கொள்ள வேண்டிய உயர்ந்த லக்ஷியம் எது? என்பதைக் கண்ணன் ஒரு சுலோகத்தால் மேலும் விளக்குகிறர்

என்னை அடைந்ததற் பின்
எஞ்சாத் துயர்விளக்கு
மின்னை நிகர்பிறப்பு
மேவலுறர்—அன்ன
பெருமனத்த ராய்ப்பிறங்கும்
பேரின்ப மன்னும்
திருமனத்த ராளுர் சிறந்து.

(இ-ள்) என்னை அடைந்ததற் பின்—(பரமாத்மாவாகிய) என்னைச் சேர்ந்த பிறகு, எஞ்சா துயர் விளக்குர்—மிக்க துக்கத்தை உண்டாக்குகின்ற, மின்னை நிகர் பிறப்பு—மின்னலைப் போன்ற நிலையில்லாத பிறப்பை மேவல் உறர்—அடையமாட்டார்கள், சிறந்து திருமனத்தராளுர்—மேம்பாடு அடைந்து மஹாத்மாக்களானவர்கள் அன்ன பெருமனத்தராய்—(என்னையே நினைத்தலாகிய) பெருமனம் படைத்தவர்களாய் பிறங்கும் பேர் இன்பம் மன்னும்—புகழுடன் விளங்கும் மோக்ஷத்தைப் பெறுவார்கள்

மாம் உபேத்ய புநர் ஜந்ம
3 2
து:காலயம் அசாச்வதம்
நாப்நுவந்தி மஹாத்மாநः
3 4 3
ஸம்ஸித்திம் பரமாம் கதா:

(இ-ள்) மாம் உபேத்ய—என்னை அடைந்து, துக்காலயம்—துயரத்திற்கு இருப்பிடமாயும் அசாச்வதம்—நிலையில்லாமலும் இருக்கின்ற, ஜந்ம—பிறவியை, புந:—மறுபடியும், ந ஆப்நுவந்தி—அடையமாட்டார்கள், மஹாத்மாந:—(பகவானையே நினைத்தலாகிய மேலான மனம் படைத்தவர்கள். பரமாம்—உத்தமமான, ஸம்ஸித்திம்—பல ஸித்தியை, கதா:—அடைந்தாலோ, புந: ஜந்ம—மறு பிறப்பை, ந ஆப்நுவந்தி—அடையமாட்டார்கள்

இச்சுலோகத்தில் என்னை அடைந்தவர்கள் மறுபடிப் பிறவி யெடுக்க மாட்டார்கள் என்ற அளவில் நிற்காமல் 'பல ஸித்தியை அடைந்தவர்கள் (ஸம் ஸித்திம்)' என்று மேலும் சொல்லியிருப்பதால் இருவிதமாகப் பொருள்கொள்ளுகின்றனர்.

'தன்னை (பகவானை) அடைவதே மோக்ஷம்' என்பதைக் காட்டவே அவ்வாறு கூறப்பட்டது என்று ஒரு சாரார் பொருள்கொள்கின்றனர். மற்றொரு சாரார் 'பகவானை அடைவது மோக்ஷமாகாது. மோக்ஷம் அதற்கு அப்பாற்பட்டது; என்ருலும் பகவானை அடைந்தவர் மோக்ஷத்தை அடைந்தே தீருவார்களாதலால் பகவானைப்பெற்றவர்களுக்கும் மோக்ஷம் அடைந்தவர்களுக்கும் மறு பிறவி இல்லை என்று இங்கு கூறப்பட்டது' என்று கொள்வர்.

பிறவிக்குக் காரணமான சரீரம் மின்னலைப் போல் நிலையற்றது என்பதை,

'மின்னின் நிலை யில
மன்னுயிர் ஆக்கை கள்'

என்ற அடிகளில் நம்மாழ்வார் விளக்கியுள்ளார் அதை யொட்டி மூலத்திலுள்ள 'அசாச்வதம்' என்ற பதம் பாடலில் 'மின்னை நிகர் பிறப்பு' என்று மொழி பெயர்க்கப்பட்டது

பகவானை உபாஸித்து அதனுல் அவரை யடைந்து மோக்ஷம் பெறலாம் என்றுல் பிரமன் இந்திரன் முதலியோரைத் தியானித்து, பிரமலோகம் அல்லது இந்திர லோகம் பெற்று அதனுல் மீறவியில்லாத மோக்ஷத்தைப் பெறலாகுமா? என்று வரும் சந்தேகத்தைப் போக்க, கண்ணன் அர்ஜுனனுக்கு மேலும் கூறுகிறர்.

வேதா உலகளவும்
மீண்டு வரும் உலகென்
றேதா நின்ருர்கள்
உணர்வுடையோர்—போதார்ந்த
தாராரும் கெளந்தேயா
என்னடைந்தார் தாமீண்டு
வாரார் மறு பிறப்பின் வாய்.

(இ-ள்) போது ஆர்ந்த மலர்கள் பொருந்திய, தார் ஆரும்—மாலை அணிந்த, கெளந்தேயா—அர்ஜுனு!, வேதா உலகளவும் உலகு—பிரும்மாண்டத்தில் பிரும்மலோகம் முடிய போக ஐச்வர்யத்திற்கு இடமான எல்லா உலகங்களும், மீண்டு வரும்—(அழிந்து அழிந்து) மறுபடி தோன்றும், என்று—, உணர்வு உடையோர்—ஞானிகள் ஓதா நின்றுர்கள்—ஏகமாகச் சொல்லுகிறுர்கள் என் அடைந்தார்—(ஆனுல்) என்னை அடைந்தவர்களோ, மீண்டு—மறுபடியும், மறு பிறப்பின் வாய் வாரார்—புநர் ஜந்மத்தைப் பெறமாட்டார்கள்.

3 4
ஆப்ரஹ்ம புவநால்லோகா:
புநராவர்திநோர்ஜுந
மாமுபேத்ய து கௌந்தேய
3
புநர்ஜந்ம ந வித்யதே.

(இ-ள்) அர்ஜுந—அர்ச்சுநு, ஆப்ரம்ம புவநுத்-பிரும்மலோக வரையி லுள்ள, லோகா:—உலகங்கள், புநரா வர்(த்)திந:-திரும்பும் தன்மையுடை யவைகள், கௌந்தேய-குந்தி புத்திரனே! மாம் உபேத்ய து-என்னே அடைந்தாலோ, புந: ஜந்ம-மறுபடியும் பிறவி, ந வித்யதே-கிடையாது.

பிரும்ம லோகம் வரை என்று பொருள்கொண்டு பிரும்ம லோகம் நீங்கலாக மற்றைய உலகங்கள் தோன்றி அழியும் தன்மை வாய்ந்தன. அவற்றை அடைந்தவர் மறுபடியும் பிறவியைப் பெறுவர்' என்று இச்சுலோகத்துக்குப் பொருள் கொள்வோரும் உண்டு.

ஆனுல் பெரும்பாலோர் 'பிரம லோகம் உள்பட, பிரும்மாண்டத்திலுள்ள எல்லா உலகங்களும் தோன்றித் தோன்றி மறையும் தன்மை வாய்ந்தவை ஆகவே அவற்றைத் தேவதைகளின் அனுக்கிரகத்தால் பெற்றவனும் பிறந்தே தீருவான்' என்றே பொருள் கூறுகின்றனர்.

இந்திராதி தேவதைகளைத் தியானித்து அவர்கள் அனுக்கிரகத்தால் பெறலாகும் சுவர்க்காதி பலன்கள் பிறவியைப் போக்க மாட்டா. நச புனராவர்த்ததே' (திரும்பி வர மாட்டான்) என்று வேதம் போற்றும் மோக்ஷபதவியாகிய பலனைப் பெறுவதால் மட்டுமே, பிறவி நீங்கும்.

ஆக இச்சுலோகத்தால் வாசுதேவனைத் தியானிப்பதால் வரும் மோக்ஷ பலம் நித்தியமானதென்றும், வேறு பலன்கள் அநித்யமானவை என்றும் விளக்கப்பட்டன.

'எதனுல்? எப்படி?' வேறு பலன்கள் அநித்யமாய் முடிகின்றன என்பது மேலும் விளக்கப்படுகின்றன.

ஆயிர மேலுகங்கள்
அங்கயனுக் கோர்பகலாம்
ஆயிர மாமிரவு
மற்றதுவென்—றேயும்
பகலிரவு தானறியும்
பண்புடையார் இன்னே
நிகரறிவு தாஞ்செய்வர் நின்று.

(இ-ள்) ஓயும்—கழிந்து கொண்டிருக்கும், பகல் இரவுதான் ஆ... பண்பு உடையார்—பகல் இரவு எனப்படும் காலதத்துவ உணர்வுடைய பெரியோர், அயனுக்கு—பிரமனுக்கு, ஆயிரம் மேல் உகங்கள்—ஆயிரம் சதுர் யுகங்கள், ஓர் பகலாம்—ஒரு பகலாக விருக்கும், ஆயிரமாம் அது—ஆயிரமான அச் சதுர் யுகங்கள் இரவு ஆம்—ஒரு இரவாகும், என்று—, இன்னே—இந்தவிதமாக, நின்று நிகர் அறிவுதாம் செய்வர்—தெளிவ கத் துல்லியமாக கணக்காக விவரத்தைத் தெரிவிப்பார்கள்.

3
ஸஹஸ்ர யுகபர்யந்தம்
3 3
அஹர்யத் ப்ரஹ்மணோ விது:
3
ராத்ரிம் யுக ஸஹஸ்ராந்தாந்
3
தேஹோ ராத்ர விதோ ஜநா:

(இ-ள்) 'யே ஜநா:—எந்த ஜனங்கள், அஹோ ராத்ரவித:—பகல் இரவுகளை அறிந்திருக்கிறார்களோ, தே—அவர்கள், ப்ரும்மண:—பிரமனுக்கு, யத் அஹ:—எது தினமோ (பகல்), தத்—அது, ஸ ஹஸ்ரயுக பர்யந்தம்—ஆயிரம் (சதுர்) யுகங்களின் முடிவு என்றும் ராத்ரிம்—இரவை, யுக ஸஹஸ்ராந்தாம்—ஆயிரம்(சதுர்) யுகங்களின் முடிவு என்றும், விது:—சொல்வார்கள்.

கீதையில் இச் சுலோகம் சொல்லப்படுவதற்குச் சங்கரர், ஸ்ரீதரர் முதலிய உரையாசிரியர்கள் காரணங் கூறியிருக்கின்றனர்.

சங்கரர்:—பிரமலோகம்கூட கால அளவையைப் பெற்றிருக்கும்போது மற்றைய உலகங்கள் யாவும் அழியத் தகுந்தவைகளே என்பதை அறிவிப்பதற்காக இச் சுலோகம் சொல்லப்பட்டது.

ஸ்ரீதரர்:—பிரமலோகம் வெகுகாலம் நீடித்திருக்கும் என்பதையும் பிற உலகங்களை விடச் சிறந்தது என்பதையும் அறிவிக்கும் பொருட்டு இது கூறப்பட்டது

ஆயிரம் யுகம் என்றது ஆயிரம் சதுர்யுகங்களைக் குறிக்கும் பிரமனது ஆயுள் விவரத்தை புராணுதி சாஸ்திரங்களால் அடியில் கண்டபடி அறியலாகும்:

கை நொடிப்பொழுது அல்லது கண்ணிமைப் பொழுது 15—ஒரு காஷ்டை

| | |
|---|---|
| காஷ்டை | 30—ஒரு கலை |
| கலை | 30—ஒரு முகூர்த்தம் |
| முகூர்த்தம் | 30—ஒரு நாள் |
| நாள் | 15—ஒரு பக்ஷம் |
| பக்ஷம் | 2—ஒரு மாதம் |
| மாதம் | 2—ஒரு இருது |
| இருது | 3—ஒரு அயனம் |
| அயனம் | 2—ஒரு வருஷம் |
| (மனித) வருஷம் | 1—ஒரு தேவநாள் |
| தேவ நாள் | 365—ஒரு தேவ வருஷம். |

## யுகக் கணக்கு விவரம்

| யுகம் | தேவ வருஷம் | மனித வருஷம் |
|---|---|---|
| கிருத யுகம் | 4800 | 1728000 |
| திரேதா யுகம் | 3600 | 1296000 |
| துவாபர யுகம் | 2400 | 864000 |
| கலியுகம் | 1200 | 432000 |
| ஆக யுகம் 4-க்கு (1 சதுர் யுகத்துக்கு) வருஷம் | 12000 | 4320000 |

## பிரும்மாவின் ஆயுள் கணக்கு

மேற்கூறிய ஆயிரம் சதுர் யுகம் பிரமனுக்கு ஒரு பகல் இந்தப் பகல் ஒவ்வொன்றும் 71 சதுர்யுகம் கொண்ட 14 மந்வந்தரங்கள் என்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. பிரமனின் இரவுக்கும் அவ்வாறே சதுர் யுகம் 1000. 2000 சதுர் யுகங்கள் பிரமனுக்கு ஒரு நாள் இவ்விதம் 360 நாள்கள் அவருக்கு 1 வருஷம். இவ்விதவருஷங்கள் 100 பிரமனின் ஆயுள். இந்த ஆயுள் காலம் 'பரர்' என்று சொல்லப்படுகிறது ஒரு பராவுக்கு மூன்று கோடியே பதினொரு லக்ஷத்து நான்காயிரம் கோடி மநுஷிய (311040000000000) வருஷங்கள் 'இவ்வளவு நீண்ட காலம் அழிவில்லாதிருக்கும் பிரமலோகம் யாதாகும்' என்பதை அடுத்த இதழில் காண்போம்.


ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.
பிரபல ஜோதிஷர்
☆

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை
☆
பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
'தபோ நிதி,'
தியாகராய நகர், மதராஸ் 17.
தபால் பெட்டி 1417.







### ரதிப்ரதா ரேகை

रतिप्रदा स्वर्णवर्णा
सूक्ष्मरूपा दिवानिशम् ॥
तिर्यक् कनिष्ठिकामूले
दंपत्योर्भोगसौख्यदम् ।
रतिप्रदेतिनामऽस्याः
भोगसौख्यप्रदत्वात् ॥

ரதிப்ரதா என்ற ரேகை தங்க நிறம் கொண்டது. மெல்லிசாகவிருக்கும். இரவும், பகலும், காண முடியும். சுண்டு விரலின் அடிபாகத்தில்




சாய்ந்து நிற்கும் இதன் பலன் தம்பதிகளுக்கு போக சுகத்தைக் கொடுக்கும். இக் காரணத்தினுல் இந்தப் பெயர் பெறலாயிற்று.

### ஹேமவல்லி ரேகை

हेमवल्ली हेमवल्ली वल्लीवत्कुटिलाकृशा ।
अनामिकामूलदेशे तिर्यक्संभोग
सौख्यदा ॥
हेमवल्लीकल्पलता समानाङ्गत्व
सूचनात् ।

6

ஹேமவல்லி என்னும் ரேகை தங்க நிறம் கொண்டது. கொடிபோல




மெல்லிதாக இருக்கும். மோதிர விரலின் அடிபாகத்தில் சாய்ந்து நிற்கும் இதன் பலனும் போக ஸௌக்யந் தருவதாகும். ரூபத்தை யனுசரித்து இப் பெயர் பெறலாயிற்று.

### பத் ரேகை

पद्रेखा मध्यमामूले स्थूला तिर्यक्गता
तया ॥
भ्रातृसंपत्सर्वसौख्यं विद्यांचाप्नोति
पुष्कलाम् ।
पदित्यंते ब्रह्मपदप्राप्तिसंसूचनात्
स्मृता ॥




பத் என்ற ரேகை நடு விரல் மூலத்தில் (அடி பாகத்தில்) தடித்து நெட்டையாக நிற்கும். இதன் பலன் அண்ணன் தம்பிமார் சம்பத்து, நிறைய படிப்பு இவை யாகும். பிரம்ம பதத்தை அடைவிக்கும் சக்தி வாய்ந்ததால் இப்பெயர் பெற்றது.

### பவித்ரதனு ரேகா

स्यात्पवित्रतनुः शुक्ला तर्जनीमूलगा
कृशा ।
तिर्यङ्गतास्या बुद्धेः शुद्धिः शुद्धिः
वाच्यात्मनोरपि ॥
सापवित्रतनुर्नाम्ना देहशुद्धिप्रसूचनात् ।

பவித்ரதனு என்ற ரேகை வெண்மை நிறமாயிருக்கும். மெலிந்து




காணும். ஆள்காட்டி விரலின் அடிபாகத்தில் (குருமேடு) சாய்ந்து நிற்கும். இதன் பலன் சுத்தமான புத்தி, சுத்தமான பேச்சு, சுத்தமான தேகம் இவைகளாகும். தேக சுத்தியைக் குறிப்பதனுல் ரேகை இப் பெயர் பெறலாயிற்று.

க்ருதா ரேகை

कृताख्याऽङ्गुष्ठमूलेस्यात् अङ्गुष्ठसंधि
रेखया ॥
तिर्यक्कृता रक्तवर्णा स्पष्टाकाराच
सङ्गताम् ।
उत्साहशक्तिमहती स्त्रीणां पुंसाम
पिवा ॥
सफलत्वप्रसंगेन कृतास्यात् कृतकर्म
णाम् ।

க்ருதா என்ற ரேகை கட்டை விரலின் அடிபாகத்தில் ஸந்தி ரேகை




யைத் தொடாமல் செங்குத்தாக நிற்கும் செவந்த நிறம் தெளிவான தோற்றம். இந்த ரேகையுள்ள ஆண் பெண் பாலரிருவருக்கும் மிகவும் அதிகமான உத்ஸாக சக்தியுண்டு. செய்யும் காரியத்தில் பலம் கட்டாயம் ஏற்படும் காரணத்தால் இப்பெயர் பெற்றது.

மஹாமதி ரேகை

महामतिर्नामसारेखा दीर्घरूपास्फुटा
कृतिः ॥
कनिष्ठिकाऽनामिकयोः अन्तरातल
गामिनी ।
बहुधाऽनेकरूपावा बुद्धिमत्ताप्रदा
नृणाम् ॥
कनिष्ठिकान्तिकस्थाचेत् नामार्थोऽत्र
परिस्फुटः ।

மஹாமதி என்ற ரேகை நீளமாயிருக்கும். ஸ்பஷ்டமாகக் காணும். சுண்டு விரலுக்கு மோதிர விரலுக்கும்




இடையேயுள்ள பிரதேசத்தின் வழியாக கரதலத்திற்கு பந்தரேகைவரை செல்லும் ஒன்ருயும் இருக்கலாம், பலவாயும் தோன்றலாம். இந்த ரேகையுள்ளவர்கள் புத்திமான்களாயிருப்பர் சுண்டு விரலுக்கு அதி சமீபமாயிருந்தால் அதிபுத்தி சாலிகளாயிருப்பர்.

குறிப்பு:—ரேகைகளின் பலன்கள் நூற்றுக்கு நூறு பலிக்க வேண்டுமாஞல் அவற்றின் அமைப்பு பரிபூர்ணமாயிருக்க வேண்டும். இல்லையேல் அமைப்புக்குத் தகுந்தபடி பலன் குறைந்து கூடிக் காணும்.

பதி ரேகை

पतिव्रता शुभाभास्यात्मृदुरेखान्तरो
ज्वला ॥
कनिष्ठिकानामिकयोः मध्यनिस्सृता
तलगामिनी ।
अनामिकासन्निधानेचेत्सैषापुत्र
समृद्धिदा ॥
पतिरित्युदितासद्भिः बहुभर्तृत्वसूच
नात् ।




एतयोर्महतीरेखास्यत् महापतिसंज्ञिता ॥
अल्पापतिस्तयोर्मध्ये एकादीर्घाकृतिः
परा ।
रेखा महापतिस्सापि ह्रस्वाचेत्
पतिरेवसा ॥

பதி என்ற ரேகை சுண்டு விரல், மோதிர விரல் இவ்விரண்டுக்கும் மத்தியில் புறப்பட்டு கைத்தலத்தை நோக்கிச் செல்லும் ஆழமாயிருக்கும். மிருதுவாயிருக்கும், பளபளப்பாயிருக்கும் இந்த ரேகை மோதிர விரலின் சன்னிதானத்தில் காணப்பட்டால் நிறையப் புத்திரர்கள் உண்டாவார். பதியின் உபயோகம் அதிகமாக ஏற்படுவதால் இப்பெயர் பெறலாயிற்று. இந்த ரேகை பெரியதாயிருந்தால் மஹாபதி என்று பெயர் நடுத்தரமாயுள்ள ரேகைக்கு அல்பாபதி என்று பெயா குட்டையாக இருப்பது பதி ரேகை

கிலேசரேகை

तस्यात् तर्जनीमध्यमयोः अन्तरात त
गामिनी ।
क्लेशसंज्ञा क्लेशदासा नामार्थोऽत्र
परिस्फुटः ॥

நடுவிரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையே தோன்றி உள்கையை




நோக்கி பந்த ரேகை வரைக்கும் செல்லும் இது ஒன்ருகவும் பலவாகவும் தோன்றும். அதன் பலன் மனக்கவலை யதிகமாகும். ஆள்காட்டு விரலுக்கு அதிக சமீபமாக விருந்தால் மேற்படி பலன் என்பது சிலர் மதம்

ஹாரரேகை

हाररेखा मध्यमाधः प्रतिपच्चन्द्र
सन्निभा ।
बहुभत्तृप्रदाराज्ञां स्वपौष्कल्यानु
रूपतः ॥



स्त्रीणांचेत् राजपत्नीत्वं दद्यात् तत्स
सदृशापिवा ।
हारादिभूषणैर्युक्तास्यात् शोभासूचना
दियम् ॥

ஹாரரேகை என்பது நடுவிரலுக்குக் கீழே பிறைச்சந்திரன்போல அமைந்திருக்கும். அதன் புஷ்டியை




அனுசரித்து அரசர்களாஞல் (உயர்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களாஞல்) ஜனங்களின் அத்யந்த பிரியத்தைக் கொடுக்கும் பெண்களாஞல் அரசர்களின் மனைவி அல்லது அதற்குச் சமானமான பதவியைக் கொடுக்கும். அதாவது ஆரம் முதலிய ஆபரணங்களையுடைத்தாயிருப்பர். சோபையை குறிப்பிப்பதால் இப்பெயர் வந்தது.

குறிப்பு:—இந்த ரேகை அரைகுறையாக இருக்குமாஞல் ராஜஸேவை என்ரே சர்க்கார் உத்யோகமென்ரே உசிதப்படிமாற்றிப் பொருள்கொள்ள வேண்டும்.

மந்தோஷ்ணதா ரேகை

मन्दोष्णदातु हाराधः तद्वत् तर्जन्य
नामयोः ।
अन्तरालगतारेखा हाररेखा
समाकृतिः ॥
प्रवृत्तेर्मांद्यदासैषा दद्यात् बुद्धेस्तु
मंदताम्
मंदोष्णदेति संप्रोक्त शीतलांगत्व
सूचनात्

மந்தோஷ்ணதா என்ற ரேகை ஹார ரேகைக்கு கீழே யிருக்கும். அவ்வளவு பிரகாசமாயிருக்காது நடுவிரலைச் சுற்றியுள்ள இரண்டு இடைவெளிகள் வழியாகச் செல்லும். கிட்டத்தட்ட ஹார ரேகையின் அளவுள்ளதாயிருக்கும் இதன் பலன் புத்தி மந்தம், தொழில் மந்தம் இந்த ரேகையுள்ளவர்களின் அவையவங்கள் அநேகமாக குளிர்ந்தே இருக்குமாதலால் ரேகைக்கு இப்பெயர்.

குறிப்பு:—இதையே மேஞட்டார் சுக்ர வளையமென்கிருர்கள்.




நிஷ்டா ரேகை

निष्ठात्वनामिकामूलात् कनिष्ठामूल
गामिनी ।
ऊर्ध्वं करप्रवाहेन धर्मस्थानोन्मुखी
कृशा ॥
स्वपौष्कल्यानुरूपेण दीर्घमायुः
प्रयच्छति ।
निष्ठेत्युक्ता धर्मविद्भिः धर्मनिष्ठत्व
सूचनात्

நிஷ்டா என்ற ரேகை மோதிர விரலின் கீழ் ஆரம்பித்து சிண்டு விரலடிப்டக்கமாக கரபாஸ்தானத்தில் தர்மஸ்தானத்தை நோக்கிச் செல்லும். மெலிந்த தோற்றமளிக்கும், இந்த ரேகை நன்ருக அமைந்திருந்தால்




தீர்க்கமான ஆயுள் பலன். இந்த ரேகையுள்ளவர்கள் தர்ம நிஷ்டர்களாயிருப்பார்களாதலால் ரேகைக்கு இப்பெயர் வரலாயிற்று.

(தொடரும்)

Zam-Buk வெட்டுப் புண், காயம்
புள்ளி, பரு, சிறங்கு, புண்களுக்கு




சீக்கிரத்தில் பூரணமாக குணமாக்கும்
ஜாம்பக் மெழுகு மூலிகை எண்ணைகள் நிறம்பியது சருமத்திஞடே புகுந்து வேலை செய்து ஜாம்பக் வலியையும், புண், எரிச்சலையும் நிறுத்தும். சருமத்தை சுத்தமாக்கி, கிருமிகளைக் கொன்று சீயை நிறுத்தி சுலபமான நிவாரணத்திற்கு உதவும் ஜாம்பக் சகல சரும நோய்கள், கால் நோய்கள் வெட்டுப் புண்கள், பூச்சிக் கடிகள், தீப்பட்டபுண், காயங்கள், மூலம் இவற்றை குணமாக்கும் மகோன்னத மெழுகு இதில் மிருகக் கொழுப்பு சேரவில்லை என்ற உத்தரவாதம். ஏஜண்டுகள்: தாதா & கோ., பி. டி. மதராஸ்.
ஜாம்பக் — உலகின் மகோன்னத சருமக் களிம்பு

# கிளி பாடிய கவிதை!

பூவிலிருந்து மணமும், விளக்கிலிருந்து ஒளியும், பிரிந்து நிற்க முடியுமோ? காதலன், காதலி இவர்களிடமுள்ள கனிவும், அன்பும், அப்படித்தான் காதலர் ஒருகால் பிரிந்திருக்க நேர்ந்தால், ஆற்ருமைக்காரணமாக அக்கனிவையும் அன்பையும் எண்ணி யெண்ணி மாழ்குவர்; அந்த ஆற்ருமையைத் தாங்க முடியாவிட்டால், பக்கத்திலுள்ள பாங்கன், பாங்கி இவர்களிடம் புகன்று புலம்புவர்

அருகே யாரும் இல்லாவிடின், தாம் வளர்க்கும் அன்னப் பறவை, வர்ணக்கிளி இவற்றிடம் எடுத்துரைத்து ஏங்குவர் சிற்சில சமயம் தென்றல், மேகம், இவற்றை விளித்து உள்ளம் உடைந்து விளம்புவர்; முடிவிலே அவற்றை நோக்கி "நீங்கள் தூது போய், எம் உள்ளக் கசிவை உரைத்து வாருங்கள்.' என்று வேண்டிக்கொள்வர் அவர்களது மனக் கனிவைப் பிறர் அறிய முடியாது

ஆனுலும், வரகவிகள் தமது அருள் திறத்தால், அக்கனிவையும், அன்பையும் கை நெல்லிக்கனிபோல் வாசகர் அறிய விளங்க வைப்பர் அத்தகைய நூல்கள், 'மேகவிடு தூது, தென்றல் விடு தூது கிள்ளை விடு தூது'' என்று பெயர் பெறும். காளிதாஸ மகா கவி பாடிய "மேக ஸந்தேசம்' அத்துறையில் இணையற்றது. என்பர் காதல் சிறப்புரைக்கும் வகையில், திருச்சிற்பலக் கோவை, தஞ்சை வாணன் கோவை. அம்பிகாபதிக் கோவை, முதலியன அம்மேக சந்தேசத்துடன் போட்டி போடும்

தமயந்தியால் அன்னத்தை நளன் தூதுபோக்கினன் என்பது பிரசித்தம். சீதாதேவியிடத்து ஆஞ்சனேயன் தூது சென்று வந்தது பலருக்கும் தெரியும். இப்போது, தேசங்களுக்கு இடையே தனித்தூதும், தூதுகோஷ்டிகளும் போய்வருவதைப் பத்திரிகைகள் பிரசுரித்து வருகின்றன திருவாரூர் தியாகராஜ சுவாமியின் பக்தர்கள், முன்னம் கிருஷ்ண தேவா மகாராஜனிடம் கிளியைத் தூதுபோக்கியதை இங்கே பார்ப்போம்

திருவரங்கம். திருவண்ணுமலை தென் மதுரை, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் ராயகோபுரம் என்பதைப் பார்க்கலாம். விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த மகாராயர் எனப்படுவோர் அக்கோபுரங்களைக் கட்டியவர்கள், அவர்களில் ஒருவர் கிருஷ்ணதேவ மகாராயர் அல்லது மகா ராஜர். பதினுரும் நூற்ருண்டின் துவக்கத்திலே கிருஷ்ண தேவர் அந்த ஸாம்ராஜ்யத்தின் அதிபராக விளங்கி நின்ருர்.

அதற்கு முந்தைய நூற்ருண்டுகளில் மாலிக்காபூர் போன்றவர்கள் இத்தென்ஞட்டிலும் புகுந்து, நகரங்களையும், ஆலயங்களையும், நாசமாக்கி, எங்கும் நிர்மூலம் செய்ததைக் கண்டு ஆற்ருமல். அவர்களின் கொட்டத்தையொடுக்க விஜயநகர ஸாம் ராஜ்யம் என்பது வீறிட்டு உதித்தோங்கலாயிற்று அதன் பின்புதான், தென்ஞட்டிலே அட்டகாசம் மறைந்து ஜனங்கள் நிம்மதியாக வாழ முடிந்தது

தென்ஞட்டு ஆலயங்களைப் பழுது பார்த்து நன்னிலையில் அமைக்கவும் தலங்கள் பலவற்றையும் தரிசிக்கவும், மக்களை அணைத்து ஆதரிக்கவும் அம்மகாராயர்கள் அவ்வப்போது தென்ஞட்டுக்கு—நம் தமிழகத்துக்கு வந்து போவதுண்டு கிருஷ்ணதேவ மகா

**எம். எஸ். சுப்ரமண்ய ஐயர்**

ராஜர் அவ்வாறே கி பி. 1523-1524ம் ஆண்டில் கும்பகோண மகா மக உற்சவத்துக்கு வந்திருந்தார் அப்போது தமிழக ஆலயங்களின் நிர்வாகத்தையும் கவனிக்கலாஞர்

திருவாரூர் கோயிலிலே நாகராஜ நம்பி என்பான் பிரதம அதிபதி, அவன் இட்டதே சட்டம்; செய்ததே தீர்ப்பு! அவனைத் தட்டிப்பேச ஆள் கிடையாது யாராவது பேசக் கிளம்பினுல், அன்னுரின் தலைபோய்விடும் ஆலய அர்ச்சகரெல்லாம் அவன் கைக்குள் அடக்கம் இன்றுபோல் அன்றும் அந்த ஆலயத்துக்கு ஆஸ்தி மிக அதிகம் நகை நட்டுக்களும் ஆடையாதிகளும் ஏராளமாம் அவற்றில் அந்நாகராஜ நம்பி அனுபவித்த மிச்சமே ஆண்டவனுக்கு.

அதுகண்டு பக்த கோடிகள் பெரிதும் தவித்தனர் கிருஷ்ணதேவராயரிடம் முறையிட்டுக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் துடித்தனர் யார் போய்ச் சொல்லுவது? சொல்லுவோரின் தலை இரவலாகிவிடும். கும்பகோணத்துக்கு வந்திருக்கும் கிருஷ்ண தேவராயரிடம் எவ்வகையிலாயினும் சொல்லித்தீரவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

தத்துவப் பிரகாசர் என்னும் புலவரும் பண்டாரமுமான பெரியார் அவர்களுக்குத் தலைமை பூண்டார்; கிளியொன்றை வளர்த்தார்; அதற்குப் பேசக் கற்றுக்கொடுத்தார், பாடல்களையும் புகட்டிவைத்தார்! சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பது சாமானியமான வசனம் அல்லவா? அக்கிளியோ சாலச் சிறந்தது. நல்லறிவும் படைத்தது

சிவன் கோயில்களிலே அறுபத்து மூன்று நாயன்மார்களின் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும். அவை கல்லாலோ செம்பாலோ ஆகியிருக்கும் ஆரூர்க்கோயிலில் இருந்தவையோ அதியற்புதமான உலோகத்தால் ஆனவை, அந்த உலோகத்தின் மீது அந்நாகராச நம்பி ஆசைவைத்தான்'' உடனே இரண்டு விக்கிரகங்களை எடுத்தான்; கன்னுனிடம் கொடுத்து உருக்கினுன்; பின்பு அதனை விற்று மகிழ்ந்தான்

இச்செய்தியை அக்கிளிக்குச் செய்யுள் வடிவில் போதித்தார் தத்துவ பிரகாசர். கிருஷ்ணதேவராயரிடம் விடுத்துப் பாடச் செய்தார், அப்பாடல் இது:—

முன்னுள் அறுபத்துமூவர்
இருந்தார்; அவரில்
இந்நாள் இரண்டுபேர்
ஏகினுர்;—கன்னுன்
உருக்கினுன்: விற்றுவிட்ட
நாகராச நம்பி
இருக்கின்ருன், கிட்ணராய!

கிளி கூறியதைக் கேட்டதும், கிருஷ்ணராயர் அதிசயம் மிகுந்து, திடுக்கிட்டார், கோபம் பொங்கி நாகராச நம்பியை வருவித்தார்! விசாரிக்கும்போது அவன் மறுத்தான்; முடிவில் தண்டனைக்கு அஞ்சி உண்மையை ஒப்புக்கொண்டான் உடனே அவனுக்கு வேலைபோயிற்று அவன் ஆஸ்தியும் பறிமுதல் ஆயிற்று பின்னரே பக்தர் அனைவரும் ஆறுதல் எய்தினர் இது நிற்க,

அந்த ஆலயத்திலே நாகராச நம்பியின் கையாளாக இருந்தவர் ஸ்ரீபட்டர் என்பவர் அவரே அர்ச்சகரில் முதல்வர் அவர் திருவீழிமிழலை என்னும் ஊரைச் சேர்ந்தவர் ஏனைய அர்ச்சகரில் பலரும் அந்த ஊராரே அவர்களும் ஸ்ரீபட்டருக்கு உள்கை. ஆண்டவனுக்கு அவர்கள் சரிவர பூசை நிவேதனம் செய்வதில்லை பூசைக்கு உரிய பொருளில் பெரும் பகுதியை திருடிக்கொண்டுபோய்விடுவர். இதனையும் அக்கிளிபோய் அம்மகா ராயரிடம் செய்யுள் வடிவில் செப்பியது

ஊழித் துலுக்கு அல்ல!
ஒட்டியான் தானும் அல்ல!
வீழித்துலுக்கு வந்து
மேலிட்டு— வாழி
சிறந்த திரு ஆரூரத்
தியாகருடை பூசை
இறந்ததே கிட்ண ராயா!

இப்பாட்டின் பொருள் யாதெனில்:—முன்னம் இங்கே படை கொண்டு வந்து. யுகாந்த காலம்போல் அழிம்புகள் செய்த மாலிக் காபூர் போன்றவரும் அல்லர்; தனக்கு நிகர் யாருமில்லை யென்று தருக்கி நின்ற ஒட்டா தேசத்து ஓரிஸா தேசத்து-அரசன் பிரதாப ருத்திரன் என்பானும் அல்லன் பின்னர் யார் என்ருல், திருவீழி மிழலை என்னும் ஊரிலிருந்து வந்தமர்ந்துள்ள அர்ச்சகரே. அத்துருக்கரினும் கேடு கெட்டவர்கள் அவர்கள். துருக்கரின் காலத்தே ஆலய பூஜை நடக்கவில்லை அந்த அர்ச்சகரின் காலத்திலோ பூசை சரிவர நடைபெறுவதில்லை!"

வேலியே பயிரை மேய்வதுபோல், மோசமாகக் காரியம் நடக்கிறதே என்று கிருஷ்ணதேவராயர் கொதிப்புக்கொண்டார்; உடனே ஸ்ரீ பட்டரையும் அவரது சகாக்களையும் வரவழைத்தார்; நாகராச நம்பிக்கு நேர்ந்த கதியை நினைத்து, அவர்கள் நடுங்கி, உண்மையை ஒப்புக் கொண்டார்கள் எல்லாருக்கும் வயிற்றில் அடி விழுந்தது பிழைப்பு போய்விட்டது சோற்றுக்கும் திண்டாட்டம் நேர்ந்தது நேரவே,

"திருவீழி மிழலையிலிருந்து வந்த, தன்மையரே! ஆலயத் தொண்டர் என்று சொல்லித் திரிந்தோரே! முன்பெல்லாம் அப்பம் அவல். அதிரசம். தோசை இவற்றை வாரி வாரி மொக்கினீர்களே! இப்போது எல்லாம் போய்விட்டதே ஆண்டவனுக்குப் படைக்காமல் உண்ட வயிற்றிலே உமிக்காந்தலைப்போல் பசித்தீ பற்றுகிறதல்லவா?' என்னும் கருத்தமைந்த பாடலை அவர்களின் முன்னே அக்கிளி தைரியமாகப் பாடியது அது இது:—

உண்ட வயிற்றில்
உமிக்காந்தல் இட்டதே;
தொண்டரே! வீழிந்துருக்கரே!
பண்டெல்லாம்
அப்பம், அவல் அதிரசமும்
தோசைகளும்
கப்புவதுப் போச்சே
கவிழ்ந்து!

கோவில்பூனை என்பார்கள், கோவில் பெரிச்சாளி என்பார்கள் கோவில் பூனை தேவருக்கு அஞ்சாது என்று ஒரு பழமொழியுண்டு, முன்னுளிலும் அத்தகைய ஆசாமிகள் ஆலயத்திலே அட்டகாசம் செய்தனர்போலும்!



# காதல் தளர்ச்சியும் நகைச்சுவையும்

[ கே. ராஜகோபாலாச்சாரியார் ]

☆

அன்னம், நளன் தமையந்திக்கிடையே தூது சென்று, அவ்விருவோரிடத்திலும் காதலை மூட்டி வைத்தது நளனையே நினைத்து வாடிய நங்கையின் மெய்யொடு மனமும் தளர்சியுற்றது அவளது பொன் மேனி வெளுத்தது அடிக்கடி தனியமர்ந்து நெட்டுயிர்ப்புப் போக்குவாள் உணவு மறந்தாள். கோலம் செய்துகொள்ள மறுப்பாள்

தமயந்தியின் இந்நிலைக்குக் காரணம் தோழியர்க்குத் தெரியவில்லை தமயந்திக்கும் அன்னத்திற்கும் இடையே நிகழ்ந்தவற்றைத் தோழியர் அறியார் ஆதலால். நங்கையின் வேறுபாட்டிற்குக் காரணம் காதல் என்பதை அவர் உணர்தற்கு இல்லை. எனவே தோழிமார் விஷயத்தை அரசிக்கு அறிவித்தார், அரசியும் மகளின் தளர்ச்சிக்குக் காரணம் அறியாதவளாய் அரசனிடம் கூறினுள்.

அரசன் கன்னிமாடம் வந்து பெண்ணைக்கண்டான். அவனுக்கு விஷயம் விளங்கிவிட்டது உடனே., ஆனல் அவளது காதலுக்கு இலக்கான வேந்தன் யார் என்பதை அவன் அறிந்து கொள்வதற்கு இல்லை எனவே. சுயம்வரம் வைத்து. "ஐம்பத்தாறுதேசத்து அரசர்களையும் வரவழைத்தால். அவர்களில் ஒருவனுக அக்காதலன் வருவான் அவனைத் தன் மகள் தேர்ந்து மகிழ்வாள்' என்று எண்ணினுன். அவ்வாறே தூதர்களை மண ஓலையுடன் ஐம்பத்தாறு தேசத்திற்கும் அனுப்பினுன் விதர்ப்பராஜன் அனுப்பிய மணத்தூதரில் ஒரு சாரார் நளன் வாழும் மாவிந்த நகரை அடைந்தனர் வந்தடைந்த தூதர் சொன்னதையும் காதலால் தளர்ந்திருக்கும் நளன் செய்ததையும் புகழேந்திப் புலவரே சொல்லக் கேட்போம்:—

காவலன்தன் தூதர் கடைக்கா
வலர்க்கறிவித்து
ஏவலில்போய் ஈதென்ற
இயம்புதலும்— மாவில்
பொலிந்ததேர் பூட்டென்ருன்
பூவாளி பாய
மெலிந்த தோள் வேந்தன்
விரைந்து"

(காவலன்தன் தூதர்—விதர்ப்ப நாட்டு அரசனுடைய (மண ஓலை கொண்டு வந்த தூதர், கடைக் காவலர்க்கு அறிவித்து—நளமஹாராஜனுடைய மாளிகையின் வாயில் காப்போருக்கு தாம் வந்துள்ள காரியத்தைத் தெரிவித்து ஏவலில் போய்—அவரது அனுமதியின்மேல் உள்ளே சென்று. ஈது என்ற இயம்புதலும்—தாம் வந்த காரியம் இதுதான் என்று தமயந்தியின் சுயம் வரத்தைப் பற்றிச் சொன்னவுடனே, பூவாளி பாய—மன்மதனுடைய புஷ்ப பாணங்கள் பாய்வதால், மெலிந்த—இளைத்திருக்கின்ற, தோள்வேந்தன்—தோள்களை உடைய நளன் விரைந்து -அவசரமாக, மாவில்—குதிரையிலே, பொலிந்த—பிரகாசம் பொருந்திய. தேர்—தேரை, பூட்டு—பூட்டக்கடவாய், என்ருன்—என்று கட்டளை இட்டான். ] இதுதான் இச்செய்யுளின் பொருள், இதனில் "மாவில் தேர் பூட்டு'' என்று நளனைக் கூறவைத்த புலவர் நகைச்சுவையை நமக்கு நல்குகின்றர் நளன் அன்னம் சொன்ன பொன்னையே நினைத்துக்கொண்டு வாழ்கின்ருன் அவளை அடைவது எப்படி என்று தோன்றவில்லை மன்மதன் ஒருபுறம் வதைத்துக் கொண்டிருக்கின்ருன் இப்படி மெய்யொடு மனமும் தளர்ந்து தேயும் மன்னவன் தமயந்தியின் சுயவரச் செய்தி வருகின்றது. வந்ததும் அவனது மனம் விதர்ப்ப நாடு சென்றுவிடுகின்றது உடலும் அங்கே செல்ல வேண்டும் அல்லவா? அதற்காகத் தேரைப் பூட்டச் சொல்கின்ருன். சீக்கிரம் விதர்ப்ப நாடு செல்லவேண்டும் என்னும் அவசரத்தில், 'தேரிலே குதிரையைப் பூட்டு' என்பதற்குப் பதிலாக அவன் 'குதிரையிலே தேரை பூட்டு' என்று கூறிவிடுகின்ருன். மனம் தளர்ந்திருக்கும் வேளையில் சொல்லும் செயலும் இப்படி மாறி நிகழ்வது இயற்கையே

ஆங்கிலத்தில் ஸ்பூனரிஸம் என்ற ஒரு வார்த்தை உளது 16-வது நூற்ருண்டில் இங்கிலாந்தில் டாக்டர் ஸ்பூனர் என்ற பெயரினர் ஒருவர் இருந்தார் அவர் அடிக்கடி, தன் நினைவு துறந்து பிறர் நகைத்தற்கு இடமான காரியங்களைச் செய்வதும், சொற்களைக் கூறுவதும் வழக்கமாம் ஒரு நாள் அவர் வெளியூர் போக வேண்டி நேர்ந்தது. ரயிலடிக்குச் சென்ருர் வழி அனுப்ப மனைவி ரயிலடிக்கு வந்திருந்தாள். அவரது பெட்டி. படுக்கையைத் தூக்கிவந்த கூலிக்காரனும் அங்கே நின்றுகொண்டிருந்தான் ரயில் புறப்படலாயிற்று டாக்டர் அவசரமாய் கூலிக்காரனுக்கு முத்த மளித்தும் மனைவியினிடம் கூலிப்பணத்தைக் கொடுத்தும் விட்டு வண்டிக்குள் சென்ருர் பக்கத்திலிருந்தவர் சிரித்தனர் அது முதல் தன் நினைவு துறந்து நேர்மாருன காரியங்களைச் செய்பவரை டாக்டர் ஸ்பூனர் என்றும் அத்தகைய நிகழ்ச்சிகளை ஸ்பூனரிஸம் என்றும் சொல்வது வழக்கம்

இங்கு நளன் அவசரத்தில் கூறிய இது ஸ்பூனரிஸத்தின் பாற்படும்.




## [சில்லரை விலைகள்]

(விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை, ஜூலை 31—

| | | ரூ | அ. | பை. |
|---|---|---|---|---|
| உப்பு | 1–படி | 0 | 1 | 0 |
| துவரம் பருப்பு | 1–படி | 1 | 1 | 0 |
| உளுத்தம் பருப்பு | ,, | 1 | 4 | 0 |
| பயத்தம் பருப்பு | ,, | 1 | 3 | 0 |
| உளுந்து | ,, | 1 | 1 | 0 |
| கடலைப் பருப்பு | ,, | 0 | 10 | 3 |
| எள்ளு | ,, | 1 | 6 | 0 |
| கடலை | 1 -வீசை | 0 | 8 | 1 |
| கடலை மாவு | ,, | 0 | 11 | 3 |
| கடுகு | ,, | 1 | 14 | 0 |
| வெந்தியம் | ,, | 1 | 14 | 0 |
| மிளகு | ,, | 18 | 8 | 0 |
| மிளகாய்–ராமனாதபுரம் | ,, | 4 | 4 | 0 |
| தனியா | ,, | 3 | 6 | 0 |
| புளி [புதுசு] | ,, | 1 | 4 | 0 |
| சீரகம் | ,, | 4 | 0 | 0 |
| வெல்லம் | ,, | 1 | 8 | 0 |
| நாட்டு சாக்கரை | ,, | 1 | 8 | 0 |
| அஸ்கா சர்க்கரை | ,, | 1 | 5 | 0 |
| மஞ்சள் | ,, | 2 | 0 | 0 |
| பூசு-மஞ்சள் | ,, | 1 | 14 | 0 |
| குங்குமம் | ,, | 2 | 0 | 0 |
| பாதாம் | ,, | 4 | 4 | 0 |
| சீயக்காய் | ,, | 1 | 2 | 0 |
| சீயக்காய் பொடி | ,, | 1 | 11 | 0 |
| வாஷிங் சோடா | ,, | 0 | 10 | 0 |
| திராக்ஷை | ,, | 6 | 0 | 0 |
| முந்திரிபருப்பு | ,, | 4 | 4 | 0 |
| களிப்பாக்கு | ,, | 5 | 6 | 0 |
| நெய் | ,, | 8 | 4 | 0 |
| நல்லெண்ணெய் | ,, | 3 | 3 | 0 |
| ஜவ்வரிசி | ,, | 2 | 14 | 0 |
| தேங்காய் எண்ணெய் | ,, | 3 | 10 | 0 |
| கடலெண்ணெய் 1–வீசை | | 2 | 10 | 0 |
| ரேடியோ எண்ணெய் | ,, | 3 | 1 | 0 |
| விளக்கெண்ணெய் பாட்டில் பெரிசு | | 1 | 12 | 0 |
| டை சிறியது | | 0 | 9 | 0 |
| வாசனை விளக்கெண்ணெய் | | | | |
| 4 அவுன்ஸ் பாட்டில் 1–க்கு | | 1 | 5 | 6 |
| 16 ,, ,, பாட்டில் 1–க்கு | | 3 | 1 | 6 |
| காப்பிக்கொட்டை பீபரி 1 வீசை | | 5 | 9 | 0 |
| ,, 'A' ,, ,, | | 5 | 3 | 0 |
| பார்லி | 1-வீசை | 1 | 8 | 0 |
| கரி 1 மூட்டை | (56 ப.) | 4 | 0 | 0 |
| காமதேனுவனஸ்பதி 10 பவுண்டு டின் | | 11 | 8 | 0 |
| ,, 5 | ,, | 6 | 2 | 0 |
| 'டால்டா' வனஸ்பதி 10 ப | | 11 | 12 | 0 |
| டை 5 ப | | 6 | 2 | 0 |
| கற்பூரம் | 1–பலம் | 0 | 9 | 0 |
| சாம்பிராணி | 1 பலம் | 0 | 6 | 0 |
| பெருங்காயம் | ,, | 0 | 4 | 0 |
| லவங்கம் | ,, | 0 | 8 | 0 |
| ஏலக்காய் | ,, | 0 | 15 | 0 |
| எல் ஜி பெருங்காயம் 1 சேர் | | 2 | 2 | 0 |
| தீப்பெட்டி. 1 டஜன் | | 0 | 8 | 6 |
| ஓவல்டின் | | 4 | 8 | 0 |
| 'ரௌண்ட்ரீஸ் (R.T.) கொக்கோ ½ ப | | 1 | 7 | 0 |
| ஸன்லைட் சோப் பெரியது | | 0 | 5 | 3 |
| ,, சிறியது | | 0 | 3 | 0 |
| ஹமாம் சோப் | | 0 | 6 | 0 |
| லைப்பாய் | | 0 | 5 | 6 |
| டாம்கோ 501 பார் | | 1 | 3 | 0 |
| லக்ஸ் | | 0 | 6 | 0 |
| ரெக்ஸோனா | | 0 | 6 | 6 |
| மார்கோ சோப்பு | | 0 | 8 | 9 |
| 777 பார் 1-க்கு | | 1 | 3 | 0 |
| காந்தி டாய்லட் சோப் 1-க்கு | | 0 | 6 | 0 |
| மைசூர் "ஸாண்டல்' சோப | | 0 | 10 | 0 |
| கேரளா ஸாண்டல் சோப்பு | | 0 | 7 | 6 |
| மெடிகோ டாயிலட் சோப் | | 0 | 8 | 0 |
| காட்ரீஜ் சோப் | ௳ 1 | 0 | 11 | 0 |
| மேட்டூர் சந்தன ஸோப் 1 கட்டி | | 0 | 8 | 6 |
| ரூப் டாய்லெட் ஸோப்—ஸ்டாண்டர்டு | | 0 | 6 | 0 |
| ,, கெஸ்ட் ஸைஸ் | | 0 | 2 | 0 |
| காவேரி ஸூபர் கார்பாலிக் (பெரிது) | | 0 | 4 | 6 |
| ,, (சிறியது) | | 0 | 2 | 6 |
| காவேரி வாஷிங் கேக் | | 0 | 4 | 0 |
| காவேரி வாஷிங் க்யூப் | | 0 | 3 | 0 |
| காவேரி பார் ஸோப் | | 1 | 2 | 0 |
| 'டாம்கோ ஹேர் ஆயில்(சிறிய பாட்டில்) | | 1 | 1 | 0 |
| டை (பெரிய பாட்டில்) | | 2 | 10 | 6 |
| குங்குமப் பூ [1 பாட்டில்] | | 1 | 4 | 0 |
| பச்சை கற்பூரம் 1 விராகனிடை | | 0 | 6 | 0 |
| "பினைல்' பாட்டல் | | 0 | 13 | 6 |
| குடிகூரா பவுடர் | 1 டின் | 3 | 0 | 0 |
| நீம் டூத் பேஸ்ட் | | 1 | 1 | 0 |
| மாக்லீன் பேஸ்ட் | | 1 | 2 | 0 |
| பார்ஹான்ஸ் பேஸ்ட் (பெரியது) | | 2 | 12 | 0 |
| 7 ஓ'க்ளாக்' க்ஷவர ப்ளேட் | | | | |
| (10 கொண்ட பாக்கட்) | | 1 | 0 | 0 |
| டை (5 கொண்ட பாக்கட்) | | 0 | 8 | 0 |
| கோரா டீ (டஸ்ட்) 1-பவுண்ட் | | 2 | 5 | 6 |
| கோரா டீ ½ பவுண்ட் | | 0 | 9 | 6 |
| கோரா டீ ¼ பவுண்ட் | | 0 | 4 | 9 |

### திருத்தம்

சென்ற இதழில் இப்பகுதியில் வெளியான விலைகளில் மிளகு ரூ 1-7-0 என்றிருப்பது தவறு. ரூ. 17-0-0 என்றிருக்க வேண்டும் விளக்கெண்ணெய் பாட்டில் சிறியது ரூ. 9-6-0 என்றிருப்பது ரூ, 0-9-6 என்றிருக்க வேண்டும்.



# ஸப்தமபாவம்

-பிஸிராவ-

1. புருஷ ஜாதகத்தில் அங்காரகன் 1 12, 4, 7, 8 இந்த இடங்களிலிருந்தால் மனைவியையும், மனைவியின் ஜாதகத்தில் இருந்தால் புருஷனையும் கொல்லும்.

—கேரள பாவதீபம்

2. செவ்வாய் 1. 2, 4 7, 12, இடங்களிலிருந்தால் தம்பதியைப் பிரிக்கும்; ஆனால் செவ்வாய் ஸ்வக்ஷேத்திரமாகவோ உச்சமாகவோ அல்லது மித்திரஸ்தானத்திலிருந்தாலோ அப்படி. நேராது

—பாவ ரத்னாகரம்

3. தம்பதிகளின் ஜாதகங்களில் முறையே இரண்டிலும் லக்னம், சந்திரன், சுக்கிரன் ஆகியவற்றிலிருந்து 12, 2. 4, 7, 8 1–ல் செவ்வாயிருந்தால் ஒரு கெடுதியும் சம்பவிக்காது அப்படி இல்லையானால் பாதகமுண்டு

செவ்வாய் தோஷத்தை லக்னம், சுக்கிர ராசி, சந்திர ராசி இவற்றிலிருந்து கணக்கிடவேண்டுமென்ற அவசியத்தை மேற்படி ச்லோகங்களின் ஆசிரியர்கள் நமக்கு அறிவுறுத்திச் சொல்கிறார்கள் இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு இதே போன்ற தோஷ நிலை மனைவி அல்லது புருஷனின் ஜாதகத்திலுமிருக்க வேண்டும். பையனுக்கு லக்னத்திலிருந்து செவ்வாய் தோஷமேற்பட்டால் பெண்ணுக்கு சுக்கிரராசியிலாவது அல்லது சந்திர ராசியிலாவது செவ்வாய் தோஷம் இருக்க வேண்டும்.

லக்னத்தில் செவ்வாய் இருந்தால் தோஷமென்பதை ஒப்புக்கொள்ளும் ஜோதிஷர்கள் வெகு சொற்பம் இது முக்கியமாகத் தென்னிந்திய ஜில்லாக்களில் தவறாக இருந்து வரும் சம்பிரதாயமாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட ச்லோகங்களின் கருத்து இதிலுள்ள சித்தாந்தத்தைத் தெளிவுபடுத்துவதாகும். ஸிம்ம லக்னம். கடக லக்னம் ஜாதகர்களுக்கு செவ்வாய் தோஷம் கிடையாதென்று சில ஜோதிட ஆசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் இந்த விதிக்கு விலக்குகள் அதிகமாக விருக்கின்றன மேற்குறித்த இடங்களில் செவ்வாயிருந்து சாதகபாதங்களில்லாமல் நடுத்தரமாகயிருக்கக்கூடிய ஓரிரு ஜாதகங்களிருக்கலாம் உதாரணமாக மேஷலக்ன புருஷ ஜாதகத்தில் செவ்வாய் கடகத்திலும், மகரத்தில் சந்திரனும் இருந்தால் இரண்டாவது கல்யாணம் நிச்சயமாகச் சம்பவிக்கிறது ஒரு ஜாதகத்திலுள்ள செவ்வாய் தோஷத்தை குரு பார்வை யிருந்தால் விசேஷமாகத் தணிக்கிறது திருவாதிரை. ஆயில்யம். ஹஸ்தம், கேட்டை நட்சத்திரங்களில் செவ்வாய் இருந்தால் அபாயகரமாகும் இத்தகைய இடங்களில் குஜன் இருப்பதைப் பொதுவாக ஜோதிடர்கள் அலட்சியம் செய்துவிடுகிறார்கள் இதற்குப் பரிகாரம் மேற்சொன்னவாறு புருஷ அல்லது ஸ்திரீ ஜாதகங்களில் செவ்வாய் தோஷம் அவ்வாறே அமைந்திருக்கவேண்டும்.

மற்ற தோஷங்களைவிடச் செவ்வாய் தோஷமே கடுமையானது அடுத்தபடியாக சனி, ராகு, கேது, சூரியன் தோஷங்களாகும். இந்த தோஷங்கள் சந்திரன். சுக்கிர லக்னங்களைவிட லக்னத்திலிருந்து கணக்கிடப்படும்போது இரண்டுமடங்கு பலமுள்ளதாகும் செவ்வாய் தோஷம் அநேகமாகத் தம்பதிகளைப் பிரிக்கிறது. மரணத்தை உண்டுபண்ணுகிறது மற்றதோஷங்களோவென்றால் தகராறை உண்டுபண்ணுகின்றன. அபிப்பிராய பேதம் ரோகம், வெறுப்பு, சௌஜன்யமின்மை, அபூர்வமாக மரணத்தைக்கூட உண்டு பண்ணுகின்றன எப்போதும் இரு ஜாதகங்களுக்குமிடையே பாப ஸாம்யத்தை கண்டிப்பாகப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். பையன் ஜாதகத்தில் 7-வது இடத்திலுள்ள செவ்வாய்க்கு 8-வது இடத்தில் செவ்வாயுள்ள பெண் ஜாதகமும் மாற்று. இதைப்போலவே லக்னம், சந்திரன், சுக்கிரன் முதலிய லக்னங்களிலிருந்து இதர கிரகங்களின் தோஷத்துக்கும் செய்து கொள்ள வேண்டும் 7–வது இடத்தில் செவ்வாயுள்ள பையன் ஜாதகத்தையும், 7–வது இடத்தில் செவ்வாயுள்ள பெண் ஜாதகத்தையும் ஒன்று சேர்த்துப் பொருத்தம் பார்ப்பது பிசகு. பையன் ஜாதகத்திலுள்ள 7–வது வீட்டுச் செவ்வாய் பலத்தை பெண் ஜாதகத்தின் 8–வது வீட்டுச் செவ்வாயால்தான் மாற்ற முடியும்.

சனியும் சுக்கிரனும் பரஸ்பர கேந்திர முற்றும், செவ்வாய், சுக்கிரன், சந்திரன் பரஸ்பர கேந்திர முற்றுமிருந்தால், எவ்வளவுதான் 7–வது வீட்டுக்குடையவன் நல்லிடம் பெற்றிருந்தாலும், தம்பதிகளின் இல்லறவாழ்வு சந்தோஷமாயிராது. இவ்வித சேர்க்கைக்கு தம்பதிகளில் மற்றவருடைய ஜாதகத்திலும் அதேமாதிரி சாம்யமிருந்தால்தான் இல்லறவாழ்வு சௌஜன்யமாயிருக்கும்.

ஸ்திரீ ஜாதகத்தில் சூரியன் ராகுவுடன் சம்பந்தப்படுவது; 7-வது வீட்டுக்குடையவன் 8–வது வீட்டுக்குடையவனுடனிருப்பது அல்லது சனி, செவ்வாய், முதலிய பாப கிரகங்கள் மிதுன ராசியில் பாப திருஷ்டி பெற்றிருப்பது உபய ராசியில் கெட்ட கிரகங்களுடன் செவ்வாயிருப்பது பெண் ஜாதகத்திலுள்ள 9–வது வீட்டுக்காரன் ஸ்வக்ஷேத்திரமாயிருந்து கெட்ட கிரகத்தின் பார்வையைப் பெறுவது போன்ற நிலை சீக்கிரமாகக் கல்யாணமாவதற்குச் சாதகமானதல்ல. இதனால் தடையேற்பட்டு கல்யாணமாவது தள்ளிப் போய்க்கொண்டிருக்கும்.

தம்பதியில் ஒருவருடைய ஜாதகத்தில் செவ்வாய் மற்றொருவருடைய ஜாதகத்திலுள்ள சனிக்கு நேர், கேந்திரமாகயிருக்குமானால் தாம்பத்திய வாழ்க்கை சந்தோஷமாக நடப்பதற்கு கெடுதியாயிருக்கும்.

7–வது வீட்டுக்காரன் வக்ரமாயிருந்தால் பெரும்பாலும் தாம்பத்திய பந்தம் முறிந்து போகும். அல்லது விவாக ரத்தோ மரணமோ ஏற்படும். ஜோடி சேர்க்கப்படும் மற்றொரு ஜாதகத்தில் செவ்வாய்க்குக் கேந்திரமாகச் சனி 8–ல் இருக்குமானால் தம்பதிகளுக்கிடையில் வெறுப்பும், அபிப்ராய பேதமும் ஏற்பட்டு அன்பு இல்லாமல் போகும் சனியும், சுக்கிரனும் சம சப்தகமாக விருந்தால்

அநேகமாகக் கல்யாணங்கள் தாமதமாகும் மனைவிக்கோ புருஷனுக்கோ ஒருவர்மீது ஒருவருக்கு அப்பிரீதி ஏற்படும்.

புருஷனுக்கும் ஸ்திரீக்கும் பொதுவாக பலமான பிணைப்பை சூசிப்பது சூரியன், சந்திரன் அல்லது சுக்கிரன் மற்றவருடைய லக்னத்தில் இருப்பதே அல்லது சந்திரனும் சுக்கிரனும் மற்றவருடைய குஜ லக்னத்திலிருக்க வேண்டும். இந்த கிரக நிலைமை இருப்பதாலேயே ஒருவரை ஒருவர் கண்ட மாத்திரத்திலேயே காதல் பிறக்கிறது. உதாரணமாக புருஷ ஜாதகத்தில் சுக்கிரன் விருஷபத்திலும், பெண் ஜாதகத்தில் செவ்வாய் விருஷபத்திலும் இருந்தால் கண்டதும் காதல் ஏற்படும் எனலாம். இதுபோன்ற இனங்களில் அநேகமாகப் பெண்கள் புருஷனோடு வெளியேறி விடுவார்கள். இத்தகைய கிரகநிலையிலுள்ளவர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பது விபரீதமாகும். 1, 2, 4, 12 இடங்களில் செவ்வாயிருப்பது அவ்வளவு கெடுதலானதென்று சொல்வதற்கில்லை ஆணோ, பெண்ணோ மரண மடைந்து விடுவார்கள் என்பதற்கில்லை. மேற்சொன்ன இடங்களில் செவ்வாய் இருப்பதற்காக மற்றொரு ஜாதகத்தில் அம்மாதிரியில்லையென்று ஜாதகங்களை ஒன்று சேர்க்காமல் தள்ளிவிடுவது ஜோதிஷத்துக்குச் சேவைசெய்ததாகாது வேறெந்த தோஷமாவது இந்த செவ்வாய் தோஷத்தைப் பரிகரிக்கக்கூடும்.

மண வாழ்க்கையில் சந்தோஷம் நிலவுவதற்குச் சூரியன், சந்திரன். சுக்கிரன் போன்ற முக்கிய கிரகங்களைப்பற்றியும் சிந்திக்கவேண்டும். ஸ்திரீ ஜாதகத்தில் புருஷன் மூலம் சந்தோஷத்தையும், சுகத்தையும் பெறுவதற்குச் சூரியன் காரணம். இதேபோல புருஷ ஜாதகத்தில் ஸ்திரீகள் மூலமாகச் சுகம்பெறுவதற்கு சந்திரனும் சுக்கிரனும் காரணம். 7வது வீட்டில் எந்த கிரகமும் இல்லாவிட்டால், சந்திரன், சூரியன் இவர்களுடைய அம்ச கிரகங்களிலிருந்து மனைவி அல்லது புருஷனின் நல்லொழுக்கத்தை முறைமே சூட்சமமாகத் தெரிந்துகொள்ளலாம்.

சீர்கேட்டைக் குறிக்கும் கிரகம் நெப்டியூன். ஜீவசக்துகளை உறிஞ்சக்கூடிய கிரகமிது. மனதையும், சீலத்தையும் அடிமைப்படுத்தவும் செய்யும் பிரசங்க வன்மையைக் கொடுக்கும் சக்தி உள்ளது ரஸானுபவ பக்குவத்தைக் கொடுக்கக்கூடியது ஆத்மீகபாவமான பயன்களை வழங்கவல்லது அன்றாட வாழ்வுக்கு ஒத்துவராத லட்சணங்களைக் கொடுக்கக்கூடியதுமாகும். ஒரு வீட்டில் சுமார் 14 வருஷங்கள் தங்கியிருக்கும்.

ஒரு ஜாதகத்தில் நெப்டியூன் 7 வது இடத்தில் இருந்தால் மண வாழ்க்கையில் விசேஷ ஏமாற்றமேற்படும் என்பதைக் குறிக்கும். விசித்திரமான வதந்திகளுக்கு இடமேற்படுவதுடன் எதிர்பாராத விதமாகக் கல்யாணங்கள் நிகழும்.

புருஷ ஜாதகத்தில் 7-வதுஇடத்தில் நெப்டியூன் இருந்தால் மனைவி விரும்பத்தக்கவளாக வந்து சேருவாள். ஆனால் இவளிடம் அசாதாரணமாகவும், நூதனமாகவும் ஏதாவது ஒரு விசேஷம் இருக்கும். இந்த சேர்க்கையே நூதனமாயிருக்கும். உயரம் குறைவாயிருக்கும். அல்லது ஸங்கீதத்தில் பங்குகொண்டிருப்பார் 7-வது வீட்டில் நெப்டியூன் இருந்தால் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற உணர்ச்சி வெகு தீவிரமாயிருக்கும் இதே இடத்தில் நெப்டியூன் இருப்பதாலேயே கல்யாணம் நடைபெறுமல் போகும். அல்லது ரொம்ப அதிருப்திகரமாக வாவது போகும்.

மனிதவர்க்கத்தின் உணர்ச்சி பாவ விஷயங்களில் இந்த கிரகம் நாசத்தை விளைவிக்கக்கூடிய தன்மை உடையது அபினி, கஞ்சா போன்ற பழக்கம் அலட்சியம், வியபசாரம் முதலிய குணங்கள் எல்லாம் இந்த கிரகத்தினுல்தான்.

உரானஸ் நெப்டியூனைவிட அனுகூலமானது இதுவும் விசித்திரமான கிரகமே. இது ஒரு ராசியில் 7. வருஷமிருக்கிறது சுய சிந்தனைக்கும், அசாதாரணமான குணத்துக்கும் இடம் கொடுப்பதாயிருக்கும்: ஓரளவு ஆராய்ச்சி மேதையையும் இக்கிரகம் வழங்கவல்லது. அதிருஷ்ட விஷயத்திலும் ஒரு நிலையில் இல்லாதபடி சம்பவங்களை நிகழவைக்கும் சக்தி இதற்குண்டு பாரமார்த்திகச் சித்த விருத்தியையும் கொடுக்கக்கூடிய கிரகம்.

இந்த கிரகம் 7-வது வீட்டில் இருந்தால் கல்யாண விஷயங்களில் விநோத சம்பவங்கள் நிகழும். தீவிர உணர்ச்சிப் பற்று காரணமாக அநேகம் சிக்கல்கள் ஏற்படும். 7-வது வீட்டில் இந்த கிரகம் இருப்பது காரணமாக விவாக ரத்து விபரீதம் ஏற்படலாம். விரோதமுண்டாகக் கூடும். அல்லது திடீரென்று மனைவியோ, புருஷனே மரணமடைந்தும் போகலாம். 7-வது வீட்டிலுள்ள உரானஸுக்குச் சுப திருஷ்டி யிருக்குமானுல் மனைவி, அல்லது புருஷனுக்குக் கலைப் பண்பு இருக்கும். கல்வியறிவிருக்கும். செல்வ சுபிட்சமும் உண்டு. கெட்ட கிரகத்தின் பார்வை ஏற்பட்டிருந்தால் எதிர் பாராத மரணமோ, மனைவி புருஷனுக்குள் சண்டை பூசல்களோ ஏற்படும்.




ஸ்கூலுக்கு டயமாயிடுத்தே. என்னடா இங்கே உட்கார்ந்திண்டிருக்கே?

ஸ்கூலுக்கு டயமாயிடுத்தே என்னடா இங்கே உட்கார்ந்திண்டிருக்கே?

198587



தென்னை மரத்தில் தேள் கொட்ட', ஜெல் நெல்லி மரத்தில் நெறி கட்டுமாம்!

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் : 1909. டெலிபோன் நெ. 57.

# டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல், கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள்:—
சுராஜ் ஏஜன்ஸீஸ்,
157 லாயிட்ஸ் ரோட்,
மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

## ஜாதகம்! ★ ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம் :- 1 முதல் 8 உமது எதிர் காலகேள்விகட்கு ரூ.2. 8-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூபா 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூபா 3. ஒரு தசாவிற்கு புக்தி வாரியாக எழுத ரூ.12.

குறிப்பு :—வெளிநாடுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

★

மானேஜர்.

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம், P. O. (தென் இந்தியா)

## சிறந்த கூந்தல் உணவு



உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே. காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர். இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள். எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)
இணையற்ற வாசனை. நீடித்த நறுமணம். தபால் சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.
Sole Agent ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.
285, Jamma Musjid P. O. Box 2085, Bombay 2.

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்

Vol XXI] விக்ருதி௵ ஆடி௴ 29௳ ★ 1950-௵ ஆகஸ்ட்௴ 13௳ No. 28

பொருளடக்கம்

★


| | | பக்கம் |
|---|---|---|
| நிகழ்ச்சிச் சித்திரம் | தாணு | 2 |
| கதலிவன காதலி | ஜெகசிற்பியன் | 5 |
| ஒளி தந்த தினம்! | நா. சீ. வரதராசன் | 10 |
| கலா மண்டபம் | | 11 |
| பாவை | எல்லார்வி | 15 |
| வாழ்க்கைச் சுழல் (தொடர் கதை) | இந்து | 18 |
| ஹிந்திப் பாடங்கள் | பண்டிட்ஜீ | 21 |
| ஸங்கீத பாரிஜாதம் | பண்டித கிருஷ்ணமாச்சார்யா | 28 |
| விட்டில் கோர்ட்! | சுவை | 30 |
| தேர்த்தட்டு வார்த்தை | வாரன் | 33 |
| சிறுவர் பகுதி | எஸ். ரங்கராஜன் | 35 |
| நவரஸ நந்தவனம் | கனல் | 40 |
| விலைவாசி | | 44 |
| உங்கள் கால பலன் | பி. வி. ராவ் | 45 |


"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே, அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

# கண் திறக்குமா?

கொரியத் தகராறில் இந்திய சர்க்கார் மேற்கொண்ட வேலை முறை இந்தியப் பார்லிமெண்டில் பெருமிதமான ஆதரவு பெற்றதில் ஆச்சரியமில்லை. எனினும் அவ்வேலை முறையைப்பற்றிச் சிலர் குறைகூறவும கூச வில்லை. உண்மையில், இத்தகராறில் துவக்கத்திலிருந்து இதுவரை இந்திய சர்க்கார் கடைப்பிடித்து வந்துள்ள முறைதான் நியாயமானது; இந்நாட்டின் உன்னதமான லட்சியங்களுக்கு முற்றிலும் பொருத்தமானது என்பதை பண்டித ஜவாஹரும், ராஜாஜியும் வெகுத் தெளிவாக விளக்கிவைத்திருக்கின்றனர்.

இந்த விளக்கத்துக்குப் பின்னும் இவ்விஷயத்தில் இந்தியாவின் அந்தரங்க சுத்தியைப்பற்றி மேனாடுகள் எதிலும் சந்தேகம் வெளியிடப்படுமோயின், அது சிறிதும் யோக்கிய புத்தியைக் குறிப்பதாகாது. துராக்கிரமிப்பு எங்கு நடந்தாலும் அதை இந்நாடு அனுமதிக்கத் தயாராயில்லை. இதையொட்டி கொரியாவில் துராக்கிரமிப்பு நடந்ததும், அதற்கு ஜவாப்தாரியானவர்களைக் கண்டிக்க இந்நாடு சிறிதும் தயங்கவில்லை. இதுபற்றி ஐ. நா. பந்தோபஸ்து சபையில் வந்த கண்டனத் தீர்மானத்துக்கு இந்நாடு ஒருமுகமான ஆதரவளித்தது. துராக்கிரமிப்பைத் தடுக்க உடனடியாகத் தேவையான நடவடிக்கையை எடுத்துக்கொள்வதென்ற பிரேரணைக்கும் இந்நாடு ஆதரவளித்திருக்கிறது. ஆனால், இப்பிரச்னை ராணுவ பலத்தின் மூலமே தீரும்போது தீரட்டும் என்று இந்நாடு வாளாவிருந்து விடுவதற்கில்லை. மேலும், அந்த வழியில் தீரவிடுவதில் கொரியப் போர் மற்ற இடங்களுக்கும் பரவி விடக்கூடிய பேராபத்தும் உண்டு என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம்.

எனவே, துராக்கிரமிப்பைத் தடுப்பதற்கான முயற்சியுடன், கொரியப் பிரச்னையை ஒரு நியாயமான அடிப்படையில் சமாதானமாகத் தீர்ப்பதற்கான சூழ்நிலையை விளைவிக்க முன்வருவதும் தங்கள் கடமையென இந்திய சர்க்கார் கருதியது முற்றிலும் இயற்கையே. அதற்கான முயற்சியெதுவும் ஐ. நா. சங்கத்தின் மூலமே நடைபெறவேண்டுமென்பதே தங்கள் கருத்தென்பதிலும் அவர்கள் சந்தேகத்துக்கு இடம் வைக்கவில்லை. அச்சங்கம் இக்காரியத்தை வெற்றிகரமாகச் சாதிப்பதானால் அதில் அங்கமவகிக்க உரிமை பெற்ற எல்லா நாடுகளும் அதில் பங்கெடுத்துக்கொள்வது அவசியம் என்பது



சர்க்காரே வியாபாரத்தை மேற்கொள்ளுவது பற்றி பம்பாய், சென்னை, கல்கத்தா, டில்லியில் விசாரணை நடத்தி ஆகஸ்ட் 3-ந்தேதி தனது ரிப்போர்ட்டைச் சர்க்காருக்கு சமர்ப்பித்த கமிட்டி மெம்பர்கள் இடதுபுற மிருந்து வலதுபுற வரிசையில் ஸ்ரீமான்கள் ராமநாத் கோயங்கா, பி. ஹிமத்சிங்கா, டாக்டர் பஞ்சாப ராவ் தேஷ்முக் (தலைவர்) எச் வி காமத் எஸ். வி கிருஷ்ணமூர்த்தி ராவ் டாக்டர் டி கே மல்ஹோத்ரா, (காரியதரிசி) ஜுன்ஜுன்வாலா.

வெட்டவெளிச்சம். ஆனால், அத்தகைய நாடுகளில் ஒன்றான ரஷ்யா ஒரு வாரத்துக்கு முன்வரை அதில் பங்கெடுத்துக்கொள்ளவில்லை. இன்னொன்றான சீனாவுக்கு அதில் இடமளிக்க இன்றளவும் பிடிவாதமாக மறுக்கப்பட்டு வருகிறது. சீனாவின் சார்பில் அதில் அமர்ந்துள்ள போலிப் பிரதிநிதியை வெளியேற்றிவிட்டு, உண்மையான பிரதிநிதிக்கு இடமளிக்கவேண்டுமென்பது இந்தியா வெளியிட்ட யோசனையின் கருத்து, உண்மையில், ஐ. நா. ஸ்தாபனம பூர்ண சக்தியுடன் முறைப்படி இயங்கச் செய்வதுதான். அவ்வாறு அது பூர்ண பிரதிநிதித்துவத்தால் பெறும் சக்தியுடன் இயங்கும் நிலையிலேயே அது துவக்கும் சமாதான முயற்சி எதுவும் உருப்படக்கூடுமென்ற நம்பிக்கைக்கு இடமிருக்கும். உண்மையில் இந்நாடு சீனக் குடியரசுக்கு அங்கீகாரம் அளித்தது முதலே அக்குடியரசுக்கு ஐ. நா. சங்கத்தில் பிரதிநிதித்துவம் ஏற்பட இந்தியா முயன்று வந்திருக்கிறது. வேறு பல நாடுகளுடன், பிரிட்டன், நார்வேபோன்ற தேசங்களும் அக்குடியரசை அங்கீகரித்திருக்கின்றன. எனினும், அமெரிக்கர் மட்டுமே இன்னும் சியாங் கோஷ்டிதான் சீனாவை ஆண்டுகொண்டிருப்பதுபோல் பேசுவது ஒரு சாதாரண வேடிக்கையல்ல. ஆனால், சீனக் குடியரசை அங்கீகரித்துள்ள பிரிட்டனும். நார்வேயும்கூட அக்குடியரசுக்கு ஐ. நா. சங்கத்தில் இடமளிக்கும் விஷயத்தில் அமெரிக்காவுக்கு பின்பாட்டுப்பாடுவது இன்னும் விசித்திரமாகும்.

பிரத்தியட்ச நிலைமையைப்பற்றிய உணர்வுடன் தங்கள் வேலை முறையை உருவாக்கிக்கொள்ள ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் தயாராயில்லாததே இன்று தோன்றியுள்ள சிக்கல்கள் பலவற்றுக்கும் மூல காரணம். குறிப்பாக ஆசியா விஷயத்தில் அந்நாடுகளின் பத்தாம்பசலி மனோபாவம் சிறிதும் மாறவில்லை. தங்கள் ஆதிக்கப் போட்டியில் தாங்கள் ஆட்டியபடியெல்லாம் ஆட இன்னும் ஆசிய மக்கள் தயாராயிருந்து வருகின்றனர் என்பது அந்நாடுகளின் நினைப்பு. குறிப்பாக அம் மக்களைப் பொறுத்த பிரச்னைகளில் அவர்களது கருத்தை தாங்கள் சிறிதும் மதிக்கவேண்டிய அவசியமில்லையென்று ஆங்கிலோ-அமெரிக்க தேசங்கள் எண்ணுவது எவ்வளவு அபாயகரமான எண்ணம் என்பதை பண்டித ஜவாஹர் எடுத்துக்காட்டி எச்சரித்துள்ளார். இப்பிராந்தியத்திலுள்ள தங்கள் கையாட்களைத் தூக்கிவிட்டு, தங்கள் ஆதிக்க நோக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்வதென்பது இனி நடவாதென்பதை சீனாவில் ஏற்பட்ட அனுபவத்திலிருந்தாவது அமெரிக்கர் உணர்ந்திருக்கவேண்டுமே. பண்டித ஜவாஹர் விடுத்துள்ள தற்போதைய எச்சரிக்கையாவது அவர்கள் கண்ணைத் திறக்க உதவுமா?



# கதலிவன காதலி

'ஜெகசிற்பியன்'

காலை இருள் இன்னும் கலையவில்லை. உதயத்தின் சன்னமான ஒளியைக்கூட மார்கழி மாதத்திய கனமான பனிப்புகைப் படலம் அமுத்திக் கொண்டிருந்தது.

ஒற்றை மாட்டுவண்டியிலிருந்து இறங்கி குத்தாலம் ஸ்டேஷனுக்குள் நுழைந்தேன் அரைத் தூக்கத்திலிருந்த டிக்கட் விநியோகஸ்தரை எழுப்பி சென்னைக்கு ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு 'பிளாட்பார'த்திற்குச் சென்றேன். 'ஹோல்டாலை'யும். பெட்டியையும் ஒரு பக்கமாக வைத்துவிட்டுப் போய்விட்டான் வண்டிக்காரன்.

இடது கையை உயர்த்தி கடியாரத்தில் மணி பார்த்தேன் அப்போதுதான் மணி ஐந்தரையாகி இருந்தது ஏழரை மணிக்கு வரும் சென்னை வண்டிக்கு இவ்வளவு சீக்கிரம் கிளம்பி வந்துவிட்டதைக் குறித்து நான் ஒன்றும் வருத்தப்பட்டுக்கொள்ளவில்லை காரணம். கிராமங்களிலிருந்து பட்டணத்துக்குச் செல்லுபவர்கள் யாராய் இருந்தாலும் இப்படித்தான் அலறியடித்துக்கொண்டு ஸ்டேஷனில் வந்து விழுவது' வழக்கம்,

பிளாட்பாரத்தில் ஐந்தாறு பிரயாணிகளே குளிர் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனர் சிலர் அந்தக் குளிரைப் போக்குவதற்காக சுருட்டுப் புகையைக் கிளப்பி, பனிப் புகையுடன் கலக்கவிட்டுக்கொண்டிருந்தனர்! பனியில் நனைந்து வரும் காற்று என் செவிகளில் ஐஸ் தண்ணீர் போன்று பாய்ந்து பற்களை 'டைப்' அடிக்கச் செய்தது! போர்த்தியிருந்த மேல் துண்டை உதறி காது மறையும்படியாக முண்டாசு கட்டிக்கொண்டு, இரும்புக் கிராதியின் ஓரமாகப் போட்டிருந்த ஓர் பெஞ்சியின் மீது போய் உட்கார்ந்துகொண்டேன்

ஐந்தே முக்காலுக்கு அந்த ஸ்டேஷனைத் தாண்டிச் செல்லும் 'பாஸ்ட் பாஸஞ்சர்' வெகு தூரத்தில் வருவதாக அறிவித்தது, தலைவணங்கி நின்ற கைகாட்டி மரம்!

அந்த வண்டி இந்த ஸ்டேஷனில் நிற்காததலால், ஸ்டேஷன் சிப்பந்தி ஒருவன். பெரிய பந்தம் ஒன்றைக் கொளுத்திக்கொண்டு, 'சாவி'யுடன் அங்கே வந்து நின்றான், சிவப்புக் கொடியைப் பச்சைக் கொடியுடன் சுற்றிய சுருணையைக் கட்கத்தில் இடுக்கிக்கொண்டு, 'ராஜநடை' போட்டுக்கொண்டிருந்தார் ஸ்டேஷன் மாஸ்டர் சற்று நேரத்திற்கெல்லாம் ராக்ஷஸனைப்போல பாய்ந்து வந்த 'பாஸ்ட் பாஸஞ்சர்,' அதே வேகத்துடனேயே அந்த ஸ்டேஷனை ஒரு சிறிதும் லட்சியம் செய்யாமல் ஓடி மறைந்துவிட்டது

குளிர்பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன் நான். காலை நேரமானதால் மனம் எவ்வத சிந்தனை அழுத்தமும் இல்லாமல் லேசாக இருந்தது காலையில், பெருக்கி, சாணம் தெளித்து. கோலமிட்டு சுத்தமாக வைக்கும் வாசல், மாலையாவதற்குள் குப்பைக் கூளங்கள் சேர்ந்து அசுத்தமாகி விடுவதைப்போல, மனிதனின் தெளிவான கறைபடியாத காலை மனம், மாலையாவதற்குள் பற்பல விதமான இன்ப-துன்பக் கறைகளால் அழுக்கேறி கனத்து விடுகிறது! காலை உள்ளத்தைப் போலவே வாழ்க்கை பூராவும் இருந்துவிட்டால்? அப்படியிருக்க புத்தி தெளியாத குழந்தைகளாலும், முற்றுந்துறந்த யோகியராலுந்தான் முடியும் போலும்!...

இவ்வாறெல்லாம்சிந்தித்துக்கொண்டே நேரத்தை நகர்த்திக்கொண்டிருந்தேன் அடிக்கொருதரம் தெற்குநோக்கிப்பாய்ந்துகொண்டிருந்த என் கண்களைக் கவர்ந்திழுத்தது ஒரு பெரிய வாழைத் தோட்டம்.

சுமார் மூன்று ஏக்கர் சுற்றளவுக்கு, பச்சைப் பசேலென்று. செழிப்பாகவும், ஒரே உயரமாகவும் வளர்ந்திருந்தது அந்த வாழைத் தோட்டம். வாழை மரங்களுக்கிடையே அகத்தி மரங்கள் கொழு கொழுவென வளர்ந்து நின்றன தோட்டத்தைச் சுற்றி ஓடும் கால்வாய் ஓரமாக மூங்கில் வேலி பின்னப்பட்டிருந்தது குத்தாலம் ஸ்டேஷனுக்கு எதிரே-அதாவது ரெயில் பாதையின் ஓரமாக-அந்த வாழைத் தோட்டம் அமைந்திருப்பது அப்பிராந்தியத்திற்கே ஒரு தனி சோபையளிப்பதாய் விளங்கியது.

கண்ணனுக்குக் குளிர்ச்சியளிக்கும் அவ்வாழைத்தோட்டத்தையே பார்த்திருந்த என் பார்வை, அத்தோட்டத்தின் பக்கத்திலேயே தனித்து நின்ற ஒரு ஓலைக் குடிசையின்மீது விழுந்தது. வட்டமாகவும், செங்குத்தாகவும் அமைந்திருந்த அந்தக் குடிசையின் எதிரில், ஒரு நார் கட்டில் போடப்பட்டிருந்தது. கட்டிலுக்கு இடது புறத்தில் இரண்டு காளை மாடுகளும், ஒரு பசுவும் மூலையில் கட்டப்பட்டிருந்தன வலது பக்கத்தில், வளமாகவும் வனப்பாகவும் வளர்ந்து நின்றன இரு செவ்வாழை மரங்கள் அவை ஒன்றையொன்று தழுவியவாறு நின்றிருந்தன. அந்த வாழை மரங்களைச் சுற்றி சிறு பாத்திகள் கட்டி, அதில் அழகிய மலர்ச் செடிகளை வரிசைக்கிரமமாக வளர்த்துவிடப்பட்டிருந்தது. இவ்வளவு பெரிய வாழைத் தோட்டம் இருக்கும்போது இந்த இரண்டு மரங்களை மட்டும் இப்படித் தனியாக வைத்துப் பாதுகாப்பது எனக்குப் பைத்தியக்காரத்தனமாகவே பட்டது! வாழை மரங்களிரண்டும், மாடத்தில் வைத்துப்பாதுகாக்கும் துளசிச் செடி போன்று அவ்வளவு பயபக்தியுடன் வளர்க்கப்பட்டு வருவதாகவே எனக்குத் தோன்றியது!

இப்படி அந்த வாழை மரங்களையே பார்த்துக்கொண்டிருந்த என்னை மற்றுமொரு அதிசயம் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது

குடிசையின் எதிரில் போடப்பட்டிருந்த கட்டிலிலிருந்து, சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க கிழவனொருவன் அவசர அவசரமாக எழுந்திருந்து குடிசையினுள் புகுந்தான் சற்று நேரத்திற்கெல்லாம் தோளில் ஒரு மண்வெட்டியுடன் வெளியே வந்து நேரே அந்த இரண்டு வாழை மரங்களின் அருகில்போய் நின்றான் பின்னர் தோளிலிருந்த மண்வெட்டியைக் கீழேயிறக்கி வைத்துவிட்டு, இரு கரங்களையும் பயபக்தியுடன் குவித்து அவ்வாழை மரங்களை மூன்று முறை



வலம்வந்து, தொட்டுக்கும்பிட்டு விட்டு, கீழேயிருந்த மண்வெட்டியுடன் வாழைத்தோட்டத்திற்குள் நுழைந்து மறைந்துவிட்டான்!

ஐந்து நிமிஷத்தில் நிகழ்ந்த இந்த அதிசயமான சம்பவத்தின் அர்த்தம் புரியாமல் திகைத்துப் போனவனாய் உட்கார்ந்திருந்தேன் நான் சாதாரணமாக நாமெல்லாம் அரச மரங்களையும் வேப்ப மரங்களையும் சுற்றி வருவதைப் பார்த்திருப்போம்; சுற்றியும் வந்திருப்போம்! ஆனால் அந்தக் கிழவன் வாழை மரங்களையல்லவா வழக்கமில்லாத வழக்கமாய் வழிபட்டு விட்டுச் சென்றான்! குழம்பிய சிந்தனையால் சற்றுநேரம் கண்களை மூடிக்கொண்டு அப்படியே இருந்துவிட்டேன்.

"ஏன் ஸார்! வண்டி வர இன்னும் எவ்வளவு நேரமிருக்கிறது?" என்று கேட்டு என் நிஷ்டையைக் கலைத்தார் அவ்வூர் பிரபலவியாபாரி ஒருவர் அந்த நபர் வாரத்திற்கொருதரம் சென்னைக்குப் போய்விட்டு வருவது வழக்கம். இன்றைக்கும் அவர் சென்னைக்குத்தான் புறப்பட்டிருக்கிறார் என்ற ஊகத்துடன் கடியாரத்தைப் பார்த்துவிட்டு, "மணி ஆறுதான் ஆகியிருக்கிறது அந்தப் 'பாஸஞ்சர்' வர இன்னும் ஒன்றரை மணி நேரமாகும்" என்று சற்று சலிப்பாகவே சொன்னேன்.

"நீங்களும் சென்னைக்குத்தான் பிரயாணமோ!" என்றார் மேலும் அந்த மனிதர்.

"ஆமாம்" என்று சுருக்கமாகப் பதில் கொடுத்தேன்

"என்ன ஸார்! அந்த வாழைத் தோட்டத்தை அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கேள்! குடிசையிலிருந்து ஒரு கோமாளி கிழவன் வந்து அந்த வாழைக் கன்றுகளை வணங்கி விட்டுப் போனானே என்ன?" என்றார் அலட்சியமாக அவர்! திடீரென் அந்த ஆசாமி சொல்லி வைத்தாற் போல இப்படிக் கேட்டது எனக்குப் பெருத்த ஆச்சரியமாகிவிட்டது, பல கேள்விக்குறிகள் என் முகத்தில் தெளிய வெறுமனே அவரை ஏறிட்டுப் பார்த்தேன்

"ஹாம்! வண்டி வர இன்னும் ஒன்றரை மணி நேரமிருக்கோல்லியோ! அதுவரை அந்த அதிசயக் கிழவனின் சோகக் கதையையாவது உம்மிடம் சொல்லிக்கொண்டிருக்கிறேன் கேட்பதற்குச் சிரமம் ஒன்றுமில்லையே!" என்று கூறி நான் உட்கார்ந்திருந்த பெஞ்சியில் வந்து உட்கார்ந்தார் அவர் ஆவலுடன் அவர் பக்கம் திரும்பி நிமிர்ந்து உட்கார்ந்தேன். அந்த வாழைத் தோட்டத்தையும் குடிசையையும் ஒருமுறை பார்த்துவிட்டுப் பேச ஆரம்பித்தார் என் சகபிரயாணி

* * *

அந்தச் சம்பவம் நடந்து இன்னும் மூன்று வருஷங்கள்கூட முழுசாய் முடிவடையவில்லை இதோ இந்த வாழைத் தோட்டமிருக்கிறதே. இந்த நிலம் இவ்வூர் பிரபல மிராசுதாரரான ராமசாமி கவுண்டருடையதாகும். இந்த நிலத்தில் மூன்று வருஷங்களுக்கொருமுறை, மாற்றி மாற்றி வெற்றிலைக் கொடியும் வாழை மரங்களும் பயிரிடுவது வழக்கம் தோட்டத்தின் பூரா பொறுப்பையும், சுமார் இருபத்தைந்து வருஷங்களாக அவரிடம் வேலை செய்துவந்த கந்தசாமி சேர்வையிடமே ஒப்படைத்துவிட்டிருந்தார். நேர்மையும் தன்னலமற்ற உழைப்பும் பிறவிக் குணங்களாகக் கொண்ட கந்தசாமி சேர்வை; இந்த நிலத்தின் வாயிலாக இயற்கை செல்வங்களை கவுண்டருக்கு வாரி வாரி கொடுத்துக்கொண்டு வந்தான்

ராமசாமி கவுண்டருக்கு ஜயராமன் என்ற பையனொருவன் இருந்தான். அவன் திருச்சி கல்லூரியொன்றில் 'இண்டரு'க்குப் படித்துக்கொண்டிருந்தான்

கந்தசாமி சேர்வையின் மனைவி ராமக்காள், சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னால் காமாட்சி என்ற மூன்று வயது பெண்குழந்தையொன்றை அவனிடம் விட்டு விட்டு நிரந்தரமாகக் கண்ணை மூடிக்கொண்டாள் கந்தசாமிக்கு அந்தக் குழந்தைதான் இவ்வுலக சுகங்கள் எல்லாமுமாக இருந்து வந்தது அக்குழந்தை இப்போது பதினைந்து வயது நிரம்பிய பருவ மங்கையாக அவன் குடிசையை அலங்கரித்துக்கொண்டிருந்தாள்.

சிறுவயதிலிருந்தே கவுண்டர் மகன் ஜயராமனும் சேர்வை மகன் காமுவும் சேர்ந்து விளையாடுவது வழக்கம். 'ராமண்ணா, ராமண்ணா!' என்று அவன் பின்னாலேயே சுற்றிக்கொண்டிருப்பாள் காமு ஜெயராமனுக்கு உடன் பிறந்தவர்கள் யாருமில்லாததால் காமுவையே 'தங்கச்சி தங்கச்சி' என்று உயிரை எடுத்து விடுவான். இந்த இளம் உள்ளங்களின் சிநேக பாவத்தைக் கண்டு கந்தசாமிக்கு ஒரே பெருமிதமாயிருக்கும் கவுண்டர் கூட சில சமயங்களில் அவர்களின் விளையாட்டுகளைப் பார்த்து மெய்ம் மறந்து போய் விடுவார்.

* * *

கல்லூரிக்குப் போன முதல் வருஷத்து விடுமுறையில் கிராமத்துக்கு வந்திருந்தான் ஜயராமன் இப்போது ஜயராமனும் காமுவும் குழந்தைகளாகஇல்லை பருவமடைந்த காளையாகவும் குமரியாகவும் அவர்களை ஆக்கிவிட்டிருந்தது இயற்கை! ஆனால் அவ்விருவருமே இயற்கை தம்மை வளர்ச்சியுறச்செய்திருப்பதை ஒரு சிறிதும் லட்சியம் செய்யாமல் குழந்தைகளாகவே பழகி வந்தனர்! இப்படி இவர்கள் நெருங்கி விளையாடுவது கந்தசாமிக்குப் பெருமையாக இருந்தபோதிலும் ராமசாமி கவுண்டருக்கு அகௌரவமாகப்பட்டது. ஆயினும் தம் கருத்தை வாய் விட்டுச் சொல்ல அவர் துணியவில்லை.

* * *

அந்த வருஷம் கவுண்டரின் நிலத்தில் வாழை மரங்கள் மிகப் பெரிய அளவில் பயிரிடப்பட்டிருந்தன மரங்கள் யாவும் வயதுக்கு வந்த பெண்களைப்போல தொண்டையில் குலையை அடைத்துக் கொண்டும், கண்ணாடி இலையை விரித்துக்கொண்டும் விளங்கின

அன்றொரு நாள் காலை காவிரியாற்றிலிருந்து வாய்க்காலெடுக்கப்பட்ட



தண்ணீரை அணைகட்டி, வாழைத் தோட்டத்திற்கு மடை திறந்துவிட்டு விட்டு, மேலண்டை புறமிருந்த சோளக் கொல்லைக்குப் போய் விட்டான் கந்தசாமி அவன் அங்கு போய் திரும்பி வருவதற்குள் சூரியன் நடு வானத்திற்கு ஏறிவிட்டது

காலை ஆறுமணிக்கே மடை திறந்து விட்டு விட்டதால் தோட்டம் முழுமைக்கும் தண்ணீர் பாய்ந்து நிறைந்திருக்கும் என்று எண்ணி, தோட்டத்தின் முகப்பு வேலிப்படலைத் திறந்து கொண்டு, தண்ணீர் பாயும் கூடுவாயிலண்டை வந்தான் கந்தசாமி அவன் வந்து நின்ற இடத்துக்குச் சற்று தொலைவில் யாரோ இருவர் பேசிக்கொண்டிருக்கும் குரல்கேட்டு அசைவற்றுப்போய்விட்டான்! 'வாழைக் குலைகளை திருடிக்கொண்டு போகத்தான் யாரோ வந்திருக்கிறார்கள் என்று நினைத்தமாத்திரத்தில் கோபம் அவனுக்குப் பொத்துக்கொண்டு வந்தது பட்டப்பகலில் திருட வந்திருக்கும் அந்தப் பைத்தியக்காரர்களை கையும் மெய்யுமாகப் பிடிக்க வேகமாய் இரண்டடி எடுத்து வைத்தான். அடுத்தக்கணம் கன்னத்தில் அறையப்பட்டவன் போன்று அங்கேயே நின்றுவிட்டான் கந்தசாமி! அவனது செவிகள் பக்கத்திலிருந்து வந்த பேச்சுக் குரலை வெகு உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பித்தன

'அண்ணா! எனக்கு எப்போதும் உங்கள் கூடவே இருக்கவேணும் போலிருக்கிறதே; அது ஏன்?"

"எனக்கும் தான் அப்படியிருக்கிறது!...அது இருக்கட்டும்; காமு! இனிமேல் நீ என்னை 'அண்ணா' என்று அழைக்கக்கூடாது!'

"ஏன் அண்ணா? உங்கள் அப்பா கோபித்துக்கொள்கிறாரா?"

'பார்த்தாயா! மறுபடியும் அண்ணா என்கிறாய்!"

பின்னே எப்படித்தான் உங்களைக் கூப்பிடுவதாம்?'

'ஒன்றுமே சொல்லிக் கூப்பிட வேண்டாம்!'

"அப்போ என் மீது உங்களுக்குக் கோபமா?'

'கோபமோ, கீபமோ கிடையாது நீ அண்ணா என்பது எனக்குப் பிடிக்கவில்லை!'

"சரி அண்ணா!"

"பார்த்தாயா! மறுபடியும்..."

"இல்லை, இல்லை வந்து...ஆமாம்; என்னை நீங்கள் என்னவென்று கூப்பிடுவீர்களாம்?"

"சொல்லட்டுமா?..." என் காதலி வனா காதலியே என்று அழைப்பேன்!'

"அப்படியென்றால் எனக்கு ஒன்றும் புரியவில்லையே!"

"உனக்கு அது புரிய வேண்டாம்! விளங்கும்போது தன்னாலேயே விளங்கிவிடும்!"

"போங்கள் அண்ணா! என்னென்னமோ!..."

"சரியாய்ப் போச்சு! எத்தனை தடவை அண்ணா என்று சொல்லாதே சொல்லாதே என்பது?"

'இல்லை தப்பு! தப்பு!'—பேச்சு இத்துடன் நின்று அவ்விருவருடைய சிரிப்பொலியும் அந்தத் தோட்டத்தையே கலகலக்க வைத்தது! பேயறைந்தவன் போன்று அசைவற்று நின்றிருந்த கந்தசாமி மெதுவாகத் தலையை நீட்டி பேச்சுக்குரல் வந்த திசையை நோக்கினான் காமுவும் ஜயராமனும் கைகோர்த்துக் கொண்டு அங்கிருந்து கிளம்ப அப்போதுதான் ஆயத்தமானார்கள்!

கந்தசாமி சேர்வையின் முகம் அந்த விநாடியே விகாரமுற்றுவிட்டது தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டே தன் குடிசைக்கு விரைந்து சென்றுவிட்டான் அவன்.

* * * *

நாட்கள் வாரங்களாக நகர்ந்து கொண்டிருந்தன கந்தசாமி நோய் பிடித்தவனைப்போன்று எதிலுமே பற்றற்றவனாக சுழன்று கொண்டு வந்தான். தனது மகளின் இந்த விபரீத நடத்தையையும், கைகூடா ஆசையையும் நினைத்து நினைத்து வெதும்பிப் பொருமினான் இந்த உலகின் வாழ்வே தன் அருமை மகளின் உருவாகத்தான் இருக்கிறது என்று இதுகாறும் எண்ணிவந்த அவன், இப்போது அவளை எந்தவிதத்தில் கண்டித்துப் புத்தி கூறுவதென புரியாமல் தவித்தான்.



'இருபத்தைந்து ஆண்டுகள்வரை ராமசாமி கவுண்டரை எனது கண்கண்ட தெய்வமாகப் பாவித்து உண்மையுடன் தொண்டாற்றி, அவரது உப்பைத்தின்று உயிர்வாழ்ந்துவரும் என்னுடைய மகள் இப்போது செய்யத் துணிந்த செய்துவரும் செயல்-துரோகம்-எவ்வளவு பயங்கரமானது! இதனால் அவர்குடும்ப கௌரவமே களங்கமாகிவிடுமே என்று நினைக்கும்போதெல்லாம் கந்தசாமி இருதலைக்கொள்ளி எறும்புபோலானான். இப்போது அவனுக்குப் பிள்ளை பாசத்தைவிட எஜமான விசுவாசமே தலைதூக்கி நின்றது!

இரண்டொருமுறை ஜாடைமாடையாகத் தன் மகளை கண்டித்துப் பார்த்தான் தாயில்லா பிள்ளையை கடூரமாகக் கடிந்துகொள்ளவும் அவனது பெற்றமனம் இடந்தரவில்லை. ஜயராமனை நேரிடையாக அழைத்து அவனது அபாயகரமான செயலை எடுத்துக்கூறவும் துணிவுகொள்ளவில்லை ஒன்றுபோய் மற்றென்றாகிவிட்டால் பஞ்சையாகிய அவன் என்ன செய்வான்?

* * *

நாளுக்குநாள் அந்த இளங்காதலர்களின் உள்ளங்கள் ஒன்றையொன்று பிரிக்கமுடியாத அளவுக்கு பிணைந்துகொண்டு வந்தன உள்ளம் மட்டும் ஒன்றிவிடுவதிலேயே அவர்கள் இருந்துவிடுவார்களா? இவ்வாறு நினைக்கும்போதெல்லாம் கந்தசாமியின் சிரம் ஆயிரம் சுக்கலாகத் தெறிப்பதைப்போல இருந்தது உணவிட்டு வாழ்வளித்துக்கொண்டு வரும் ராமசாமி கவுண்டரை அவன் நஞ்சிட்டுக் கொலைசெய்யச் சதி செய்வதாகவே எண்ணிக் குமுறினான்

இவ்வித சிக்கலான நிலையிலிருந்து அவனையும், காமுவையும் மீட்டுக்கொள்ள அவன் என்ன செய்யவேண்டும்? தன் மகளுக்கு உடனடியாக ஒரு கல்யாணத்தை செய்து வைப்பதுதான் அப்போது செய்யக்கூடியதாய் தோன்றியது அவனுக்கு ஆனால்காமு தனக்குக் கல்யாணமே வேண்டாமென்று கண்டிப்பாக மறுத்துவிட்டாள் கந்தசாமி சேர்வைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை நிலைமை மோசமான கட்டத்தை நெருங்கிவிட்டது அந்தக் கதலி வன காதலர்களுடைய விஷயம் காற்றுவாக்காக ஊரில் சில பேருக்குத் தெரியலாயிற்று. இன்னும் இரண்டொரு வாரத்தில் இச்செய்தி கவுண்டரின் காதுக்கும் எட்டிவிடும்! பிறகு கந்தசாமியின் கதி?

* * *

பித்தனைப்போல நாட்களைக் கடத்திவந்தான் கந்தசாமி.

அன்றொரு நாள் காலை கம்பீரமாகப் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான் கந்தசாமி என்றுமில்லாத கனிவோடு தன் மகளை அழைத்து, 'காமு! இன்றைக்கு உன் அம்மா இறந்த நாள் நான் காவிரிக்குப் போய் குளித்துவிட்டு வந்து உனக்கு நானே சமைத்துப் போடுகிறேன்! நீ இன்றைக்கு எந்த வேலையுமே செய்யக்கூடாது...என்னுடைய சமையலை சாப்பிட்டுத்தான் பாரேன்!' என்று அன்புடன் கூறிவிட்டு வெளியே எழுந்து போய்விட்டான் கந்தசாமி. தன் தந்தையின் இந்தக் கனிவான பேச்சு காமுவுக்கு ஆச்சரியத்தையே அளித்தது காரணம், சில நாட்களாக இவ்விருவருக்குமே பேச்சு வார்த்தைகள் அற்றிருந்தன.

பதினொரு மணிக்கெல்லாம் இரண்டு மூன்று கறிவகைகளோடு சமையல் செய்து முடித்துவிட்டான் கந்தசாமி அதில் வாழைக்காய் பொரியலைத்தான் விசேஷ கவனம் செலுத்தி செய்து வைத்திருந்தான்

தன் மகளைக் கூப்பிட்டுப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு அவள் தலையை அன்புடன் வருடியவாறே இலையில் சாதம்பறிமாறினான் காய்கறிகளை எடுத்து வைத்தான். அவைகளில் வாழைக்காய் பொரியலே இலையில் அதிகமாக இடம் பெற்றிருந்தது! சரியாய் பன்னிரண்டு மணிக்கு வாழைத் தோட்டத்தில் வந்து காத்திருப்பதாக ஜயராமன் நேற்றே சொல்லிவைத்திருந்ததால். சற்று அவசரமாகவே சாபபிட ஆரம்பித்தாள் காமு

காமுவுக்குச் சாதம் பறிமாறிக்கொண்டு வந்த கந்தசாமியின் முகம் நிமிஷத்துக்கு நிமிஷம் விகாரமாக வெளிறிக்கொண்டு வந்தது ஏனோ அவன் கண்கள் கலங்கி நீரை கொப்பளித்துக்கொண்டிருந்தன "அப்பா! நீங்களும் சாப்பிட்டு விடுங்களேன்!" என்று கூறிக்கொண்டே வாழைக்காய் பொரியலை எடுத்து சுவைக்க ஆரம்பித்தாள் காமு

பொரியலில் பாதி தின்றுவிட்டிருப்பாள் சற்று நேரத்திற்கெல்லாம் ஏனோ அவளுக்குக் குமட்டல் வந்தது! அதைத்தொடர்ந்து குடலைப்பிடுங்கிக்கொண்டு வாந்தியும் எடுத்துவிட்டாள்!

"அப்பா! மயக்கமாக இருக்கிறதே! தொண்டையும், வயிறும் ஏனோ எரிச்சலெடுக்கிறதே!....அப்...பா!" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே உட்கார்ந்த இடத்திலிருந்து அப்படியே தரையில் சாய்ந்துவிட்டாள் காமு.

தனது மகளின் இந்தத் திடீர் மயக்கத்தைப் பார்த்துக்கொண்டு, ஒரு சிறிதும் கலங்காமலும், வைத்தக்கண் வாங்காமலும் மரம்போல் உட்கார்ந்திருந்தான் கந்தசாமி. இதற்குள் மகா பரிதாபமாகப் புலம்பிக்கொண்டே தரையில் கடகடவென புரள ஆரம்பித்தாள் காமு! கந்தசாமி சட்டென எழுந்து காமுவை தூக்கிக்கொண்டு போய் படுக்கையில் கிடத்திவிட்டு, அவள் பக்கத்திலேயே குத்துக்காலிட்டு உட்கார்ந்துகொண்டான்.

காமுவின் கண்கள் வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தன. அவளது சிவந்த வதனம் விநாடிக்கு விநாடி கறுத்துச் சுருங்கிக்கொண்டே வந்தது. மிக்கச் சிரமத்துடன் வாய் திறந்து "அப்பா!...... அந்த......அந்தப்......பொரியல். ...!". என்று சொல்வதற்குள் மரண அவஸ்தையே பட்டுவிட்டாள் காமு தன் மகளின் இந்தப் பேச்சைக் கேட்டு கந்தசாமி ஓர் வறண்ட சிரிப்பு சிரித்தான் அவ்வளவுதான்!

மீண்டும் மெதுவாகக் கண் திறந்தாள் காமு. தனது அழகிய கரங்களைத் தூக்கி கந்தசாமியை அணைத்துக்கொண்டு "அப்பா! கடைசியாக ஒரு முறை......என் ஜயராமனைப்... பார்க்க... வேண்டும்!..." என்று கூறி முடிப்பதற்குள், அவளது தங்கச்சிமிழ் போன்ற கண்ணிமைகள் அப்படியே நிலைத்து நின்றுவிட்டன!

அப்போதும் கந்தசாமி அசையாத கற்சிலைபோலத்தான் உட்கார்ந்திருந்தான் அவனது காய்ந்துபோன உதட்டிலிருந்து ஒரு நிம்மதியான சிரிப்பு வெடித்துச் சிதறியது! வாய்தான் அப்படிச் சிரித்ததே தவிர அவன் கண்கள், கங்கை உடைப்பெடுத்துக் கொண்டதைப்போல நீரைப் பெருக்கிக்கொண்டிருந்தன


# "எலிக்ஸிர் அஸ்வகந்தா"

★

மஹரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி, வயிறு, முதுகு, இடுப்புவலிகள் ஒழிந்து, நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர, இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது

"எலிக்ஸிர் அஸ்வகந்தாவே".

40 தோலா கொண்ட டின் ரூ. 10 தபால் செலவு பிரத்யேகம்.

★

ஆயுர்வேத வைத்தியர்

**T. V. ஜெயராம சாஸ்திரிகள்,**

விராகவ வைத்தியசாலா,

ஸ்ரீரங்கம். P. O S. I.




"வாழைக்காய் பொரியல்...இல்லை, இல்லை! விஷமிக்க எட்டிக்காய் பொரியல்!!' என்று முணகிக்கொண்டே அவ்விடத்தை விட்டு எழுந்து நின்றான் கந்தசாமி.

* * * *

கந்தசாமி சேர்வையின் மகள் காமாட்சி திடீரென இறந்துவிட்டது அந்த ஊருக்கே பெருத்த ஆச்சரியமாக இருந்தது அதிலும் ராமசாமி கவுண்டருக்குத்தான் அடக்கமுடியாத ஆதுரமாகிவிட்டது. பெண்ணைப் பறிகொடுத்த கந்தசாமி மட்டும் சற்றும் கலங்காமலிருப்பது அவருக்கு மேலும் வியப்பைத் தந்தது

காமு இறந்த அடுத்த நாள், பகல் பன்னிரண்டு மணியிருக்கும். ராமசாமி கவுண்டர் வாழைத் தோட்டத்தைப் பார்த்துவிட்டு வர கிளம்பினார். மகளை இழந்து தவிக்கும் கந்தசாமியை உடன் அழைத்துக்கொண்டு போக அவர் பிரியப்படவில்லை.

தோட்டத்தின் வடபாகத்தையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு தென்பாகத்துக்கு வந்து சேர்ந்தார் அவருக்குச் சற்று தொலைவில் ஏதோ ஒரு பலமான சலசலப்புச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விட்டார் கவுண்டர்! பிறகு தம்மை சமாளித்துக்கொண்டு சலசலப்பு வந்த திக்கை நோக்கி வேகமாகநடந்தார். அங்கே கண்டகாட்சி!...

"ஜயராமா!......ஜயராமா!......" என்று ஓவென கதறிக்கொண்டே அடியற்ற மரம்போல் மண்ணில் சாய்ந்து விட்டார் கவுண்டர்! அவருக்குப் பக்கத்தில் குற்றுயிரும் குறையுயிருமாய் துடித்துக்கொண்டிருந்தான் ஜயராமன்!!

* * *

ராமசாமி கவுண்டர் சிறு பிள்ளையைப் போல அழுதுகொண்டு உட்கார்ந்திருந்தார் டாக்டர் வந்து ஜயராமனைப் பரிசோதித்துவிட்டு 'விஷம் அருந்திவிட்டிருக்கிறான்' என்று சொல்லிப் போய்விட்டார்! ஜயராமனின் உயிரற்ற உடல் கட்டிலின்மீது கிடத்தப்பட்டுக் கிடந்தது!

* * *

வாரம் ஒன்று நகர்ந்தது. ராமசாமி கவுண்டர் பைத்தியக்காரனைப் போலவே ஆய்விட்டார் ஜயராமனும், காமுவும் திடீரென இப்படி இறந்துபோனதற்குக் காரணமே தெரியவில்லை அவருக்கு! எஜமானனின் குடும்ப கௌரவத்தை களங்கப்படுத்தக் கூடாதென்ற தீர்மானத்தால் தன் சொந்த மகளையே எட்டிக்காய் கொடுத்து கொன்றவிட்டதும், காமு இறந்து பின்தான் இருக்கப் பிரியப்படாமல் விஷம் அருந்தி இறந்துவிட்ட ஜயராமனின் பரிதாப இரகசியமும் கந்தசாமிக்கல்லாமல் வேறு யாருக்குத்தான் தெரியபோறது! உப்பளந்த வீட்டுக்கு ஊறுசெய்ய கனவிலும் நினைக்காத தமிழர்களின் தனிப்பெருங்குணம், இன்னும் இந்த நாட்டில் இறந்துவிடவில்லை என்பதை மெய்ப்பிக்க அவ்வப்போது 'கந்தசாமிகள்' தோன்றிகொண்டே இருக்கிறார்கள்போலும்! இல்லையென்றால் வருஷத்துக்கு ஒருமுறை பெய்யும் மழைகூட எங்கே பெய்யப்போகிறது?, ...

தம் உயிர்போன்று வளர்த்துவந்த பிள்ளை இறந்துவிட்டதால் கவுண்டருக்கு இந்த உலகமே இருண்டுவிட்டதுபோலாகியது கடைசியாக ஒரு நாள் கந்தசாமியை அழைத்து தம் வீட்டையும், நில புலன்களையும் அவனிடம் ஒப்படைத்துவிட்டு க்ஷேத்திர யாத்திரைக்குக் கிளம்பிப்போனவர் இன்னும் திரும்பி வரவே இல்லை!

கவுண்டர் இவ்வூரைவிட்டுப் போனதும் கந்தசாமி, இந்தத் தோட்டத்தின் பக்கத்திலேயே வந்து குடிசை போட்டுக்கொண்டு, ஒரு அதிசயமானச் செயலை அன்றிலிருந்து இன்றுவரை நாள் தவறாமல் செய்து வருகிறான்! அதாவது: அவன் குடிசைக்கு எதிரில் இரு செவ்வாழைக் கன்றுகளை நட்டு அவைகளைத் தன் உயிர்போலக் காத்து வருகிறான்! அதுமட்டுமல்லாமல், காலையிலும் மாலையிலும், தெய்வத்தை வழிபடுவதைப்போல அந்த வாழைக் கன்றுகளை அவன் வணங்கும் காட்சி, காண்பவர்களை நெக்குருகச் செய்துவிடும்! அவனுக்கு அவ்வாழைக் கன்றுகள் தனது அருமை மகள் காமுவாகவும், கவுண்டரின் மகன் ஜயராமனாகவும் காட்சியளித்துக் கொண்டு வருகின்றனபோலும்! ஷாஜஹானின் காதலை உலகுக்குப் பறைசாற்றி நிற்கும் தாஜ்மஹாலுக்கும் இந்தக் கதலிவன காதலர்களின் நினைவுச் சின்னத்திற்கும் யாதொரு ஏற்றத்தாழ்வும் கிடையாதென்றே நான் கருதுகிறேன்!......இப்போது தெரிந்ததா?...அந்தப் பஞ்சையின் பைத்தியக்காரச் செயலின் கதை!...' என்று என் ரயில் நண்பர் சொல்லி முடிப்பதற்கும் வண்டி வந்து ஸ்டேஷனில் நிற்பதற்கும் சரியாக இருந்தது.

கடைசியாக அந்தக் குடிசையையும், அவ்விரு வாழை மரங்களையும் ஒரு முறை பார்த்துவிட்டு, நானும் நண்பரும் வண்டியில் ஏறிக்கொண்டோம்.

வண்டி நகர்ந்தது


இந்த அற்புதமான

# PEPS

பெப்ஸ், இருமல், சளி, குளிர்ச்சி, இன்புளூயன்ஸாவை நிறுத்தும்





பெப்ஸ் வில்லைகளை மென்றவுடன் மருந்து சத்துக்கள் சுவாசத்துடன், தொண்டைக்கும் சுவாசப்பைக்கும் சென்று அபாயகரமான கிருமிகளை உடனே கொன்று, ரணத்தையும் எரிச்சலையும் நீக்கும், இருமல் நின்று சுவாசம் சுலபமாகும் சாப்பிட ருசியானது.

**PEPS**

கிருமிநாச தொண்டை & மார்பு வில்லைகள்

மார்பு & சுவாச நோய்களுக்கு அற்புத நிவாரணி

ஏஜண்டுகள்: தாதா & கோ, பி. டி. மதராஸ்.

# ஒளி தந்த தினம்

நா. சீ. வரதராஜன்

1

பாரத நாட்டினைப் பற்றிய தீயிருள்
பாய்ந்து மறைந்த தினம்!—சுதந்திர
சூரியன் பொற்கதிர் வாரி வழங்கிடத்
தோன்றிய இந்த தினம்!

2

புத்தனின் போதனை போற்றிட வந்தவோர்
புண்ணியன் காந்திமகான்—அருந்தவச்
சத்தியம் பெற்ற நல் வெற்றியிம் மண்ணிடை
சங்கொலி செய்த தினம்!

3

பாரத வீரரின் தியாக மெனும் புனல்
மண்டிய பொய்கையிலே—மணம் பெறும்
பூரணம் மேவும் சுதந்திர மாமலர்
பூத்தொளி தந்த தினம்!

4

தாயின் மணிக்கொடி வானிலுயர்ந்து நம்
தன்மை புகன்ற தினம்!—அருடலச்
சேயனை யோரிந்த சேர்ந்து புதுயுகச்
சேமம் படைத்த தினம்!

5

புண்ணிய பாரதக் கண்ணிய மோங்கிய
பொற்புறு மித்தினத்தில்—கூடித் தமிழ்ப்
பண்ணொலி செய்து தாய்ப்பதம் பணிந்துளப்
பண்பை மிதத்திடுவோம்!

6

எண்ணருமின்னல்கள் எத்தனை மேவினும்
எங்கள் உடற் பிறப்பாம்—விடுதலைத்
தண்ணொளிப் பேரினைக் காத்துப் புகழ் நிலை
தன்னிடை ஒன்றிடுவோம்!



# கலா மண்டபம்

## சிட்டாடலின் 'இதயகீதம்'

★

சிட்டாடல் பிலிம் கார்ப்பொரேஷன் தயாரிப்பான 'இதய கீதம்' நவ ரஸங்களும் கொண்ட ஒரு சிறந்த படம், இதில் வீரம், கோபம், ஹாஸ்யம், சோகம் முதலிய பல ரஸங்களையும் அனுபவிக்கிரோம் ஆனால் 'இதய கீதம் என்பது முக்கியமாகக் காம ரஸத்தைக் குறிக்குமாகையால் அந்த ரஸம் மற்ற ரஸங்களைவிட ஒரு பங்கு அதிகமாகவே படத்தில் இருக்கிறது.



வீரப்பா என்ற பெயர் இவருக்கு மிகவும் பொருந்தும். சிட்டாடல் 'இதய கீதத்'தில் வீர ரஸம் ததும்ப பிரமாதமாக நடித்திருக்கிருர்.

ஜோஸப் தளியத் ஜூனியர் கதையை சுவாரஸ்யமாக எழுதியிருக்கிருர் பாரத வர்ஷத்தின் சரித்திர சம்பந்தமாகக் கதை எழுதவேண்டும் என்ற ஆசையுடன் கதையை எழுதியிருப்பதற்கும் சரித்திரக் கதையை எழுதிவிட்டு சிக்கனம் பிடித்து கதைக்கு ஒவ்வாத ஸெட்டுகளை போடாமல் தாராளமாகச் செலவு செய்து கதையின் தன்மைக்குத் தக்கபடி காட்சி ஜோடனைகளைச் செய்திருப்பதுபற்றியும் அவரைக் கண்டிப்பாய் பாராட்டவேண்டும்.

### கதை, வசனம்

கதை இரண்டு ரஜபுத்ர சகோதரர்களைப் பற்றியது மன்னன் உதயசிங்கின் மூத்தகுமாரன் பிரதாபன் வெளி ராஜ்யங்களுக்குச் சென்று வீரப் போரில் வெற்றிகொண்டிருந்த தருணத்தில் இளைய குமாரன் ஜீவன் தாரா என்ற அழகியின் மனோ ராஜ்யத்தை ஆட்சி கொண்டு காதல் போரில் வெற்றி காண்கிருன். உதயசிங்கின் குடும்பத்தை ஒழித்து சிம்மாசனம் ஏறப் பேராசை கொண்ட துன்மந்திரி அரசனுடன் இச்சகம் பேசி, தாராவை பிரதாபனுக்கு மணம் பேசி, இன்னும் பல தில்லுமுல்லுகளைக் கையாண்டு அண்ணன் தம்பிகளுக்கிடை விரோதத்தை மூட்டி விடுகிருன். இத்துடன் நில்லாமல் எதிரி அரசனிடமும் தங்கள் போர்த் தந்திரங்களை வெளியிட்டுப் பிரதாபனைக் காட்டிக் கொடுத்து எதிரியிடம் பிரதாபன் சிறைப்படும்படி செய்து விடுகிருன். ஆனால் விதூஷகனை லாலாவினாலும் அவன் காதலி லீலாவினாலும் பிரதாபன் தப்பியதன்றி எதிரி கோட்டையும் பிடிபடுகிறது. அண்ணனும் தம்பியும் இறுதியில் உண்மை அறிந்து ஒன்றுபடுகின்றனர் சண்டையில் ஏற்பட்ட கத்திக் காயத்தில் அண்ணன் உயிர் விடுகிருன் காதலர் இல்லற வாழ்க்கையின் இன்ப அனுபவத்தில் ஈடுபடுகிருர்கள்.

கதை சிக்கலில்லாமல் தயாரிக்கப்பட்டிருப்பதால் குழப்பம் ஏதுமில்லாமல் படம் ஓடுகிறது. படத்தை சுவாரஸ்யமாகப் பார்க்க முடிகிறது. வசனகர்த்தா தமது பணியை சிறிது அதிகப்படியாகவே செய்து முடித்திருக்கிருர். வசனம் நன்ருக எழுதப்

பட்டிருந்தாலும் ரஸங்களை எடை பார்த்து வார்த்தைகளை வசன கர்த்தா சிருஷ்டிக்கவில்லை பல இடங்களில் ரஸம் விரஸமாகும் ஸ்திதிக்கு வசனத்தை எழுதியிருக்கிறார். சில இடங்களில் வார்த்தைகளை அள்ளிக் கொட்டி வசன வேகத்தைகுறைத்திருக்கிறார்.

## நடிப்பு

இந்தப் படத்தில் பிரதாபனாக நடிக்கும் வீரப்பாவுக்கு முதல் பிரைஸ் கொடுக்க வேண்டும், இளவரசன் எப்படி கம்பீரமாக நடக்க வேண்டுமோ அந்தமாதிரி நடப்பதுடன் இயற்கையாகவும் நடித்திருக்கிறார். கத்திச் சண்டை முதலிய ஸ்டண்டு வேலைகளைச் செய்யும்போதும் சரி, மரணப் படுக்கையில் உணர்ச்சியுடன் முக பாவங்களைக் காட்டும்போதும் சரி தாம் ஒரு திறமையுள்ள நடிகர் என்பதை வீரப்பா காட்டியிருக்கிறார்.

கதாநாயகி டி ஆர். ராஜகுமாரி சினிமாவுக்கென்றே முகம் படைத்தவர் வழக்கம்போல் மிகக் கவர்ச்சியாக இப்படத்திலும் காட்சியளிக்கிறார். அவர் நடிப்பு அப்பழுக்கில்லாமலிருக்கிறது அடுத்தபடியாக காமடியன் லாலாவாகத் தோன்றும் சாரங்கபாணி, துன்மந்திரியாக வரும் சக்ரபாணி இவர்கள் நடிப்பை சிலாகிக்கிறோம். இவ்விருவரும் தங்கள் பாத்திரங்களை வெகு நன்றாக நடித்திருக்கிறார்கள். கதா நாயகன் டி ஆர் மகாலிங்கத்தின் நடிப்பும் சுமார். பாட்டும் சுமார்.

## ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு

இந்தப் படத்தில் திருப்திகரமில்லாத ஒரு அயிட்டம் ஒளிப்பதிவுதான் காமிரா மான் வெளிச்சத்தை சரியாக அமைக்காமல் அதிகப்படி லைட்டைப் போட்டிருக்கிறார் கதாநாயகி சோகப் படும் இடங்களில்கூட 'மூட் லைட்' என்று ஒன்று உண்டு என்பதை இவர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவில்லை ஒலிப்பதிவு பாதகமில்லை.

ஜோஸப் தளியத் ஜூனியர் படத்தை நன்றாக டைரக்ட் செய்திருக்கிறார். கத்திச் சண்டைக் காட்சிகளை எடுக்கும்போதும்சரி, மற்ற இடங்களிலும் சரி மிகுந்த முன் யோசனையுடன் ஷாட்களை நிர்ணயித்திருக்கிறார் இந்தப் படத்தில் சிக்கலில்லாததற்கு முக்கிய காரணம் டைரக்டர்தான் என்பதில் சந்தேகமில்லை அதிகப் பாட்டுகளால் ஆரம்பத்தில் படம் சற்று மெதுவாக நகர்ந்தாலும் பின்னால் வேகமாக ஓடுகிறது போர்க் காட்சிகள் தத்ரூபமாய் இருக்கின்றன பிரும்மாண்டமான காட்சி ஜோடனைகளும், ஏராளமான காதல் காட்சிகளும் நிரம்பிய இதயகீதம் உண்மையில் ஒரு சிறந்த முயற்சி அவசியம் பாருங்கள்

—சாண்டில்யன்.



அவள் கைகளென்ன, கண்களுந்தான் அவன் வசப்பட்டு நிற்கின்றன—சிட்டாடல் 'இதய கீத'த்தில் மகாலிங்கம்—ராஜகுமாரி காதல் கட்டம்.

நமது பம்பாய்க் கடிதம்

# பம்பாய் ஸ்டுடியோக்களில் ஜரூர் வேலை

பம்பாய் பட முதலாளிகள், சென்ற சில மாதங்களாக வெளி வந்திருக்கும் படங்களின் குற்றம் குறைவுகளைக் கண்டு, தற்சமயம் அவர்கள் மிகவும் அழகாகவும், சினிமா விசிறிகளின் விருப்பப்படி, நூதனமான கதைகளையும், பாட்டுகளையும், நடனங்களையும்கொண்டு. அதிக வெற்றிகரமாக படங்களைத் தயாரித்து வருகிறார்கள். சென்ற வாரம் இவ்வூர் ஸ்டுடியோக்களைச் சுற்றி வந்ததில் கீழ்க்கண்ட விவரம் வெளி வந்தது.

ஸெண்டிரல் ஸ்டுடியோவை வெஸ்ட்டர்ன் இந்திய தியேட்டர்ஸ் காரர்களிடமிருந்து (Western India Theatres) பிலிம்கார் என்னும் கம்பெனியார் இரண்டு வருஷத்திற்கு குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். இங்கே இக் கம்பெனியார் 'சோடி பாபி', 'டீடர்' என்று இரண்டு படங்களை தயார் செய்துவருகிறார்கள் இப் படங்கள் இரண்டும் சினிமா உலகத்திலேயே மிகவும் உன்னதமாக விளங்குமென்று, அவைகளின்



தோரணையைக் கண்டு. தெரிய வருகிறது. முதல் படத்தில் ஷியாம், கரன்திவான் நர்கிஸ். குல்டீப்கௌர் முதலியவர்கள் நடிக்கிறார்கள் 'டீடர்' என்னும் படத்தில், அஷோக்குமார். டிலிப்குமார். நர்கிஸ். இம் மூவரும் முக்கியப் பாத்திரங்களில் நடிக்கிறார்கள் இதை நிடின்போஸ் என்பவர் டைரக்ட் செய்து வருகிறார் இதே ஸ்டுடியோவில், டைரக்டர் மெஹ்பூபின் 'ஆன்' என்னும் கலர் படத்தின் ஷூட்டிங்கு மிகவும் விரு விருப்பாக நடந்து வருகிறது.

வர்லியிலிருக்கும் ஈஸ்ட்டர்ன் ஸ்டுடியோவில் பிலிம்லண்டு என்னும் கம்பெனியார் மிகவும் தடபுடலாக 'உஷாகிரன்' என்னும் படத்தை தயார் செய்து வருகிறார்கள். இப்படத்தில், கண்ணைப் பறிக்கும் நடனக் காக்ஷிகளும், மயிர் கூச்சலறிக்கும் கத்திச் சண்டைகளும் மிகவும் தாராளமாக யிருக்கின்றன இப் படத்தை தயாரிக்க குறைந்தது 15—லக்ஷம் ரூபாய் செலவழியுமென்று இதை டைரக்ட் செய்துவரும் முஜமில் குர்ஷிட்டு என்பவர் என்னிடம் தெரிவித்தார், இதில் கீதாபலி நிம்மி, அல்டாப். மிர்ஜாமுஷரப் மஜஹார்க்கான் முதலியவர்கள் நடிக்கிறார்கள்

மஹாலக்ஷ்மியிலிருக்கும் பேமஸ் ஸின் ஸ்டுடியோவில் பிலிம் ஆர்ட்ஸ் என்னும் புதிய கம்பெனியார் "புஸ்டில்" ("கோழை") என்னும் படத்தை தயார் செய்து வருகிறார்கள். இப்படத்தில், சில கோழை. கயவர்களைப்பற்றி சித்தரிக்கப் படும் கிஷோர் ஸாஹு, பிரேம் நாத், நிம்மி' சுனலினி தேதி, சக்கு முதலியவர்களை இதில் காணலாம் ஷஹித் லடீப் என்பவர் டைரக்ட் செய்து வருகிறார்

இதே ஸ்டுடியோவில், பட முதலாளியும், டைரக்டருமான கே பி லால் என்பவர் "ஹன்ஸ்தே அன்ஸு" என்ற படத்தை இப்பொழுதுதான் தயார் செய்து முடித்திருக்கிறார். இப்படத்திற்கு இவ்வூர் சென்ஸார் "A" சர்ட்டிபிகேட்டு கொடுத்திருக்கிறார்கள் ஆகையால் இப்படத்தை 18 வயதுக்கு மேல் பட்டவர்கள்தான் பார்க்கலாம் இவ்வயதுக் குட்பட்டவர்கள் இதைப் பார்க்கமுடியாது. இதில் மதுபாலா. மோடிலால், மனோரமா இம்மூவரும் முக்கியப் பாத்திரங்களில் நடிக்கிறார்கள் இதில் ஒரு நூதனமான நடனம் இருப்பதாகவும் இதனால், இதை பெரியோர்கள்தான் பார்க்கலாமென்றும் உத்தரவு பெற்றிருப்பதாக தெரியவருகிறது இது வெளியே வந்தால்தான், இதின் பவிஷு தெரிய வரும்.

டாடர் ஷிரி சவுண்டு ஸ்டுடியோவில்; வர்மா பிலிம்ஸ்காரர்கள் "சகய்' என்று ஒரு படத்தை தயார் செய்து வருகிறார்கள் இதில், "சந்திரலேகா" வைப்போல், அநேக நடனங்களும், கத்தி சண்டைகளும் இருக்கின்றன பிரேம் நாத். ரெஹானா, விஜயலக்ஷிமி யாகுப் முதலியவர்கள் இதில் நடிக்கிறார்கள் இதே இடத்தில், "ராமராஜ்யாவில்" சீதையாக நடித்து பெயர்பெற்ற சோபனாசமர்த்து, தன் சொந்த கம்பெனி, சோபனா பிக்சர்ஸாரின் சார்பாக "ஹமாரி பேட்டி" என்னும் படத்தை தானே டைரக்டுசெய்துவருகிறாள் இது ஒரு சாதாரண குடும்ப வாழ்க்கையைச் சித்தரிக்கிறது இதில் இவளுடைய பெண், நூடன்என்பவள் கதா நாயகியாக நடிக்கிறாள் மோடிலாலும் இதில் இருக்கிறார்

பம்பாய் டாக்கீஸ்காரர்கள் தற்சமயம் "மஹால்", "மஷால்" என்று இரண்டு படங்களை தயாரித்து முடித்துவிட்டார்கள் 'மஹால்' என்னும் படம் வட இந்தியாவில் மிகவும் வெற்றிகரமாக காண்பிக்கப்பட்டு வருகிறது என்று கேள்வி தற்சமயம் இவர்கள் "சங்கராம்", "முகத்தர்" என்று இரண்டு படங்களை தயார் செய்துவருகிறார்கள்.

பிலிமிஸ்ட்டான் ஸ்டுடியோவில் இப்பொழுது 'சர்கம்' 'ஷபிஸ்தான்' என்று இரண்டு படங்கள் தயாராகி வருகின்றன 'சர்க்கம்'என்றபடத்தில் ரெஹானாவும் ராஜ்கபூரும் காதலர்களாக நடித்துவருகிறார்கள். "ஷபிஸ்தான்" என்ற படத்தில் ஷியாம், நஸீம் இவ்விருவரும் காதலர்களாக நடிக்கிறார்கள்.

வாடியா பிலிம்ஸ்காரர்கள் 'மகரூர்' என்று ஒரு படத்தை இப்பொழுது தான் தயார் செய்து முடித்திருக்கிறார்கள் இதில் ரெஹ்மான், ஜெய்ராஜ் நிகர், மீனகுமாரி, துர்க்கா கோட்டே முதலியவர்கள் நடித்திருக்கிறார்கள் இவ்வூரில் இது கூடிய சீக்கிரத்தில் வெளிவரப்போகிறது

—தி. மா. ராமச்சந்திரன்.



'நிர்தோ'ஷில் ரெஹ்னாவின் பார்வை, நடிப்பு முதலிய எல்லாமே பிரமாதம்.



'நிர்தோஷ்' கதாநாயகி குல்தீப்



வாடியா பிலிம்ஸ் 'மகரூ'ரில் அழகி மீனு குமாரி.

உலக நாடக மேடை

# இந்தியாவில் நாடகம்

சக்திதாஸன் சுப்பிரமணியன்

நாடகத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று சம்பாஷணை. இதை வைத்துக்கொண்டு நம்முடைய இந்திய நாடகத்தின் தோற்றம் எங்கேயிருக்கிறது என்று கவனிப்போமானல் வேத காலத்துக்குப் போக வேண்டியதுதான் இந்திய நாடகம் வேதத்திலிருந்து தொடங்குகிறது எனலாம்

ருக் வேதத்திலே ஏராளமான சம்பாஷணைகள் இருக்கின்றன. தேவலோகத்து நடன மங்கையான ஊர்வசி மீது புரூரவஸ் காதல் கொண்டு பேசிய பேச்சுக்கள் ருக் வேதத்திலே விவரிக்கப்படுகின்றன பிற்காலத்திலே மகாகவி காளிதாசன் எழுதிய விக்ரம ஊர்வசியத்துக்கு ஊற்று இந்த இடம்தான் யமன் மீது அவனுடைய சகோதரியான யமி காதல் கொள்கிருள் அதை யமனுக்குத்தெரிவித்து அழைக்கிருள் அதற்கு யமன் இணங்கவில்லை இந்த சம்பவமும் ருக் வேதத்திலே சம்பாஷணையாக இருக்கிறது

பிருஹதாரண்ய உபநிஷத்திலே மைத்ரேயி சம்வாதம் மிக அருமை மகா புத்திமானன அந்த யாக்ஞவல்கியருடன், கார்க்கி, மைத்ரேயி ஆகிய இரண்டு பெண்மணிகள் செய்கிற விவாதமானது சம்பாஷணை ரூபத்திலே சொல்லப்பட்டுள்ளது

கடோ நிஷத்திலே, யமனுடன் நசிகேதஸ் விவாதித்ததும், உத்தாலகருடன் சுவேதகேது சம்பாஷித்ததும் விவரமாக இருக்கின்றன

புராதன காலம் தொட்டு நம்முடைய தேசத்திலே நாடகத்துக்கு முக்கிய இடம் கொடுத்து வந்திருக்கிறோம். இந்த மாதிரி உலகத்திலே வேறு எந்த தேசத்திலுமே பார்க்க முடியாது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

உலகத்திலே எல்லா தேசத்திலுமே நாடகமானது மதச் சார்பு பெற்றுத்தான் வளர்ந்தது அதே மாதிரிதான் இந்தியாவிலும். இருந்தாலும் இங்கே ஒரு தனி விசேஷமுண்டு

ஆண்டவனின் ஆடல்களையே நாம் நாட்டியமாகவும்,நாடகமாகவும் காண்கிறோம் நாட்டியத்தின் ஆதி தெய்வமாகிய சிவபெருமான் நடராஜனகக் காட்சி அளிக்கிறார். அவர் ஆடும் 'தியேட்டரை' அம்பலம் என்றும். சிற்றம்பலம் என்றும், சிற்சபை என்றும், அழைக்கிறோம்.

நாடக மன்றத்துக்கு ரங்கபூமி என்ற இன்னொரு பெயருமுண்டு 'அரங்கேற்றுதல்' என்று சொல்கிறார்கள். அப்படியானல் என்ன அர்த்தம். ஆட்ட மேடைமீது ஏற்றுதல் என்று அர்த்தம். ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதன், என்கிற பெயர்கள் எதைக் குறிக்கின்றன? கடவுளையே நாடகத் தலைவனகவும், அவன் கோவில் கொண்டுள்ள இடத்தை நாடகமேடையாகவும் குறிப்பிடுகின்றன. ஆகவே நமது தெய்வக் கொள்கையும் நாடகமும் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கின்றன.

ஆட்டத்தின் ஆதி தெய்வம் சிவபெருமான். அவர், உமையவளுடன்




தேவலோகத்திலே ஆடினர். அங்கே நடராஜரிடமிருந்து பிரும்ம தேவர் அந்த வித்தையைத் தெரிந்துகொண்டு நந்தி தேவருக்கு உபதேசித்தார். நந்தி தேவர், பாரத முனிக்குச் சொன்னர். பாரத முனிவர் அதைப் பாரத தேசத்து ஜனங்களுக்கு உபயோகப்படும் விதமாக பரத நாட்டிய சாஸ்திரமாக அருளினர் நாட்டிய சாஸ்திரம் நம் நாட்டில் தோன்றிய விதம்பற்றிக் கூறும் தெய்விகக் கதை இது. இதிலே சிறப்பான விஷயம் என்ன என்றால் பரத முனியின் நாட்டிய சாஸ்திரம்தான் நமது நாட்டு நாட்டியம் நாடகம் முதலியவற்றிற்கு ஆதி இலக்கண நூல் அந்த சாஸ்திரத்திலே சொல்லியிருக்கிறபடி பார்த்தால் நாடக மேடையின் நீளம் 96 அடி. அகலம் 48 அடி. ஜனங்கள் இருந்து, நாடகம் பார்க்கக்கூடிய இடத்துக்கு 'பிரேக்ஷாகிருகம்' என்று பெயர். இது 48 அடி நீளமும், 48 அடி அகலமும், உள்ளது. நடிகர்கள் ஆடும் இடத்துக்கு 'ரங்கபூமி என்று பெயர் இந்த ரங்கபூமியின் மத்தியிலே ஓரே ஒரு திரை. இதற்கு யவனிகை என்று பெயர். 96 அடி கொண்ட நாடகக் கொட்டகையில் 48 அடி ஜனங்களுக்குப் போக பாக்கியுள்ள 48 அடியில் 24 அடி ரங்கபூமி மீதியுள்ள 24 அடிக்கு நேபத்திய கிரகம்' என்று பெயர். அதாவது 'கிரீன்ரூம்' இப்படியாக நாடக மேடையின் அமைப்பு பற்றிப் புராதன இலக்கணங்கள் சொல்கின்றன.

நாடக மேடையைப்பற்றி இவ்வளவு விஸ்தாரமாகச் சொல்கிற நூல்கள் மிகப் பழைய காலத்திலேயே இருந்திருக்கிறபடியால் நாடக நூல்களும் ஏற்பட்டிருக்கத்தான் வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, காலத்தினல் முற்பட்ட நாடகம் என்று சொல்லக்கூடியது கி பி இரண்டாம் நூற்றாண்டில் வசித்த அசுவகோஷர் எழுதிய சாரீ புத்ர பிரகரணம் என்கிற நாடகமே. சாரீ புத்ரரும் அவரது நண்பரான மௌத்கல்யரும் புத்தரின் முன்னிலையில் புத்த மதத்தைத் தழுவிய நிகழ்ச்சியை இந்த நாடகம் சித்தரிக்கிறது. ஒன்பது அங்கங்கள் கொண்ட நாடகம் இது.

இந்திய தேசத்து நாடகமானது மிகவும் உன்னத ஸ்திதியில் இருந்த காலம் கி. பி. 320 முதல் 800 வரையில் எனலாம். இந்த 500 வருஷங்களில் மகாமேதாவிகளான நாடகாசிரியர்கள் இந்தியாவிலே தோன்றியிருக்கிறார்கள்.

உலகத்து நாடக ஆசிரியர்களில் ஒருவர் என்றும், இங்கிலீஷ் நாடகக் கவியான ஷேக்ஸ்பியருக்குச் சிறிதும் குறையாதவர் என்றும் புகழப்படுகிற மகாகவி காளிதாசன் வாழ்ந்தது இந்தக் காலத்தில்தான். அவா இயற்றிய சாகுந்தல நாடகமானது உலகத்து அறிஞர் பலராலும் போற்றப்படுகிறது சுங்க வமிசத்து மன்னரான அக்னி மித்ரன், மாளவிகாவின்மீது கொண்ட காதல் கதையை வர்ணிக்கும் மாளவிகாக்னிமித்ரம் பிரமாதமாகப் புகழ்பெற்றுவிட்டது.

(தொடரும்)



# பாவை

'எல்லாவி'

என்ன அம்மா? என்ன சொன்னன்? வீட்டு வாசற்படியில் ஏறிக்கொண்டிருந்த மீனட்சியிடம் பதற்றத்துடன் இவ்வாறு கேட்டாள் தங்கம்

"என்னத்தைச் சொல்றது? விஷயத்தைச் சொன்னேன் சரி என்றுன் மற்றப்படி இந்த விஷயத்திலே அவன் என்னத்தைச் சொல்லக் கிடக்கு? என்று சற்று அலுத்தாற் போலக் கூறினள் மீனட்சி

"ரூபாய் எவ்வளவாம்?"

" நூறு ரூபாயும், செலவுக்காக நாற்பது ரூபாயும் வேண்டுமாம் இதுவே குறைச்சலான திட்டமாம்"

"நீ என்ன சொல்லிவிட்டு வந்தே?"

"என்னத்தைச் சொல்றது? 'பெண்ணைக் கலந்து யோசனை பண்ணிக் கொண்டு வறேன்' என்று சொல்லிவிட்டு வந்தேன்"

"அது சரி நீ ஏன் என்னமோ போலே பேசறே?'

ஒரு முறை பெருமூச்சுவிட்டாள் மீனட்சி சற்றுப் பொறுத்து நிதானமாகச் சொன்னள்.

"அவாளவாளுக்கும் தலைவிதி என்று ஒன்று தனியாக இருக்கு நாம் பண்ணின பாவம் ஆண்டவன் நம்ம தலையிலே இப்படி விதிச்சுட்டான் அதை அனுபவிச்சுத் தீர்க்கறதைத் தவிர வேறே கதியில்லை அதைவிட்டு இப்படிக் கோணமாண என்று காரியங்களைச் செய்யறதனலே என்னப் பிரயோஜனம்?..."

'ஓகோ! பெரிய வேதாந்தியாய்ப் போய்ட்டே போலிருக்கே!" என்று சொல்லிவிட்டு முகத்தைச் சுளித்துக் கொண்டாள் தங்கம். அதைப் பார்த்த மீனட்சி "சரி சரி. நீ வீணுக்கெல்லாம் என்மேலே ஆத்திரப்படாதே! இஷ்டம்போலே செய்—" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய் விட்டாள் தங்கத்திற்கு அழுகையும் ஆத்திரமும் பற்றிக்கொண்டு வந்தது கூடத்தில் கிடந்த பெஞ்சியிலே போய் படுத்துக் குமுறிக் குமுறி அழுதாள் அழுதுகொண்டேயிருந்தாள்.

* * *

'எடுப்பார் கைப்பிள்ளை' என்பார்களே அந்த ரகத்தைச் சேர்ந்தவன் பாஸ்கரன் பெற்றோர் முதல் வீடு கூட்டும் வீராயிவரையில் எவர் சொல்லையும் தட்டாமல் யார் மனமும் கோணமல் நடந்து கொள்ளும் சுபாவமுடைய அவனை "ரொம்ப நல்லவன், சாது" என்றெல்லாம் புகழ்வார்கள் அதே வரிசையில் 'அசடு' என்று கூடச் சிலர் சொல்லுவார்கள் ஆனல் அவன் அசடல்ல.

அழகு, அறிவு, படிப்பு. சொத்து முதலிய சகல அம்சங்களிலும் சிறந்தவனன அவன், கணவனகக் கிடைத்ததை எண்ணி எண்ணிப் பூரித்தாள் தங்கம் அவனுக்கும் அவளுக்கும் கலியாணம் நடந்தபோது. அவன் வயது பதினெட்டு, அவள் வயது பதினைந்து

பாஸ்கரனின் பெற்றோர் ஒருமாதிரி 'துஷ்டர்கள்' என்று பகிரங்கமாகவே எல்லாரும் பேசிக்கொள்வதுண்டு தகப்பனரை விடத் தாயார் பொல்லாதவள் அவள் காலக்கிரமத்திலே தங்கத்தைப்படுத்தலானள். படுத்தல் வரவர அதிகமாயிற்று, தங்கத்தின் கஷ்டம் எல்லையைக் கடந்தது யாரும் தலையிட்டு அவள் கஷ்டத்திற்கு விமோசனம் தேடாதது கண்ட விதி, தானே குறுக்கிட்டது. கலியாணமாகிப் பத்து வருஷம் கடந்த பின்பும் தங்கம் தாயின் ஸ்தானத்தை அடையவில்லை சிறுகச் சிறுக அதைப்பற்றிக் குறை கூறிக்கொண்டிருந்த பாஸ்கரனின் தாயார் கடைசியில் ஒரு பெரிய கல்லாகத் தூக்கிப்போட்டுவிட்டாள்!

பாஸ்கரனுக்கு இரண்டாவது கலியாணம்! நினைத்தால் ஒரு கலியாணம் வீதம் இரண்டு, மூன்று. நான்கு எனப் பல கலியாணங்களைச் செய்துகொள்ளக்கூடிய காலம் அது பாஸ்கரன் தான் 'எடுப்பார் கைப்பிள்ளை' அவன் தகப்பனரோ மனைவி பேச்சுக்கு மத்தளம் கொட்டுபவர் தங்கத்திற்கோ தாயைத்தவிர நாதி கிடையாது தெரு மகாஜனங்களோ எது நடந்தாலும் வேடிக்கை பார்ப்பவர்களாயிருந்தார்கள் தங்கம் என்ன செய்வாள்? தலைவிதியே என்றிருந்தாள்

பத்மா பாஸ்கரனின் இரண்டாவது மனைவியானள் தங்கம் ஒரு பணிப்பெண்போல பத்மா உள்பட எல்லோருக்கும் கீழ்ப்படிந்து வீட்டுவேலைகளைச் செய்துகொண்டு எப்படியிருந்தாலும் நமக்கு இந்த இடந்தான் கதி என்றிருந்தாள் ஆனலதுகூட பிடிக்கவில்லை பாஸ்கரனின் தாயாருக்கு, பத்மாவையும் தங்கத்தையும் ஒப்பிட்டு ஒப்பிட்டு சதாகாலமும் தங்கத்தை ஏதாவது தூஷிப்பதும் காரியங்களில் குற்றம் குறைகள் கூறி வைது திட்டுவதுமாக இருந்தாள். இதற்கேற்றாற்போல பத்மா விரைவிலே கருவுற்றாள் தங்கத்திற்கு கரிப்பு இன்னும் அதிகரித்தது. பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லையைக்கடக்கும் தறுவாயில் தங்கம் தாயினிடம் போய்ச் சேர்ந்தாள் இத்தனைக்கும் தன் கணவன் கட்டுப்பட்டிருக்கிறனே என்ற ஓரே ஒரு ஆத்திரம்தான் அவள் உள்ளம் முழுவதிலும் நிறைந்திருந்தது பத்மா மிகவும் நல்லவள், ஆனல் அவள் செய்யக்கூடியது ஒன்றுமில்லாதிருந்தது

பத்மாவுக்கு பாலகிருஷ்ணன் பிறந்தான். ஆனல் அவனது லீலைகளைக் கண்டு களித்துக்கொண்டு நெடுநாட்கள் இருக்கக் கொடுத்துவைக்கவில்லை பாஸ்கரனின் பெற்றோர் ஒருவர் பின் ஒருவராகக் காலமானர்கள்.

பாஸ்கரனும் பத்மாவும் குழந்தை பாலனுடன் சுகமே வாழ்ந்து வந்தனர் தங்கத்தின் வெறிகொண்ட உள்ளத்தைக் கலக்கி, விஷக்குட்டையாக்கப் பலர் அக்கரையோடு முன் வந்தனர் அவர்களின் உபதேசம் அவள் மனத்திற்கு இதமாயிருந்தது



துர்ப்போதனைக்காரர்களுள் யாரோ ஒருவர் சொன்ன காரியத்தைக் கையாளத் தீர்மானித்தாள் தன் அபிப்பிராயத்தைத் தாயாரிடம் சொன்னாள் அதைகேட்டு அவள் உடல் நடுங்கிற்று உள்ளம்நடுங்கிற்று வாய்விட்டு 'அய்யோ! என்றும் கூவினாள் மகளுக்குப் பலவகையிலும் நல்லுபதேசம்செய்தாள் எல்லாம் விழலுக்கிறைத்த நீராயின. கடைசியில், மகளின் செயலுக்குத் தானுகவே உடன்பட்டாள் சதிகார வேலையில் முனைந்தாள்

அதன் விளைவாகக் காரணமின்றி அவள் மனம் குழந்தை பாலனைத் துவேஷித்தது ஆம்; அப்படியொரு குழந்தை எனக்குப் பிறக்காததனுலே தானே என் வாழ்வு நாசமாயிற்று?' என்று எண்ணினுள் கணவனும் சக்களத்தியும் சந்தோஷ வாழ்க்கை நடத்துவது கண்டு பொருமினுள் எப்படியாவது அவர்கள் வாழ்விலே அளவற்ற துக்கத்தை உண்டுபண்ண வேண்டும் என்று கருதினுள் பாலனை ஒழித்துவிட்டால்?...

பிரபலமான மந்திரவாதி ஒருவன் இதுமாதிரியான சதிகாரச் செயல்களே அவனுக்கு ஜீவனம். 'பாவை கரைப்பது' என்பது ஒரு சதிகாரச் செயல் தங்கம் தன் தாயார்மூலம் அந்த மந்திரவாதியிடம் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாள்

குழந்தை பாலனைப்போல மாவினுல் ஓர் உருவம் செய்து, மந்திர சக்திகளை அதிலே உபயோகித்து, அதைப் பாதியிரவிலே கடலிலோ, நதியிலோ, குளத்திலோ கொண்டுபோய்க் கரைத்துவிட்டால், குழந்தை பாலன் உடனே உயிர் துறப்பான்—இதுதான் தங்கத்தின் துர்மந்திரி ஒருத்தி செய்த உபதேசம். இதற்காக நூற்று நாற்பது ரூபாய் பணம்கேட்டான் மந்திரவாதி. அவனிடம் போய்ப் பேசிவிட்டு வந்த மீட்சியின் மனத்தடுமாற்றம் தங்கத்தின் உள்ளத்தில் துயரத்தைக் கிளப்பிவிட்டது தனது பாழான வாழ்வை நினைந்து கண்ணீர் விட்டழுதாள்

* * *

அழுகையின் மத்தியிலேயே அவள் மனமும் பலவகைகளில் எண்ணமிட்டது காரியத்தில் இறங்குவோமா வேண்டாமா என்று பலவாறுயோசித்தாள் ஒரு முறை தனக்கு நேர்ந்த சீர்கேட்டையும் கணவனின் பரா முகத்தையும் எண்ணிப்பார்த்தபோது. அடிபட்ட சர்ப்பம்போலச் சீறி எழுந்தது அவள் உள்ளம் அதே வேகத்தில் தொகையைக் கொடுத்துக் காரியத்தை நடத்த ஏற்பாடு செய்துவிட்டாள். அதன் பிறகுதான் அவள் மனத்திலிருந்த பாரம் சற்றே இறங்கினுற்போலிருந்தது

* * *

கொந்தளிக்கும் கடலை நோக்கியவண்ணம் சோகமே வடிவாய் உட்கார்ந்திருந்தாள் தங்கம் எங்கிருந்தோ வந்து பொத்தென்று அவள் மடியிலே விழுந்தது ஒரு பட்டம் தங்கத்தின் சிந்தனை கலைந்தது கழுத்திலே சுற்றிக்கொண்டிருந்த பட்டத்தின் நூலை மெல்ல எடுத்துக் கொண்டே 'அதைவிட்டதுயார்'என்று நாற்புறமும் நோக்கினுளவள் சமீபத்தில் மணற்பரப்பிலே கால்கள் புதையத் தளர்நடையுடன் அவளை நோக்கி வந்துகொண்டிருந்தான் ஒரு சிறுவன். அவனது அழகிய முகமும் வண்டுகள்போன்று நிர்மலமாயிருந்த கண்களும் சிவந்த மேனியும், தளதளவென்றிருந்த அங்கங்களும் கவர்ச்சிகரமான உடையும் அவள் கண்களையும் கருத்தையும் ஒருங்கே வசீகரித்தன கண்கொட்டாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் அவளைச் சமீபித்தான்

"மாமீ!...பட்டத்தைக் கொடுங்கோ மாமீ!..." அவனிடம் சிறிது விளையாட நினைத்தாளவள்.

'முடியாது ஏன் என் மேலே போட்டாய்?"

"காத்திலே வந்து விழுந்துட்டுது மாமீ...இம்மேல் போடமாட்டேன்... கொடுத்தூடுங்கோ மாமீ..."

தர்க்கம் நடந்துகொண்டிருக்கையிலேயே அங்கு ஒரு வயதான ஸ்திரீ வந்தாள் தங்கத்தைக் கூர்ந்து பார்த்தாள். 'யாரது?...தங்கம்போலிருக்கே? ...என்று கேட்கவும் செய்தாள் தங்கத்திற்கும் அந்த ஸ்திரீயை அடையாளம் புரிந்துவிட்டது பாஸ்கரன் வீட்டுக்கு எதிர் வீட்டிலே வசிப்பவள்தான் அவள். பழைய விஷயங்கள கொஞ்சம் பேச்சில் அடிபட்டன வருத்தமான குசலப் பிரச்னத்தினிடையே அந்தச் சிறுவன்தான் பாலன் என்றும் பாஸ்கரனும் பத்மாவும் கடற்கரைக்கு வரவில்லையென்றும்பாலன் தன்னோடுதான் வந்திருக்கிருனென்றும் அந்த ஸ்திரீ கூறினதும். வியப்பே வடிவாய் பாலனைப் பார்த்தாள் தங்கம் ஒரு கணத்திற்குள் அவள் மனம் படாத பாடு பட்டுவிட்டது

'ஐயோ! வருகிற பௌர்ணமியன்று இரவு அந்த மந்திரவாதி பாவை கரைக்கப்போகிருனே! இந்தக் குழந்தையின் அழிவுக்காகவா?...... ஐயோ!'

அவள் முகத்திலே எத்தனையோ மாறுதல்கள். அதையெல்லாம் என்ன கண்டான் பாலன்! அவள் மௌனமாயிருப்பது கண்டு, மாமீ மாமீ' என்று ஆயிரம்தடவை நச்சரித்தான் தங்கத்தின் உள்ளக் கொந்தளிப்பை அந்த ஸ்திரீதான் என்னத்தைக்' கண்டாள்? பாலன் 'மாமீ மாமீ' என்று கெஞ்சுவதைக் கண்டதும் அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது மாமி இல்லேடா பாலா இது உன் பெரியம்மா' என்றுள் குழந்தையின் முகம் பிரகாசமடைந்தது ஆச்சரியத்தால் கண்கள் மலர்ந்தன

'பெரியம்மாவா? எனக்கா? நிஜம்மா?..." என்று கேட்டுக் கொண்டே தங்கத்தைச் சமீபித்தான் உற்று அவள் முகத்தை நோக்கினுன். அவளால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை இருகைகளையும் அவனை நோக்கி நீட்டினுள் அவனும் அருகில் வந்தான் வாரியணைத்து இறுகக் கட்டி முத்தமிட்டாள் தங்கம்

"...பெ...ரி...ய...ம்...மா!'

"ஏண்டா கண்ணு!...'

அவள் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் அவன்மேல் விழுந்தது அவன் திடுக்கிட்டான் அதைத் துடைத்துக்கொண்டே அவள் முகத்தைப்பார்த்தான்

"ஏன் பெரியம்மா அழறே?'

அவள் என்னத்தைப் பதில் சொல்லுவாள்? மனத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு, பட்டத்தை அவனிடம் கொடுத்தாள் ஆரம்பத்தில் அதற்காகக் கெஞ்சிய அவன், இப்போது அதை லட்சியம் செய்யவில்லை

"ஆத்துக்கு வாயேன்..."

அவன் அவள் கைவிரலைப் பிடித்து இழுத்தான் அவள் விசிப்பை அடக்கப்பாடுபட்டாள் அவன் அவளது அழுகைக்குக் காரணம் புரியாமல் விழித்தான் இருட்டிவிட்டது எல்லோரும் புறப்பட்டார்கள்.

"ஆத்துக்கு வல்லே பெரியம்மா?'

"நாளைக்கு...வரேண்டா...கண்ணு"

இரவு பூராவும் மனத்தைப் போட்டுப் படாத பாடுபடுத்திக்கொண்டு புரண்டவண்ணம் பொழுதைக் கடத்தின தங்கம், ஒருபுறம் நன்ருக விடிவதற்குள் தாயாரை மந்திரவாதியின் வீட்டிற்கு அனுப்பினுள் அவன் பாவை தயாரித்துவிட்டான் பௌர்ணமிக்கு ஆறு நாட்களே இருந்தபடியால், அதற்கான ஏற்பாடுகளில் முனைந்திருந்தான். மீனுட்சி போய் அந்தக்காரியத்தை நிறுத்தச் சொன்னதும், கோபத்துடன் தாறுமாருக இரைந்தான். கொடுத்த பணத்தை அவள் திருப்பிக்கேட்பாளோ என்கிற பயம் அவனுக்கு. "பணம் வேண்டாம் காரியத்தை மட்டும் நிறுத்திவிடு என்று அவள் சொன்னதும், அவன் பல்லெல்லாம் தெரியச் சிரித்தான் செய்த பாவையை அப்பொழுதே தூளாக்கிக் குப்பைத் தொட்டியிலே போட்டான்

மீனுட்சி திரும்பிவந்து செய்தி சொன்னதும் நிம்மதியுடன், 'அப்படா!' என்று பெருமூச்சுவிட்டாள் தங்கம். "பிழைத்தான் என் கண்ணன்" என்று வாய்விட்டுச் சொல்லவும் செய்தாள் மீனுட்சிக்கும் மனது நிம்மதி பெற்றது.

படபட வென்று கதவு தட்டும் ஓசை கேட்டு வேகமாக வந்து திறந்த தங்கம் ஆச்சரியத்தால் கற்சிலைபோல் ஸ்தம்பித்து நின்ருள். வாசற்படியிலே பாஸ்கரன் பத்மா. பாலன் ஆகியோர் நின்றிருந்தனர்

'பெரியம்மா! நாளைக்கு ஆத்துக்கு வரேன்னையே, ஏன் வர்லே! உன்னை இப்போ அழைச்சுண்டு போகத்தான் வந்திருக்கோம்'

தங்கத்திற்கு உலகமே சுழல்வது போன்றிருந்தது மெல்ல நடந்து உட்புறம் சென்ருள் மற்றவர்களும் தொடர்ந்து உள்ளே சென்ருர்கள். தூங்கிக்கொண்டிருந்த மீனுட்சி, அரவம்கேட்டு விழித்துக்கொண்டாள். அவளுக்குந்தான் அப்போது எப்படியிருந்தது !

"மூன்று நாளாய்ப் பெரியம்மா, பெரியம்மா என்று அதே ஜபந்தான். இந்த க்ஷணமே போய்ப் பெரியம்மாவை அழைச்சிண்டுவந்தால்தானுச்சு என்று கூத்துகட்டி அடிச்சுப் பிராணனை வாங்கிவிட்டான் அக்கா ஏதோ விஷகடி வேளை இதுவரையிலே"—என்ருள் பத்மா

'எல்லாம் என் பாலனுல்தான்—' இது தங்கம்

இப்படிச்சொல்லிக்கொண்டு அவனை வாரி அணைத்துக்கொண்டாளவள். உடனே அவள் நிறைவேற்ற விருந்த சதி நினைவில் வந்தது அவள் சரீரம் ஒரு முறை குலுங்கிற்று.



# வாழ்க்கைச் சுழல்

## இந்து

### 35

நான் சிறியவளாக இருந்தபோது எங்கள் பாட்டியொருத்தி இருந்தாள். அஸ்தமித்தால் சாப்பிட்டவுடனே பக்கத்து வீடு எதிர் வீடு, கோடி வீட்டுப் பசங்களையெல்லாம் உட்காரவைத்துக்கொண்டு கதை சொல்ல ஆரம்பித்துவிடுவாள் ஈக்கதை முதற்கொண்டு பேய்க்கதை வரைக்கும், குட்டிக்கதைகள், பெருங்கதைகள் பெரிய பெரிய கதைகள் எல்லாம் சொல்லுவாள் எல்லாவற்றையும்விட அரசகுமாரன், மந்திரிகுமாரன் கதைகள்தான் எங்களுக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். அவளுடைய கதைகளில் வரும் ராஜகுமாரர்களும் மந்திரிகுமாரர்களும் திடீரென்று ராஜ்யத்தைவிட்டுக் கிளம்பிவிடுவார்கள் ராஜ்யத்துக்குத் திரும்பி வரும்போது ஒரு ராஜகுமாரியைக் கலியாணம் செய்துகொள்ளாமல் வரவே மாட்டார்கள். அதுவும் கலியாணம் செய்துகொள்ளும் பெண்கள் ஊமையாக இருப்பார்கள் அல்லது பேயால் பிடித்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள் அல்லது பைத்தியம் பிடித்தவர்களாக இருப்பார்கள் ஊமைக்கும், பேய்க்கும் பைத்தியத்துக்கும் யார் வைத்தியம் செய்து தெளியவைக்கிறார்களோ அவர்கள்தான் அவளைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டும் எத்தனையோ பேர் வந்து பார்த்துவிட்டு, அதைத் தெளியவைக்க முடியாமல் போய்விடுவார்கள். கடைசியில் இவர்கள்தான் போய் அதைத் தெளியவைத்து. அதற்கு வெகுமதியாக அவர்களைக் கலியாணம் செய்துகொண்டு திருப்புவார்கள்

ராஜ்யத்தை விட்டுப் புறப்பட்டு சிறிது தூரம் போனவுடனே ஒரு காட்டை அடைவார்கள் அங்கே ஒரு ரிஷியைச் சந்திப்பார்கள், அந்த ரிஷி இவர்கள்மீது இரக்கங்கொண்டு ஒரு மந்திரக் கோலைக் கொடுப்பார். எதற்காக இவர்கள்மீது அந்த ரிஷி இரக்கம் கொள்ளவேண்டுமென்று எங்களுக்கும் கேட்கத் தெரியாது கேட்டாலும் பாட்டிக்கும் அதன் காரணத்தைச் சொல்லத் தெரியாது அவர்கள் அந்த மந்திரக் கோலால் ஊமைப் பெண்ணையோ, பேய் பிடித்த பெண்ணையோ பைத்தியம்பிடித்த பெண்ணையோ தொடுவார்கள் என்ன ஆச்சரியம்! அடுத்த செகண்டே ஊமைப்பெண் கலகலவென்று பேசுவாள் பேய் நூறு மைலுக்கு அப்பால் தன்னை சும்மாவிட்டால் போதும் என்று அலறியடித்துக்கொண்டு ஓடிவிடும் பைத்தியம் தெளிந்துவிடும்.

பிறகு அவர்களைக் கலியாணம் செய்துகொண்டு ஊர் திரும்பி விடுவார்கள்

மற்றும் சில கதைகளில் திடீரென்று மேடுபள்ளமாகிவிடும். பள்ளம் மேடாகி விடும் மண் ரோடு கல் ரோடாகிவிடும் கல்ரோடு மண் ரோடாகிவிடும் அடர்ந்த காடு வெறும் பொட்டல் வெளியாகிவிடும். பொட்டல் வெளி பிரும்மாண்டமான காடாகிவிடும் இது ஒரு பூதத்தின் உதவியால் நடைபெறும் அந்தப் பூதத்தை வரவழைக்க ஒரு மந்திரக்கோல்: இதெல்லாம் பாட்டியின் கதைகளில் நடைபெறும் சம்பவங்கள்

பாட புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் வன தேவதைக் கதைகள் படித்திருக்கிறேன் சில குழந்தைகள் மீது அந்த தேவதைகளுக்கு இரக்கம் உண்டாகிவிடும். பணமாகவே கொண்டு கொட்டும் பரீக்ஷைகளில் நிறைய மார்க்குகள் வாங்கிக் கொடுக்கும் பந்தயங்களில் முதல் பிரைஸ் கிடைக்க உதவி செய்யும்

சினிமா, டிராமாக்களில் பார்த்திருக்கிறேன் வெகு நேரம் வரை பெண் என்று நினைத்துக்கொண்டிருந்த ஒரு உருவம் திடீரென்று ஆணாகிவிடும். இதேமாதிரி ஓர் ஆண் திடீரென்று பெண்ணாகிவிடும்.

அந்தமாதிரி அதிசயமாகத்தான் இருந்தது இங்கே நடைபெற்ற சம்பவம்! உண்மையாகச் சொல்லுகிறேன். வெகு நேரம்வரையில் என் கண்களை நான் நம்பவே இல்லை நான் என்பதென்ன! வீட்டுக்கார மாமா, மாமி, மாமியார் எல்லோரும்தான் மிரளமிரள விழித்தார்கள் ஒருவர் வாயிலிருந்தும் ஒரு வார்த்தை என்றால் ஒரு வார்த்தைகூட வரவில்லை

"பாட்டியின் கதையில் வரும் ராஜகுமாரர்கள் மாதிரி இவருக்கு (என் கணவர்) முனிவர் ஏதாவது மந்திரக்கோல் தந்திரக்கோல் கொடுத்திருப்பாரோ வென்பதற்கும், இவர் அப்படி எங்கும் ராஜ்யத்தை விட்டுப் போகவில்லையே! ஆனால், ஏதாவது தைரியமிருக்கவேதான் ஜோஸ்யரை எதிர்க்கும் துணிவு இவருக்கு ஏற்பட்டிருக்கவேண்டும் இல்லாவிட்டால் ஊரே நடுங்கும் அவரிடத்தில் இப்படிக் கொஞ்சம்கூடப் பயமில்லாமல் இங்கே வந்து இந்த அட்டகாசமெல்லாம் செய்வாரா இவர்? அல்லது இதில் ஏதாவது சூது இருக்கவேண்டும் என்று என் கணவரின் கைகளையும் இடுப்பையும் பார்த்தேன்—மந்திரக்கோல் ஏதாவது இருக்கிறதாவென்று மந்திரக்கோலையும் காணோம் தந்திரக்கோலையும் காணோம்

'என்ன பார்க்கிறாய்? ஒரே கண்கட்டு வித்தைமாதிரி இருக்கிறது இல்லையா?' என்றார் என் கணவர்

'உஸ் சத்தம்போடாதே! யாராவது கேட்டுக்கொண்டிருக்கப்போகிறார்கள் கதவை நன்றாகச் சாத்தித் தாழ்ப்பாளைப் போடு' என்றார் நாத்தனார் என் கணவரை நோக்கி.

'கனகா! பெண்களைப்பற்றி ஏற்பட்டிருக்கும் ஒரு ஐதிகத்தை நீ உடைத்தெறிந்துவிட்டாயடி!' என்றாள் வீட்டுக்கார மாமி, நாத்தனாரைப் பார்த்து

'ஏன், எதற்காகச் சொல்லுகிறீர்கள் மாமீ?' என்றார் சிரித்துக்கொண்டே நாத்தனார்.



'இவ்வளவு நாள் ஒரு ரகசியத்தை உன் தாயாரிடம்கூடத் தெரியப்படுத்தாமல் மூடி வைத்திருந்தாயென்றால், உலகத்திலேயே நடைபெறாத ஆச்சரியமான பிரமிக்கத்தக்க சம்பவமில்லையோடி?' என்றாள் மாமி.

'சமய சந்தர்ப்பங்கள் அப்படி இருக்கிறதே மாமி! நம்மிடம்கூடச் சொல்லாமல் இவ்வளவு கபடியாக இருந்திருக்கிறாளே யென்று என்மீது அம்மாவுக்குக் கோபம் வரத்தான் செய்யும் என்ன செய்கிறது? வெளியில் கொஞ்சம் தெரிந்தாலும் தலை போய்விடுமே மாமி! வெளியில் போலீஸ் கெடுபிடி அவ்வளவு பலமாக இருக்கிறதே' என்றார் நாத்தனார்.

'கோபமாவது நாங்களெல்லாம் உன்னுடையபொறுமையையும் விவேகத்தையும் பார்த்துச் சந்தோஷமல்லவோ படுகிறோம்? வாஸ்தவமாகச் சொல்லுகிறேன். எங்களால் இந்தமாதிரி இருக்கவேமுடியாது இது விஷயத்தில் பெண்களுக்கு ஏற்பட்டிருந்த ஒரு கெட்ட பெயரை நீ உடைத்தெறிந்துவிட்டாய் உன் தம்பிதானாகட்டும் இவ்வளவு நேரம்வரையில் சந்தேகத்துக்கு ஆஸ்பதமான வார்த்தை ஏதாவது ஒன்று சொல்லியிருக்கப்போகிறார் சமாசாரம் இப்படிப்பட்டது என்று தெரியாமல் வீட்டிலிருந்து இங்கு வருவதற்குள் எங்கள் மனது என்னதான் தவித்துவிட்டதடியம்மா! நல்ல வேடிக்கை இது!' என்றாள் மாமி

'எனக்கு மாத்திரம் கொஞ்சம் சந்தேகம்தான் என்னடா இது! உலகம் காதுகொண்டு கேட்கமுடியாமல் இவ்வளவு கேவலமாக வம்பளக்கிறதே! இதையெல்லாம் கொஞ்சம்கூடப் பொருள்படுத்தாமல், ஒரு பொம்மனாட்டி இவ்வளவு பகிரங்கமாக இங்குவந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறாளே! இதில் ஏதோ மர்மம் இருந்துதான் ஆகவேண்டும்' என்று என் மனதில் ஒரு சந்தேகம் மாத்திரம் இருந்துகொண்டே வந்தது அதற்கேற்றாற்போல் இத்தனை பேர் சொல்லுகிறோம். கொஞ்சம்கூடப் பயமில்லாமல் ஜோஸ்யரிடம் அலட்சியமாகச் சண்டைக்குப் போகிறார் ரகுநாதன் என்னதான் அசட்டுத் தைரியம் இருந்தாலும், அருகில் வந்துவிட்ட பிறகு எப்படிப்பட்டவனுக்கும் கொஞ்சம் அஸ்தியில் காபுரா ஏற்படத்தான் செய்யும். ரகுநாதன் என்னடாவென்றால், அதற்கு நேர்மாறாக ஜோஸ்யர் ஹ்ரீம் சொன்னால் இவர் க்ரீம் சொல்லுகிறார் அவர் விபூதியை ஊதிக் கீழே போட்டால் இவர் காகிதத்தைக் கிழித்துக் கீழே போடுகிறார் அவருக்கு இவர் கொஞ்சமும் சளைத்தவராகக் காணப்படவில்லை ஆகவே, இதில் நிச்சயம் ஏதோ மர்மம் இருக்கிறதென்று மாத்திரம் தீர்மானித்து விட்டேன்' என்றார் வீட்டுக்கார மாமா.

'உலகில் மாறுவேஷம் போடுவது உண்டு இல்லையென்று சொல்லவில்லை இருந்தாலும் இப்படி அடியோடு கொஞ்சம்கூட அடையாளமே கண்டுபிடிக்கமுடியாமல் இவ்வளவு பொருத்தமான மாறுவேஷத்தை நான் பார்த்ததே இல்லை. இப்பொழுதுதானாகட்டும் நான் கனகாவைக் கேட்கிறேன் முதலில் அவளால் இதைக் கண்டுபிடிக்க முடிந்ததா என்று சொல்லட்டும்' என்றாள் மாமி.

'நிஜமாகவே முதலில் என்னால்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை அப்புறம் இரண்டாந்தரம் நான் தனியாக இங்கு வந்திருந்தபோது அவராகச் சொன்னபிறகுதானே எனக்குத் தெரியும்? அப்பொழுதுகூட அவருடைய வார்த்தையில் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அவர் பொய்தாடி, மீசையையெல்லாம் களைந்து, தனது சுயரூபத்தைக் காட்டின பிறகுதான் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது அப்புறம்கூட நான் இவரிடம் சொன்னேன்: உலகம் இப்படிக் கேவலமாக வம்பளக்கிறதே, என்ன செய்யலாம் என்று 'உலகம் ஆயிரம் சொல்லும். அதற்காக நீ சிறிதும் கவலைப்படவேண்டாம். ஆனால் நீ இந்த இரகசியத்தை வேறு ஒருவரிடமும் உன் தாயாரிடம் கூடச் சொல்லக்கூடாது வெளியில் சிறிது 'பொரசல்' வந்தால்கூட தலை போய்விடும் பத்திரம் ஆனால் உன் தம்பி ரகுவினிடம் மாத்திரம் சொல்லிவிடு பின்னிட்டு அனாவசியமான சந்தேகங்களும் மனஸ்தாபங்களும் வராமலிருக்கும்.' என்றார் இதை நான் ரகுவினிடம் சொன்னேன். 'பரவாயில்லையே' போலீஸ்காரர்களிடம் தப்பித்துக்கொள்ள சரியான யுக்திதான் இது அத்துடன் மாத்திரமில்லை பிழைப்புக்கும் இதிலிருந்து ஒரு வழியை ஏற்படுத்திக்கொண்டுவிடலாம்' என்றான் ரகு அது சம்பந்தமாக ரகு இவரிடம்வந்து, 'நீங்கள் செய்தது சரியான யோசனை ஆனால் ஒரு விஷயத்தில் மாத்திரம் நீங்கள் கொஞ்சம் அசட்டுத்தனம்தான் செய்கிறீர்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உங்கள் ஜோஸியத்தில் நம்பிக்கை வைத்து, வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களில் எத்தனையோ பணக்காரர்கள் இருக்கிறார்கள் 'உம்' என்றால் போதும் நூறு நூறாகக் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அரிய சந்தர்ப்பத்தை அநியாயமாய்ப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்கிறீர்களே, என்றுதான் வருத்தமாக இருக்கிறது' என்றான் அதற்கு இவர் சொன்னார்:—'அப்பா ரகு! நீ இவ்வளவு படித்திருக்கிறாய் என்ன உபயோகம்? உனக்கு உலகமே தெரியவில்லையே நீ சொல்வதென்னமோ உண்மைதான். இருந்தாலும் சில காரியங்களுக்கு நிதானிக்க வேண்டும் சில காரியங்களைச் சட்புட் என்று செய்துவிடவேண்டும் இப்பொழுது நீ சொன்ன விஷயம் இருக்கிறதே, இதற்கு ரொம்பவும் நிதானம் வேண்டும். உனக்கு முன்னால் எனக்கும் இந்த யோசனை உண்டு. இருந்தாலும் எடுத்த எடுப்பிலேயே பணப் பேச்சை எடுத்தால் ஒருவன் கூட கிட்டே அணுகமாட்டான். பைஸாகூட வாங்குகிறதில்லையாம். யார் போனாலும், ஏழை பணக்காரர்கள் என்ற வித்யாஸமில்லாமல் எல்லோரையும் ஒரே மாதிரியாக நடத்துகிறாராம் பணம் வாங்காமல் இலவசமாகச்சொல்வதானால்அவர் ஒரு பெரிய வரப்பிரஸாதியாகத்தான் இருக்கவேண்டும்'என்று ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்து விடுவார்கள் நம் ஜோஸ்யத்திலும் நம்பிக்கை ஏற்பட்டு, பெயர் நன்றாகப்



பரவியவுடனே பணம் வசூலிக்கும் வியாபாரத்தை வைத்துக்கொள்ள வேண்டும் அப்பொழுதுகூட ஜோஸ்யத்துக்கென்று வசூலிக்கக்கூடாது. தெரு வாசற்படியண்டை ஓர் உண்டியை வைத்துவிட வேண்டும் பிரதி வருஷமும் கார்த்திகை மாதத்தில் ஞாயிற்றுக்கிழமையன்று ஆஞ்சநேயருக்கு அபிஷேகமும் லட்சார்ச்சனையும் நடைபெறுகிறது இது உலக க்ஷேமத்தின் பொருட்டு செய்யப்படுகிறது இஷ்டமிருக்கிறவர்கள் தங்கள் சக்திக்கேற்றதை, அதற்கென்று வைக்கப்பட்டிருக்கும் இந்த உண்டியில் போட்டு ஆஞ்சநேயரின் அருளுக்குப் பாத்திரமாகலாம். ஆனால், நிர்ப்பந்தமில்லை' என்று ஓர் அறிவிப்பையும் அந்த உண்டியின்மேல் எழுதிவிடவேண்டும். பாரேன் அப்புறம் நடப்பதை! நாளொன்றுக்கு வசூல் ஐம்பது ரூபாய்க்குக் குறையாது அறிவிப்பில் சொன்னபடி கார்த்திகை மாதத்தில் அபிஷேகத்தையும் அர்ச்சனையையும் நடத்திவிடவேண்டும். அதில்கூட இந்தப் பணத்துக்குச் செலவில்லாமலே நாலு ஞாயிற்றுக்கிழமையையும் நான்கு பணக்காரர்கள் பொறுப்புக்கு விட்டுவிடலாம்' என்றார் இவர். பேஷ்! உத்தமமான யோசனை! என்றான் ரகு 'ஆனால் ரகு! ஒன்றுமட்டிலும் கவனமிருக்கட்டும். இது விஷயம் வெளியில் கொஞ்சம்கூடத் தெரியக்கூடாது' என்றார் இவர். என்ன இப்படிச் சொல்லுகிறீர்களே! எனக்குத் தெரியாதா?' என்றான் ரகு', என்றார் நாத்தனார் சிரித்துக்கொண்டே.

'அடேயப்பா! இவ்வளவு விஷயம் நடந்திருக்கிறது திரை மறைவில்!' என்றாள் மாமி

'அத்துடன் மாத்திரமா! காலையில் ரகு. இங்கே டாக்ஸியில் வந்தான்—நீங்களெல்லாம் வருவதற்குக் கொஞ்சம் நேரத்துக்கு முன்னால் 'கல்யாணி இந்த மாதிரி சொல்லுகிறாள் அவளுடைய சந்தேகத்தைப் போக்க வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது இதற்கு என்ன செய்யலாம்? என்று இவரைக் கேட்டான். இவ்வளவு சந்தேகம் ஏற்பட்ட பிறகு சந்தேகத்தைத் தெளிய வைக்காவிட்டால் நன்றாக இராது அவளை இங்கே அழைத்துக்கொண்டு வந்துவிடு அவள் வரும்போது உன் தாயாரும் தான் வரட்டுமே. வீட்டுக்கார மாமியும், வீட்டுக்கார மாமாவும் தங்கமானவர்கள். அவர்களுக்கும் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் சந்தேகமும்தான் தெளியட்டுமே அவர்களுக்கு யாரையும் கெடுக்கும் சுபாவம் கிடையாது இதை யாரிடமும் தெரியப்படுத்தமாட்டார்களென்ற நம்பிக்கை எனக்குப் பூரணமாய் இருக்கிறது. ஆகவே அவர்களையும் அழைத்துக்கொண்டு வந்து விடு' என்று சொல்லியனுப்பினார்', என்றாள் நாத்தனார்.

'அதற்குள்ளாக இங்கே வந்துவிட்டா வந்திருக்கிறீர்கள்?' என்றேன் என் கணவரை நோக்கி

'ஆமாம். வேறே என்ன செய்வது? நீ ராத்திரி செய்த ஒரு ஆகாத்தியத்திற்கு உன் சந்தேகத்தைத் தெளிய வைக்காமல் இருந்தால் நன்றாக இருக்குமோ?' என்று சிரித்துவிட்டு. இப்பொழுதாவது சந்தேகம் தெளிந்ததா இல்லையா? உலகம் எதையாவது சொல்லிக் கொண்டிருக்கட்டும் கனகா நிரபராதி என்பது உங்கள் மனதுக்குத் தெரிந்துவிட்டதல்லவா? அந்த மட்டில் போதும் உலகத்தின் சந்தேகத்தைப் போக்க இது சமயமில்லை - பின்னிட்டுப் பார்த்துக்கொள்ளலாம்' என்றார் என் கணவர்.

என்ன! ஓரே புதிர் போடுகிறமாதிரி இருக்கிறதா? விஷயம் ஒன்றுமே புரியவில்லையா? ஆமாம். எப்படிப் புரியும் உங்களுக்கு?

அங்கே ஜோஸ்யர் என்ற பெயரில் உட்கார்ந்துகொண்டிருந்தாரே, அவர் வேறு யாருமில்லை என்னுடைய நாத்தனார், கனகாவின் அகமுடையான் ரங்கநாதன்தான்.

அவர் ரயிலைக் கவிழ்க்கும் ஓர் சதிவழக்கில் அகப்பட்டுக்கொண்டு தலைமறைவாக இருந்துவருகிறாரல்லவா? போலீஸாரிடம் அகப்படாமல் இருக்க ஜோஸ்யர் வேஷம்போட்டுக்கொண்டு இருந்து வருகிறார் உண்மையாகவே என் கணவர், நாத்தனார் அகமுடையான் அணிந்திருந்த பொய்த்தாடியையும் மீசையையும் அகற்றிய பிறகுதான், நாத்தனார் அகமுடையான் ஜோஸ்யர் வேஷத்தில் இருந்து வருகிறார் என்பது தெரியவந்தது

'துப்பறியும் கதைகளில் இந்த மாதிரியான பிரமிப்பையூட்டும் அதிசய சம்பவங்களைப் படித்திருக்கிறேன். இன்று நேரிலேயே அதைப் பார்த்துவிட்டேன்!' என்றாள் மாமி.

'சரி! அதெல்லாம் எப்படியாவது போகட்டும் அப்புறம் பேசிக்கொள்ளவேண்டிய விஷயம். இந்த சமாசாரம் வெளியில் துளிகூடத் தெரியக்கூடாது, என்றார் என் கணவர்.

'அதெல்லாம் நீங்கள் கொஞ்சம்கூடப் பயப்படவேண்டியதில்லை' என்றார் வீட்டுக்கார மாமா.

பிறகு சிறிதுநேரம் எல்லோரும் ஒன்றுமே பேசாமல் மௌனமாக நின்றுகொண்டிருந்தோம்.

'சுவாமி! பழைய ரூபத்தை எடுக்காமல் இந்த ஜன்மாவை இப்படியே கழித்துவிடுவதாக உத்தேசமா?' என்றார் கோபு சிரித்துக்கொண்டே.

'அப்படித்தான் உத்தேசித்துவிட்டான் நமது பக்தன் என்றார் நாத்தனாரின் அகமுடையானும் பதிலுக்குச் சிரித்துக்கொண்டே.

'அதுதான் நல்லது சுவாமி! வருமானத்துக்கு வருமானம்; போலீஸாரிடம் அகப்படாமலும் தப்பித்துக்கொள்ளலாம் ஆமாம் உண்டியை எப்பொழுது வைப்பதாக உத்தேசமோ? என்றார் கோபு

'அதெல்லாம் நமது பக்தனுக்குத்தான் தெரியும். நாளைக்கே வைக்கச்சொல்லி கட்டளையிட்டாலும் இடுவான் நாலு மாதம் கழித்து வைக்கச்சொல்லிக் கட்டளை இட்டாலும் இடுவான்' என்றார் நாத்தனாரின் அகமுடையான்.

'அதெல்லாம் எப்படியாவது போகட்டும் திடுதிப்பென்று யாராவது போலீஸ்காரர்கள் வந்து நமது பக்தன் அகப்பட்டுக்கொண்டு விழிக்கப் போகிறான்! சீக்கிரம் பழையபடி தாடியையும் மீசையையும் சரியாக வைத்துக்கொள்ளுங்கள்' என்றார் கோபு.

எல்லோரும் கொல்லென்று சிரித்துவிட்டோம்.

'உஸ் அதிக கலாட்டா வேண்டாம் வெளியில் தெரிந்தால் ஆபத்து இப்பொழுதே ரொம்ப நாழியாகிவிட்டது வெளியில் இருக்கும் ஜனங்களுக்கு ஏதாவது சந்தேகம் ஏற்படும் நீங்களெல்லோரும் வீட்டுக்குப் போய், இன்னொரு சமயம் வாருங்கள்' என்றார் நாத்தனாரின் அகமுடையான்.

அவர் சொல்லுவதும் வாஸ்தவந்தான் என்று எண்ணிக்கொண்டு, எல்லோரும் டாக்ஸியிலேயே வீட்டுக்குக் கிளம்பி விட்டோம்.

டாக்ஸி வீட்டு வாசலில் போய் நின்றது. அப்பொழுதுதான் தந்திச் சேவகனொருவன், என் கணவரின் பெயருக்கு ஓர் தந்தியைக் கொண்டு வந்து கொடுத்தான்.

(தொடரும்)






## பயிற்சி 23-अभ्यास 23

### விடைகள்-उत्तर

(அ)

1. इस बाग़ में पेड़ों के अलावा बहुत पौधे भी हैं।
2, कावेरी के किनारे बड़े-बड़े शहर हैं।
3. सीता भी राधा की तरह गाती है।
4. आजकल हम भात के बदले रोटी खाते हैं।
5. कुरसी के सामने मेज़ है।
6. लोग घर के भीतर सोते हैं।
7. हमेशा नहाने के बाद खाओ।
8. घंटी बजने के पहले स्कूल जाओ।
9. वह समुद्र की तरफ़ जाता है।
10. बारिश का पानी नदियों के ज़रिए बहता है।

(ஆ)

1. पूरब की तरफ़ एक गाँव है।
2. वहाँ तालाब के किनारे एक बड़ा बाग़ है।
3. उस बाग़ के बीच में श्री गणेशजी का मंदिर है।
4. मंदिर के सामने एक छोटा-सा मंडप है।
5. उस मंडप में एक चूहे की मूर्ति है।
6. चूहा ही श्री गणेशजी का वाहन है।
7. मंडप के आगे थोड़ी दूर पर एक कुआँ भी है।
8. मंदिर के पीछे पुजारीजी का घर है।
9. उसकी बग़ल में एक फुलवारी है।
10. मंदिर के तालाब का एक पनघट है।
11. वहाँ सीढ़ियों के ज़रिए नीचे उतर सकते हैं।
12. ता ाब में हाथ-पैर धोने के बाद ही हम मंदिर के अंदर जा सकते हैं।
13. पूजा के समय मंदिर की घंटी बजती है।
14. हमारे बदले और हमारी ओर से पुजारी जी ही मूर्ति की पूजा करते हैं।
15. हम सिर्फ़ श्री गणेशजी की जय बोलते हैं और उनसे प्रार्थना करते हैं।

## பாடம் 24-पाठ 24

### (அ) இலக்கணம்-व्याकरण

#### இணைச்சொற்கள்-(Conjunctions)

கீழ்க்கண்ட வாக்யங்களைக் கவனித்துப் படியுங்கள்:—

1 ராமன் வருகிறான். கோபாலன் வருகிறான்.
2 ஸீதை படிக்கிறாள் ஸீதை எழுதுகிறாள்
3 நான் மாம்பழம் சாப்பிடுகிறேன் எனக்கு மாம்பழம் பிடிக்கும்
4 அவன் கேட்கிறான். அவன் பேசவில்லை
5 நீ கஸ்ரத் செய்கிறாய் நீ ஆரோக்யமாக இருக்கிறாய்
6 அங்கே நிறைய மழை பெய்கிறது அங்கே சாகுபடி நன்றாயில்லை

இங்கே ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு இரண்டு வாக்யங்கள் இருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு தொகுதியிலும் கருத்து மட்டும் ஒன்றே. எனவே அந்த இரட்டை வாக்யங்களை இணைத்து ஒன்றாக எழுத முடியும். இதோ பாருங்கள் :

1 ராமனும், கோபாலனும், வருகிறார்கள்.
2. ஸீதை படிக்கிறாள், அல்லது எழுதுகிறாள்
3 நான் மாம்பழம் சாப்பிடுகிறேன் ஏனெனில் எனக்கு மாம்பழம் பிடிக்கும்
4 அவன் கேட்கிறான், ஆனால் பேசவில்லை
5 நீ கஸ்ரத் செய்கிறாய் ஆகையால் நீ ஆரோக்யமாக இருக்கிறாய்.
6 அங்கே நிறைய மழை பெய்கிறது, எனினும் அங்கே சாகுபடி நன்றாக இல்லை.

மேற்கண்ட தொகுதிகளிலுள்ள இரட்டை வாக்யங்களையெல்லாம் ஒவ்வொரு புது வார்த்தையைக் கொண்டு ஒன்றாக இணைத்திருக்கிறோம் அங்கே

'உம்', 'அல்லது', 'ஏனெனில்', 'ஆனால்', ஆகையால்', 'எனினும், என்ற வார்த்தைகள் இந்த இணைப்புக்கு உதவியிருக்கின்றன.

இப்படி உடன்பட்டோ அல்லது மாறுபட்டோ இருக்கும் பல சொற்களையோ அல்லது சொற்றொடர்களையோ அல்லது வாக்யங்களையோ ஒன்றாக இணைக்கும் சொற்களை 'இணைச் சொற்கள்' (Conjunctions) என்கிறோம்.

இத்தகைய இணைச் சொற்களும் ஹிந்தியில் உண்டு. और, व, तथा, भी, या, या तो-या, अथवा, तुपर, मगर, लेकिन, कि, परंतु, बल्कि, न-न, न कि, नहीं तो, इसलिए, अतः, अतएव, कि, क्योंकि, ताकि, चूँकि, हालाँकि, इसलिए-कि, जो, अगर-तो, यदि-तो, यद्यपि–तो भी, अर्थात, याने, मानों

முதலியவை ஹிந்தியில் இணைச் சொற்களே இவற்றின் அர்த்தங்களை இந்தப் பாடத்தின் கடைசியிலுள்ள "சொற்களஞ்சியம்" என்ற பிரிவில் பார்த்துக் கொள்ளலாம்.

இணைச் சொற்கள் வாக்யங்களின் நடுவில்தான் வரவேண்டுமென்பதில்லை; முன்னும், பின்னும், நடுவிலும். எங்கும் வரலாம்.

(உ—ம்)

1 राम और गोपाल आते हैं। (और—நடுவில்)

ராமனும் கோபாலனும் வருகிறார்கள்.

2 अगर वह अच्छा गाता है, तो उसको इनाम मिल सकता है। (अगर-तो—முன்னும், பின்னும்)

அவன் நன்றாகப் பாடுகிறானென்றால் (பாடினால்), அவனுக்குப் பரிசு கிடைக்கும்:

3 जो आता है, वह मेरा दोस्त है। (जो-முன்னால்)

எவன் வருகிறானோ அவன் என் நண்பன்.

इसलिए போன்ற வினையுரிச் சொற்களும் जो போன்ற ப்ரதிப் பெயர்ச் சொற்களும் கூட சில ஸமயங்களில் இணைச் சொற்களாக உபயோகப்படுவதைக் கவனிக்கவும்,

जो மட்டுமல்ல; जिसको, जिससे, जिसका, जिसमें, जिनको, जिनसे, जिनका, जिनमें முதலிய जो வின் மற்ற உருவ வேறுபாடுகள் கூட இணைச் சொற்களாக உபயோகப்படும்.

(உ—ம்)

जिसको प्यास लगती है, उसको पानी दो।

எவனுக்குத் தாகமெடுக்கிறதோ, அவனுக்குத் தண்ணீர் கொடு.

जिनसे रुपया मिल सकता है, उनके पास जाओ।

எவரிடமிருந்து ருபாய் கிடைக்க முடியுமோ (கூடுமோ), அவரிடம் போ.

இதேமாதிரி எண், பால் முதலிய நிலைமைகளுக்கேற்ப जैसा, जैसे, जैसी என்ற சொற்களும் இடைச் சொற்களாக வழங்கும்

(உ—ம்)

जैसा कपड़ा चाहते हो, वैसा कपड़ा ख़रीदो।

எத்தகைய துணியை விரும்புகிறாயோ, அத்தகைய துணியை வாங்கு.

जैसी चीज़ तुमको चाहिए, वैसी चीज़ यहाँ नहीं मिलती।

எப்படிப்பட்ட ஸாமான் உனக்கு வேண்டுமோ, அப்படிப்பட்ட ஸாமான் இங்கே கிடைப்பதில்லை.

இப்படி 'எவன்', 'எத்தகைய' முதலியவை இணைச் சொற்களாக வரும் இடங்களில், ஹிந்தீ மொழிபெயர்ப்பில் அவற்றிற்கு நேராக जो, जैसा முதலிய சொற்களைத்தான் உபயோகிக்கவேண்டும்: कौन, कैसा முதலிய சொற்களை இங்கே உபயோகிப்பது தவறு.

இதேமாதிரி 'எப்பொழுது', 'எவ்வளவு', 'எத்தனை' முதலிய கேள்விச் சொற்களுக்கு நேராக ஹிந்தீயில் कब, कितना, कितने என்ற சொற்கள் உண்டு ஆனால் அவை கேள்விச் சொற்கள்மட்டும் தான்; இணைச் சொற்கள் அல்ல இணைச் சொற்களாக 'எப்பொழுது', 'எவ்வளவு', 'எத்தனை' முதலிய சொற்களை உபயோகித்தால், அப்போது ஹிந்தீ மொழிபெயர்ப்பில் जब, जितना, जितने என்ற சொற்களைத்தான் உபயோகிக்கவேண்டும்.

(உ—ம்)

जब तुम यहाँ आते हो, तब उसको भी लाओ।

எப்பொழுது நீ இங்கே வருகிறாயோ அப்பொழுது அதையும் கொண்டுவா.

जितना खाना चाहते हैं, उतना खा सकते हैं।


## ஸ்ரீ சக்தி ஜோஸியம்

ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2
குழந்தை ஜாதகம் சுருக்க பலனுடன் கணிக்க ரூ 2
ஜாதகம் ஒரு வருஷ பலன் மாதவாரியாக எழுத ரூ 6
விவாகப் பொருத்தங்கள் பார்க்க 2 ஜாதகங்களுக்கு ரூ 2
1 தசாவிற்குபுக்திவாரி–பலன்கள் எழுத ரூ. 12.
ஜாதகம் OR எழுதும் நேரம், பெயர், தொழில், சுமார் வயது அனுப்புக
N. B. வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ். வி. பி. பி. தனி.
S. ராமச்சந்திரய்யர்,
ஸ்ரீ சக்தி ஜோஸியம், எரவாஞ்சேரி.
திருவிலுவாயட்டம் P.O.
South India.



## சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து சந்தோஷமடையுங்கள்

Est:d 1920

Rgd. No. 2221.

Prop: S அஹமத் உசேன்,
கோட்டை சேலம் S. I. R.




எவ்வளவு சாப்பிட விரும்புகிறோமோ, அவ்வளவு சாப்பிட முடியும்,

जितने फल आपको चाहिए, उतने फल यहाँ नहीं हैं।

எத்தனை பழங்கள் உங்களுக்கு வேண்டுமோ, அத்தனை பழங்கள் இங்கே இல்லை

ஹிந்தீயில் अगर (ஆல், If) कि (என்று, That), चूँकि (ஏனெனில், படியால், Because, Since) यद्यपि-तो भी (என்றாலும். எனினும், Though) முதலிய சில இணைச் சொற்களின் உபயோகத்தில் ஒரு விசேஷம் உண்டு தமிழ் நடையைக் காட்டிலும் அவை இங்கிலீஷ் நடையை அதிகம் ஒத்திருக்கின்றன.

(உ—ம்)

अगर तुम वहाँ जाते हो, तो उसको देख सकते हो।

—நீ அங்கே போகிறாயென்றால் (போனால்), அவனைப் பார்க்க முடியும் —If you go there, you can see him

राम कहता है कि गोपाल अच्छा लड़का है।

—ராமன் சொல்லுகிறான். கோபாலன் நல்ல பையன் என்று. (கோபாலன் நல்ல பையன் என்று ராமன் சொல்லுகிறான்)—Rama says that Gopal is a good boy.

चूँकि वह सच बोलता है, इसलिए मैं उसको इनाम देता हूँ।

—ஏனெனில் அவன் உண்மை பேசுகிறான். ஆகையால் (அவன் உண்மை பேசுகிறபடியால்) நான் அவனுக்குப் பரிசு கொடுக்கிறேன் —(Because he speaks the truth. therefore (Since he speaks the truth) I give him the prize.

यद्यपि वह हिंदी नहीं पढ़ता, तो भी उसको कुछ हिंदी मालूम है।

அவன் ஹிந்தீ படிப்பதில்லையென்றாலும் அவனுக்குக் கொஞ்சம் ஹிந்தீ தெரியும்.—Though he does not study Hindi (still) some Hindi is known to him

कि என்பது ஹிந்தீயில் ஒரு முக்யமான வார்த்தை, அதற்குத் திட்டமான ஒரு அர்த்தத்தைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது ஸந்தர்ப்பத்துக்கேற்ப அதன் அர்த்தம் வெவ்வேறு விதமாக மாறும் அதன் சரியான உபயோகத்தை தெரிந்துகொள்ள வேண்டுமானால் कि அடங்கியுள்ள பல்வேறு வாக்யங்களைப் படித்துப் புரிந்து கொள்ளவேண்டும் ஸாதாரணமாக कि-க்கு "என்று" என்பது அர்த்தமாகும்.

कि-யின் உச்சரிப்பிலும் ஒரு விசேஷம் உண்டு कि குறில் என்பது தெளிவு, (कि வேறு, की வேறு என்பது ஞாபகமிருக்கட்டும்) பேசும் போதும், படிக்கும்போதும் இந்தக் குற்றொலியை மேலும் குறுக்கி அரை குறையாக உச்சரிப்பதுதான் வழக்கம் அப்போது कि-யின் ஒலி கிட்டத்தட்ட 'கி' ஒலிக்கும், 'கெ' ஒலிக்கும் இடையில் இருக்கும்.

இன்னொரு விஷயம். राम कहता है कि गोपाल अच्छा लड़का है என்ற வாக்யத்தைப் படிக்கும்போது, कि என்ற இணைச்சொல்லைக் குறுக்கி உச்சரிப்பதோடு மட்டுமின்றி, அதை गोपाल अच्छा लड़का है என்ற, வாக்யத்தின் பின் பகுதியுடன் சேர்த்துச் சொல்வதுதான் சரியான முறை. தமிழில் மொழிபெயர்க்கும்போது வாக்யத்தின் பின் பகுதிக்கு முதலில் அர்த்தம் சொல்லி, அத்துடன் कि க்கு நேரான 'என்று என்ற வார்த்தையையும் சேர்த்து, அதன் பிறகுதான் வாக்யத்தின் முற்பகுதிக்கு அர்த்தம் சொல்லவேண்டும். இந்த விஷயத்தில் ஹிந்தி நடை இங்கிலீஷ் நடை போன்றது.

## (ஆ) கட்டுரை-लेख

## स्वतंत्रता–दिन

स्वतंत्रता सबके लिए ज़रूरी है। खाना और पीना जीवन में जितने ज़रूरी हैं, उतनी ही ज़रूरी स्वतंत्रता भी है। आज़ादी के बिना जीवन में खुशी नहीं होती। गुलामी किसी को पसंद हो सकती है, क्या?

चिड़ियाँ और जानवर भी आज़ाद रहना ही चाहते हैं। मज़े से उड़कर, मीठे-मीठे फल और अनाज खाकर,


## "சக்தி ஆருடம்"!

ஸ்ரீ K R. அப்பாச்சாரியார், M.A.L.T. வைஸ் பிரின்சிபால். டீச்சர்ஸ் காலேஜ். சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார் "தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்"
1 to 3 ஆருடகேள்விகளுக்கு ரூ. 1.
3-க்குமேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0.
வி பி பி தனி
ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.
N. B:-வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.
சக்தி ஹோம்,
விருத்தாசலம். P. O (S. I.)



## டாக்டர் பால்ஸ் விம் பில்ஸ்
Dr. PAUL'S VIM PILLS.

உங்களை வாலிபத் தன்மையுடையவர்களாகச் செய்யும்.

ஏன் கஷ்டப்பட வேண்டும்? பதினைந்து தினங்களுக்கு மாத்திரம் டாக்டர் பால்ஸ் விம் மாத்திரைகளை உட்கொண்டு, அவைகளின் அற்புத சக்தியைப் பாருங்கள். நரம்புத் தளர்ச்சி, அங்கபலஹீனம், பலக்குறைவு, நீர் அழிவு முடக்குவாதம், கீல்வாதம் முதலியவைகளுக்கு. டாக்டர் பால்ஸ் விம் மாத்திரைகள் சாஸ்திரியமான மருந்து ரத்தத்தை சுத்தி செய்து, பலத்தையும் அவயவ பலத்தையும் அதிகப்படுத்துகிறது மாய சக்திபோல் வேலை செய்கிறது சிறு குப்பி 1-க்கு ரூ. 3/-

டாக்டர் பால்ஸ் லோடஸ் ஹனி



கண்ணில் பூ விழுதல் க்ளாகோமா மற்றுமிதர கண்நோய்களை மாயமாய் குணமாக்கும் அற்புத மாகதிருஷ்டி அதிகரிக்கும்.

விலை 1 டிராம் ரூ. 2/-; 2 டிராம்கள் ரூ. 3/-

அப்பா & கோ., சைனாபஜார், சென்னை.

S Paul & Co. (Dept. S W.)
4, Hospital Street, Calcutta-13.

बाग़ में आज़ाद रहनेवाली चिड़िया, पिंजड़े में बंद होकर, भात, रोटी और तरकारी खाकर, घर में गुलाम कैसे रह सकती है? पिंजड़े में बंद रखकर, यद्यपि हम उसको दूध पिलाते हैं, फल खिलाते हैं और बहुत प्यार करते हैं, तो भी गुलामी की हालत में वे सब उसको रुचते नहीं।

स्वतंत्रता के विषय में, पक्षियों का मनोभाव जैसा है, वैसा ही है मनुष्यों का मनोभाव भी। सब मनुष्य अपने-अपने देश में स्वतंत्र रहना ही चाहते हैं, न कि दूसरों के गुलाम रहना। दुनिया में जितनी लड़ाइयाँ होती हैं, उनमें ज्यादा लड़ाइयाँ आज़ादी के लिए ही होती हैं। अभी हम देखते हैं कि दक्षिण कोरियावाले भी अपनी आज़ादी के लिए ज़ोर-शोर से लड़ रहे हैं।

हमारा भारत भी अपनी आज़ादी के लिए करीब पचीस साल तक महात्मा गांधीजी के नेतृत्व में ब्रिटिश सरकार से अहिंसा की लड़ाई लड़नेके बाद आज स्वतंत्र है। अगस्त महीने का पंद्रहवाँ दिन हमारी स्वतंत्रता का दिन है। इसीलिए हर साल उस दिन हम उत्सव मनाते हैं। इस साल भी अगस्त महीने की पंद्रहवीं तारीख़ को हम "स्वतंत्रता-दिन" मनानेवाले हैं।

स्वतंत्रता के लिए उत्सव मनाना काफ़ी नहीं है। स्वतंत्र होना जितना ज़रूरी है, उतना ही ज़रूरी है स्वतंत्र रहना भी। स्वतंत्र रहने के लिए स्वतंत्रता की रक्षा करना ज़रूरी है। वह रक्षा तभी हो सकती है जब हम देशभक्ति के साथ अपने भारत की सेवा करते हैं और उसकी समृद्धि के लिए लगातार मेहनत करते हैं। तभी हम अपने भारत को धनवान तथा बलवान देश बना सकते हैं। तभी हमको आज़ादी की पूरी खुशी हो सकती है। जय हिंद!

## தமிழில் இதே கட்டுரை

## "ஸ்வதந்த்ர தினம்"

ஸ்வதந்த்ரம் எல்லோருக்கும் அவச்யமானது சாப்பிடுவதும் குடிப்பதும் வாழ்க்கையில் எவ்வளவு அவச்யமானவையோ, அவ்வளவே அவச்யமானது ஸ்வதந்த்ரமும் ஸ்வதந்த்ரமின்றி வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுவதில்லை அடிமைத்தனம் யாருக்காவது பிடித்திருக்க முடியுமா?

பக்ஷிகளும், ம்ருகங்களும்கூட ஸ்வதந்த்ரமாய் இருக்கத்தான் விரும்புகின்றன. மகிழ்வுடன் பறந்து, இனிய-இனிய பழங்களையும் தான்யங்களையும் சாப்பிட்டு. தோட்டத்தில் ஸ்வதந்த்ரமாக இருக்கும் பக்ஷி, கூண்டில் அடைபட்டு, சாதத்தையும், ரொட்டியையும், காய்கறியையும் சாப்பிட்டு, வீட்டில் அடிமையாக எப்படி இருக்க முடியும்? கூண்டில் அடைத்துவைத்து, நாம் அதற்குப் பால் புகட்டி, பழம் ஊட்டி மிகவும் நேசிக்கிறோம் என்றாலும் (நேசித்தாலும்). அடிமைத்தனத்தின் நிலைமையில் (அடிமை நிலையில்) அவையெல்லாம் அதற்கு ருசிப்பதில்லை (பிடித்தமாக இருப்பதில்லை)

ஸ்வதந்த்ரம்(என்னும்) விஷயத்தில் பக்ஷிகளின் மனோபாவம் எப்படியிருக்கிறதோ, அப்படியேதான் இருக்கிறது. மனிதர்களின் மனோபாவமும். எல்லா மனிதர்களும் தங்கள்—தங்கள் தேசத்தில் ஸ்வதந்த்ரமாக இருக்கத்தான் விரும்புகிறார்கள். பிறருடைய அடிமைகளாக இருக்க அல்ல உலகத்தில் எத்தனை யுத்தங்கள் நடக்கின்றனவோ, அவற்றில் பெரும்பாலான யுத்தங்கள் ஸ்வதந்த்ரத்துக்காகத்தான் நடக்கின்றன. தென் கொரியாக்காரர்கள் தங்கள் ஸ்வதந்த்ரத்துக்காக மும்முரமாய் யுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும், இப்பொழுதே (இதோ) நாம் பார்க்கிறோம்.

நம்முடைய பாரதமும் தன் ஸ்வதந்த்ரத்துக்காக சுமார் இருபத்தைந்து வருஷம் வரையில் மகாத்மா காந்திஜீயின் தலைமையில் ப்ரிட்டிஷ் ஸர்க்காருடன் 'அஹிம்ஸைப் போர்' போரிட்ட பிறகு (நடத்திய பிறகு) இன்று ஸ்வதந்த்ரமாய் இருக்கிறது ஆகஸ்ட் மாதத்தின் பதினைந்தாம் நாள் நம்முடைய ஸ்வதந்த்ரத்தின் நாள் ஆகையால் தான் ஒவ்வொரு வருஷமும் அன்றைய தினம் நாம் விழா கொண்டாடுகிறோம் இந்த வருஷமும் ஆகஸ்ட் மாதத்தின் பதினைந்தாம் தேதியன்று நாம் "ஸ்வதந்த்ர தினம்" கொண்டாடப்போகிறோம்.

ஸ்வதந்த்ரத்துக்காக விழா கொண்டாடுவது போதாது. ஸ்வதந்த்ரமுள்ளவர்களாக ஆகுதல் எவ்வளவு முக்யமானதோ. அவ்வளவே முக்யமானது ஸ்வதந்த்ர முள்ளவர்களாக இருத்தலும். ஸ்வதந்த்ரமுள்ளவர்களாக இருப்பதற்கு ஸ்வதந்த்ரத்தின் பாதுகாப்பைச் செய்தல் (ஸ்வதந்த்ரத்தைப் பாதுகாத்தல்) அவச்யமானது. அந்தப் பாதுகாப்பு (என்பது), எப்பொழுது நாம் தேச பக்தியுடன் நம் பாரதத்துக்குத் தொண்டு செய்கிறோமோ, (மேலும்) அதன் ஸம்ருத்திக்காக இடைவிடாமல் உழைக்கிறோமோ, அப்பொழுதான் ஏற்பட முடியும். அப்பொழுதுதான் நாம் நம்முடைய பாரதத்தைச் செல்வமுள்ள (மேலும்) பலமுள்ள தேசமாகச் செய்யமுடியும். அப்பொழுதுதான் நமக்கு ஸ்வதந்த்ரத்தின் முழு மகிழ்ச்சியும் ஏற்பட முடியும்.

ஜய் ஹிந்த்!


ஆரூடம்! ஜாதக பலன்!!

ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர்காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2.



ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10. க்ரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி" கவசம் 1-க்கு ரூ. 7-8-0 ப்ரத்யேக ரக்ஷை ரூ. 72-8. வி. பி. செலவு தனி

வி. கே. க்ருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane :. Madras 5.




## (இ). பாட்டு-पद्य

## आज़ादी की जय!

पूछो, कोयल क्यों गाती है?
आज़ादी उसको भाती है!
भारत-माता खुश रहती है;
आज़ादी की जय कहती है!

बोलो—आज़ादी की जय!
आज़ादी की जय जय जय!

है आज़ाद य' भारत अपना!
अब इसकी व' गुलामी सपना!
नाम सदा बापू का जपना!
सत्य-उसीका मंत्र भी अपना!

बोलो—बापूजी की जय!
स्वतंत्रता-शिल्पी की जय!

## இதன் வசன நடை—अन्वय

पूछो—कोयल क्यों गाती है? उसको आज़ादी भाती है। भारत-माता खुश रहती है; आज़ादी की जय कहती है।

बोलो-आज़ादी की जय! आज़ादी की जय जय जय!

अपना य' (यह) भारत आज़ाद है। इसकी व' (वह) गुलामी अब सपना (है)। (तुम) सदा बापू का नाम जपना, उसीका मंत्र, सत्य भी अपना (अपनाकर)।

बोलो—बापू जी की जय! स्वतंत्रता-शिल्पी की जय!

## இதன் தமிழ் அர்த்தம்

## ஸ்வதந்த்ரம் வாழ்க!

கேள்:—குயில் ஏன் பாடுகிறது (என்று)? அதற்குஸ்வதந்த்ரம்பிடித்திருக்கிறது பாரதமாதா ஸந்தோஷமாய் இருக்கிறாள்; ஸ்வதந்த்ரம் வாழ்க (என்று) சொல்கிறாள்.

சொல்:—ஸ்வதந்த்ரம் வாழ்க! ஸ்வதந்த்ரம் வாழ்க வாழ்க வாழ்க!

நம்முடைய (சொந்த) இந்த பாரதம் ஸ்வதந்த்ரமுள்ளதாகஇருக்கிறது. இதனுடைய அந்த அடிமைத்தனம் இப்பொழுது கனவு(தான்). (நீ) எப்பொழுதும் 'பாபூ'வின் (மஹாத்மா காந்தியின்) பெயரை ஜபி (ஜபம் செய்), அவனுடைய (அவருடைய) மந்த்ரமான ஸத்யத்தையும் ஏற்றுக்கொண்டு.

சொல்:—பாபூஜீ வாழ்க! ஸ்வதந்த்ர(த்தின்) சில்பி வாழ்க!

## (ஈ) குறிப்புக்கள்-नोट

1. உடன்பட்டோ அல்லது மாறுபட்டோ இருக்கும் பலசொற்களையோ அல்லது சொற்றொடர்களையோ அல்லது வாக்யங்களையோ ஒன்றாக இணைக்கும் சொற்களை 'இணைச்சொற்கள்' என்கிறோம்.

2. இணைச்சொற்கள் வாக்யங்களின் நடுவில்தான் வரவேண்டுமென்பதில்லை; முன்னும், பின்னும், நடுவிலும், எங்கும் வரலாம்.

3 சில வினையுரிச் சொற்களும், ப்ரதிப் பெயர்ச் சொற்களும்கூட சில ஸமயங்களில் இணைச் சொற்களாக உபயோகப்படுவதுண்டு.

4. எவன், எத்தகைய, எப்பொழுது, எவ்வளவு, எத்தனை முதலியவை கேள்விச் சொற்களானால் कौन, कैसा, कब, कितना, कितने என்றும், இணைச்சொற்களானால் जो, जैसा, जब, जितना, जितने என்றும் மொழி பெயர்க்கப்படும்

5. अगर, कि, चूँकि, यद्यपि முதலிய சில இணைச்சொற்களின் ப்ரயோகங்கள் தமிழ் நடையைக்காட்டிலும் இங்கிலீஷ் நடையை அதிகம் ஒத்திருக்கின்றன.

6. ஹிந்தியில் कि என்பது ஒரு விசேஷமான வார்த்தை. அதன் அர்த்தத்தைத் திட்டமாகக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது ஸாதாரணமாக அதற்கு 'என்று' என்பது அர்த்தம். எனினும் பல்வேறு வாக்யங்களில் ஸந்தர்ப்பத்தை யொட்டி அதற்கு அர்த்தம் மாறும். அதை அவ்வப்போது கவனித்துக் கொள்ள வேண்டும்.

7. वैसा ही है मनुष्यों का मनोभाव भी என்பதை அர்த்தத்தில் பேதம் எதுவுமின்றி मनुष्यों का मनोभाव भी वैसा ही है என்று புரட்டியும் சொல்லலாம். ஸந்தர்ப்பத்தையும், நடையழகையும் ஒட்டி இந்த ப்ரயோகங்கள் செய்யப்படுகின்றன.

8. उस दिन என்றால் उस दिन को என்றுதான் அர்த்தம். ஆனால் வழக்கத்தில் அந்த வேற்றுமை உருபு மறைந்து நிற்கும்; அப்போது उस दिन என்றுமட்டும் சொல்வோம், இதே மாதிரிதான் उस साल, उस समय, मेरे घर முதலிய ப்ரயோகங்களும்,

## (உ) சொற்களஞ்சியம்

## शब्द-भंडार

लेख—(ஆ. பா.) கட்டுரை; लेखक—(ஆ. பு.) கட்டுரையாளன், எழுத்தாளன்;

(stamp) 198580

स्वतंत्र, आज़ाद—ஸ்வதந்த்ர முள்ள (Free); स्वतंत्र होना, आज़ाद होना—ஸ்வதந்த்ரமுள்ளதாகுதல் (To be free, to become free) स्वतंत्र रहना, आज़ाद रहना—ஸ்வதந்த்ரமுள்ளதாக இருத்தல் (To remain free); स्वतंत्र करना, आज़ाद करना—ஸ்வதந்த்ரமுள்ளதாக்குதல் (To make free, to set free); स्वतंत्र रखना, आज़ाद रखना—ஸ்வதந்த்ரமுள்ளதாக வைத்தல். (To-keep free)

स्वतंत्रता (பெ. பா.)—आज़ादी பெ. பா)—ஸ்வதந்த்ரம் (Freedom)

गुलाम—அடிமையான (Slavish (பெயர்ச் சொல்—(ஆ. பா.) அடிமை. (Slave)

गुलामी—(பெ. பா.) அடிமைத்தனம்.

चिड़िया—(பெ. பா) பறவை, பக்ஷி:

चिड़ियाँ—பறவைகள், பக்ஷிகள்.

मज़ा—(ஆ பா.) மகிழ்வு, இன்பம், ஆனந்தம்.

पिंजड़ा, पिंजरा—(ஆ. பா) கூண்டு (Cage.)

घोंसला—(ஆ பா.) கூடு (Nest)

पीना—குடித்தல்; पिलाना—குடிக்கச் செய்தல், புகட்டுதல்.

खाना—சாப்பிடுதல்; खिलाना—சாப்பிடச்செய்தல், ஊட்டுதல்.

हालत (பெ. பா.)—दशा (பெ. பா.) स्थिति (பெ. பா.)—நிலைமை.

विषय—(ஆ பா.) விஷயம்.

पक्षी—(ஆ பா.) பறவை, பக்ஷி

मन—(ஆ. பா.) மனம்; मनोभाव—(ஆ பா) மனோபாவம், மனப்பான்மை

मनुष्य—(ஆ பா,) மனுஷ்யன், மனிதன்.

ज़ोर—(ஆ பா) பலம்.

शोर—(ஆ. பா) சத்தம் (Noise)

जोर-शोर से—பலமாக, மும்முரமாக.

क़रीब—அருகே. ஏறக்குறைய சுமார், கிட்டத்தட்ட.

पच्चीस—இருபத்தைந்து (25)

नेता—(ஆ. பா) தலைவன், வழிகாட்டி. नेतृत्व(ஆ. பா.)தலைமை.

ब्रिटेन—(ஆ. பா) ப்ரிட்டன், ब्रिटिश ப்ரிட்டிஷ்.

हिंसा—(பெ, பா.) ஹிம்ஸை, பலாத்காரம்; अहिंसा—(பெ. பா) அஹிம்ஸை (Non-violence)

लड़ाई लड़ना —लड़ना— யுத்தம் செய்தல்.

पंद्रह—பதினைந்து (15); पंद्रहवाँ—பதினைந்தாவது.

रक्षा—(பெ. பா) பாதுகாப்பு.

भक्ति—(பெ. பா) பக்தி.

सेवा—(பெ பா.) ஸேவை, தொண்டு. ஊழியம் (Service) सेवक—(ஆ பா,) ஸேவகன், தொண்டன் (Servant)

धन—(ஆ. பா.) பணம், செல்வம் धनवान—பணக்கார, செல்வமுள்ள; (ஆ பா—பெயர்ச் சொல்) பணக்காரன்.

बल—(ஆ பா) பலம், சக்தி; बलवान—பலமுள்ள, சக்தியுள்ள; (ஆ பா.—பெயர்ச்சொல்) பலவான்.

पूछना—(வாயால்) கேட்க (To ask)

भाना—(மனதுக்குப்) பிடித்திருத்தல்

सदा, हमेशा—எப்பொழுதும்

सपना—(ஆ பா)— स्वप्न-(ஆ. பா.) ஸ்வப்னம், கனவு.

जपना—ஜபித்தல். ஜபம் செய்தல்.

सत्य—(ஆ பா) ஸத்யம், உண்மை;

मंत्र—(ஆ. பா.) மந்த்ரம்

अपना—(ப்ரதிப் பெயர்ச்சொல்) தனது. தமது. தங்களது,சொந்த; अपनाना (தொழிற் பெயர்)-தனதாக்கிக்கொள்ளல், ஏற்றுக்கொள்ளல்.

बाप—(ஆ பா,) தந்தை தகப்பன் (தந்தையை அருமையாகக் கூப்பிடும்போது बापू என்று சொல்வதுண்டு 'நாட்டின் தந்தை' என்ற அர்த்தத்தில் மஹாத்மா காந்தியை बापू जी என்று சொல்வதுண்டு)

शिल्प—(ஆ. பா.) சில்பம்; शिल्पी—(ஆ பா,) சில்பி (பாரதத்தின் "ஸ்வதந்திர—சில்பி" மகாத்மா காந்தி)

और, व, तथा, एवं—உம், மேலும் (And) भी—உம், கூட (Also)

या, अथवा அல்லது; या तो—या—ஆவது—வது (Either-or)

पर, मगर, लेकिन, किंतु, परंतु, बल्कि—ஆனல், न, नहीं—இல்லை.

न—न—உம் இல்லை—உம் இல்லை (Neither nor)


ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

★



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீநிவாஸாச்சாரியார்,

'குபேர நிதி,'

தியாகராய நகர், மதராஸ் 17.

தபால் பெட்டி 1417




न कि—அல்ல (Not that)

नहीं तो—இல்லாவிட்டால் (If not)

इसलिए, अतः, अतएव—ஆகையால்.

कि—என்று (That)

क्योंकि—ஏனென்றால் (Because)

ताकि—அப்படிக்கு (So that)

चूँकि—படியால் (Since)

हालाँकि, यद्यपि—என்றாலும், போதிலும் (Though)

जो—எவன், எவள், எது, எந்த,

अगर, यदि—ஆல் (If)

तो भी—எனினும், இருந்தாலும் (Still,yet)

अर्थात, याने-அதாவது (That is to say)

मानों—ஆல், போலே (As if)

## பயிற்சி 24-अभ्यास 24

### (அ)

கீழே பத்து வாக்யங்களும், அவற்றிற்கான பத்து இணைச் சொற்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த வாக்யத்தில் எந்தெந்த இணைச் சொல் பொருந்தும் என்பதைப் பார்த்து. அதன்படி காலி இடங்களை நிரப்பவும்:—

चूँकि—इसलिए; जब—तब; जितना-उतना; जैसा-वैसा; जिसकी; जो; यद्यपि-तो भी; मगर; तथा; कि

1,—लड़के खूब खेलते हैं, वे —दुरुस्त होते हैं।

2,—ज़रूरत है, उसको ले जाओ।

3.--चाहते हो,—खाओ।

4.--पानी बरसता है, तब वह बाहर नहीं जाता।

5.--वह काली है,—वह बहुत सुंदर है।

6.--तुम बार-बार पूछते हो,—मैं अब कहता हूँ।

7 --काम कंदन कर सकता है,--काम और कोई नहीं कर सकता।

8. हम कहते हैं--काश्मीर हमार है।

9. वह हिंदी पढ़ता तो है,—समझता नहीं।

10. हमको हिंदी—संस्कृत, दोनों मालूम हैं।

### (ஆ)

ஹிந்தியில் மொழிபெயர்க்கவும்:—

1 நீ அங்கே போகவில்லையானால், அவனை அனுப்பு.

2 தற்காலம் நான் ரொட்டிதான் சாப்பிடுகிறேன், ஏனெனில் இங்கே சாதம் கிடைப்பதில்லை

3. இந்தத் துணி வெளுப்பாக இருக்கிறது ஆனால் சுத்தமாக இல்லை

4 எப்பொழுதும் உண்மை பேசு என்று தகப்பனர் சொல்லுகிறார்.

5 குயில் இனிமையாகப் பாடுகிறது, ஆகையால் நாம் அதை விரும்புகிறோம்.

6. நீங்கள் சீக்ரமாகப் போங்கள், இல்லாவிட்டால் உங்களுக்கு வண்டி கிடைக்க முடியாது

7. அவன் பெரிய மனிதனாக இருப்பதினால், எல்லோரும் அவனுடைய வார்த்தையை ஒப்புக்கொள்கிறார்கள்.

8 ஸ்டேஷன் இங்கிருந்து வெகு தூரம், இருந்தாலும் நாங்கள் அங்கே ஒரு மணி நேரத்தில் போய்ச் சேர முடியும்.

9 நீ எவனைப் பார்க்க விரும்புகிறாயோ, அவன் இப்பொழுது டில்லியில் இருக்கிறான்.

10. எப்பொழுது நீ மதராஸ் வந்தாலும் என்னைச் சந்திப்பதில்லை

(விடைகள் அடுத்த இதழில்)

जय हिंद! जय हिंदी!

## அட்டைப்படம்

★

இந்தியாவைத் தொழில் மயமாக்க வேண்டும் என்ற கோரிக்கை நெடுநாளையது. அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பிறகுதான் இந்தக் காரியம் கைகூடுமென்றும், நம்மவர்கைக்கு அதிகாரம் மாறினலேயே இந்த நோக்கத்தைக் காரியகரமாக்க முடியுமென்றும் கருதி வந்தோம். சொல்லியும் வந்தோம். ஆனல் தென்னிந்தியாவில், இந்நாடு சுதந்தரமடையுமுன்னதாகவே, தொழில் வளர்ச்சியைப் பெருக்கத் திட்டமிட்டு வேலை செய்தவர்களில் திருச்சி ஸ்ரீ வி சேஷசாயி முக்கியமானவர்.

ஸ்ரீமான் சேஷசாயி 20-வருஷத்துக்கு முன்னல் மின்சார விசைத் துறையில் விசேஷமான அபிவிருத்தி திட்டங்களை வகுத்தவர். அவரது முயற்சியின் பயன் இன்று சென்னை மின்சாரத்திட்டம் உருவாகி நடந்தும் வருகிறது தமிழ்நாட்டினர் சகல துறைகளிலுமுள்ளவர்களுக்கு மின்சார விசையினல் ஏற்பட்டிருக்கும் அனுகூலங்கள் பலவும் இவருடைய தீவிர முயற்சியின் விளைவினல் ஏற்பட்டவை.

ஸௌத் மதராஸ் எலக்டிரிக்ஸப்ளை கார்ப்பொரேஷனின் மானேஜிங் டைரக்டர் இவர் மேட்டூர் கெமிகல் தொழில் கார்ப்பொரேஷனின் இன்றைய வெற்றிக்கும் இவரே காரணம் இவர் இன்னும் அநேக உற்பத்தி தொழில்களை அபிவிருத்தி செய்ய வகை செய்திருக்கிறார். அவற்றில் மிக முக்கியமானது பெரிய மூலதனத்துடன் ஆரம்பித்துள்ள ஆல்வாய் எரு ரஸாயனத் தொழிற்சாலையாகும்

இவருக்கு இப்போது வயது 60 பூர்த்தியாகிறது ஷஷ்டியப்தபூர்த்தியைக் கொண்டாடும் புனிதமான தொரு வாய்ப்பு கிட்டியிருக்கிறது. தொழில் துறையில் தென்னிந்தியாவை மேலும் வளம்பெற இவர் மேற்கொண்டு திடகாத்திரத்தோடிருக்கவேண்டுமென்று தொழில் அபிவிருத்தியில் நாட்டமுள்ள ஒவ்வொருவரும் விரும்புவது இயற்கை. இவ்விதழின் அட்டையில் இவருடைய படமே பிரசுரமாயிருக்கிறது.

# ஸங்கீத பாரிஜாதம்

பண்டித கிருஷ்ணமாச்சார்யா

276. द्वाभ्यां द्वाभ्यां स्वराभ्यां चः संवादिभ्यां सहुङ्कृतिः।

த்வாப்யாம் த்வாப்யாம் ஸ்வராப்யாம்ய:
3 4 3 4 4
ஸம்வாதிப்யாம் ஸ ஹுங்க்ருதி: |
3 4

23. ஹுங்காரம்:—இரண்டு இரண்டு ஸம்வாதிஸ்வரங்களால் பாடப்படும் அலங்காரம் 'ஹுங்காரமெ'னப் படும்.

(உ—ம்)

ஸ ஸ ப ப — ரி ரி த த — க க நி நி — ம ம ஸ ஸ.

स-म-गरीत्यलङ्कारे ह्लादमाने स्वरा इमे।

ஸமகரீத்யலங்காரே
3
ஹ்லாதமானே ஸ்வரா இமே |

24 ஹ்லாதமானம்:—இந்த அலங்காரத்தில் ஸமகரி' என்ற முறையைத் தழுவி ஸ்வரங்கள் அமைந்திருக்கும்.

(உ—ம்)

ஸம கரி — ரிபமக — கதபம
மநிதப — பஸநித

आद्यं तुर्यं त्रिरावृत्त्याऽवलोकितः प्रकीर्तितः।

ஆத்யம் தூர்யம் த்ரிராவ்ருத்யா
3
வலோகித: ப்ரகீர்த்தித:||

25 அவலோகிதம்:—முதலாவதும், நான்காவதுமான ஸ்வரங்களை முறையே மும்மூன்று தடவை பாடி இவ்விதமே மற்ற ஸ்வரங்களையும் பாடுதல் இத்தகைய அலங்காரமாகும்.

(உ—ம்)

ஸ ஸ ஸ—ம ம ம—ரி ரி ரி ப ப ப—க க க த த த—
ம ம ம நி நி நி — ப ப ப ஸ ஸ ஸ ||

277. एवं सञ्चार्यलङ्कारा आरोहे चावरोहिणि।

ஏவம் ஸஞ்சார்யலங்காரா
ஆரோஹ சாவரோஹிணி |

இங்ஙனம் ஆரோஹணத்திலும், அவரோஹணத்திலும் பாடப்படும் ஸஞ்சாரிவர்ண அழங்காரங்கள் கூறப்பட்டுள்ளன.

ஸஞ்சாரிவர்ண அலங்காரங்கள் முற்றுப்பெற்றன

278. ध्रुवः सप्त च गीतज्ञै रलङ्काराः प्रकीर्तिताः।

புர: ஸப்த ச கீதக்ஞை
3
ரலங்காரா : ப்ரகீர்த்திதா : ||

மீண்டும் 7 அலங்காரங்கள் ஸங்கீத அறிஞர்களால் கூறப்பட்டுள்ளன. இவைகள்தான் பெரும்பாலும் தற்காலத்தில் வழக்கத்தில் உள்ளவை அவையாவன:—

इन्द्रनीलो महावज्रो निर्दोषःसीर-कोकिलौ।

279. आवर्तकः सदानन्द इत्येषां लक्ष्म कथ्यते॥

இந்த்ரநீலோ மஹாவஜ்ரோ
3
நிர்தோஷ: ஸீர-கோகிலௌ |
3
ஆவர்தக : ஸதாநந்த
3 3
இத்யேஷாம் லக்ஷ்மகத்யதே ||
2

(1) இந்த்ரநீலம். (2) மஹாவஜ்ரம் (3) நிர்தோஷம் (4) ஸீரம் (5) கோகிலம் (6) ஆவர்த்தம் (7) ஸதாநந்தம்-இவைகளின் லக்ஷணங்கள் வருமாறு:—

स-री-मौग-री यत्र सरी-गरी स-री-ग-मौ।

280. इन्द्रनीलः सविज्ञेयः ध्रुवतालेन शोभितः॥

ஸரீ கமௌ கரீ யத்ர
3 3
ஸரீ கரீ ஸரீ கமௌ |
3 3
இந்த்ர நீல: ஸவிக்ஞேய:
3
த்ருவதாளேந சோபித: ||
4 4

1. இந்த்ர நீலம்:—'ஸரிகமகரி ஸரிகரி ஸரிகம' என்ற க்ரமத்தையுடையதும், த்ருவதாளத்துடன் கூடியதுமான இதனை இந்த்ர நீலம்' என்று அறிஞர் கூறுவர். த்ருவ தாளம், முறையே ஒரு லகு, ஒருத்ருதம், பின்னர் இரு லகுக்கள் இவைகளையுடையது லகு, சதுரஸ்ர ஜாதியாகவே யமைத்து இந்த அலங்காரம் தற்காலம் பாடப்படுவதால், அதுபோன்றே உதாரணமும் கொடுக்கப்படுகிறது.

(உ—ம்)

ஸ ரி க ம க ரி ஸ ரி க ரி ஸ ரி க ம
ரி க ம ப ம க ரி க ம க ரி க ம ப
க ம ப த ப ம க ம ப ம க ம ப த
ம ப த நி த ப ம ப த ப ம ப த நி
ப த நி ஸ நி த ப த நி த ப த நி ஸ

281. स-री-ग-री-सरी यत्र स-रीग-मौ तथैव च।
अलङ्कारो महवज्रो मण्ठतालेन शोभितः॥



ஸரீ கரீ ஸரீ யத்ர
3
ஸரீ கமௌ ததைவச |
3 2
அலங்காரோ மஹாவஜ்ரோ
மண்டதாளேன சோபித: ||
2 4

2. மஹாவஜ்ரம்:—இது 'ஸரிகரிஸரிஸரிகம' என்ற கிரமத்தைக் தழுவி பாடப்படுவதும் மண்ட (மட்ய) தாளத்துடன் கூடியதுமாகும் மட்யதாளம் ஒரு லகு, ஒருத்ருதம், பின்னர் ஒருலகு இந்த அங்கங்களையுடையது.

(உ—ம்)

ஸ ரி க ரி ஸ ரி ஸ ரி க ம
ரி க ம க ரி க ரி க ம ப
க ம ப ம க ம க ம ப த
ம ப த ப ம ப ம ப த நி
ப த நி த ப த ப த நி ஸ

282. स-री-स-री-गमावेति क्रम एव यदा भवेत्।
निर्दोषः स्तादलङ्कारो रूपकेण सुशोभितः॥

ஸரீ ஸரீ கமாவேதி
3
க்ரம ஏவ யதா பவேத் |
3 4
நிர்தோஷ: ஸ்யாத லங்காரோ
3 3
ரூபகேண ஸுசோபித:
4

3. நிர்தோஷம்;—'ஸரி ஸரிகம' என்ற முறையைப் பின்பற்றி பாடப்படுவதும் 'ரூபக தாளத்துடன் கூடியதுமான இதனை 'நிர்தோஷமெ'ன்று வழங்குவர். ரூபக தாளம், ஒரு த்ருதம், ஒருலகு இவைகளையுடையது.

(உ—ம்)

ஸ ரி ஸ ரி க ம — ரி க ரி க ம ப
க ம க ம ப த — ம ப ம ப த நி
ப த ப த நி ஸ

283. स-री ततः स-री गश्चेत् ततः स-री-ग-मौ तथा।
सीराख्योऽयमलङ्कारो झम्पतालेन शोभितः॥

ஸரீ தத: ஸரீகஸ்சேத்
3
தத: ஸ-ரீகமௌ ததா |
3 2
ஸீராக்யோ யமலங்காரோ
2
ஜம்பதாளே நசோபித:||
4 4

4 ஸீரம்:—'ஸரி ஸரிக ஸரிகமா' இம்முறையைப் பின்பற்றி பாடப்படுவதும், ஜம்பதாளத்துடன் கூடியதுமான இது 'ஸீரமெ'னப்படும். ஜம்பதாளம், ஒரு லகுவும் ஒரு அநுத்ருதமும். பின்னர் ஒருத்ருதமும் உள்ளது. இங்கு லகு மிச்ரஜாதியையுடையது.

(உ—ம்)

ஸரி ஸரிக ஸரி க மா
ரிக ரிகம ரிக ம பா
கம கமப கம ப தா
மப மபத மப த நீ
பத பதநி பத நி ஸா.

284. स-रीगश्च स-रीगोम इत्येतैः कलिमा भवेत्॥
त्रिपुटाख्येन तालेन कलितः कोकिलो भवेत्॥

ஸரீகஸ்ச ஸரீகோம
3 3
இத்யேதை; கலிகா பவேத் ||
4
த்ரிபுடாக்யேந தாளேந
2
கலித: கோகிலோபவேத்||
4

5 கோகிலம்:—'ஸரி ஸரிகம' என்ற முறையைத் தழுவியதும், த்ரிபுடை என்ற தாளத்துடன் பாடப்படுவதுமான இத்தகைய அலங்காரத்தை கோகிலமென்று வழங்குவர். ஒரு லகு, இரண்டு த்ருதங்கள் இவைகளையுடையது த்ரிபுடை என்ற தாளமாம். இங்கு லகு திஸ்ர ஜாதியைச் சேர்ந்தது.

(உ—ம்)

ஸ ரி க ஸ ரி க ம
ரி க ம ரி க ம ப
க ம ப க ம ப த
ம ப த ம ப த நி
ப த நி ப த நி ஸ

285. स-री-ग-री स-रीसश्च रिस्वरस्तु स-री-ग-मौ।
यत्र स्युरट्टतालेन तमावर्तं बुधा जगुः॥

ஸரீ கரீ ஸரீஸஸ்ச
3
ரிஸ்வரஸ்து ஸரீக மௌ |
3
யத்ரஸ்யுரட்டதாளேந
3 3
தமாவர்த்தம் புதா ஜகு : ||
3 4 3

6 ஆவர்த்தம்:—இது 'ஸரிகரி ஸரிஸரி ஸரிகம' இம்முறையைப் பின்பற்றியதும், அடதாளத்துடன் பாடப்படுவதுமாகும் அட தாளம் இரண்டு லகுக்களையும், இரு த்ருதங்களையும் உடையது.

(உ—ம்)

ஸரிகரி ஸரிஸரி ஸரிகம—ரிகமக ரிக ரிக ரிக மப—
கமபம கம கம கம பத—மபதப மப மப மபதநி—
பத நித பத பத பதநிஸ.

286. स-रि-ग-मैः सदानन्दो लघुतालेन शोभितः।

ஸரிகமை : ஸதாநந்தோ
3 3 3
லகுதாளேந சோபித : |
4 4

7. ஸதாநந்தம்:—இது 'ஸரிகம' என்ற முறையைத் தழுவியதும், லகுதாளத்தையுடையதுமாகும் இங்குலகு சதுரச்ரஜாதியைச் சேர்ந்தது

(உ—ம்)

ஸ ரி க ம-ரி க ம ப-க ம ப த-ம ப த நி-ப த நி ஸ.

# வீட்டில்கோர்ட்!

-சுவை-

இடம்:—பிரபல ஜில்லா நீதிபதி சேஷாதரி அய்யங்கார் பங்களா.

காலம்:—காலை ஏழுமணி.

பாத்திரங்கள்:—(அவருடைய குழந்தைகள்) நரஸிம்மன், ருக்மணி, ராதா, ராமானுஜம், கோவிந்தன், பங்கஜம், சேஷாத்ரி அய்யங்காருடைய தர்மபத்தினி ரங்கநாயகி அம்மாள.)

கேஸ் விவரம்:—நரஸிம்மனும், ருக்மணியும் பங்களாவின் கூடத்தில் பாடம் எழுதும்போது ஏதோ சண்டை போட்டுக்கொள்கிருர்கள் முதலில் ஒருவரையொருவர் அழகுகாட்டி பழித்துக்கொள்கிருர்கள் பிறகு ஒருவரையொருவர் கிள்ளிக்கொள்கிருர்கள் முடிவில் ஒருவரையொருவர் பிராண்டியும், கிள்ளியும், அடித்தும், கடித்தும் கொள்கிருர்கள். இதெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ராதா அப்பாவிடம் ஓடுகிருள்

ராதா:—(பிராஸிக்யூடர்) அப்பா, இங்கேபாரு. நரஸுவும் ருக்குவும் சண்டைபோட்டு அடித்துக்கொள்கிருர்கள்

சேஷாத்ரி அய்யங்கார்:—(ஜட்ஜ்) கூப்பிடு அவர்களை இங்கே விசாரிக்கிறேன். (ராதா இருவரையும் அழைத்து வருகிருள் வரும்போதே நரஸு ராதாவைப் பார்த்து கோழிச் சொல்லி என்று கூறிப் பழிக்கிருன். ராதா அப்பாவை அடைந்து).

ராதா;—அப்பா நான் அவா இரண்டுபேரும் சண்டை போட்டதை உன்னேடுசொன்னதுக்கு, என்னைக் கோழிச் சொல்லி என்கிருன் அப்பா, இந்த நரஸு

சேஷாத்ரி அய்யங்கார்:—வாடா, இங்கே கோழிச் சொல்லின்று அவளை ஏண்டா, சொன்னே, நீ?

நரஸு:—(பிரதிவாதி) இல்லேப்பா, பொய் சொல்கிருள் அவள்.

சேஷா:—சரி. அது கிடக்கட்டும், நீயும் ருக்குவும் ஏன் சண்டை போட்டேள்?

ருக்கு:—(வாதி) கண்களில் நீர் வழிய இங்கே பாராப்பா, என்னை பிராண்டியிருக்கிறதை அவன்! (கண்ணிற்கு கீழே நகம் கீறி இலேசாக இரத்தம் கசியும் காயத்தைக்காட்டுகிருள்)

நரஸு:—(பிரதிவாதி) என்னைப் பாரப்பா, இங்கே அவள் நாய்மாதிரி கடிச்சிருக்கிறதை இதோபார் (பற்கள் பதிந்த அடையாளமுள்ள தோளைக் காட்டுகிருன்

ருக்கு:-யாருடா, நாய். நீ பூனை மாதிரி பிராண்டினே நான் கடிச்சேன்.

நரஸு:—(குறும்புத்தனமாக சிரித்துக்கொண்டே) நாய், மாதிரி இல்லையா? (சிரிப்பை மறைத்துக்கொள்ள, கண்ணைக் கசக்கும் பாவனை செய்கிருன்.)

ருக்கு:—(ஆத்திரம் தாங்காதவளாய்) பாரப்பா. இந்தப் பொல்லாதவனை. செய்யறதையும் செஞ்சுப்பிட்டு சிரிக்கிறதை

சேஷா:—ஏன், சண்டை போட்டேள் இரண்டு பேரும் நான்தான் சண்டை போடக்கூடாதுன்னு சொல்லியிருக்கேனு. இல்லையா? ஏன் சண்டை போட்டுக்கொண்டு அடிச்சுண்டேள்? சொல்லுங்கோ (அதட்டுகிருர்)

ருக்கு:—இல்லேப்பா, என் பல்பத்தை எடுத்துண்டான், நரஸு கேட்டேன் திரும்பத்தாடான்னு அதுக்காக முதல்லே அவன்தான் அப்பா என்னை வெடுக்கின்னு கிள்ளினுன் அப்பா (துக்கத்தால் விம்முகிருன்)

நரஸு:—இல்லேப்பா பொய் சொல்றது அவ்வளவும் பொய் நேத்திக்கு ஒரு பல்பத்தை நான் கூருத் தீட்டி வச்சிருந்தேன், காப்பி எழுத அதை எடுத்துண்டுட்டா, அப்பா

சேஷா: அதுக்காக, நீ அவளைக் கிள்ளினுயாக்கும்

ருக்கு:—ஆமாப்பா.

நரஸு:—இல்லேப்பா, அந்த பல்பத்தை தாடீன்னு கேட்டேன். கொடுக்கமாட்டேன்னு என்னை அவள்தான் முதல்லே அழகு காட்டினுள். (ருக்குவைப் பார்த்து) ஏண்டி, பொய் சொல்றே?

ருக்கு:—போடா, நீ ஒண்ணும் கேக்கவேண்டியதில்லை, என்னை.

சேஷா:—உள்ளதைச் சொல்லமாட்டேள். இரண்டு பேரும். உதை விழுந்தால்தான் உள்ளதைச் சொல்வேள், இல்லையா?

ருக்கு, நரஸு இருவரும் விழிக்கிருர்கள் ராமானுஜம் (வாதியின் சாட்சி) முன்னுக்கு வருகிருன்

ராமா:—அப்பா, நடந்ததை நான் சொல்றேன். கேளப்பா முதல்லே நரஸுதான் ருக்குவைக் கிள்ளினுன். நான் பார்த்துண்டே இருந்தேன்

கோவிந்தன்:—(பிரதிவாதியின் சாட்சி) பொய் அப்பா. ராமானுஜம் சொல்றது பொய். ருக்குதான் நரஸுவைக் கிள்ளினுள், நான் பார்த்தேன் பங்கஜம் (வாதியின் இரண்டாவது சாட்சி) கோவிந்தன் பொய் சொல்றதைப் பாரு யாருடா முதல்லே கிள்ளினு? நரஸுதானே. இல்லேன்னு என்னைப்பார்த்து சொல் பார்ப்போம்

கோவிந்தன்:—(பங்கஜத்தைப் பார்த்து) ருக்குதான் முதல்லே கிள்ளினுள். இப்ப என்னடீ செய்வே, நீ

சேஷ:—டேய் பசங்களா, பேசாமல் இருக்கேளா. உதை வேணுமா? (ராதாவைப் பார்த்து) என்ன நடந்தது சொல்லு?

ராதா:—அவா இரண்டு பேரும் அடிச்சுண்டதுதான் எனக்குத் தெரியும அப்பா உங்ககிட்டே சொன்னேன். எனக்கு வேறொண்ணும் தெரியாது அப்பா

பங்கஜம்:—அப்பா. நடந்ததை அவள் சொல்ல பயப்படுகிருள். ஏன் தெரியுமா? இப்பத்தான் உங்களுக்குத் தெரியாமே, நரஸு அவளை விரலைக் காட்டி உதைக்கிறதாக, ஜாடை காட்டினுன். நான் பார்த்தேன்.



சேஷா:—ஏண்டா, அப்படியா சமாசாரம்.

கோவி:—இல்லேப்பா. நரஸு அப்படி செய்யவே இல்லை, அப்பா.

சேஷா:—நரஸுவைக் கேட்டா அவன் சொல்றதுக்குள்ளே, இவன் வக்காலத்துன்னு வாங்கிண்டு பதில் சொல்ருன் பேசாமல் இருடா அதிகப்பிரசங்கி

நரஸு:—நான், நெஜம்மா சொல்றேன். ஜாடை காட்டவே இல்லை.

சேஷா;—ராதா! நீ அவன் ஜாடை காட்டுவதைப் பார்த்தியா?

ராதா:—பதில் சொல்லத் தயங்குகிருள் கோவிந்தன் நரஸுவைப் பார்த்து கண் சிமிட்டுகிருன்.

ராமா:—அப்பா, பங்கஜம் சொன்னது ரைட் அப்பா கோவிந்தன் நரஸுவைப் பார்த்து கண் சிமிட்டினுன். இப்ப, நான் பார்த்தேன், கேளப்பா. அவனையே உண்டா இல்லையான்னு

சேஷா:—டேய் நரஸு, கோவிந்தன் உன்னைப் பார்த்து கண் சிமிட்டினுனு இல்லையா? உள்ளதைச் சொல்லு, இல்லாவிட்டால் உரிச்சுப்பிடுவேன், தெரியுமா?

நரஸு:—நான் அவனைப் பார்க்கவே இல்லையப்பா! (பங்கஜம், ராமாநுஜம் இருவரும்) பார்க்கவே இல்லையா அப்பா, நீயே தெரிஞ்சுக்கலாம் சொல்றது முழுப்பொய்ன்னு நரஸுவும் கோவிந்தனும், இரண்டு பேர் சேர்ந்து சொன்னுப்போலே அப்பா நம்பிடுவாளோ

சேஷா:—சத்தம்போடாமல் இருக்கேளா உதை வேணுமா? நரஸு, ருக்கு, நடந்ததைச் சொல்லுங்கோ உதை விழாது பொய் சொன்னல், தெரியும் சேதி நீங்க ரெண்டுபேரும் ஏன் சண்டைபோட்டேள். காரணம் என்ன?

நரஸுவும் ருக்குவும் சேர்ந்தாற்போல இல்லேப்பா, நான் வந்து என்று ஆரம்பிக்கிருர்கள்

சேஷா:—ஒவ்வொருத்தரா, சொல்லுங்கள், டேய், நீ முதல்லே சொல்லு நடந்ததை

நரஸு:—நான் கூருத் தீட்டிவச்சிருந்த பல்பத்தை எடுத்துண்டாள் நான் வந்து.

ருக்கு:—பொய் அப்பா, சொல்றது பொய் அப்பா.

சேஷா:—ருக்கு, உன்னை நான் ஏதாவது கேட்டேனு?

ருக்கு:—இல்லேப்பா நான் முதல்லே நடந்ததைச் சொல்றேன்

சேஷா:—சரி, சொல் நரஸு நீ பேசாமல் இருக்கணும் தெரியுமா?

ருக்கு:—என் பல்பத்தை எடுத்து வச்சிண்டு தரமாட்டேன்னு. அப்பா நான் வந்து

கோவிந்தன்.—(குறுக்கிட்டு) என்ன பொய், நான் சொல்றேன் கேளப்பா

பங்கஜம்:—(கோவிந்தனை இடைமறித்து) அப்பாதான் நடுவிலே பேசப்படாதுன்னு சொல்லியிருக்காளேடா

கோவிந்தன்:—(பங்கஜத்தைப் பார்த்து) போடீ, நரஸுவைத்தாண்டி பேசாமல் இருக்கச்சொன்னு, அப்பா. உனக்கென்னடி.



சேஷா:—உஸ், யாராவது வாயைத்திறந்தால் விழும் உதை. உம் அப்புறம் ருக்கு, நடந்தது என்ன?

ருக்கு;—நான் வந்து, நான் வந்து திருப்பிக்கேட்டேன், அப்பா.

ராதா:—எத்தனை நான் வந்து. நான் வந்து

நரஸு:—இதிலேயிருந்தே பொய் சொல்ருளன்னு தெரியலையா அப்பா.

சேஷா:—போக்கிரி ராஸ்கல் பேசாமல் இருடான்னு, கேட்கமாட்டியே நீ (என்று கூறி அவன் காதைத் திருகுகிருர் ருக்கு இதைப்பார்த்து சிரித்துவிடுகிருள்)

கோவி:—இப்போ, நீயே, பாரப்பா ருக்கு சிரிக்கிறதை. போக்கிரித்தனம் பண்றதுதான் நரஸு அடிபடறைப் பார்த்து சிரிப்பு. நீ பள்ளிக்கூடம் போறபோது வா, பேசிக்கிறேன்.

சேஷா:—அடே, விஷயம் அவ்வளவு தூரமா! வாடா இங்கே. கோவிந்தன் போகத் தயங்குகிருன். பங்கஜ

மும் ராமாநுஜமும் அவனை முன்னுக்குப் பிடித்து தள்ளுகிறார்கள் (இதற்குள் சேஷாத்ரி அய்யங்காரின் பத்னி ரங்கநாயகி அம்மாள் அங்கு வந்துவிடுகிறாள் )



ரங்கநாயகி அம்மாள்:—நன்னாத்தான் இருக்குபோங்கோ நானுந்தான் ஒரு நாழியாய் பார்க்கிறேன், நீங்களுந்தான் விசாரிச்சுண்டே இருக்கேள் தலை புரிஞ்சுதா, கால் புரிஞ்சுதா உங்களுக்கு அவர்கள் சண்டையிலே. குளிக்க எடுத்துவைத்த வெந்நீர் ஆறிப்போறது இந்தப் படைகள் சண்டையிலே நியாயம், அநியாயம் பார்க்கப்போறது எரிகிற கொள்ளியிலே எந்தக்கொள்ளி நல்லது என்று பார்ப்பதுபோலத்தான் ஒண்ணு சொன்ன மாதிரி இன்னொண்ணு சொல்லாது. ஒரு தடவை சொன்னதுமாதிரி மறுதரம் இருக்காது எல்லாம் துஷ்டப் படைகள் நான் அவர்களுக்குக்கொடுக்கிற தீர்ப்புதான் சரி இதோ பாருங்கள் நரஸுவைக் கூப்பிட்டு, வாடா இங்கே பெண் குழந்தைகளை கண்டபடி கண்ட இடத்தில் அடிக்காதேயென்று எத்தனை தடவை சொல்றது உனக்கு நல்ல வேளை ருக்கு கண் தப்பிசுது எங்காவது கண்ணில் விரல்பட்டால், அவள் கதி என்ன ஆறது (நரஸுவின் முதுகில் பளீர் என்று ஒரு அறை விழுகிறது, அவன் முதுகை நெளித்துக்கொண்டே நகர்கிறான் அங்கிருந்து ருக்குவைப் பார்த்து வாடீ, இங்கே, ராட்சஸி புருஷக் குழந்தைகளோடே, போராடாதேன்னு எத்தனை தரம் சொன்னால்தான் என்ன. உனக்குப் புத்தியில் ஏறாது (பளார் என்று அவள் முதுகில் அடிக்கிறாள் ருக்கு நரஸுவைப்பார்த்துக்கொண்டு முதுகையும் தடவிக்கொண்டு போகிறாள். )

மற்றவர்களைப் பார்த்து: வாங்கோ, இங்கே எல்லாரும் காலங் கார்த்தாலே பாடங்களைப் படிச்சோமின்னு இல்லை. இரண்டு பேர் சண்டை போட்டுக்கொண்டால். சாட்சி சொல்லவும் வேடிக்கை பார்த்துச் சொல்லவும் ரெடி. போய் மரியாதையாக மூச்சுக்காட்டாமல் படியுங்கோ. (ஆளுக்கு ஒரு குட்டு வைத்து அனுப்புகிறாள் எல்லாரும் தலையைத் தடவிக்கொண்டே தங்கள் பாடங்களைப் படிக்கச் செல்கின்றனர் )

சேஷாத்ரி அய்யங்காரைப் பார்த்து (அதே தோரணையில்) வீட்டிலே 'கோர்ட்' கெட்டது போங்கள் நீங்கள் சிறு பசங்கள் பூசலை விசாரிக்கிறது எழுந்திருங்கோனு, வெந்நீர் ஆறிப்போறது நான் கொடுக்கிற தீர்ப்புதான் சரி அதுகளுக்கெல்லாம் என்ன யோசனை பண்றேள். எழுந்திருங்கோ.

சேஷாத்ரி அய்யங்கார்:—(சிரித்துக்கொண்டே) இன்னும் எழுந்திருக்க தாமதமானால் எனக்கே தண்டனை கொடுத்து விடுவாய் போலிருக்கு. எனக்குக்கூட தண்டனை கொடுக்கும் ஏக ஜூரி நீதான்னு நினைச்சுப்பார்க்க சிரிப்பு வந்தது, (என்று கூறிக்கொண்டே எழுந்து ரங்கநாயகி அம்மாள் கன்னத்தைக் கிள்ள வருகிறார் )

ரங்:—சற்று விலகிவிட்டு வரவர குழந்தையாட்டமா, என்ன போங்கோ குழந்தைகள் எல்லாம் இருக்கறச்சே. (இன்னும் சற்று விலகுகிறாள் திரை விழுகிறது )

---






பகவானைத் தவிர வேறு யாரை அடைந்தாலும். எந்த உலகத்தைப் போய்ச் சேர்ந்தாலும் ஜனன மரணத்திலிருந்து தப்ப முடியாது பிரும்ம லோகம் உள்படச் சகலப் பிரபஞ்சமும் காலத்தின் அதீனத்தில் அகப்பட்டிருக்கிறது நீண்ட காலத்திற்குப்பிறகாவது அழிந்தே தீரும். மறுபடித் தோன்றும் அவ்வாறு நெடுங்காலமிருந்து பின் நெடுங்காலம் இல்லாமல் மறைந்திருப்பதற்கு, பிரும்மலோகத்தைக் கண்ணன் அர்ஜுனனுக்கு முன்னே உதாரணமாக எடுத்துச் சொன்னார் அல்லவா? அவ்விதம் தோன்றிமறையும் தத்துவத்தை மேலும் விளக்குகிறார்.

தோன்று அயனுடம்பில்
  தோன்றும் பொருளெல்லாம்

ஏன்றும் பகலி னிடையுதிக்கும்-
  ஆன்றார்ந்தங்

காகு மவையெல்லா
  மவ்வுருவுள் ளேயடங்கிப்

போகு மிரவாகும் போது.

(இ—ள்) ஏன்றும் பகலின் இடை—பொருந்திய பகல் கால ஆரம்பத்தில், தோன்றுப் பொருள் எல்லாம்—காணப்படும் பொருள்களடங்கிய பிரபஞ்சம் முழுதும் தோன்று அயன் உடம்பில்—காணப்படாத பிரமனின் சூட்சுமப் பிரகிருதியிலிருந்து. உதிக்கும்—உண்டாகும்; இரவு ஆகும்போது—இரவுக் காலம் வரும்போது, ஆன்று ஆர்ந்து அங்கு ஆகும் அவை எல்லாம்—அமைந்து நிறைந்து பிரபஞ்சத்தில் ஆன பொருள்கள் யாவும், அ உரு உள்ளே அடங்கிப் போகும்—காணப்படாதது என்று சொல்லப்பட்ட அந்தச் சூட்சுமப் பிரகிருதியினுள்ளே அடங்கிவிடும்.

## 90
## சிறந்த ஸாதனம் எது?

☆

அவ்யக்தாத் வ்யக்தயஸ் ஸர்வா:

4 3

ப்ரபவந்தி அஹராகமே

3

ராத்ர்யாகமே ப்ரலீயந்தே

தத்ரைவா வ்யக்த ஸஞ்ஜிகே

(இ-ள்) அஹராகமே-பகல் வரும் பொழுது, வ்யக்தய: ஸர்வா:-காணப்படும் பொருள்கள் எல்லாம், அவ்யக்தாத்-காணப்படாத சூட்சுமப் பிரகிருதியினின்றும், ப்ரபவந்தி-உண்டாகின்றனர்; ராத்ரி ஆகமே-இரவு வரும் பொழுது, அவ்யக்த ஸஞ்ஜிகே-காணப்படாததென்று சொல்லப்படுகிற, தத்ரைவ-(சூட்சுமப் பிரகிருதியாகிய) அவ்விடத்திலேயே, ப்ரலீயந்தே-அடங்கி விடுகின்றன

ஆயிரம் சதுர்யுகங்கள் பிரமனுக்கு ஒரு பகல் அப் பகலின் முடிவில் மஹாப் பிரளயம் உண்டாகி அது வரையில் காணப்பட்ட பொருள்கள் எல்லாம் அழிந்து சூட்சுமப் பிரகிருதியில் அடங்கிவிடுகின்றன அப் பிரளயம் ஆயிரம் சதுர்யுகங்கள் நீடித்திருப்பதால் அக்கால அளவு பிரமனுக்கு ஒரு இரவு என்று சொல்லப்படுகிறது இரவு முடிந்து பகல் ஆரம்பமாகும்போது பிரளயம் முடிந்து. காணப்படாத சூட்சுமப் பிரகிருதியாகிய மூலத்தில் அடங்கியவை. மறுபடி காணக்கூடியவையாக வெளிப்படுகின்றன இவ்வாறு மாறி மாறி நடை பெறுகின்றது

'அவ்யக்தாத்' என்பது பிரமனையும். வ்யக்தாத்' என்பது சத்துவம். ராஜசம், தவம் முதலிய முக்குண விகாரங்களையும், அவற்றின் காரியங்களையும் குறிக்கும் என்று சிலர் உரை கொள்வர் 'அவ்யக்தாத்' என்பதற்கு 'ப்ரும்மாவின் நித்திராவஸ்தை' என்று சங்கரர் உரை கொண்டதும் நோக்கத்தக்கது

ப்ரும்மாவின் பகல் முடிவில் உண்டாகின்ற பிரளயத்தில் பிரும்ம லோகம் நீங்கலாக மற்றப் பிரபஞ்சம் தான் அழியும் பிரும்மாவிற்கு உரிய ஆயுளான நூறு பிரும்ம வருடங்கள் கழியும்போது பிரும்மலோகமும் அழிந்துவிடும். என்று பாகவதாதி புராணங்கள் கூறுகின்றன

பிரும்மாவின் பகல் இரவும் ஆயுளும் இவ்வாறு முடிவுடையதாகச் சொல்லப்பட்டால் பகவானுக்கும் ஆரம்பம் முடிவு முதலிய இருக்கலாமோ என்ற சந்தேகம் பலருக்கு எழலாம் அதைப் போக்குவதற்காகக் கண்ணன் மேலும் இரு சுலோகங்களால் பகவத் ஸ்வரூபத்தின் தன்மையை வெளியிடுகிறார்

எல்லாப் பொருளும்
  இறுதியினைக் கூடியே

நில்லாத காலத்து
  நிற்குமதாய்ச்—சொல்லார்ந்த

அக்கரமாய் நின்றபொரு
  ளாங்கசித்தின் மேலாகி

மிக்கபெரு நுண்மையதாம்
  வேறு.

நுண்ணோர்கொள் அக்கரமா
  நூலுரைக்கும் அப்பொருளை

என்னோர் பரமகதி
  என்றுரைப்பர்—நண்ணியது

மீளார் எனக்கதுதான்
  மேலாய் ஒளிசிறந்து

மாளா விருப்பிடமா
  மற்று.

(இ-ள்) எல்லாப் பொருளும்—எல்லாவிதப் பூதங்களும், இறுதி

யினை கூடியே நில்லாத காலத்தும்—தத்தம் காரியங்களோடு காரணங்களோடும் ஒருங்கே நில்லாது நசிக்கும் காலத்திலும், நிற்கும் அதாய்—(அவைகளிலிருக்கும்) தான் நசியாததாய், சொல் ஆர்ந்த அக்கரமாய்—புகழ் நிறைந்த அக்ஷரம் என்னும் பெயர் படைத்ததாய், நின்ற பொருள்-நிலையாகவிருக்கும் பொருள், அசித்தின் மேலாகி—(பிரகிருதி) அசித்தைவிடச் சிறந்ததாய், மிக்க பெரு நுண்மையதாம் வேறு—மிக மிகச் சூட்சுமமானதாய் வேறுபட்டிருக்கும்.

அ பொருளை—அந்தப் பொருளை நுண் ஏர் கொள்—அவ்வியக்தத் தன்மை கொண்ட, அக்கரமா நூல் உரைக்கும்—அக்ஷரம் என்று நூல்கள் கூறும் எண்ணோர் பரமகதி என்பர்—(அப்பொருளை) அறிவுடைய வேத வித்துக்கள் பரம புருஷார்த்தம் என்று சொல்வார்கள்; அது நண்ணி மீளார்—அதை அடைந்தவர்கள் மறுபடியும் திரும்புவதில்லை, அதுதான் எனக்கு மேலாய் ஒளி சிறந்து மாளா இருப்பிடம் ஆம்—அதுவே தான் என்னுடைய மேலான பிரகாசமான நிலையான (நியமனத்) தானம் ஆகும்.

4
பரஸ்தஸ்மாத்து பாவோந்யோ

வ்யக்தோ வ்யக்தாத் ஸநாதந:

4
யஸ்ஸ ஸர்வேஷு பூதேஷு

நச்யத்ஸு ந விநச்யதி

அவ்யக்தோ க்ஷர இத்யுக்த:

3
தமாஹு: பரமாம்கதிம்

யம் ப்ராப்ய ந நிவர்தந்தே

3 4
தத்தாம பரமம் மம

(இ-ள்) தஸ்யாத் அவ்யக்தாத்—அந்தப் பிரகிருதிரூப அவ்வியக்தத்தைக் காட்டிலும். பர:—சிரேஷ்டமான, அந்ய:—மற்றொரு அவ்யக்த:—பிரமாணத்துக்குப் புலப்படாத, ஸநாதந:—நித்தியமான, ய:—பாவ:—யாதொரு பாவ (தன்மை) முண்டோ. ஸ:—அது. ஸர்வேஷு பூதேஷு—எல்லா பூதங்களும், நச்யத்ஸு—நசிக்கும் பொழுதும், ந விநச்யதி—நசிக்கிறதில்லை

ய:—எது வானுல் அவ்யக்த:—அவ்வியக்தம், அக்ஷர:—அக்ஷரம், இதி உக்த:—என்று சொல்லப்படுகிறதோ தம்—அதை, பரமாம்கதிம்—மேலான புருஷார்த்தமாக, ஆஹு:—சொல்லுகிறார்கள், யம்-யாதொன்றை, ப்ராப்ய அடைந்து ந நிவர்த்தந்தே—மீண்டும் வரமாட்டார்களோ, தத்—அது, மம, என்னுடைய, பரமம்—மேலான, தாம—(நியமன) ஸ்தானம்.

'அது' என்னுடைய மேலான ஸ்தானம்:—என்பதற்குக் கொள்ளப்படும் விசிஷ்டாத்வைத ரீதியான பொருள் சிந்திக்கத்தக்கது அது பின்வருமாறு;—பகவானுக்கு நியமனம் ஸ்தானங்கள் பல உண்டு அவற்றுள் அசேதனமான பிரகிருதி ஒரு நியமன ஸ்தானம் பிரகிருதியோடு கலந்திருக்கிற ஜீவன் என்னும் பராப்ரக்ருதி இரண்டாவது நியமனஸ்தானம். அவ்வசேதனப் பிரகிருதியை விட்டுப் பிரிந்த (முக்தியடைந்த) முக்தஸ்வரூபமான ஜீவன் மேலான நியமன ஸ்தானம்

தமிழ்ப் பாடலில் வந்த 'மேலாய் ஒளி சிறந்த' என்பதற்கு, 'பிரகிருதியோடு கலந்து மிதமான ஞானமுடைய ஜீவஸ்வரூபத்தைக் காட்டிலும் மேலானதாய், எல்லையற்ற ஞானத்தோடு முக்த ஸ்வரூபமாயிருக்கிற' என்று பொருள் கொள்ளலாம்

கடந்த அத்தியாயங்களில் பக்தியும் யோகமும் முக்தியில் கூட்டுவிக்கும் சிறந்தபடிகளாகச் சொல்லப்பட்டன ஆனுல் அவை யிரண்டையும் சமமாக நினைக்கலாமா? என்பதற்கு விடையாகப் பக்தியே எல்லாச் சாதனங்களிலும் சிறந்ததென்பதை அடுத்து வரும் சுலோகத்தில் தெரிவிக்கிருர்.

தன்னகத்துப் பூதங்கள்
எல்லாம் தகவிருத்தி

அன்னவற்றில் தான்பரந்தே
யாங்கமைந்து—மன்னிய சீர்

அந்தப் பரம்புருடன்
அன்பால் அனன்னியமாம்

சிந்தைக் குறவெளியன் சேர்ந்து

(இ-ள்) தன் அகத்து—தனக்குள்ளே பூதங்கள் எல்லாம் தக-பிராணிகள் யாவும் பொருந்தியிருக்க, விருத்தி அன்னவற்றில்-விருத்தியடையும் (வளரும்) அப் பிராணிகள் யாவற்றிலும், தான் பரந்து அமைந்து-தானும் வியாபித்துப் பொருந்தி, மன்னிய சீர்-மிக்க புகழோடு கூடிய, அந்தப் பரம் புருடன்—அந்தப் பரம புருஷனுகிய பகவான், அன்பால்-அன்போடு செய்யப்படும் அனன்னியமாம் சிந்தைக்கு—வேறொன்றை நாடாத பக்தியால் சேர்ந்து உற—அடைவதற்கு எளியன்—சுலபனுகிருன்.

2
புருஷஸ்ஸ பர: பார்த

4 4
பக்த்யா லப்யஸ்த்வநந்யயா

2 4
யஸ்யாந்த: ஸ்தாநி பூதாநி

3
யேந ஸர்வமிதம் ததம்

(இ-ள்) பார்த்த அர்ஜுந இதம் ஸர்வம் பூதாநி இந்த எல்லாப் பூதங்களும், யஸ்ய—எவருடைய, அந்த: ஸ்தாநி—உள்ளுக்குள் இருக்கின்றனவோ, யேந-எவரால். ததம்-வியாபிக்கப்பட்டிருக்கிறதோ ஸ:-அந்த பர: புருஷ:—பரம புருஷன், அனன்யயா-மற்றொன்றை நாடாத, பக்த்யா—பக்தியினுல், லப்ய:—அடையத் தகுந்தவன்.

பிறிதொன்றை நாடாத பகவத் பக்தி ரூபமான தியானமே அனன்ய பக்தி எனப்படும் ஞானம், யோகம் என்று சொல்லப்படுகின்ற பிற சாதனங்களை விட, பக்தி அனுஷ்டிப்பதற்கு எளிது அப்பக்தியே ஞானத்தையும் தருவதாலும் பக்தியால் அடைவதற்கு எளியனுய்ப் பகவானிருத்தலாலும் சிறந்த ஸாதனமாகச் சொல்லப்படுகிறது


பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

Phone: 84254.

குழந்தைகளின் ஈரல், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7 சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

திருச்சி கிளை:—
15. புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்.







அன்று சுதந்திர தினமாகையினுல் எங்கள் வீட்டில் நாங்கள் எல்லோரும் சுதந்திரத்துடன் இருந்தோம். எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சாக இருந்தது. கொசுவிலிருந்து யானை வரையில் அன்று சந்தோஷத்துடன் இருந்தன. எனக்கு அப்பா வாங்கிக் கொடுத்திருந்த பொம்மைகளுக்கும் சுதந்திர தினமாகவே இருந்தது. சுதந்திர உணர்ச்சியிலே ஆழ்ந்திருந்த நான் காலையிலேயே அப்பாவிடம் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டேன். ஏனெனில் அன்று சுதந்திர தினமாயிற்றே, அன்றுகூடவா நாம் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் அடிமையாக இருக்க வேண்டும்? நான் வீட்டைவிட்டு வெளியேறியதுதான் தாமதம், என்னுடைய பொம்மைகளும் சுதந்திர தினத்தை சிறப்பாக நடத்தி பெரிய கலாட்டா செய்துவிட்டன. அதை நான் என்றும் மறக்க முடியாதபடியும் செய்துவிட்டன.

அப்பா எனக்கு வாங்கிக் கொடுத்த பொம்மைகள் என்ன என்ருல், ஒரு லேடி பொம்மை, கரடி, நரி, குதிரை, யானை பொம்மைகளும், ஒரு பையன் பொம்மையுந்தான். லேடி பொம்மைக்குச் 'சின்னி' என்றும், பையன் பொம்மைக்கு "அம்மாஞ்சி" என்றும், நான்

## மூன்ரும் நாள் கதை

☆

பெயர் வைத்திருந்தேன். கடவுள் அவைகளுக்கு உயிர் கொடுத்துவிட்டார். மேலே கூறிய பொம்மைகள் அத்தனையும், நான் வீட்டைவிட்டுப் போனதும், ஒரே தாவாக அலமாரியிலிருந்து தாவி என் அறையில் விளையாட ஆரம்பித்தன. ஒரே கிர்த்தூளி. புத்தகம், பேனு, மசிக்கூடு, சட்டை எல்லாவற்றையும் விளையாட்டுக்கருவிகளாக உபயோகப்படுத்தின. விளையாட்டு வினையாகவே புத்தகம் தனித்தாளாகப் பிரிந்து சுதந்திரத்துடன் பறந்துகொண்டிருந்தன. மைக்கூடு சுதந்திரத்துடன் உருண்டோடி தன்னுள்ளிருந்த மசியினுல் மேஜையை அலம்பிவிட்டது. பேனு அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தது. சட்டைப் பையிலிருந்த காலணு அதிலிருந்து தப்பித்துக் கொண்டு சந்தோஷத்துடன் ஓடி மேஜையினடியில் ஒளிந்துகொண்டது. சட்டை கோட் ஸ்டாண்டைவிட்டுப்பறந்துஜன்னல் கம்பியில் தொத்திக்கொண்டு தெருவிலே நடப்பவைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. இப்படியாக என் அறை முழுவதும் சுதந்திரத்தில் ஆழ்ந்திருந்தது.

அப்படி விளையாடிக்கொண்டிருந்த கரடி திடீரென ஒரு மூலையிலிருந்து எதையோ எடுத்துக்கொண்டுவந்து சந்தோஷத்திலே 'தா, தை' என்று கூத்தாடியது. அதைக்கண்ட மற்ற பொம்மைகள் கரடியின் கையிலே என்ன இருக்கிறது என்று உற்றுப் பார்த்தன. கரடியின் கையில் ஏதோ பச்சையான பொருள் இருப்பதைப் பார்த்து கரடியை 'இவைஎன்ன' என்று கேட்டன. அதற்குள் கெட்டிக்கார நரி மற்றவைகளை கேலி செய்ய எண்ணி, "இதுவா, பச்சைப் பவழம் தெரியாதா உங்களுக்கு. வெளியிலே என்ருவது போனுல்தானே தெரியும்?" என்றது. பச்சைப் பவழம் என்ற உடன் கரடிக்குச் சந்தோஷம் ஏற்பட்டு 'என் கழுத்தில் கோத்துப் போட்டுக் கொண்டால், என்ன அழகாக இருக்கும்'என்று தன் அழகை வியந்தது. குதிரை, யானை மற்றவைகளும் தான் போட்டுக் கொண்டால் எப்படி இருக்கும் என்று யோசனை செய்துகொண்டிருந்தன. குரங்குதான் பச்சைப் பவழத்தைப் போட்டுக்கொண்டால் ரொம்ப ஜோராய் 'ராம ராமா' ஆடலாமே' என்று நினைத்தது. சின்னி பொம்மைதான் அதை அணிந்து கொண்டால் ரொம்ப நன்ருக இருக்குமே என்று நினைத்தாள். ஆனுல் ஒருவருக்காவது கரடியிடமிருந்து பிடுங்கிக்கொள்ள

சக்தி இல்லை. கடைசியில் கரடியே அதைப் போட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

அதை எப்படிக் கோப்பது என்பதைத் தெரிந்துகொண்டு ஊசியையும், நூலையும் என் மேஜையில் தேடின. ஊசி அதன் கண்களுக்கே தெரியாமல் மறைந்துகொண்டிருந்தது. கடைசியில் யானை தன் தும்பிக்கையால் ஒரே நிமிஷத்தில் எடுத்துக் கொடுத்தது. ஊசியின் காதில் நூலைவிட எத்தனித்தது கரடி. சுருக்கென்று குத்தியது ஊசி. அப்படியே அலறிக்கொண்டு கீழேபோட்டது கரடி. ஒவ்வொரு மிருகமாக நூலை ஊசியில் நுழைக்க யத்தனித்தது. அப்படிச் செய்யும்போது ஒவ்வொன்றையும் ஒவ்வொரு இடத்தில் குத்திவிட்டது ஊசி. அவைகளுக்கும் சுதந்திரம்வேண்டாமா? கோபத்தினால் ஊசி குத்தியது, நூல் சிக்கிக் கொண்டது. அவைகளுக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்பொழுது சின்னி பொம்மை ஒரு தந்திரம் செய்தாள். 'நான் ஊசியில் நூலை நுழைத்துக் கொடுக்கிறேன்.' என்று சொல்லி நூலை ஊசியில் வெகு சிரமத்துடன் நுழைத்தாள். அப்பொழுது அந்தக் குரங்கு சும்மா இருக்காமல் நூல் எப்படி ஊசியில் நுழைகிறது என்று எட்டிப் பார்த்தது. அதனால் திடீரென சின்னியின் கையிலிருந்த ஊசி அதன் கணைக் குததிவிட்டது. அவ்வளவுதான் 'க்ரீச்,க்ரீச்' என்று சத்தம் போட்டுக்கொண்டு வலிதாங்க முடியாமல் அங்குமிங்கும்ஓடிகதற ஆரம்பிததது. அதன் அழுகை பொறுக்க முடியாமல் கரடி அதை ஒரு ஓரமாக அழைத்துச் சென்று அதன் புண்பட்ட கண்ணை தன் மெத்தென்ற கால்களினால் ஒத்த ஆரம்பித்தது.

அதற்குள் சின்னி பொம்மை பச்சைப் பவழங்களை ஒன்ருகச் சேர்த்துக் கட்டிவிட்டாள். கரடி ஒரு மூலையில் இருப்பதை அறிந்து தானே அதைக் கட்டிக்கொண்டு விட்டாள். மற்ற எல்லா மிருகங்களும்பொருமையினால்அதனிடம் கோடங் கொண்டு கரடியிடம் போய் சின்னி பொம்மை செய்ததைச் சொல்லி விட்டன. வந்து விட்டது கோபம் கரடிக்கு. "இதோ பார்: மாலையை அறுத்தெறிகிறேன்" என்று சினனி பொம்மையிடம் ஓடிச் சென்றது. அதன் கழுத்தைப்பிடித்துக் கொண்டு மாலையைப் பிடித்து இழுத்தது. கயிறு பருமனுக இருநதபடியால் கரடியால் அதை



ஒன்றும் செய்ய முடியவில்லை. மற்ற மிருகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இழுத்துப் பார்த்தும் மாலையை ஒன்றும் செய்ய முடியவில்லை.

கையால் ஆகாத மிருகங்கள் வேறு ஒரு தந்திரம் செய்து சின்னி பொம்மையை அவமானப் படுத்த எண்ணின எல்லோரும் தோட டத்தில் சென்று விளையாடுவது என்று தீர்மானிதது வெளியில் கிளம்பின.மழைபெய்திருந்ததால் தரை ஈரமாக இருந்தது. யானை மெதுவாக அடிமேல் அடி வைதது வந்தது. குள்ள நரி யானைமேல் ஏறிக்கொண்டு வந்தது. குரங்கு மரக்கிளைகளின் உதவியால் வந்துகொண்டிருந்தது. கரடி மாலை கிடைக்காத கவலையால் மூஞ்சியை தொங்கப் போட்டுக் கொண்டே வந்தது, கடைசியில் ஓரிடத்தில் வந்து 'கண்ணாமூச்சி' விளையாட்டை ஆரம்பித்தன. அப்பொழுது சின்னி பொம்மை அவர்களுடன் சேராமல் அங்கிருந்த சிறிய குளத்தினருகில் சென்று தன் அழகைப் பார்த்துக்கொண்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாள். உலகத்திலேயே தன்னைப்போல் அழகிய பொம்மை கிடையாது என்றே நினைத்தாள். அந்த சமயத்தில் குரங்குக்கு மற்றவர்களைப்பிடிக்க வேண்டிய முறை வந்தது. அது கண்ணை மூடிக்கொண்டு ஒரு மரக்கிளையில் உட்கார்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது அங்கு வந்த காக்கை ஒன்று அதைத் திடீரென பயமுறுத்தவே 'குரங்கண்ணா அப்படியே மரக்கிளையிலிருந்து கீழே பல்டி அடித்தார். சரியாக சின்னி பொம்மைமேல் வந்து திடீரென விழுந்தார். சின்னி பொம்மை பயத்தினால் அக்குளத்தில் வழுக்கி விழுந்தது. அதைக் கண்டதும் மற்ற எல்லா மிருகங்களும் சின்னி பொம்மையைக் கேலி செய்து சிரித்தன.

சின்னி பொம்மை வெகு நேரம் வரையில் தவித்துக்கொண்டிருந்தாள். எல்லா மிருகங்களும் அதற்குச் சிறிதுகூட உதவி செய்யாமல் வீட்டினுள் சென்றன. இரவு வெகு நேரம் வரையில் அப்படியே இருந்தாள் சின்னி பொம்மை. நல்ல வேளையாக அங்கு வந்த மீன் அவளை ஒரு கரையோரமாக தள்ளிக் கொண்டு சேர்த்தது. இவ்வளவு உதவி செய்த மீனுவுக்கு 'தாங்க்ஸ்' சொல்லிவிட்டு வீட்டினுள் திரும்பினுள் சின்னி பொம்மை.

இரண்டு நாள் கழித்து குள்ள நரி அண்ணா சின்னி பொம்மையின் கழுத்தை உற்று நோக்கி








ஜீன் டி. ஆர்க்

☆

ஜனவரி 6-ந்தேதி 1412 வருஷம் 'டாம்ரிமி' என்ற கிராமத்தில் பிரான்சு தேசத்தில் ஜீன்டி ஆர்க் பிறந்தாள். அவள் தகப்பனார் ஒரு குடியானவர். வயது வந்தவுடன் தன் தகப்பனுருக்கு எல்லா வேலைகளிலும் உதவி செய்துவந்தாளே தவிர படிப்பதற்குப் பள்ளிக்கூடம் செல்லவில்லை. பள்ளிக்கூடம் போகாமலேயே அவளுக்குப் பல நற்குணங்கள் உண்டாகி இருந்தன. கிராமத்திலுள்ள எல்லோருக்கும் உதவிசெய்வாள். பொய்யே பேசமாட்டாள் பிறர்பொருளைத் திருடும் வழக்கமே அவளிடம் கிடையாது.

அச்சமயத்தில் பிரான்சு தேசத்திலேயே ஒரு உள் நாட்டுக் கல

ஞர். அவருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. மற்ற மிருகங்களையும் அழைததுக் காண்பித்தார். எல்லோருக்கும் அது அதிசயமாக இருந்தது. எலலோரும் தன்னையே பார்ப்பதைக் கண்டு, சின்னி பொம்மை 'குள்ள நரி அண்ணா! என்ன விநோதம் பார்த்துவிட்டாய்?' என்று கேட்டாள்.

'நீ கட்டிக்கொண்ட மாலை குட்டிப்பாம்பு மாலையாக இருப்பது விநோதம் இல்லையா?' என்ருர் குள்ளநரி அண்ணா. அதைக் கேடடதும் சின்னி பொம்மைக்குத் தூக்கிவாரிப் போட்டது கண்ணாடியினருகில் ஓடிச்சென்று பார்த்தாள் தான் கடடிய ஒவ்வொரு பவழத்திலிருந்தும் சிறிய பாம்புகள் தொங்கிக்கொண்டிருந்தன. பயத்தினால் சின்னி அழ ஆரம்பித்தாள். அதற்குள் குள்ள நரி அண்ணா, 'சின்னி! மறுபடி தோட்டத்துக்கே போனால் பாம்பு ஓடிப்போய் விடும்' என்று கேலி செய்தது. அதை நிஜம் என்று நினைத்து தோடடத்திற்கு ஓடிச்சென்று மாலையைப் பிடித்து இழுத்தாள் தண்ணீரில் கெட்டுப் போன கயிறு திடீரென அறுந்து கீழே விழுந்தது. விழுந்த மறுகணம் கீழே விழுந்ததைக்கூடப் பார்க்காமல் ஓடிவந்து விட்டாள் சின்னி.

இது நடந்த ஒரு வாரம் கழித்து எங்கள் வீட்டுத் தோட்டத்தில் புதிதாக ஏழு வேப்பஞ் செடிகள் வரிசையாகத் தோன்றி இருந்தன. எனக்கே ஆச்சர்யமாயிருந்தது என் அறைக்கு ஓடிச் சென்று நான் ஓரமாக வைத்திருந்தவேப்பங் காய்களைத் தேடினேன். காணவில்லை. அறை முழுவதும் தேடினேன். அகப்படவில்லை. அலமாரியிலிருந்த பொம்மைகள் சிரிப்பதுபோலிருந்தது. குள்ள நரி என்னைக் கேலி செய்வதுபோல் நின்று கொண்டிருந்தது.



அவை வேப்பங்காய்களை பச்சைப் பவழம் என்று நினைத்து மாலையாக்கிக் கொண்டதையும், சின்னி பொம்மையின் கழுத்தில் வேப்பஞ் செடி முளைக்க ஆரம்பித்ததும், சின்னி பொம்மை, முளையைப் பாம்பு என்று எண்ணி தோட்டத்தில் விட்டுச் சென்றதும் எனக்குத் தெரியாதபடியால் அம் மரங்களை சுதந்திர தினத்தன்று முளைத்த மரங்களாக எண்ணி அதைக்கவனமாக வளர்த்து வந்தேன்.

பச்சைப் பவழங்களின் கதையை ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்த மந்திரி மனைவி குப்பனுக்கு நல்ல சாப்பாடு போட்டு நான்காம் நாள் இன்னும் நல்ல கதையாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டாள். குப்பன் சொன்ன கதையை அடுத்த வாரம் படிப்போம்.

கம் நடந்துகொண்டிருந்தது. ஜனங்கள் இரு கட்சிகளாகப் பிரிந்தனர். ஒரு சாரார் சார்லஸ் தங்களுக்கு அரசனாக இருக்க வேண்டாம் என்று கூறினர். மற்றொரு பகுதி அரசன் வேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே இருகட்சிகளும் சண்டை போட்டுக்கொண்டிருந்தன. அரசன் வேண்டாத பகுதியை ஆதரித்தனர் பிரிட்டிஷ்காரர்கள்.

இப்படிச் சண்டை நடந்துகொண்டிருக்கும்பொழுது ஒரு நாள் ஜீன்டீ ஆர்க்குக்கு ஒரு அசரீரி கேட்டது. "ஜீன், உன்னால் இத்தேசம் முன்னேறப் போகிறது. அதற்காக உன் கடமையைச் செய்" என்று அசரீரி கட்டளை இட்டது. மறுகணம் அரசனை அடைந்து நடந்ததைக் கூறி படை அனுப்பும்படி கூறினாள். எல்லோரும் அச்சிறு பெண்ணைக் கேலி செய்தனர். சிறிதுகூடக் கவலை கொள்ளாமல் பிடிவாதமாக அரசனை வேண்டியதால் அவன் அவள் வேண்டுகோளுக்கு இணங்கி படை அனுப்பினான். படை அழைத்துக் கொண்டு ஆர்லியன்ஸ் என்ற இடத்தில், சண்டை செய்து, விடா முயற்சியினால் எதிரிகளை தோற்கடித்தாள் அவள் உதவியால் சார்லஸ் மறுபடி முடிசூடினான். ஜீனும் அரசனுடனேயே அன்று முதல் இருந்து வந்தாள். ஒருநாள் அவள் வெளியில் செல்லும்போது மற்றொரு அசரீரி கேட்டது. 'ஜீன், உனக்குத் துன்பம் நெருங்குகிறது. நீ சிறையில் அடைபடுவாய். எனினும் தைரியத்தை விடாதே' என்று சொல்லியது.

மறுநாள் திடீரென பிரிட்டிஷ் படைகள் அரசன் படைகளைத் தாக்கி ஜீனைச் சிறைப்படுத்திக் கொண்டது. சார்லஸ் அரசனும் தனக்கு உயிரையே காப்பாற்றிக் கொடுத்த ஜீனை அவர்களிடமிருந்து விடுவிக்க வழி தேடாமல் அவளை பிரிட்டிஷ்காரர்களுக்கு விற்றுவிட்டான். ஜீனை சிறை பிடித்துச் சென்று கை கால்களில் விலங்கிட்டு எப்படியும் நகர முடியாமல் ஒரு பெரியமரத்துடன் கட்டி சிறையிலடைத்து விட்டார்கள். அப்பொழுதும் அவள் அழகிய முகத்திலே சிறிதுகூட துன்பக் குறி காணப்படவில்லை. சில தினங்களுக்குப் பிறகு குற்றவாளி என தண்டிக்கப்பட்ட ஜீன் பிரிட்டிஷ்காரர்களால் தீயிலிடப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டாள். சிறு வயதிலேயே தன் தேசத்திற்காக உயிரையும் தியாகம் செய்த ஜீன் டி ஆர்க்கை உலக சரித்திரம் தன் உள்ளத்திலே அழியாது வைத்துக்கொண்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.



தம்பிகளே! ஜீன் மாதிரி நம்மால் அவ்வளவு தைரியமாக இருக்க முடியாது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அதைத் தெரிந்துகொண்டுதான் நமது காந்தி தாத்தா அஹிம்ஸை மூலம் சுதந்திரம் வாங்கிக் கொடுத்துவிட்டார். ஆகவே ஜீன் போன்ற சிறிய பெண் செய்த அளவு நம் தேசத்துக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும், நன்றாகப் படித்து, நல்ல குணங்களுடன் இருந்தாலே மற்ற நாடுகள நமக்கு மரியாதைகள் கொடுக்கும் நல்ல ஒழுக்கத்துடனிருக்க நாம் இச் சுதந்திர தினம் முதல் முயற்சி செய்வோம். முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்!

---

# ஊர் வம்பு

★

## கோவா

இது இந்தியாவில் மேற்குக் கடற்கரை யோரத்தில் இருக்கிறது. இந்நகரம் போர்த்துகீசியருக்குச் சொந்தமானது. இந்நகரை பழைய கோவா, புது கோவா என்று இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். பழைய கோவாதான் முன்காலத்தில் வியாபாரத்திற்கு முக்கிய பட்டணமாக இருந்தது. அங்குதான் பெரிய மாதா கோயில்கள், வியாபார ஸ்தலங்கள் எல்லாம் இருக்கின்றன. இதன் ஜனத்தொகை 3050. 1751-ம் வருஷம் முதல் புது கோவா போர்த்துகீசிய பிரதிநிதியின் வாசஸ்தலமாக இருந்தது. 1843-ம் வருஷம் இந்தியாவில் போர்த்துகீசிய பிரதேசங்களின் தலைநகரமாயிற்று. மாண்டவி நதி கடலில் கலப்பதற்கு மூன்று மைல்களுக்கு முன்னால் அதன் கரையோரமாக இருக்கின்றது புது கோவா. இங்கும் அழகிய மாளிகைகள் இருக்கின்றன. முன்னொரு காலத்தில் வியாபாரத்தின் முதன்மையாக இருந்த இந்நகரம் இப்பொழுது ஒன்றுமில்லாமல் இருக்கிறது. அது இம்மாதிரி நிலையை அடைந்ததற்கு அதன் பெயர் காரணமாயிருக்கலாம். 'கோ' என்ற ஆங்கிலப் பதத்திற்கு தமிழில் 'போ' என்று பொருள். முதலில் போ என்று சொல்லி மறுபடி வா (கோவா) என்று அழைத்தால் யார் வருவார்கள். முதலில் வா என்று அழைத்துத் தானே பிறகு போகச் சொல்ல வேண்டும்? அதன் பெயர் தலைகீழாக இருப்பதனால் அதன் நிலைமையும் தலைகீழாக மாறிவிட்டது. அதற்கு யார் என்ன செய்ய முடியும். அதன் பெயர்தான் காரணம்.

---








## பாலும் நீரும்

பாலைத்தான்நாம்தினந்தோறும் பார்க்கிறோமே. காலையில் எழுந்த உடன் காப்பியிலிருந்து படுக்கப் போகும் வரையில் பால் இல்லாமல் நம்மால் எந்தக் காரியத்தையும் செய்ய முடிவதில்லை. அந்தப் பாலையும் திக்காகச் சாப்பிட வேண்டும்என்ற ஆசை இன்னும் நம்மைவிட்டுப் போகவில்லை. எங்கேயாவது பால்காரன் பாலில் தண்ணீர் கலந்துவிடப் போகிறானே என்று கண்ணில் விளக்கெண்ணெய்விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கண்ணுக்கும்கடுக்காய்கொடுத்து பூரணமாக ஜலத்தைவிட்டு பாலைப் பெருக்கிவிடுகிறார்கள் கெட்டிக்கார பால்காரர்கள். நீர் கலந்தபிறகு பாலில் இவ்வளவு ஜலம் ஏன் வந்ததுஎன்று கேட்க முடியுமா? நீரும் பாலுடன் சேர்ந்த உடன் பாலாகவே காக்ஷி அளிப்பதால் அதில் எது நீர் எது பால் என்பதை அறிய நம்மால் இயலாது போய்விடுகிறது. அது பாலின் சகோதரத்துவத்தையும், பெருந் தன்மையையும் காட்டுகிறது. நீரில் எத்தனையோ கெடுதல்கள் இருந்தாலும் அதை எல்லாம் மறைத்து தன்னைப் போலவே காட்சி அளிக்கச் செய்துவிடுகிறது. அதுபோலத்தான் பெரியோர்களும். நல்லோர்கள் பால் போன்றவர்கள். தீயோர்கள் நீர் போன்றவர்கள். தீயோர்கள் நல்லோர்களுடன் சேர்ந்தால், நல்லோர்களின் உயரிய குணத்தாலும். பெருந்தன்மையாலும், நல்லோர்களாகவே தோன்றுவார்கள். கெட்ட குணங்கள் தெரியாமல் செய்துவிடுவார்கள் நல்லோர்கள். அதற்காகத்தான் நமக்கு நல்லோர்கள் சேர்க்கைவேண்டும் என்று பெரியோர்கள் சொல்லிவந்திருக்கிறார்கள் கீழவரும் நாலடியார் செய்யுளைப் படியுங்கள், தெரியும்:—

'பாலோடளாய நீர்
பாலாகும் அல்லது

நீராய் நிறந்திரிந்து
தோற்றாதாம்—தேரில்

சிறியார் சிறுமையும்
தோன்றாதாம் நல்ல

பெரியார் பெருமையைச்
சார்ந்து'

---

# சின்ன சின்ன கதை

★

## கழுதையும் — குதிரையும்

ஒரு குதிரையையும், ஒரு கழுதையையும் ஒருவன் ஓட்டிச் சென்று கொண்டிருந்தான். கழுதையின் முதுகில் ஏராளமான சுமை இருந்தது. குதிரையின் முதுகில் ஒன்றுமே இல்லை. வெகு தூரம் பிரயாணம் செய்தவுடன் கழுதையினால் சுமையைத் தாங்க முடியவில்லை. கழுதை குதிரையைப் பார்த்து, 'அண்ணாச்சி! கொஞ்சம் என் சுமையில் பாதியை எடுத்துக்கொண்டால் எனக்குக் கொஞ்சம் சுலபமாயிருக்கும்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டது. குதிரைக்குக் கொஞ்சமாவது உபகாரம் செய்யவேண்டும் என்ற எண்ணமே கிடையாது. அது சுய காரியப் புலி. ஆகவே அது முடியாது என்று சொல்லிவிட்டது. கழுதை வருத்தத்துடன் தள்ளாடி தள்ளாடி நடந்து சென்றுகொண்டிருந்தது. குதிரை அதைக் கேலி செய்துகொண்டே வந்து கொண்டிருந்தது. அப்படி வரும்போது ஓரிடத்தில் திடீரெனக் கழுதை சுமையின் பாரம் தாங்க முடியாமல் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டது. அதன் எஜமானன் சுமையைக் கீழே இறக்கி அதற்குத் தண்ணீர் கொடுத்து அதைச் சரிப்படுத்தியவுடன் சுமையை எல்லாம் குதிரைமேல் ஒரு பக்கமாகக் கட்டி கழுதையையும் அதன்மேல் ஏற்றிவிட்டான். சுமையும் கழுதையும் ஏறியவுடன்தான் குதிரைக்குப் புத்தி வந்தது. கோபத்தினால் புறப்படாமல் நின்றது. சுளீர் என்று சாட்டையடி விழவே அதையும் வாங்கிக் கொண்டு புறப்பட்டது.



குழந்தைகளே நீங்கள் உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பிறருக்கு உதவவேண்டும். இல்லாவிடில் உங்களுக்குத் துன்பம் ஏற்படும்போது ஒருவரும் உதவி செய்யமாட்டார்கள். குதிரையைப்போல் கஷ்டப்பட வேண்டியதுதான்.




## 22
## சோதனை

★

போர்க்களத்திலே பகைவர்களின் தலைகள் உருண்டோடும்படியாக அற்புதமாய்ப் போர் புரியும் வீரர் அவர். பரஞ்சோதியார் என்றால் அழுதபிள்ளையும் வாய்மூடும். அத்தகைய கீர்த்திகளையெல்லாம் பெற்றவர் சோழமன்னனிடம் அமைச்சராக இருந்துவந்தார் அமைச்சரின் படைவலிமையைக்கண்ட மன்னன் அவரைப் படைத்தலைவராகவும், அமைத்துக்கொண்டான் திக்கெட்டும் வெற்றிமுரசுகொட்ட ஜகத்ஜோதியாக விளங்கும் கம்பீரமான தோற்றத்துடன் அவர் போரிலிருந்து ஒருமுறை திரும்பிவந்தார். மன்னன் அவரை அளவில்லாது போற்றினான்

அச்சமயம் மற்ற அமைச்சர்கள் சோழனைப் பார்த்துக் கூறினார்கள் 'அரசே! பரஞ்சோதியார் இவ்வளவு பராக்ரமம் உடையவராயிருப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை! அவருடைய வித்தைத் திறமையுடன் அவரது சிவபக்திச் செல்வமுமே வெற்றி மடந்தையை அவர் வாரியணைப்பதற்குக் காரணமாகும்'என்று அவர்கள் கூறிய வார்த்தையைக் கேட்டான் மன்னன். அதைச் செவிமடுத்த மறுகணத்தில் அவன் முகம் வேறுபட்டது இத்தகைய சிவனடியாரையா நான் போருக்கு அனுப்பினேன்! என் மடமையை என் என்பேன்!' என்று தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டவனாய் உடனே பரஞ்சோதியாரை அங்கே வரவழைத்தான்.

பரஞ்சோதியார்மன்னனது அழைப்பின் காரணத்தை அறிய முடியாமல் அங்குவந்து நின்றார் மன்னன் அவர் வந்தவுடன் அவரை மரியாதையோடு வணங்கினான்.' சிவனடியாரே! நான் அறியாது செய்த பிழைக்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன் 'என்றான்.

சிவனடிச்செல்வராகிய பரஞ்சோதியாருக்கோ மன்னன் செய்த பிழை என்னவென்பதே புரியவில்லை ஆகையால் அவர் திகைத்து நின்றார் மன்னன் தொடர்ந்து கூறினான்.

"பெரியவரே! கையில் ருத்ராக்ஷ மணிகளை எடுத்துத் திருநீறு பூசும் சைவச் செல்வராகிய தங்களைப் போருக்கு அனுப்பியது என் குற்றமல்லவா? ஆதலால் தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும், மேலும் தாங்கள் இன்று முதல் நாட்டில் சில பக்திச் செல்வத்தையேவளர்த்துவரவேண்டும் இந்த அரசாங்கச் சிறையில் தாங்கள் புகவேண்டாம்' என்று வேண்டிக் கொண்டான் உடனே பரஞ்சோதியார் கூட்டிலிருந்து விடுதலைபெற்ற பறவைபோல் இல்லம் நாடிப் பறந்து சென்றார் அவருக்கு அப்பொழுது எல்லையில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. அன்று முதல் அவர் சிவபெருமானையும், சிவனடியார்களையும் மிகவும் போற்றி வாழலானார்.

அவருடைய பக்தித் தொண்டு நாளுக்கு நாள் பெருகியது அவரது மனைவியும் அவருடைய மனமேபோல் நடந்துவந்தாள் நாளடைவில் அவருக்குச் "சீராளன்' என்றொரு சிறுவன் பிறந்தான் இல்லறத்துடன் இறையறமும் நன்கு நடைபெற்று வந்தது

ஒவ்வொரு நாளும் ஓர் அடியவருக்கேனும் உணவிடாது அவர் உண்பதில்லை சிவனது தொண்டர்களுக்குத் தொண்டுசெய்வதே அவருடைய முதற் கடமையாகிவிட்டபடியால், அவரை உலகம் 'சிறுத்தொண்டர்' என்று அழைக்க முற்பட்டது. இவ்வாறு சிறுத்தொண்டர் பெருந்தொண்டுகள் செய்து வந்த காலத்தில் ஓர் அதிசயம் நடைபெற்றது அந்த அதிசயத்தைச் சோதனை என்றே அழைக்கலாம். அச் சோதனையை ஏற்படுத்திக் கண்ணாரக் கண்டுகொண்டிருந்தவர் கடவுள் அதை அஞ்சாது ஏற்று நடத்தியவர் இவ்வடியார்.

ஒரு நாள் ஓர் அடியாரேனும் உணவுண்ணச் சிறுத் தொண்டர் இல்லத்துக்கு வரவில்லை ஆகவே அவர் அடியாரைத் தேடிப் புறப்பட்டார். அப்பொழுது ஒரு வட நாட்டுத் துறவி அவர் கண் முன் தென்பட்டார். சிறுத்தொண்டருக்கு 'அவர் மாயச் சந்நியாசி' என்பது தெரியாது தன் கடமையை நிறைவேற்றுவதற்கு ஒரு சிவனடியார் அகப்பட்டுவிட்ட சந்தோஷமே அவர் முன் விரிந்தது

சிவனடியாராகிய துறவி, 'சிறுத்தொண்டர் வீடு எது?' என்று சிறுத்தொண்டரையே கேட்டார்

'அடியேன் தான் அச் சிறுத்தொண்டன்! இன்று என் இல்லத்தில் போஜனம் செய்ய ஓர் அடியாரையும் காணவில்லையே என்று வருந்தியிருந்தேன் தெய்வச் செயலால் தாங்கள் எழுந்தருளியுள்ளீர்கள் தாங்கள் அடியேனது குடிசைக்கும் எழுந்தருள வேண்டும்' என்றார் சிறுத்தொண்டர்.

'எமது விருப்பப்படி உம்மால் உணவு ஆக்கித் தர முடிந்தால் கட்டாயமாக உம் இல்லத்திற்கு வருகிறேன்! உம்மைக் காணவே வெகு தொலையிலிருந்து வருகிறேன்' என்றார் மாயத் துறவி

'அந்த உணவைச் சொன்னால் அவ்வாறே செய்யக் காத்திருக்கிறேன்' என்றார் சிறுத்தொண்டர்.

'ஒரு பசுவை ஆக்கித்தர வேண்டும்! என்றார் துறவி

இவ்வளவுதானே! என்னிடம் ஏராளமான பசுக்கள் இருக்கின்றன. எந்தப் பசு வேண்டும் என்பதைத் தாங்களே சொல்லுங்கள்' என்றார் தொண்டர்.



"நான் உண்ணும் பசுநீர் சொல்வதன்று அங்கஹீனம் இல்லாத ஐந்தே வயதுடைய மனிதப் பசு' என்றார் துறவி சிறுத்தொண்டர் அதைக் கேட்டுச் சிறிதும் தயங்கவில்லை. "அப்படியே செய்கிறேன்'' என்றார்.

"அச்சிறுவன் அக்குடிக்கு ஒரே மகனாயிருக்கவேண்டும். தாய் பிடித்துக்கொள்ளத் தந்தை அரிந்துவிட வேண்டும் ஒருவருக்காவது மனத்தில் களங்கம் இருக்கக்கூடாது'' என்று துறவி மேலும் விவரித்துக் கூறினார்.

"அவ்வாறான உணவையே தருகிறேன் 'வாருங்கள்!'' என்று கூறிய சிறுத்தொண்டரைப் பின்பற்றிச் சென்றார் துறவி

இல்லஞ் சென்றதும் சிறுத்தொண்டர் தம் மனைவியிடம் விஷயத்தைக் கூறினார் தம் மகனையே அரிந்து சமைத்து விடுவது என்று இருவரும் தீர்மானம் செய்துகொண்டார்கள் கணவன் சொற்படி நடக்கிற உத்தமியாக அவள் இருந்ததனால்தான் எல்லாம் இனிது நிறைவேறியது விரைவில் இலையும் போடப்பட்டது துறவியைப் பாத்திரத்துக்கு அருகில், உட்காரும்படி வேண்டினார் தொண்டர்.

"நான் தனித்து உண்ணமாட்டேன் வேறு அடியார் வேண்டும் உடன் இருந்து உண்ண' என்றார் துறவி சிறுத்தொண்டர் எங்கும் சுற்றிப் பின் வந்து ஓர் அடியவரையேனும் காணவில்லை நான் அடியவர்க்கு அடியவனாய்த் திருநீறும் பூசுவதுண்டு'' என்றார்.

"உம்மைவிடச் சிறந்த அடியவரே கிடையாது நீரே என்னுடன் இருந்து உண்ணுங்கள்'' என்றார் துறவி.

"சரி''யென்று கூறியமர்ந்தார் தொண்டர்.

"உமக்கு மகன் இருந்தால் அவனை அழையுங்கள்' என்று அடுத்தாற்போல் துறவி கூறிய வார்த்தை சிறுத்தொண்டர் செவியில் ஈட்டிபோல் பாய்ந்தது ஆனால் தளராமல், "அம்மகன் இப்போது சமயத்திற்கு உதவான்' என்றார்.

'அவனை வெளியே சென்று அழையுங்கள்' என்றார் துறவி

அவ்வாறே மனைவியோடு சென்றார் வெளியே, 'சீராளா!' என்று கூவினார் மகன் ஓடி வந்தான். பள்ளியிலிருந்து வருபவன்போல். மூவரும் உள்ளே திரும்பி வந்தார்கள். துறவியையோ, இலையையோ ஆக்கிய பண்டங்களையோ அங்குக் காணவில்லை.

இப்பொழுதுதான் சிறுத்தொண்டருக்குச் சோதனை முடிந்தது இறைவன் இறைவியுடன் காட்சியளித்தார் யாவரும் பெறாத பெரும் பேறு பெற்றவராய் இறைவனை மகிழ்ந்து போற்றினார் அடியார்.

* * *



சிறுத்தொண்டர் தம்முடைய கடமையிலும். அடியவர்க்கு அமுது அளிக்கும் பணியிலும் கொண்டிருந்த உறுதி மனப்பான்மை எளிதிற் பெறக்கூடியதில்லை. மேலும் மக்கட் பாசத்தை' அவர் வென்று. தன் மகனையே அரிந்த செய்கை அவருடைய உறுதியுள்ளத்தின் பிரதிபலிப்பாகிறது பல்லாயிரம் உயிர்களைப் போர்க்களத்தில் கொன்றவர் அதற்குப் பிராயச்சித்தமாகத் தன் மகனைத் தன் கையாலேயே கொல்லும்படி நேர்ந்தது! இதுவே இறைவனின் சோதனையில் வெற்றிபெற்றும் விட்டார் தொண்டர்.

சிறுத்தொண்டர்'மக்கட் பாச'த்தை வென்ற கதை இது இன்னொருவர் மனைவின் சுகத்தையே துறந்தார். திடங்கொண்ட நெஞ்சினை உடைய அவரே திருநீலகண்ட நாயனார் ஆவார். இளமைப் பருவத்தின் இன்ப மயமான வாழ்வை அவர் துறந்ததற்குக் காரணம், இறைவன் திருநாமத்திற்கு அவர் அளித்திருந்த மதிப்பேயாகும்.

குயவர் குலத்தில் தோன்றிய அவர் அம்பலவாணராகிய நடராஜப் பெருமானிடத்தில் பக்தி பூண்டவர். அவர் அடிக்கடி 'திருநீலகண்டம்' என்று கூறுவது வழக்கமாகையால் அவரையே மக்கள் திருநீலகண்டர் என்று அழைக்கலாயினர் திருவோடுகள் செய்து அடியார்க்கு வழங்குவது அவர் வழக்கம் அந்த முறையிலும் அவர் புண்ணியம் தேடிக்கொண்டிருந்தார்.

இவருடைய இளமைப் பருவம் அப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருந்தது முன் வினைப் பயனால் அவருக்கு இளமைப் பருவத்தின் இன்ப உணர்ச்சி மேலிட்டிருந்தது இறைவனுடைய பாதத்தில் இடையறாது ஈடுபட்டிருந்த இவருக்கு இது ஒன்றே பெருத்த குறையாக இருந்தது

ஒரு நாள் இவர் பரத்தையிடம் சென்று பின்பு இல்லத்திற்கு வந்தார் அதை உணர்ந்த இவரது மனைவி சினம் கொண்டாள் அப்போது பல இனிய சொற்களைக் கூறி அவளைத் தீண்டச் சென்றார் நீலகண்டர். அப்பொழுது அவள், 'நீர் எம்மைத் தீண்டாதீர்; திருநீலகண்டரின் மேல் ஆணை!'' என்றாள். அச்சொல் கூறிய அம்பே போல் பாய்ந்தது அடியார் செவியில் அன்றிலிருந்து அவர் மனைவியைத் தீண்டுவதில்லை யென்று உறுதி கொண்டார். அதன் பின் மாதர் குலத்தை அவர் மனம்கூடத் தீண்டுவதில்லை

நாட்கள் பல சென்றன. இளமையும் கழிந்தது ஒரு குடும்பத்திலேயே மனைவியுடன் இருந்துகொண்டு சிறிதும் ஸ்பரிசமே இல்லாமல் அவர் காலம்கடத்தி விட்டார் இறைவனின் நினைவே அவரிடம் குடிகொண்டிருந்தது

இறைவனும் ஒரு சோதனை மூலம் அவருடைய பெருமையை உலகுக்கு அறிவிக்க விரும்பினார்.அதற்காகஅவர் ஒரு மாயத்துறவி வேடம் பூண்டார். வந்தார் திருநீலகண்டரிடம். ஓர் திருவோட்டை அவரிடம் கொடுத்து, 'இதைக் கவனமாகப் பாதுகாத்துவா. திரும்பவும் நான்வந்துகேட்கும்போது இதை என்னிடம் கொடுக்கவேண்டும்' என்று கூறியகன்றார். திருநீலகண்ட

ரும் அதைப் பத்திரமான ஓர் இடத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தார்.

நாட்கள் பல கழிந்தபின் இறைவனாகிய அந்த மாயத் துறவி வந்து அந்த ஓட்டைத் தரும்படி வேண்டினார். அதை வைத்திருந்த இடத்தில் காணாமையால் திருநீலகண்டர் தவித்தார். உண்மையில் அது இறைவன் உள்ளத்தின்படி மாயமாய் மறைந்திருந்தது. அதை அறியாத திருநீலகண்டர் மனம் பதறினார் துறவியும் உண்மையை வெளிக் காட்டாமல், 'அந்த ஓடு எங்கே?' என்றார்.

வைத்திருந்த இடத்தில் அதைக் காணவில்லை அதற்கு மாற்றாகப் புதிய ஓடு தருகிறேன். மன்னிக்க வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார் திருநீலகண்டர்.

'நீர் பொன்னோடே கொடுத்தாலும் வாங்கமாட்டேன். என் ஓடு தான் எனக்கு வேண்டும்' என்றார் துறவி.

'நான் அதை எப்படித் தருவேன்! அதைத்தான் காணவில்லையே!' என்று திருநீலகண்டர் வருந்தியபோது,' நீர் பொய்பேசுகிறீர்! ஓட்டைக் கவர்ந்துக் கொண்டு இல்லையென்றால் நான் உம்மைச் சும்மா விடமாட்டேன்' என்றார் துவவி

'திருநீலகண்டா!' இது என்ன சோதனை; என்று வருந்திய அடியார் 'ஐயனே! அதனை நான் உண்மையில் கவர்ந்துகொள்ளவில்லை அது மாயமாய் மறைந்து விட்டிருக்கிறது' என்றார். 'அப்படியானால் நான் ஓட்டைக் கவரவில்லை' என்று உம் மகன் கைப் பிடித்து' நீரில் மூழ்கி உறுதியாய்ச் சொல்லுங்கள்' என்றார் துறவி

எனக்கு மகன் இல்லையே' என்றார் நீலகண்டர்.

'அப்படியானால் மனைவியின் கைப் பிடித்துக் கூறுங்கள்' என்று விடாமல் பேசினார் துறவி.

'நானே நீரில் மூழ்கிச் சொல்கிறேன். ஏனெனில், நான் என் மனைவியைத் தீண்டுவதில்லை என்று சபதம் செய்திருக்கிறேன்' என்றார் அடியார். துறவிக்கு மகா கோபம் மூண்டது. தில்லை அந்தணர்களிடம் போய்த் தம் 'வழக்கை கூறினார். உடனே அவர்கள் துறவியின் விருப்பம்போலவே தீர்ப்புக் கூறிவிட்டார்கள்.

அடியார் குளத்தில் மனைவியையும் மூழ்கச் சொல்லி, அவளை ஸ்பரிசிக்காமல் மூழ்கி உறுதி மொழியைச் சொல்லலானார் 'இது முறையில்லை மனைவியின் கையைப் பிடித்துத்தான் நீர் மூழ்க வேண்டும் என்று கர்ஜனை புரிந்தார் துறவி. உடனே எல்லோருடைய முன்னிலையிலும் அடியார் தம் மனைவியைத் தாம் தீண்டாமைக்குக் காரணம் இன்னதென்று உண்மையைக் கூறிவிட்டு மூழ்கினார்.

ஆ! என்ன அதிசயம்! மூழ்கி எழுந்தவர்கள் இருவரும் இளமை பெற்றுத் தேஜோ மயமாகப் பிரகாசித்தார்கள் ஆனால் அந்தத் துறவியை அங்கே அப்போது காணவில்லை. ஆயினும் அப்போது வானில் தோன்றிய பார்வதி பரமேசுவரரின் தரிசனத்தால் எல்லோருக்கும் 'துறவி'யின் ரகசியம் தெரிந்தது அடியவர் ஆண்டவனைக் கண்டு, அவர் அருளும் பெற்றார் அதன் பின் இளமை நீங்காது இணைந்து வாழ்ந்தார்கள் அந்த உத்தம பக்தரும், அவர் மனைவியும், இறைவனையும் அவர் இணை பிரியவில்லை

* * *

திருநீலகண்டர் தர் இளமை இன்பத்தைத் துறந்து. நீலகண்ட'னின் மீது மனைவிவைத்த சூள்' பிசகாமல் வாழ்வை நடத்திய கதை இது. சிறுத்தொண்டர் வாளால் மகவை அரிந்ததும் திருநீலகண்டர் சூளால் இளமை 'துறந்ததும் மிகச் சிறந்த செயல்கள் தாம் ஆனால் இன்னொருவர் தம் கண்ணையேபிளந்து இறைவனுக்கு அப்பினார் என்றால் அவர் மன உறுதியை என் என்பது ; மகனைத் துறந்ததும். மனைவியைத்துறந்ததும் அருஞ்செயல்கள்தாம். ஆனால் தன்னையே—தன் உடலையே—துறக்கத் துணிந்த செயல் மகத்தானதன்றோ! அதைச் செய்தவர் தாம் கண்ணப்பர் !

விளங்கு வேட்டையின் பொருட்டுக் கானகத்துக்கு வந்தார திண்ணனார் என்னும் அவ்வேடர். வேட்டை முடிந்ததும் காளத்திமலையில் ஏறினார். அங்கே செல்லும்படி அவர் மனமறியாச் சக்தி ஒன்று தூண்டியது மலையிலே காளத்திநாதரின் கோவில் இருந்ததைக் கண்டார். அதனுள் இறைவனின் உருவம் பளிச்சிட்டது அதைக் கண்டதும் உள்ளத்தில் பெருகிய உணர்ச்சி வெள்ளத்தை அணையிட்டுத் தடை செய்ய முடியாதபடி ஓடினார் ; இறைவனின் உருவத்தைத் தழுவிக் கொண்டார் ; உச்சிமோந்தார். அவர் தம் உடல் மலர்க் கூச்செறிந்தது

"இறைவனே! இந்த வனம் மிகக் கொடியதாயிற்றே! இதில் எப்படித் தனியே வாழ்கின்றீர்!" என்று உள்ளம் உருகியவர். அவரை விட்டுப் பிரியவே விரும்பவில்லை தன்னை மறந்தார் ; இறைவனோடு இணைந்தபடியேயிருந்தார் பிறகு உணவு தயாரித்து இறைவனுக்கு அளிக்க அவர் மனம் விரும்பியது ஆனால். பிரிந்து செல்லவோ இஷ்டமில்லை கடைசியில் இறைவனுக்கு உணவு கொண்டுவர வெளியே சென்றார் வாயிலே நீரும், ஒரு கையிலே வில்லும், மறுகையிலே மாமிச உணவும், தாங்கிக் கொண்டு முதுகிலே அம்புப் புட்டில் தொங்க இறைவனை வந்தடைந்தார் அவற்றை இறைவனுக்குப் படைத்தார் அன்று இரவு இறைவனுக்குத் துணையாக அங்கேயே தங்கினார் மறுநாளும் முதல்நாள் போலவே உணவு கொண்டுவர வெளியே அவர் சென்றபோது. காளத்தி நாதருக்குப் பூஜை புரியும் சிவகோசரியார் என்பவர் அங்கு வந்து இறைவன்முன் மாமிசத் துண்டுகள் பரந்து கிடப்பதைக் கண்டு மனம் கலங்கினார். பின்பு அவற்றை போக்கி இறைவனைப் பூஜித்துச் சென்றார். அவர் அகன்ற பின் கண்ணப்பர் அங்கே வந்தார் வழக்கம்போல் தம் பூஜையை அவர் செய்யலானார்

இவ்வாறு ஐந்து நாட்கள் முடிந்தன. ஆறும் நாள் காலையில் சிவகோசரியார் கனவில் இறைவன்







தோன்றி, "ஒரு வேடன் தினமும் என்னைப் பூஜை புரிகிறான்! அவன் அன்பினால் செய்யும் அனைத்தும் எனக்குப் பிரியமானவையே! அதனால் நீ கலங்காதே!" என்றார். சிவகோசரியார் அன்று திண்ணனார் செய்யும் பூஜையை மறைவாக நின்று கவனிக்கத் தொடங்கினார்.

அன்று கானகத்திலிருந்து இறைச்சியும் மலரும். நீரும் ,கொண்டுவந்த திண்ணனார் சிவனின் உருவத்தைக் கூர்ந்து நோக்கினார். இறைவனின் ஒரு கண்ணிலிருந்து இரத்தம் பெருகுவது தெரியவே அவர் உள்ளம் பதறியது கண்ணுக்குக் கண் கொடுத்தால் குருதி நீர் பெருகாது நின்று விடும் என்று அவருக்கு அப்போது தோன்றவே. தன் ஒரு கண்ணைப் பிளந்து இறைவனது கண்ணிலே அப்பினார் அப்போது தன்னை மறந்தே நின்றார். தான் வேறு இறைவன் வேறு என்ற உணர்ச்சி அவரிடம் அப்போதில்லை.

ஒரு கண்ணைப் பிளந்து அப்பியவுடன். இறைவனின் இன்னொரு கண்ணிலிருந்து இரத்தம் கசிந்தது உடனே திண்ணனார் தம் இன்னொரு கண்ணையும் பிளக்க விரும்பி, இறைவனது குருதி சிந்தும் கண்ணில் அடையாளத்திற்காகத் தம் செருப்புக் காலை வைத்து மிதித்துக்கொண்டு. அக்காரியத்தைச் செய்யலானார் அதற்குமேல் ஆண்டவனாலும் அவரைச் சோதிக்க விரும்ப முடியவில்லை" நில்லு கண்ணப்பா! என் அன்புடைமகனே! நில்லு!" என்று கூறித் தடுத்து நிறுத்தினார் இறைவன். அன்று முதல் கண்ணப்பர் என்ற புனிதப் பெயருடன் இறைவன் அருகிலேயே திண்ணனார் இருந்து வரலானார்:

* * *

புனிதமான பக்திரஸம் ரஸங்களில் சிறந்தது அந்தப் பக்தி ரஸம் பெருகிப் பாயும் வரலாறுகளோ வற்றாத ஊற்றுகளாகும் மனிதன் பக்தி ரஸத்தில் மூழ்கினால் தன்னை மீறிய இன்பலயந்தனில் ஆடுகிறான் ; பாடுகிறான். சிறுத்தொண்டரும், திருநீலகண்டரும் கண்ணப்பரும் ஒருவரை ஒருவர் மிஞ்சியவராய்த் தெய்வ பக்தியும், அந்த பக்தியில் உறுதியும் கொண்டிருந்தார்கள் அவர்கள் வாழ்க்கையே தூய ஆன்மிக வாழ்க்கை. ஆன்மிகவாழ்க்கையில் வெற்றிகொள்வது எளிதன்று பல சோதனைகள் உண்டாகத்தான் செய்யும் அச்சோதனைகளாகிய புயலை எதிர்த்து எவர் லட்சியம் பிசகாது வாழ்கிறார்களோ அவர்களே 'வீரர்' ஆவார்கள். அவர்களைத் தீவிர லட்சியவாதிகள்' என்றும் சொல்லலாம் நாயன்மார்களுடைய லட்சியம் சிவ பக்தியாக இருக்கிறது ஆகவே அவர்கள் தங்கள் வீரத்தைத் தங்கள் லட்சிய சித்தியில் விளக்கிறார்கள்.

மேற்கூறிய இந்த மூவரையும்பற்றி ஓரே செய்யுளில் முற்றுந்துறந்த பட்டினத்தடிகள் போற்றுகிறார்.

'காதற்ற ஊசியும் வாராது கடைவழிக்கு' என்று உண்மையை உணர்ந்து வாழ்வைத் துறந்த பட்டினத்தார் தம் பக்தியைச் சிறிதாகக் கொண்டு, அந்த மூவரின் பக்தியைப் பெரிதாய்ப் பாராட்டுகிறார் அச்செய்யுள் மாணிக்கம்போன்றது. அதைத் தமிழுலகம் முழுவதும் அறியவேண்டியது அவசியமும் ஆகும். அச்செய்யுள் பின்வருமாறு:—

வாளால் மகவரிந்து ஊட்டவல்லே
னல்லன் மாது சொன்ன
சூளால் இளமை துறக்கவல்
லேனல்லன் தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந்து அப்பவல்
லேனல்லன் நான் இனிச்சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி
அப்பருக்கே.






## [சில்லரை விலைகள்]

(விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை ஆகஸ்ட் 7—

அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிப் போக்கைக் குடும்பத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகச் சென்னை நகரிலுள்ள நிலவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிரேம். இவையெல்லாம் அவ்வப்போது மாறுதலுக்குட்படக்கூடியவை. எனவே இதில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவே சில பண்டங்கள் கிடைக்கலாம் அல்லது சற்று ஏறத்தாழவும் சில இடங்களில் விற்கப்படலாம். பொதுவாக விலைகளின் ஓட்டத்தை உணர இது பயன்படும்.

| | | | ரு | அ | பை. |
|---|---|---|---|---|---|
| உப்பு | 1–படி | ... | 0 | 1 | 0 |
| துவரம் பருப்பு | 1–படி | ... | 1 | 1 | 0 |
| உளுத்தம் பருப்பு | ,, | ... | 1 | 4 | 0 |
| பயத்தம் பருப்பு | ,, | ... | 1 | 3 | 0 |
| உளுந்து | ,, | ... | 1 | 0 | 0 |
| கடலைப் பருப்பு | ,, | ... | — | — | — |
| எள்ளு | ,, | ... | 1 | 6 | 0 |
| கடலை | 1-வீசை | ... | — | — | — |
| கடலை மாவு | ,, | ... | 0 | 11 | 3 |
| கடுகு | ,, | ... | 2 | 0 | 0 |
| வெந்தியம் | ,, | ... | 1 | 14 | 0 |
| மிளகு | ,, | ... | 18 | 8 | 0 |
| மிளகாய்–ராமநாதபுரம் | ,, | ... | 4 | 4 | 0 |
| தனியா | ,, | ... | 3 | 6 | 0 |
| புளி [புதுசு] | ,, | ... | 1 | 4 | 0 |
| சீரகம் | ,, | ... | 4 | 0 | 0 |
| வெல்லம் | ,, | ... | 1 | 10 | 0 |
| நாட்டு சர்க்கரை | ,, | ... | 1 | 9 | 0 |
| அஸ்கா சர்க்கரை | ,, | ... | 1 | 5 | 0 |
| மஞ்சள் | ,, | ... | 2 | 0 | 0 |
| பூசு-மஞ்சள் | ,, | ... | 2 | 0 | 0 |
| குங்குமம் | ,, | ... | 2 | 0 | 0 |
| பாதாம் | ,, | ... | 4 | 4 | 0 |
| சீயக்காய் | ,, | ... | 1 | 2 | 0 |
| சீயக்காய் பொடி | ,, | ... | 1 | 11 | 0 |
| வாஷிங் சோடா | ,, | ... | 0 | 10 | 0 |
| திராக்ஷை | ,, | ... | 6 | 0 | 0 |
| முந்திரிபருப்பு | ,, | ... | 4 | 8 | 0 |
| களிப்பாக்கு | ,, | ... | 5 | 8 | 0 |
| நெய் | ,, | ... | 8 | 4 | 0 |
| நல்லெண்ணெய் | ,, | ... | 3 | 6 | 0 |
| ஜவ்வரிசி | ,, | ... | 2 | 12 | 0 |
| தேங்காய் எண்ணெய் | ,, | ... | 3 | 10 | 0 |
| கடலெண்ணெய் | 1–வீசை | ... | 2 | 11 | 0 |
| விளக்கெண்ணெய் பாட்டில் பெரிசு | | ... | 1 | 12 | 0 |
| ஷை சிறியது | | ... | 0 | 9 | 0 |
| வாசனை விளக்கெண்ணெய் | | | | | |
| 4 அவுன்ஸ் பாட்டில் 1–க்கு | | ... | 1 | 5 | 6 |
| 16 ,, ,, பாட்டில் 1–க்கு | | ... | 3 | 1 | 6 |
| காப்பிக்கொட்டை பீபரி | 1 வீசை | ... | 5 | 9 | 0 |
| ,, 'A' ,, | ,, | ... | 5 | 3 | 0 |
| பார்லி | 1–வீசை | ... | 2 | 0 | 0 |
| கரி 1 மூட்டை | (56 ப) | ... | 4 | 0 | 0 |
| காமதேனுவனஸ்பதி 10 பவுண்டு டின் | | ... | — | — | — |
| ,, 5 | ,, | ... | — | — | — |
| 'டால்டா' வனஸ்பதி 10 ப | | ... | — | — | — |
| ஷை 5 ப | | ... | — | — | — |
| கற்பூரம் | 1–பலம் | ... | 0 | 8 | 0 |
| சாம்பிராணி | 1 பலம் | ... | 0 | 6 | 0 |
| பெருங்காயம் | ,, | ... | 0 | 4 | 0 |
| லவுங்கம் | ,, | ... | 0 | 3 | 0 |
| ஏலக்காய் | ,, | ... | 0 | 15 | 0 |
| எல் ஜி பெருங்காயம் 1 சேர் | | ... | 2 | 2 | 0 |
| தீப்பெட்டி. 1 டஜன் | | ... | 0 | 8 | 6 |
| ஓவல்டின் | | ... | — | — | — |
| 'ரௌண்டிரீஸ் (R.T.) கொக்கோ ½ ப | | ... | 1 | 7 | 0 |
| ஸன்லைட் சோப் | பெரியது | ... | 0 | 5 | 3 |
| ,, | சிறியது | ... | 0 | 3 | 0 |
| ஹமாம் சோப் | | ... | 0 | 6 | 0 |
| லைப்பாய் | | ... | 0 | 5 | 6 |
| டாம்கோ 501 பார் | | ... | 1 | 3 | 0 |
| லக்ஸ் | | ... | 0 | 6 | 0 |
| ரெக்ஸோனு | | ... | 0 | 6 | 6 |
| மார்கோ சோப்பு | | ... | 0 | 8 | 9 |
| 777 பார் 1–க்கு | | ... | 1 | 3 | 0 |
| காந்தி டாய்லட் சோப் 1–க்கு | | ... | 0 | 6 | 0 |
| மைசூர் "ஸாண்டல் சோப | | ... | 0 | 10 | 0 |
| கேரளா ஸாண்டல் சோப்பு | | ... | 0 | 7 | 0 |
| மெடிகோ டாயிலட் சோப் | | ... | 0 | 8 | 6 |
| காட்ரீஜ் சோப் | நெ 1 | ... | 0 | 11 | 0 |
| மேட்டூர் சந்தன ஸோப் 1 கட்டி | | ... | 0 | 8 | 6 |
| ரூப் டாய்லெட் ஸோப்—ஸ்டாண்டர்டு | | ... | 0 | 6 | 0 |
| ,, கெஸ்ட் ஸைஸ் | | ... | 0 | 2 | 0 |
| காவேரி ஸூபர் கார்பாலிக் (பெரிது) | | ... | 0 | 4 | 6 |
| ,, (சிறியது) | | ... | 0 | 2 | 6 |
| காவேரி வாஷிங் கேக் | | ... | 0 | 4 | 0 |
| காவேரி வாஷிங் க்யூப் | | ... | 0 | 3 | 0 |
| காவேரி பார் ஸோப் | | ... | 1 | 2 | 6 |
| 'டாம்கோ ஹேர் ஆயில் (சிறிய பாட்டில்) | | | 1 | 2 | 0 |
| ஷை (பெரிய பாட்டில்) | | ... | 2 | 15 | 0 |
| குங்குமப் பூ [1 பாட்டில்] | | ... | 1 | 4 | 0 |
| பச்சை கற்பூரம் 1 விராகனிடை | | ... | 0 | 6 | 0 |
| "பினைல்' பாட்டல் | | ... | 0 | 13 | 6 |
| குடிகூரா பவுடர் | 1 டின் | ... | — | — | — |
| நீம் டூத் பேஸ்ட் | | ... | 1 | 1 | 0 |
| மாக்லீன் பேஸ்ட் | | ... | 1 | 0 | 0 |
| பார்ஹான்ஸ் பேஸ்ட் (பெரியது) | | ... | 2 | 12 | 0 |
| 7 ஓ'க்ளாக்' க்ஷவர ப்ளேட் | | | | | |
| (10 கொண்ட பாக்கட்) | | ... | 1 | 0 | 0 |
| ஷை (5 கொண்ட பாக்கட்) | | ... | 0 | 8 | 0 |
| கோரா டீ (டஸ்ட்) 1–பவுண்ட் | | ... | 2 | 5 | 6 |
| கோரா டீ ½ பவுண்ட் | | ... | 0 | 9 | 6 |
| கோரா டீ ¼ பவுண்ட் | | ... | 0 | 4 | 9 |






## மேஷ ராசி

**அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய**

சென்ற மாதத்தைக் காட்டிலும் இம்மாதம் மேஷ ராசிக்காரர்களுக்குப் பிரகாசமாயிருக்கும் எதிர் காலத்தைப்பற்றிய விவகாரங்களிலேயே சித்தம் முழுதும் ஈடுபட்டு நிற்கும். சொந்த அபிவிருத்திக்காக இடைவிடாமல் வேலை செய்யும்படி ஏற்படும் பண விஷயத்தில் அபிவிருத்தி காணப்படுகிறது 7–வது வீட்டில் செவ்வாய் இருப்பதால் குடும்பத்திலுள்ள நிம்மதி பாதிக்கப்படும் காரியாலயத்தில் மேலதிகாரிகள் உதவி புரிவர் சொந்த ஊருக்குப் போகும்படியாக நேரலாம் விருப்பத்துக்கு விரோதமாகப் பிறந்த இடத்துக்குப் போக நேரும் கீழ்த்தரச் சிப்பந்திகள் ஒத்துழைப்பார்கள் ஆனால் இந்த ராசிக்காரர்கள்தான் அவர்கள் விஷயத்தில் கெடுபிடியாயும், கண்டிப்பாகவும் இருப்பார்கள் இதற்குக் காரணம் ஜீவனஸ்தானத்தை செவ்வாய் 11–வது இடத்திலிருந்து பார்ப்பதேயாகும் சிப்பந்திகளிடம் கடுமையாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படியும் நேரலாம் இதற்காகப் பின்னர் மிகவும் வருந்தும்படி ஏற்படும். என்வே காரியாலயத்தில் தகராறுகள் நிகழாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் வியாபாரிகளுக்கு நல்ல காலம் ஷேர்ஷ்யங்கள் பலன் தரும் அபிப்பிராய பேதம் காரணமாகக் கூட்டு வியாபார முறையில் சற்று மாறுதலேற்படலாம். ரேஸாபிமானிகளுக்கு அதிருஷ்டகரமான மாதம்

ஆகஸ்ட் 18, 21, 22, 24 25, 26, 31, ஸெப்டம்பர் 1 2, 7, 10, 11, 15, 16 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரமான நாட்கள்.

## விருஷப ராசி

**கிருத்திகை 2–ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2–ம் பாதம் முடிய**

விருஷப ராசிக்காரர்களுக்கு இது முக்கியமான மாதமாகும். இடமாற்றம் ஏற்படுமெனக் காண்கிறது சற்று அடங்கலுக்குப் பிறகு குடும்ப வாழ்க்கை அபிவிருத்தி பெறும் ஸ்தாவர, ஜங்கம சொத்துக்களில் கவலையில்லாமல் பணத்தை முதலீடு செய்யலாம் கார் ரிப்பேர் செய்யும்படியிருக்கும் அல்லது புதிய கார் வாங்க நேரலாம். ஒரு குழந்தை பிறப்பது திண்ணம் குடும்பத்தில் விவாகமோ அல்லது அதைப்போன்ற சுப நிகழ்ச்சியோ நடைபெறும். தாயாரின் ஆரோக்கிய நிலை பாதகமடையும். 7–வது வீட்டுக்குடைய கிரகம் 6–ல் இருப்பதால் மனைவியின் ஆரோக்கியமும் பாதிக்கப்படும். அமிதமாகப் போக வாழ்வில் ஈடுபடாமல் தவிர்க்கவேண்டும். இந்த ராசிக்காரர்களுடைய செவ்வாயைச் சனி பார்ப்பதால் அமித போகத்தால் மனைவியின் தேகாரோக்கியத்துக்கு ஆபத்தேற்படலாம் காரியாலயத்தில் பொறுப்புள்ள காரியங்கள் ஒப்படைக்கப்படும் கஷ்டப்பட்டுச் செய்யும் சேவைக்குப் பலன் இராது. வியாபாரிகளுக்கு நல்ல லாபமுண்டு. புதிய வாடிக்கைக்காரர்களும், புதிய வருமான இனங்களும் ஏற்படலாம் குதிரைப் பந்தய ஆசாமிகளுக்கு உண்மையில் உயர்ந்த காலமிது

ஆகஸ்ட் 18 21, 22, 26, 28, 31. ஸெப்டம்பர் 1, 3, 7, 8, 15 தேதிகள் இவர்களுக்குச் சிறந்த தினங்கள்.

## மிதுன ராசி

**மிருகசீரிஷம் 3–ம் பாதம் முதல் திருவாதிரை புனர்வஸு 3–ம் பாதம் முடிய**

இவர்களுடைய சகல காரியங்களிலும் வெற்றி ஏற்படக்கூடிய மாதமிது. வெளியிடங்களில் ஆதரவும் குடும்பத் துறையில் அபிவிருத்தியும் ஏற்படக்கூடும். சொத்துக்களில் பணத்தை முதலீடு செய்யலாம் தசையும் நல்லதாயிருந்து வருமானால் கார் வாங்கலாம் ஆகஸ்ட் 19, 28, ஸெப்டம்பர் 9, 16 ஆகிய தேதிகளில் திடீரென்று ஏதேனும் வருமானம் கிடைக்க வழி உண்டு 3–வது இடத்திலுள்ள சூரியன் காரணமாக நூலாசிரியர்கள், பத்திரிகைக்காரர்கள், சிறு கதை எழுத்தாளர்கள் முதலியவர்களுக்கெல்லாம் உதவி கிடைக்கும் ஒரு பிரயாணம் ஏற்படக்கூடும் எதிர்பாராத விதமாக சகோதரனையோ அல்லது சகோதரர்களையோ சந்திக்கலாம். தூர இடத்திலுள்ள உறவினர்களிடமிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகளைச் செவியுறலாம் குடும்பத்தில் முக்கியமான வைதிகக் காரியம் ஏதேனும் நிகழும் செவ்வாய் 5–வது இடத்திலிருப்பதால் குழந்தையின் தேக சுகம் கெடும் அல்லது குழந்தைகளைப் பற்றிய கவலைகளேனும் ஏற்படும் வேலையில் இனி மேற்கொண்டு சில்லரைப் பிடுங்கல்கள் இராது ஆபீஸிலோ அல்லது வெளியிலோ புதிய நண்பர்கள் ஏற்படுவர் வேலையில் மாறுதலேதேனும் ஏற்படலாம். செலவு கடுமை. 12–வது வீட்டைச் செவ்வாயும் சனியும் பார்ப்பதால் வேறிடத்துக்கு ஒரு மாற்றமேற்படக்கூடும் வியாபாரிகளுக்குத் திட்டமாக லாபமுண்டென்று சொல்லலாம். அளவுக்கதிகமாக ஷேர்ஷ்யங்களில் இறங்கி அதில் ஈடுபடுவது சரியல்ல. சொற்ப லாபமாயிருந்தபோதிலும் அதில் திருப்திப்படுவதுதான் குதிரைப் பந்தயப் பழக்கமுள்ள பேர்வழிகளுக்கு நல்லது.

ஆகஸ்ட் '18, 19 21, 23 25, 26' 31. செப்டம்பர் 1, 2, 3, 7, 10, 12, 15, தேதிகள் இவர்களுக்கு தரமானவை.

## கடக ராசி

**புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம் ஆயில்யம் முடிய**

இவர்களுக்கு இந்த மாதம் நல்லதன்று. பல வழிகளில் வாழ்க்கை பாதிக்கப்படும். கவலைகளினாலும், வேதனைகளினாலும் மூழ்கியிருக்க நேரும் பணத்தைப்பற்றிய கவலைகளே முக்கியமாக விருக்கும் குடும்பத்திலும், வெளியிடங்களிலும் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கும் இருப்பினும் கஷ்டங்களையெல்லாம் ஓரளவு சமாளிக்க இயலும் சனி இரண்டாமிடத்தைவிட்டு அகலும் தருணமிது இந்த கட்டத்தில் குடும்ப வாழ்விலும், பண விவகாரங்களிலும் வழக்கத்துக்கு மாருக ஏதேனும் நிகழ இடமுண்டு சொந்த ஆரோக்கியத்தையும் மனைவியின் தேகசுகத்தையும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் சிலருக்குப் பார்வையில் பழுதேற்படும். கோர்ட்டு விவகாரங்களால் சிலருக்கு வேதனை பிடுங்கும் எல்லா இடங்களிலும் தகராறு நேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும் செய் தொழிலில் சற்று மாறுதலிருக்கும் இதேற்படுகையில் பொறுப்புள்ள வேலையையும் ஏற்க நேரும். சுலபமாக மேலதிகாரியின் நல்ல அபிபராயத்தைச் சம்பாதிக்க முடியாது. ஒரு பிரயாணம் சாத்தியம் சென்ற மாதத்தைவிடச் செலவு அதிகம் கிட்டிய பந்து ஒருவரிடம் சிரத்தை பிறக்கும். தூர பந்துவைச் சந்திக்கவும் கூடும் வியாபாரிகளுக்குச் சாதகமான காலம் இம் மாதக் கடைசி வாரம் தரமாயிருக்கும். கூட்டு வியாபாரம் ஒப்பந்த விதிகளைப் பொறுத்து உபாயமானதொரு மாறுதலுக்குட்படலாம். பெரிய வியாபாரிகளுடன் புதியதாக வர்த்தகத் தொடர்புகள் ஏற்படலாம் குதிரைப் பந்தயக்காரர்கள் அடைந்த நஷ்டத்தைச் சரிக் கட்டிக்கொள்ள முடியும்.

ஆகஸ்ட் 18, 26. 31, ஸெப்டம்பர் 1. 4. 7, 10, 12, 15 16, தேதிகள் இவர்களுக்குச் சிறப்பான தினங்கள்,

## ஸிம்ம ராசி

**மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய**

சனி, ராகு இந்த இரு கிரகங்களைத் தவிர மற்றவையெல்லாம் இந்த ராசிக்காரர்களுக்கு இம் மாதம் சாதகமாகவே அமைந்துள்ளன இதனுல் மகிழ்ச்சியும், எதிர்காலத்தில் நம்பிக்கையும் பிறக்கும். பண வசதிகள் நல்லபடியாயிருக்கும். குடும்ப வாழ்வு மனோகரமாக அமையும் பணக்காரர்களானுல் நிலம், வீடு, பங்குகள் போன்ற இனங்களில் முதல் போடலாம் ஆனுல் ஸெப்டம்பர் 4-முதல் 27-ந்தேதி வரையில் செல்வ நிலை சீர்கெட்டு முடையும் ஏற்படும். 6-வது வீட்டைச் செவ்வாயும், சனியும் பார்ப்பதால் கிட்டிய பந்துக்களுடன் உள்ள உறவு நலிவுறும் ஆரோக்கிய நிலை பாதிக்கப்படுமாதலால் ஜாக்கிரதையாகவிருக்க வேண்டும். சனி, ஜன்ம ராசியிலிருந்து கன்யா ராசிக்குப் போயிருப்பதால் மனைவியின் தேக சுகத்தையும் நன்கு கவனித்துக்கொள்ள வேண்டும் சில இனங்களில் கல்யாணங்கள் நிகழும். செவ்வாய். சுக்கிரன் இவர்கள் பெற்றிருக்கும் இடங்கள் சாதகமானதாயில்லை இதனுல் சகோதரர்களுக்குள் தப்பு அபிப்பிராயம் ஏற்படக்கூடும் இவ்வாறு நேராமல் முயற்சிசெய்து பார்க்கவேண்டும் அனுகூலம் தரத்தக்க புதிய நண்பர்களைத் தேடிக்கொள்ளமுடியும் இம்மாதக் கடைசிவாரத்திலிருந்து உத்தியோகத்தில் ஆதரவேற்படும் காரியாலயத்தில் சந்தோஷகரமான நிலைமை இருந்துவரும் செய்யும் வேலையில் திடீரென்று மாறுதலேற்படுவதும் சாத்தியமே சிரத்தையோடும் உஷாரோடுமிருக்கவேண்டும் வியாபாரிகளுக்கு இம்மாதக் கடைசி வாரம் நெருக்கடியானது குதிரைப் பந்தயக்காரர்களுக்குத் திருப்திகரமான நிலைமையென்ருலும் கடைசிவாரம் அதிருஷ்டகரமாயிராது

ஆகஸ்ட் 25 31, ஸெப்டம்பர் 1, 3, 7, 10, 14 தேதிகள் இவர்களுக்கு உயர்ந்த தினங்கள்

1950-ம் ஆகஸ்ட்மீ 17உ முதல் 1950-ம் செப்டம்பர்மீ 17உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள உதவியாக நட்சத்திரங்களும், பாதங்களும் கூடவே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

## கன்னியா ராசி

**உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய**

சென்ற ஏழுமாதங்களாக இந்த ராசிக்காரர்களுக்குப் பல்வேறு துறைகளிலும், தொந்திரவுகளைக்கொடுத்துவந்த செவ்வாய் இம்மாதம் இரண்டாவது வீட்டுக்குப் போகிறது எனவே அநேகம் சோதனைகளிலிருந்து விடுபட முடியும் அதிருஷ்டம் கொஞ்சம் கொஞ்சமாக இந்த ராசிக்காரர்கள் பக்கம் திரும்பி வரும் இருப்பினும் இதர கிரகங்கள் இருக்கும் தோரணையிலிருந்து பார்த்தால், முக்கியமான அலுவல்களில் எல்லாம் நூதனமாக ஒருமறைமுக சக்தி இயங்கிக்கொண்டிருக்கும் இருப்பினும் மனோபலம் வெற்றியைக் கொடுக்கும் அனுவசியச் செலவுகளைத் தவிர்க்கவேண்டும். எதிரிகளால் தொல்லைகள் உண்டாகலாம் குடும்பத்திலும், வெளியிலும், சந்தோஷமாயிருக்க இயலாது பொறுமையும், தன்னடக்கமும் நிம்மதியைக் கொடுக்கும் சனி தசை நடப்பிலுள்ளவர்களானுல் அதிகமாக அவதிப்படுவார்கள். ஆனுல் சுக்கிரனும், உச்சத்திலுள்ள புதனும் கஷ்டங்களையும், கிலேசங்களையும் குறைந்த அளவுக்குக் கொண்டு வருவர். குழந்தைகளின் ஆரோக்கிய நிலைபற்றி கவலைகளேற்படும் இதற்காகக் கடுமையாகச் செலவுகளைச் செய்ய நேரிடும். சிலருக்கு வயிற்றுக் கோளாறுகள் ஏற்படலாமெனக் காண்கிறது. விபரீதம் எதுவுமில்லை. யென்று சொல்லலாமென்ருலும் காரியாலயத்தில் சந்தோஷமாயிருக்க முடியாது உத்தியோக மாற்றம் சாத்தியம் உத்தியோகத்தில் ஆதரவு குறைவு அடிக்கடி நிவாரணம் கிட்டுமாயினும் பணமுடை ஏற்பட்டுவரும் வியாபாரிகள் தங்கள் நடவடிக்கைகளில் ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும் ஹேஷ்ய விஷயத்தில் தீவிரம் கூடாது சுக்கிரனுலும், புதனுலும் நஷ்டமேற்படாது குதிரைப் பந்தயக்காரர்களுக்கு நல்ல மாதமே

ஆகஸ்ட் 18, 21. 24, 25, 31, ஸெப்டம்பர் 1 8, 10, 12 15, தேதிகள் இவர்களுக்கு சிலாக்கியம்.

## துலா ராசி

**சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய**

துலா ராசிக்காரர்களுக்கு நல்ல கிரகநிலைமை இம்மாதம் ஏற்பட்டுளது குடும்பத்தில் விவாகம் போன்ற சுப வைபவங்கள் நிகழும் வெளியிட வட்டாரங்களில் தீவிரமான ஈடுபாடுகளிருந்துவரும் குடும்ப வாழ்வில் விசேஷ வெற்றி காணப்படும். பெரிய வட்டாரங்களில் சம்பந்தம் கொண்டு அவ்வட்டாரங்களிலுள்ளவர்களிடம் அவசியமானபோது உதவி பெற இயலும் பண விஷயத்தில் விசேஷ அபிவிருத்தி நிச்சயம் ஆனுல் பண சம்பந்தமாகத் தகராறுகள் நேரா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மனஸ்தாபம் வந்து சேரும். நிலம் அல்லது சொத்துக்களின் விஷயமாகக் கொடுக்கல் வாங்கல்கள் செய்ய நேரலாம் ஸெப்டம்பர் 2-ந்தேதிக்குப் பிறகு இவ் விஷயத்தில் ஏதேனும் தாமதமேற்படுமானுல் அது அனுகூலமாயிராது ஏனெனில் பிரஸ்தாப விஷயம்பின்னணிக்குபோய்விடக்கூடும் மாத முடிவைவிட ஆரம்பம் அதிருஷ்டகரமாயிருக்கிறது நண்பர்களில் ஒருவரால் திடீரென்று ஏமாற்றமேற்படக்கூடும் உத்தியோகத் துறையில் நண்பர்கள் ஏற்படுவார்கள் ஆனுல் அவர்களை நம்பிப் பிரயோசனமில்லை நீடித்த நண்பர்களாக அவர்களிருக்கமாட்டார்கள் வயது முதிர்ந்த உறவினர் ஒருவரால் ஏமாற்றமேற்படலாம் யோக்யதைக்குத் தக்கவாறு உத்தியோகத்தில் ஏதேனும் அனுகூலம் ஏற்படும் மேலதிகாரியின் ஆதரவை எதிர்பார்க்கலாம் குழந்தைகளில் ஒருவருடைய சுபிட்ச நிலைமை காரணமாக ஆச்சாயமேற்படும் தூர இடத்திலுள்ள அவர்களிடமிருந்துவரும் செய்திகள் சந்தோஷத்தைக் கொடுப்பதாயிருக்கும் ஸெப்டம்பர் 4-ந்தேதி வாக்கில் வேலையில் [illegible]றுதலேற்பட நியாயமுண்டு பண விஷயத்தில் [illegible]விருத்திகரமான நிலைமைகள் ஏற்படும் சில[illegible] வேறிடத்துக்கு மாற்றம் ஏற்படும். வியாபாரி[illegible]ச்சரிக்கையோடு ஹேஷ்யம் செய்தால் லாபமடை[illegible] இல்லையாயின் திடீரென்று நஷ்டங்கள் ஏற்படும், [illegible]ாயபேதம் காரணமாகக் கூட்டுவியாபாரம் பாதிக்[illegible]லாம் எதிர்கால வியாபாரத்தை முன்னிட்டு [illegible]ளைகளைத் திருத்தியமைக்க நேரலாம் குதிரைப்[illegible]ப்பழக்கமுள்ளவர்கள் ஓரிருசமயங்களில் தான் [illegible]றிகாண முடியும், மொத்தத்தில் லாபமிராது

[illegible]ஸ்ட் 18. 19, 22. 25 26 31 செப்டம்பர் 1, 3, 7, [illegible]5 தேதிகள் இவர்களுக்குச் சிரேஷ்டம்.

## [illegible]ச்சிக ராசி

**விசாகம் 4-ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய**

இந்த ராசிக்காரர்களில் பெரும்பாலோருக்கு முக்கியமாக அனுஷம், அனுராதா நட்சத்திரங்களுள்ளவர்களுக்கு இம் மாதம் ரொம்ப முக்கியமாக விளங்கும் குடும்பத்தைப் பற்றிய கவலை, உத்தியோக விவகாரங்கள், வயதில் முதிர்ந்தவர்கள் அல்லது மேலதிகாரிகளுடன் அபிப்ராய பேதம். குடும்பத்தவரின் சுகவீனம் ஆகியவைதாம் இம் மாதத்திய முக்கியாம்சங்கள் அநேகருக்கு ஜாகை மாற்றம் ஏற்படும்; அல்லது வீட்டுக்காரருடன் சச்சரவு ஏற்படும். இட மாற்றம் சந்தோஷத்தைத் தருவதாயிருக்கும் நடப்பிலுள்ள தசா புத்திக்கு ஏற்றபடி சிலருக்கு ஊதிய உயர்வுக்காக முயற்சி செய்யும்படியாகும்; உத்தியோகத்தை மாற்றிக்கொள்ள சிலர் பிரயத்தனப்படலாம் யார் கீழ் வேலை செய்கிருர்களோ அவர்களிடம் ஏமாற்றமடையும்படியாகும் அல்லது அபிப்ராய பேதப்படும்படியாகும் செலவு அதிகரித்த வண்ணமாயிருப்பினும்பண வசதிகளும் அபிவிருத்திகரமாகவே யிருக்கும் எந்த விதத்திலும் அதிகாரிகளின் அப்பிரீதிக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளவும் காரியாலயத்தில் வேலைப்பளு அதிகம் கீழ்த்தரச் சிப்பந்திகளுக்காக ஆதரித்தோ கண்டித்தோ பேசுவதும், செயல்புரிவதும் வேண்டாம் குடும்ப வட்டாரத்தில் சுமுகமான உணர்வு இராது சில இனங்களில் முதிய உறவினர் ஒருவருடைய குறுக்கீடு நன்கு புலனுகும் 7-வது வீட்டைச் சனியும், செவ்வாயும் பார்ப்பதால் மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருக்கும். கிரகங்களின் கெடுதலான நிலைமை காரணமாக விவாகமுயற்சிகள் வீணுகும் காணயம் அல்லதுஒழுக்கம் இவற்றிலொன்றைப்பற்றி கெடுதலான வதந்திகள் மறைமுகமாகவும், ஆச்சர்யப்படும்படியாயும் தெரியவரும். பொறுமையொன்றினுல்தான் இதைச்சமாளிக்க முடியும். புதிதாகக் கல்யாணமானவர்களானுல் திடீரென்று இல்லற சுகம் அற்றுப்போகும். வியாபாரிகள் புதிய முயற்சிகளிலிருந்து விடுபட்டிருக்கவேண்டும் ஹேஷ்யங்கள் கூடாது ஏனெனில் இவை வீணுகிவிடும்

ஆகஸ்ட் 18, 19 25. 26, 31, ஸெப்டம்பர் 3, 7, 10 12, 15 தேதிகள் இவர்களுக்கு அனுகூலமானவை.

## தனுர் ராசி

**மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய**

பொதுவாக எல்லா விவகாரங்களிலும் வெற்றிகரமான நம்பிக்கைகளைக் கொடுக்கக்கூடிய மாதிரியில் தனுர்ராசிக்காரர்களுடைய கிரகப் போக்கு இம்மாதம் அமைந்திருக்கிறது எதிர்பார்த்த காரியங்கள் பல இந்தக்கட்டத்தில் கைகூடும் சொந்த விவகாரங்களுடன் உறவினரின் விஷயங்கள் குறித்தும் சிரத்தைகொள்ள நேரும். வெளியிடங்களில் பெரிய வட்டாரங்களில் பழகவும், அனுகூலம் பெறவும் முடியும். தீவிரமான சிந்தனையோடிருக்க நேரும். குடும்பம் உத்தியோகம், வெளியிடங்கள் இவற்றிலெல்லாம் கலந்துகொள்ளும்படியிருக்கும். தன்னலத்தியாக உணர்வோடு இம்மாதம் நடந்துகொள்ளும் உணர்வு பிறக்கும் ஆனுலும் உறவினர்களும், புதிதாக வாய்த்த நண்பர்களும் இதற்காக கண்டித்துத் திட்டுவர்: வீடு மாற்றமோ அல்லது சொந்தமாகப் புதிய வீடுவாங்கவேண்டுமென்ற எண்ணமோ உதிக்கும். தூர இடத்திற்கு பிரயாணம் ஒன்று நேரலாம். தசாபுக்தி அனுகுணமாயிருந்தால் ஒரு யாத்ரா மார்க்கம் போய் பிரார்த்தனைகளை நிறைவேற்றவும் கூடும் சிலருக்குக் கல்யாணம் போன்ற வைபவங்கள் நிகழும், குடும்பத்தில் முதியவர்களின் ஆதரவைப்பெறலாம். ஆனுல் ஏதாவது தகராறுகள் முளைக்கும் போலிருக்குமானுல் அவர்களின் தொடர்பை அறவே விலக்கவேண்டும் கோர்ட்டு வழக்குகள் ஏதேனுமிருந்தால் அவை அதிக முயற்சியின்றி வெற்றிபெறும் உத்தியோகத்தில் உயர்விருக்கும். அல்லது செய்யும் வேலையில் மாறுதலாவது ஏற்படும் செய்யும் வேலை நன்கு பாராட்டப்படும். இலாகாவில் முக்கிய சக்தியாக விளங்கலாம் குடும்ப வாழ்வு இவர்கள் எல்லாருக்கும் சந்தோஷமாயிருக்கும் முக்கியமாகப் புதிய தம்பதிகளுக்கு அதிக சந்தோஷமாயிருக்கும். ஆபீஸ் கடிதப்போக்குவரத்து முன்னைக் காட்டிலும் அதிகமாயிருக்கும் வியாபாரிகளுக்கும் நல்லதுதான் அயல் வியாபாரத்தில் முடங்கிக்கிடக்கும் முதல் இப்போது நன்கு பலன்கொடுக்கும்.

ஆகஸ்ட் 18, 21. 22, முதல் 26 28, 31 ஸெப்டம்பர் 1 2, 7, 12, 14, 15 தேதிகள் இவர்களுக்குப் பயனுள்ளவை'

### 1950-ஆகஸ்ட்மாதம்17-ந்தேதியுள்ள கிரக நிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | உரானஸ் |
| குரு | | | சுக்கிரன் |
| | | | சனி சூரியன் புதன் |
| | | செவ்வாய் | சந்திரன் கேது நெப்டியூன் |

## மகர ராசி

**உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய**

புதன் குரு இந்த இருகிரகங்களைத்தவிர மற்றவையெல்லாம் இம் மாதம் மகரராசிக்காரர்களுக்குச் சாதகமாயில்லை ஆகவே சூழ்நிலையே எதிரிடையாக விருப்பது போன்ற எண்ணம் ஏற்படும் அனாவசியமாகக் கெட்ட வதந்திகளெல்லாம் இவர்களுக்கெதிராகத் திரித்து விடுவார்கள். சொந்த உறவினர்களே தூற்றுவார்கள். இவர்களோடு தப்பு அபிப்ராயங்கள் ஏற்படுவது சாத்தியம். பொது ஆரோக்கியம் வெகுவாகப் பாதிக்கப்படும் கண் உபாதைக்குப் பிரத்யேக சிகிச்சை புரிந்துகொள்ள நேரும் அல்லது வேறு கண்ணாடி மாற்றிக்கொள்ளும்படி ஏற்படும் 9-வது வீட்டிலுள்ள புதன் காரணமாகச் சுப நிகழ்ச்சிகள் ஏதேனும் வரும் குழந்தைகளில் ஒருவரின் தேகசுகம் கெடும் அல்லது அரைகுறையாகக் குடும்பத்தில் பிரசவமேற்படலாம். தூர இடத்துப் பயணமொன்று ஏற்படலாம். துலாத்தில் செவ்வாயிருப்பதால் பணக்காரர்களுக்கு வாகனப் பிராப்தி ஏற்படலாம். நண்பரின் உதவிமொழியில் நம்பிக்கை வைக்கவேண்டாம் நிச்சயம் இது ஏமாற்றகரமாகமுடியும். இருப்பினும் இந்த நண்பரால் வசப்பட்டிருக்கநேரும். தசாபுத்தியிலும் அறிகுறிகள் காணப்படுமானால் இம் மாதம் இந்த ராசிக்காரர்கள் உயில்கள் பாகப்பிரிவினைப் பத்திரங்கள் முதலியவற்றைத் தயாரிக்க இடம் கொடுப்பதாயிருக்கும் உத்தியோகத்தில் முதலெடுப்பில் ஏமாற்றமிருக்கும் அபிலாஷைகள் நாள் கழித்துத்தான் கைகூடும். கெட்ட தசாபுத்தி உள்ளவர்களானால் உத்தியோகத்தில் கெட்ட பெயரைச் சுமக்க நேரும். ஆனால் குருவும். புதனும் உதவிக்கு முன் வந்து சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து இவர்களை விடுவிப்பர். அதிகமாக ஹேஷ்ய வியாபாரங்களில் ஈடுபடாமலிருந்தால் வியாபாரிகளுக்கு இந்தக்காலம் நல்தாயிருக்கும். உஷாராக வியாபாரத்தைக் கையாண்டால்தான் லாபத்தை அடைய வழி காணலாம் பங்காளிகளிடம் சரியான அபிப்பிராய ஒற்றுமையில்லாததால் கூட்டுவியாபாரம் பாதிக்கப்படும். குதிரைப் பந்தயத்துக்கு உரியகாலம் இதுவல்ல

ஆகஸ்ட் 18, 19, 21, 24. 25, 26. 28 31, ஸெப்டம்பர் 1, 2, 7, 10, 12, 15 தேதிகள் இவர்களுக்கு உபயோகமானவை.

## கும்ப ராசி

**அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய**

இங்குமங்குமாக எதிர்ப்புக்களிருந்தாலும் வெளியிடப் பொதுவாழ்க்கையில் நல்ல பெயரைத் தேடிக் கொடுக்க வல்ல முறையில் இம்மாதம் கும்ப ராசிக்காரர்களுடைய கிரக நிலை அமைந்திருக்கிறது. கல்யாணமாகாதவர்களுக்கு இந்த கட்டத்தில் விவாகம் நடந்தேறும். ஆனால் கல்யாணமானவர்களானால் இல்லற சுகம் பாதிக்கப்படாமலிராது பண விஷயத்தில் அபிவிருத்தியும் வசதிகளும் உண்டு அந்தஸ்திலும் கியாதியிலும் பெயர் பெற்ற பழைய நண்பர்களைச் சந்திக்க நேரலாம். கடன் விவகாரங்கள் முடிவில் நல்லபடியாக முடியாது. பழம் பாக்கிகளை, தாவா செய்தாவது வசூலிப்பதற்கு இம் மாதம் ஏற்றது. வீடு, நிலம், கார் இவற்றிலேதேனுமொன்றில் [illegible] முதலீடு செய்யும்படி ஏற்படலாம் வாடகை வீட்டிலிருக்கும் குடித்தனக்காரர்கள், வீட்டைக் காலி செய்யும்படியாகக் கோர்ட் நடவடிக்கை வருமாதலால் வேறிடம் பார்க்கும்படியான கவலைகளுக்குட்படுவர் குடும்பத்தில், மற்றொருவர் உரிமை கொண்டாடும் நில விஷயமாகவும், தகராறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும்.

[stamp] 12…

தூர இடத்துப் பிரயாணம் ஒன்று சம்பவிக்கலாம் குழந்தைகளில் ஒருவர் நோய் வாய்படும்படியாகும். வயிற்று உபாதை காரணமாக சொந்த ஆரோக்கியமும் பாதிக்கப்படும். உத்தியோகத்தில் ஏமாற்றமெதுவுமிராது மாற்றமேற்படுமென்று வதந்தி உலவும் ஆனால் இது நடக்காது அப்படி ஏற்படுவதானால் அது அடுத்த மாதம் தான் வியாபாரிகள் சுமாராக நல்ல வியாபாரம் செய்பவர் கூட்டுவியாபாரம், லாபகரமாயும், ஆதரவோடும் நடக்கும் அயல் நாட்டுவியாபாரம் சுகப்படாது புதிய வியாபார முயற்சிகளை வெற்றிகரமாகச் செய்யலாம் கூடிய சீக்கிரம் அயல் நாட்டு கடிதப் போக்குவரத்து அனுகூலம் தரும். குதிரைப் பந்தயத்தில் அதிக நஷ்டமிராது லாபமில்லாவிட்டாலும் போட்ட பணமாவது இடைக்கும்

ஆகஸ்ட் 18, 20, 21 23, 26, 31, ஸெப்டம்பர் 1, 2. 4 7 10, 14, 15 தேதிகள் இவர்களுக்குத் திருப்திகரமான தினங்கள்.

## மீன ராசி

**பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய**

இவர்களுக்குச் சென்ற மாதத்தைக் காட்டிலும் இ[…] சற்று அபிவிருத்திகரமானது சென்றமாதம் சந்தே[…] மற்றிருந்த குடும்ப வாழ்க்கை இம்மாதம் அபிவி[…] யடையும் இதுவரையில் தீராமல் நின்று போயி[…] பல விஷயங்கள் இம்மாதம் நன்கு உருவடை[…] வழக்கம்போல அதிகமாகச் செலவேற்படும். கொடு[…] மல் நின்ற கடன் தீர்ந்து மொத்தமாக ஒரு இட[…] கடன் வாங்க நேரும் ஏதாவது ஒரு கோர்ட் வ[…] வந்து அதில் தற்காலிகமான வெற்றியைக் காண[…] புதிய நண்பர்கள் கிட்டிய பந்துக்கள். இவர்களு[…] தொடர்புகொள்ள நேரும். உறவினர் ஒருவருடைய[…] யாண விஷயமாக முன் நின்று முயற்சி செய்யக்கூ[…] பண விஷயம் ஒரே சீரா இராது. ஜாதகத்திலும் [...] மிருக்குமாயின் இம் மாதம் ஏதேனும் ஒரு அதிருஷ்டமேற்படும் வேலைக்காரர்களால் தொந்திரவுகள் ஏற்படும் தொழிலாளரிடம் அனாவசியமாக அனுதாபம் காட்டக்கூடாது அவர்களை வயிற்றிலடிக்கவும் கூடாது. இவை இரண்டாலும் கூடிய சீக்கிரம் கஷ்டமே விளையும். முன்னதாகத் தெரியாமல் ஒரு நண்பரின் மூலம் எதிர்பாராத விதமாகப் பணம் வரக்கூடும். உத்தியோகத்தில் கடினமான வேலையிருக்கும் என்பதைத் தவிர வேறு எவ்வித லாபமும் இல்லை. மேலதிகாரியின் அதிருப்திக்கு இடமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இருப்பினும் ரொம்பச் சின்னக் காரியத்தில் அசிரத்தையாயிருந்ததாக மேலதிகாரியின் குற்றச் சாட்டுக்கு இலக்காகும்படியிருக்கும் வியாபாரிகள் ஸ்தலத்திலுள்ள வியாபாரத்தோடு கட்டுப்படுத்திக்கொண்டு நடக்க வேண்டும். பயன்தருமென்ற எண்ணத்தைக் கொடுக்கும் வியாபாரங்களில் ஹேஷ்யங்களைச் செய்யக்கூடாது புதிய வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளலாம். குதிரைப் பந்தயத்துக்கு நல்காலமல்ல, ரொம்ப அதிருஷ்டமுள்ளவர்களுக்குத்தான் இந்த சமயத்தில் பயனுண்டு.

ஆகஸ்ட் 18, 21, 23, 24, 28, 31, ஸெப்டம்பர் 1, 3, 7, 12, 15 தேதிகள் இவர்களுக்கு திவ்வியமான தினங்கள்.

பதிலுக்கு ஸ்டாம்போ, கார்டோ அனுப்ப வேண்டும்.

★

**ஸ்ரீ பீ. வி. ராவ்**
நெ. 5, வாசுதேவபுரம்.
ஐஸ் ஹவுஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை, 5.

Regd. No. 2514.


# நிபுணர் ஒரு நடிகர்




வைரம் வாங்கும் விஷயத்தில் நிபுணரின் யோசனையை எவ்வளவு சுலபமாக காசில்லாமலேயே—பெற விரும்புகிறீர்கள்?

ஆனல்.........நிபுணர் மட்டும் ஏமாந்தவரா — நடிப்பில் கைதேர்ந்தவருக்கு உங்களை மயக்குவது ஒரு சிறிய வேலையே......எல்லாம் மோசடிதான்........ உங்கள் நலனுக்காகவே அவர் தமது நிபுண (!) யோசனையை தயவுடன் வெளியிடுவதாக உங்களை எளிதில் நம்பச்செய்கிறார்.

இந்த ஜோடியின் பொருத்தத்தைக் கவனித்தீர்களா? ஒன்று — வைரம் வாங்குபவர்; நிபுணரிடம் தமக்குள்ள சொல்ப தொடர்பை உபயோகித்து அவரிடம் இலவச யோசனை பெற விரும்புகிறார். நிபுணரோ வாங்குபவரின் மானஸீகத் தொடர்பை ஞாபகப்படுத்தி தாம் சுயலாபங்கருதாமல் பாரபக்ஷமற்ற யோசனையைக் கூறுவதாக நம்பச்செய்கிறார்!




# நரியும் நாரையும்

நிபுணர் யாதொரு முதலுமின்றி லாபமடிப்பவர்—சரக்குமில்லை, யாதொரு பயமுமில்லை. வெறும் ஏமாற்று வார்த்தைகளைக்கொண்டு பிழைப்பவர். அவநம்பிக்கை கொண்டவர்களிடம் நாரையைப் போன்று நடித்துப் பயனடைவது அவரது தப்பு அல்ல.

தரக நிபுணரும், வியாபாரியும் சேர்ந்து உங்கள் பாட்டுக்குத் தகுந்த நாட்டியமாடி தமது வியாபார தந்திரத்தைக் கையாள்வது சரியே. இதற்கு மூலகாரணம் நீங்களேதான்.

நாணயத்திற்குப் பிரக்யாதி பெற்று நிலைத்து வியாபாரம் செய்யும் நம்பிக்கையான நகை வியாபாரியிடம் நம்பிக்கை வைத்தால்தான் பழுதின்றி வைரம் வாங்குவது சாத்தியம். சுயலாபமே கண்ணாயிருக்கும் தரகரது மோச வார்த்தைகளை நம்பினால் வீணாக உங்கள் பணத்திற்கே நஷ்டத்தைத் தேடுகிறீர்கள்.



# ரோஜ்மல்ஸ்

18[…] முதல் நாணயத்திற்சிறந்த நகை வியாபாரிகள்.

313, […] :: மதராஸ்.



மோட்டார் ரேஸில் கார் குடைசாய்ந்து, பெட்ரோலில் தீப்பிடித்து மகத்தான விபத்தில் சிக்கிக்கொண்டார் ஹெர்வீ என்பவர். அவர் ஆடையெல்லாம் பற்றி எரியும்போதுகூட உயிர் தப்பவெண்ணி முண்டியடித்துக்கொண்டு நகர்ந்து வந்தார். ஆயினும் 12 மணி நேரத்துக்குள் இவர் இறந்துவிட்டார்.



'ஹெலி காப்டர்' வகைகளில் புதிய மாதிரியானதொன்றைப் படத்தில் காண் [illegible] பொறுத்தி ஒரே
இறங்கும் சாதனங்களைவிட வசதிகரமான ஏற்பாடுகள் இதில் செய்யப்ப [illegible] சரமாகவுமுள்ள
பகுதிகளில் இறங்க இது உதவிகரமாயிருக்கும். இதற்கு [illegible] பெயர்.

Printed and Published by S. Chakrapani
Mount Road